# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA:3.64)
தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின்
முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி– 630003.

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## எம்.ஏ.,தமிழ்

### இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

### தாள் - 31934 - இலக்கணம் - 3

### தொல்காப்பியம் : பொருளதிகாரம் - இளம்பூரணம்

**Author :**
**Dr. M. CHITHAMBARAM**
Associate Professor in Tamil,
Tamil Research Centre
Alagappa Govt Arts College ,
Karaikudi – 630003

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**
**Dr. V. THIRUVENI**
Assistant Professor of Tamil ,
Directorate of Distance Education,
Alagappa University,
Karaikudi.630003.

# எம்.ஏ.,தமிழ்
# இரண்டாமாண்டு -மூன்றாம் பருவம்
## தாள் 31934 - இலக்கணம் -3 தொல்காப்பியம் : பொருளதிகாரம் - இளம்பூரணம்
## பாடத் திட்டம் - பொருளடக்கம்

**நோக்கம் :**

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தின் திணைப்பாகுபாடுகளைப் பற்றி மாணவர்களுக்கு விளக்கிக் கூறல்.

**பிரிவு 1: அகத்திணையியல்**


**கூறு 1** : அகத்திணையியல் - அறிமுகம் - ஐவகை நிலங்கள் 1

**கூறு 2** : அகத்திணையியல் - பிரிவில் நிகழும் கூற்றுவகைகள் 11

**கூறு 3** : புறத்திணையியல் - அறிமுகம் - திணைவகைகள் வெட்சித்திணை 27

**கூறு 4** : புறத்திணையியல் - வஞ்சித்திணை – உழிஞைத்திணை 35


**பிரிவு 2: புறத்திணையியல் - களவியல் - கற்பியல்**


**கூறு 5** : புறத்திணையியல் - தும்பைத்திணை – வாகைத்திணை 43

**கூறு 6** : புறத்திணையியல் - காஞ்சித்திணை – பாடாண்திணை 55

**கூறு 7** : களவியல் 72

**கூறு 8** : கற்பியல் 125


**பிரிவு 3: பொருளியல் - மெய்ப்பாடு – உவமை**


**கூறு 9** : பொருளியல் 161

**கூறு 10** : மெய்ப்பாட்டியல் 182

**கூறு 11** : உவமையியல் 202


**பிரிவு 4: செய்யுளியல் - மரபியல்**


**கூறு 12** : செய்யுளியல் - மாத்திரை முதல் களன் வரை 215

**கூறு 13** : செய்யுளியல் - காலம் முதல் இழைபு வரை 269

**கூறு 14** : மரபியல் 277

**பாடநூல்**

**தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை**

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு**

## 31934 - இலக்கணம்

**தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம்**

**பொருளடக்கம்**

**நோக்கம்: தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் திணைப்பாகுபாடுகளைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறல்**

## பிரிவு – I அகத்திணையியல்

**கூறு: 1 : அகத்திணையியல் அறிமுகம் - ஐவகை நிலங்கள்** 1-10

1. எழுதிணைப் பாகுபாடுகள்
2. முப்பொருள் வழக்கு
3. திணை மயக்கம்
4. கருப்பொருளும் முதற்பொருளும் மயங்கல்
5. உரிப்பொருள்
6. கருப்பொருள்
7. மக்கட்பெயர்
8. திணைநிலைப்பெயர்
9. பயிற்சி வினாக்கள்

**கூறு: 2: அகத்திணையியல் - பிரிவில் நிகழும் கூற்று வகைகள்** 11-26

1. பிரிவு – வகைகள்
2. முந்நீர் வழக்கம்
3. மடன்மேல் குறித்த வரையறை
4. உடன்போக்கில் நற்றாய் கூற்று
5. உடன்போக்கில் செவிலி
6. தோழி கூற்று நிகழிடம்:
7. கண்டோர் கூற்று
8. தலைமகன் கூற்று நிகழிடம்
9. உள்ளுறை உவமம் ஏனை உவமம்
10. கைக்கிளை - பெருந்திணை
11. அகத்திணை மரபுகள்
12. சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறா மரபு

13.பயிற்சி வினாக்கள்

**கூறு: 3 - புறத்திணையியல் - அறிமுகம் - திணைவகைகள் - வெட்சித்திணை** 27-34

1. வெட்சித் திணை – வெட்சித் திணையின் துறைகள்

2 பாக்கத்து விரிச்சி

3 ஒற்றின் ஆகிய வேய்

4 பாதீடு

5 கொற்றவை நிலை

6 கரந்தைத் திணை – கரந்தைத்திணையின் துறைகள்

7 வெறியாட்டு அயர்ந்த காந்தள்

8 பூவைநிலை

9 காட்சி – கால்கோள் - நீர்ப்படை – நடுகல் - பெரும்படை – வாழ்த்தல்

10 பயிற்சி வினாக்கள்

**கூறு: 4 புறத்திணையியல் - வஞ்சித்திணை – உழிஞைத்திணை** 35-42

1. வஞ்சித்திணை – வஞ்சித் திணையின் துறைகள்
2. மாராயம் பெற்ற நெடு மொழி
3. பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை
4. குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை
5. உழிஞைத்திணை - உழிஞைத்திணையின் துறைகள்
6. உழிஞைத்திணையின் துறைகள் - விரி
7. பயிற்சி வினாக்கள்

**பிரிவு - II - புறத்திணையியல் - களவியல் - கற்பியல்**

**கூறு 5: புறத்திணையியல் - தும்பைத்திணை – வாகைத்திணை** 43-54

1. தும்பைத்திணை – தும்பைத்திணையின் துறைகள்
2. வாகைத்திணை - வாகைத்திணையின் பாகுபாடு
3. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்
4. ஐவகை மரபின் அரசர் பக்கம்
5. இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்
6. அறிவன் தேயம்.
7. நால் இரு வழக்கின் தாபத பக்கம்
8. பால் அறி மரபின் பொருநர் பக்கம்
9. வாகைத்துறைகள்
10. பயிற்சி வினாக்கள்

**கூறு: 6 – காஞ்சித்திணை – பாடாண்திணை** 55-71

1. காஞ்சித்திணை - காஞ்சித்திணையின் துறைகள்
2. மன்னைக்காஞ்சி
3. வஞ்சினக்காஞ்சி
4. மகட்பாற்காஞ்சி
5. கையறு நிலை
6. தபுதாரநிலை, தாபத நிலை
7. பாடாண்திணை இலக்கணம்
8. அமரர்கண் முடியும் அறுவகை
9. பிள்ளைத் தமிழ், உலா இலக்கியத் தோற்றுவாய்
10. கடவுள் வாழ்த்தொடு வரும் பாடாண்
11. பாடாண்திணையின் துறைகள்
12. பயிற்சி வினாக்கள்

**கூறு: 7 – களவியல்** 72-124

1. இயற்கைப்புணர்ச்சி - மறையோர் தேயத்து மன்றல் எட்டு
2. காட்சி, ஐயம், தெளிதல், தேறல்
3. தலைமகன் - தலைமகள் இயல்பு
4. சிறப்புடை மரபினவை களவு
5. இயற்கைப் புணர்ச்சித் திறன்
6. களவில் தலைவன் கூற்று நிகழிடங்கள்
7. பாங்கற் கூட்டம்
8. பாங்கியற் கூட்டத்தின்கண் தலைவன் கூற்று
9. களவின்கண் தலைவிக்கு கூற்று நிகழும் இடங்கள்
10. களவில் தோழிக்கு கூற்று நிகழிடங்கள்
11. தோழி அறத்தொடு நிற்றல்

12. தோழி மதியுடம்பாடு
13. பகற்குறி - இரவுக்குறி தொடர்பான பொருண்மைகள்
14. வரைதல்
15. பயிற்சி வினாக்கள்

**கூறு 8 : கற்பியல்** **125-160**

1. கற்பியல்
2. கரணம் குறித்த இலக்கணம்
3. கற்பில் தலைவன் கூற்று
4. கற்பில் தலைவி கூற்று
5. கற்பில் தோழி கூற்று
6. காமக்கிழத்தியர் கூற்று நிகழுமிடம்
7. தலைவியின் உயர்வும் வாயில்கள் மரபும்
8. வாயில்கள் - கூற்று முறைமை
9. தலைமகளோடு பாசறை புணரா இயல்பு
10. தலைவன் தலைவியைப் பிரியலாகாத காலம்
11. பிரிவு முறைமை
12. பயிற்சி வினாக்கள்

## பிரிவு – III – பொருளியல் - மெய்ப்பாடு – உவமை

**கூறு 9 : பொருளியல்** **161-181**

1. தலைவன் தலைவிக்கு உரிய ஒருபாற் கூற்று
2. கனவு நிலை
3. நால்வர்க்கும் உரிய மரபுகள்
4. தலைவி மடனொடு நிற்றல்
5. தலைவி அறத்தொடு நிற்றல்
6. தோழி அறத்தொடு நிற்றல்
7. பெண் இயல்பு
8. வரைவு கடாதல்
9. உண்ணாத பொருளை உண்டன போலக் கூறல்
10. அறக்கழிவுடையன வழக்கெனல் ஆகாதன
11. களவில் தலைவன் மரபுகள்
12. இறைச்சி
13. தலைவன் ஐயுறல்
14. உள்ளுறை உவமம்
15. மங்கல மொழி அவையல் மொழி
16. காட்டலாகாப் பொருள்
17. பயிற்சி வினாக்கள்

**கூறு 10 – மெய்ப்பாட்டியல்**

1. மெய்ப்பாடு – வகைகள் **182-201**
2. மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன்கள்
3. அவையும் உளவே அவையலங் கடையே
4. அகத்திற்கும் உரிய மெய்ப்பாடுகள்
5. பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்
6. வரைவு வேட்கைக்குரிய மெய்ப்பாடுகள்
7. வரைந்தபின் நிகழும் மெய்ப்பாடுகள்
8. தலைவன் தலைவி ஒப்பு
9. தலைமக்களிடம் அமையலாகா குணங்கள்

10. பயிற்சி வினாக்கள்

**கூறு : 11 – உவமையியல்** **202-214**

1. உவம வகைகள்
2. உவமை தோன்றும் நிலைக்களன்கள்
3. உவமை மரபுகள்
4. உவமும் பொருளும்
5. சுட்டிக்கூறா உவமம்
6. உவம உருபுகள்
7. வினை, பயன், மெய், உரு உவம உருபுகள்.
8. உவமை எட்டு வகையாதல்
9. உள்ளுறை உவமம்
10. உவமப் போலி
11. உவமை கூறும் அக மாந்தர்
12. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
13. தடுமாறு உவமம்
14. உவமை பல அடுக்கி வருதல்
15. பயிற்சி வினாக்கள்

## பிரிவு IV : செய்யுளியல் - மரபியல்

**கூறு: 12 – மாத்திரை முதலா களன் வரை** **215-268**

1. செய்யுள் உறுப்புகள்
2. அசை, சீர், தளை, அடி, தொடை அவற்றின் வகைகள் - விரி போன்றன.
3. நால்வகைப் பாக்களின் மரபு
4. நால்வகைப் பாக்களின் அடிவரையறை
5. யாப்பு வகைகள்
6. நால்வகைப் பாக்களின் ஓசை மரபு
7. மருட்பா மரபு
8. நோக்கு
9. வாழ்த்தியல் வகை
10. கலிப்பாவின் உறுப்புகள்
11. வெண்பாவின் இலக்கணம் - வகை - இனம் போன்றன
12. ஆசிரியப்பாவின் இலக்கணம் - வகை - இனம் போன்றன
13. வஞ்சிப்பாவின் இலக்கணம் - வகை - இனம் போன்றன
14. கலிப்பாவின் இலக்கணம் - வகை - இனம் போன்றன
15. பரிபாடல் - பரிபாடல் உறுப்புகள்
16. அங்கதத்தின் வகை
17. செய்யுள் வகைகள்
18. அடி வரையறையில்லாத செய்யுள்
19. அடிவரையில்லாதன
20. பண்ணத்தி
21. திணை, கைகோள

**கூறு 13 – செய்யுளியல் - காலம் முதல் இழைபு வரை** **269-276**

1. காலம், பயன்
2. எச்சம், மெய்ப்பாடு போன்றன
3. முன்னம், பொருள்வகை, துறை
4. மாட்டேறு - இலக்கண மரபு

5. .வண்ணம் - வகைகள்
6. அடிநிமிர்வில்லாச் செய்யுள்
7. பயிற்சி வினாக்கள்
**கூறு: 14 - மரபியல்** **277-297**
1. இளமைப் பெயர்கள்
2. ஆண்பாற்பெயர்கள்
3. பெண்பாற்பெயர்கள்
4. உயிர்களின் பகுப்பு
5. நால்வகை வருணத்தார்க்கு உரிய மரபு
6. புறக்காழ், அகக்காழ் என்பன.
7. புல்லாகிய உறுப்பின்கண் வருவன
8. மரமாகிய உறுப்பின்கண் வருவன
9. ஐம்பூத மயக்கம் உலகம்
10. செய்யுள் மரபு, வழக்கு போன்றன
11. நூல் மரபு – முதல்நூல் - வழிநூல் - சார்பு நூல்
12.நூலின் இலக்கண மரபு
13.சூத்திரத்தின் இலக்கணம்
14.உரையின் இயல்பு
15.நூலில் அமையலாக பத்துக்குற்றங்கள்
16.உத்தி வகைகள்
17 பயிற்சி வினாக்கள்
**மாதிரி வினாத்தாள்** **298-299**

# பிரிவு – I அகத்திணையியல்

## கூறு – 1 – அகத்திணையியல் அறிமுகம் - ஐவகை நிலங்கள்

**நோக்கம்: அகத்திணை பற்றி அறிதல் - தமிழரின் நிலப்பாகுபாட்டு முறையினை அறிந்து தெளிதல் - ஐவகை நிலப்பிரிப்பு முறையைத் தெரிதல் - முதல், கரு, உரிப்பொருள் பற்றி அறிதல்**

பொருளதிகாரத்தின் முதல் இயல் அகத்திணையியல் என்பதாகும். இவ்வியல் அகத்திணைக்குரிய மரபுகளை விரித்துப் பேசுகிறது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவும் முதற்பொழுதின் கூறுகளாகிய நிலம், பொழுது போன்றனவும் அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை போன்றனவும் இதனுள் சுட்டப்படுகின்றன. இதனையடுத்து பிரிவு வகைகள், உடன்போக்கு போன்றனவும் நற்றாய், கண்டோர்,தோழி போன்றோரின் கூற்று நிலைகளும் இதனுள் உணர்த்தப்படுகின்றன.

### 1.1 எழுதிணை

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.

என்பது அகத்திணையியலின் முதல் நூற்பா ஆகும்.இச்சூத்திரம் அகப்பொருள் இத்துணை என வரையறுத்து உணர்த்திற்று. இதன் பொருள் கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக ஏழு பொருள் முற்படக் கூறப்பட்டன என்று சொல்வர் என்பது ஆகும். அவ்வெழுதிணை என்பன கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என்பனவாகும். இந்நூற்பாவினுள் முற்படக்கிளந்த எழுதிணை என்றமையால் பிற்படக் கிளக்கப்படும் எழுதிணையும் உண்டு என்பது பெறப்படும். அவை முறையே வெட்சி முதலாக பாடாண் ஈறாகச் சொல்லப்பட்டவை ஆகும்.

வெட்சி தானே குறிஞ்சியது புறனே என்பன போன்று குறிக்கப்படுதலான் இவ்வாறு அமையும்.

கைக்கிளை - கை என்பது சிறுமைபற்றி வரும். அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல் ஆகும். கிளை என்பது உறவு எனப் பொருள்படும். எனவே கைக்கிளை என்பது பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்ற பொருளைத் தந்து நிற்கும்.

நடுவண் ஐந்திணைக்கண் நிலமும் காலமும் கருப்பெருளும் அடுத்துப், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனச் சொல்லப்பட்டன அவ் உரிப்பொருள் ஆகும். ஒத்த அன்பும் ஒத்த குலனும் ஒத்த வடிவும் ஒத்த குணனும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உளவழி இது நிகழுமாதலின், அது பெருங் கிளைமை ஆயிற்று. முல்லை முதலாகிய ஐந்தும் முன்னர்க் கூறப்படும்.

பெருந்திணை, நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வரும். எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம்

தெய்வம் என்பன அத் திணைப்பாற் படும்., இந் நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்வதாலும் இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது. நடுவண் ஐந்திணையாகிய ஒத்த கூட்டம் பெ ருவழக்கு அன்றோ எனின், அ∴து அன்பும் குலனும் முதலாயின ஒத்துவருவது உலகினுள் அரிதாகலின் அருகியல்லது வாராது என்பார் இளம்பூரணர்.

## 1.2 நிலம் பெறுவன:

அவற்றுள்,

நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

இது, மேற் சொல்லப்பட்ட கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை எனப்பெறும் எழுதிணையுள், நிலம் பெறுவன வரையறுத்து உணர்த்திற்று.

மேற்சொல்லப்பட்ட கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாகச் சொல்லப்பட்ட எழுதிணையுள், நடு எனப்பட்ட பாலைத்திணை நீங்கலாக ஏனைய கைக்கிளை பெருந்திணை எனப்பெறும் இருவகைத் திணைகளுக்கு நடுவதாக நின்ற ஐந்திணையாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நிலம் பெறும். பாலைக்கு என்று தனிநிலம் இல்லாமையால் ஒழிய என்று விதந்து கூறினார் தொல்காப்பியர். அதனால் எழுவகைத்திணையினும் நிலம் பெறுவன நான்கு என்பதாம். நடுவணது என்பது பாலை என்பதனைக் குறிக்கும் .

## 1.3 முப்பொருள் வழக்கு:

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.

புலவர் செய்யுளிடத்துப் பயின்று வரும் பொருளை ஆராயும் இடத்து, முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் சொல்லப்பட்ட மூன்று பொருண்மையும் காணப்படும். அவை சொல்லுகின்ற காலத்து முறைமையாற் சிறந்தன ஆகும்.

**முறைமையாற் சிறத்தல்**: ஏதேனும் ஒரு செய்யுட்கண் முதற் பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணை உணரப்படும். முதற்பொருள் ஒழிய ஏனைய, இரண்டும் வரின் கருப்பொருளால் திணை பெறப்படும். உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதும் ஆகும். ஒரு பொருட்கு ஒரு காரணம் கூறாது மூன்று காரணம் கூறியது என்னை எனின், என வினா எழுப்பும் இளம்பூரணர், உயர்ந்தோர் என்றவழிக் குலத்தினால் உயர்ந்தாரையும் காட்டும், கல்வியான் உயர்ந்தாரையும் காட்டும்; செல்வத்தான் உயர்ந்தாரையும் காட்டும்; அதுபோலக் கொள்க என விடை இறுப்பார்.

## 1.4 நிலப்பாகுபாடு:

முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.

முதல் என்று சொல்லப்படுவது நிலமும் காலமும் ஆகிய அவ்விரண்டினது இயற்கைஎன்று சொல்லுவர் உலகின் இயல்பு உணர்ந்த சான்றோர். இந்நிலங்களின் வகைமை பின்வருமாறு:

ளளனனமைொயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

திருமால் மேவிய காடுபொருந்திய உலகமும், செவ்வேள் மேவிய மைவரை உலகமும்,இந்திரன் மேவிய தீம்புனல் உ1லகமும், வருணன் மேவிய பெருமணல் உலகமும், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையினானே சொல்லவும் படும்.

நாழி கொண்ட நறுவீ முல்லை ( முல்லைப்பாட்டு: 8-10) காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகும்.

‘‘கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு’’ - மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூச் சிறந்தது ஆகும்.

‘‘இறா அல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்குந் தண்துறை ஊர’’(அகநா. 286) தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தது ஆகும்.

‘‘பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
‘‘கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்’’(குறுந்.1) பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தது ஆகும்.

பாலை என்பதற்கு நிலம் இல்லை எனினும் வேனிற்காலம் பற்றி இந்நிலம் உருவாகலின் அக் காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் ஆதலின், அச் சிறப்பு நோக்கிப் பாலை என்று குறியிட்டார்.

‘‘முல்லையும் குறுஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்’’ என்னும் சிலம்பின் அடிகள் பாலை என்பதற்கோர் இலக்கணம் உணர்த்தும்.

கைக்கிளை பெருந்திணை என்பனவற்றிற்கு நிலமும் காலமும், பகுத்து ஓதாமையின் சிறுமை பற்றிய உறவாதலின் கைக்கிளை என்றும் உலகின்கண் நான்கு மணம்பற்றி பெரு வழக்காய் வருதலின் பெருந்திணை என்றும் பெயரிட்டார் என்பது இளம்பூரணர் தரும் குறிப்பாகும்.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற முறை என்னையெனின், இவ்வொழுக்கம் எல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின் கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல்

மகளிரது இயற்கை முல்லையாதலின், அது முற்கூறப்பட்டது. எனவே, முல்லையென்ற சொற்குப் பொருள் இருத்தலாயிற்று. ‘‘முல்லை சான்ற முல்லையம் புறவின்’’ என்பவாதலின், புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தற்பொருட்டு ஆகிய குறிஞ்சியை அதன்பின் வைத்தார். இதற்கு உதாரணம் இறந்தது. ‘‘கருங்காற் குறிஞ்சி சான்ற வெற் பணிந்து’’ என்பது கரு. புணர்ச்சிப் பின் ஊடல் நிகழ்தலின் அதன்பின் மருதத்தை வைத்தார். ‘‘மருதஞ் சான்ற மருதத் தண்பணை’’ என்புழி மருதம் என்றது ஊடியுங் கூடியும் போகநுகர்தலை. பரத்தையிற்பிரிவுபோலப் பிரிவொப்புமை நோக்கி நெய்தலை ஈற்றின் கண் வைத்தார். நெய்தற் பறையாவது இரங்கற் பறையாதலின், நெய்தல் இரக்கமாம் என உரைவகுப்பார் நச்சசினார்க்கினியர்.

### 1.4.1 பெரும்பொழுதும் சிறுபொழுதும்.

பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டினை ஆறு கூறாகப் பிரித்து உரைப்பதாகும். அவை முறையே, கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற் காலம், முதுவேனிற்காலம் என்பனவாகும். சிறுபொழுது என்பது ஒரு நாளினை ஆறாகக் கூறிட்டுப் பிரித்துரைப்பதாகும். அவை முறையே வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு,மாலை,யாமம் என்பதாகும். இவை ஐந்நிலத்திற்கும் உரியன என்று பகுத்துரைக்கப்படும்.

### 1.4.2 முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

காரும் மாலையும் முல்லை.

கார்காலமும் மாலைப் பொழுதும் முல்லைத் திணைக்குக் காலமாம். கார் என்பது மழை பெய்யுங் காலம். அ.்.து ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களும் ஆகும்.. மாலையாவது, இராப் பொழுதின் முற்கூறு ஆகும்.

### 1.4.3 குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்.

குறிஞ்சித் திணைக்குக் காலமாவது, கூதிர்க்காலமும் யாமப்பொழுதும் ஆகும். கூதிராவது ஐப்பசித் திங்களும் கார்த்திகைத் திங்களும் ஆகும். யாமம் ஆவது இராப்பொழுதின் நடுக்கூறு.

### 1.4.3 குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது – சிறப்பு விதி

பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப.

குறிஞ்சித் திணைக்கு முன்பனிக்காலமும் உரித்தென்று சொல்லுவர்.இதனைக் கூதிர்க்காலத்தோடு ஒருங்கு கூறாமையால் அத்துணைச் சிறப்புடையது அன்று என்பது பெறப்படும்.முன்பனிக் காலமாவது மார்கழித் திங்களும் தைத் திங்களும் ஆகும்.

### 1.4.4 மருதத்திற்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

வைகறை விடியல் மருதம்.

வைகறை விடியலும் மருதத்திற்குக் காலமாம்.வைகறையாவது இராப்பொழுதின் பிற்கூறு. விடியலாவது, பகற்பொழுதின் முற்கூறு. பருவம்

வரையறுத்துக் கூறாமையின் அறுவகைப் பருவமும் கொள்ளப்படும். இது நெய்தற்கும் பொருந்தும்.

### 1.4.4 நெய்தற்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

எற்பாடு,
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.

எற்படுபொழுது, நெய்தல் திணைக்குரிய சிறுபொழுது ஆகும். எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு.

## 1.5 பாலைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

நடுவு நிலைத்திணையாகிய பாலையாவது, நண்பகற்பொழுது வேனிற் காலத்தொடு புணர்ந்து நின்றவழிக் கருதிய நெறியை உடையது ஆகும். இது இளவேனில், முதுவேனில் என்னும் இருவகைப் பருவத்தின் கண்ணும் வரும். இளவேனிலாவது சித்திரைத் திங்களும் வைகாசித் திங்களும் ஆகும். முதுவேனிலாவது ஆனித் திங்களும் ஆடித் திங்களும் ஆகும். நண்பகலாவது பகற் பொழுதின் நடுக்கூறு.

### 1.5.1பாலைக்குரிய பெரும்பொழுதின் சிறப்பு விதி:

பின்பனி தானும் உரித்தென மொழிப.

பாலைக்கு பின் பனிக்காலமும் உரித்து என்று கூறுவர். தனித்துக் கூறினமையான் இது சிறப்பன்று. பின்பனியாவது மாசித் திங்களும் பங்குனித் திங்களும் ஆகும்.

இவ் அறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ ஐந்திணைக்கு சிறப்பு நோக்கி உரியவாறாகும்.முல்லையாகிய நிலனும், வேனிற்காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன, புயல்கள் முழங்கக் கவின்பெறும் ஆகலின், அதற்கு அது சிறந்ததாம். மாலைப்பொழுது இந் நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங்காலம் ஆதலானும், அந் நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வருங் காலமாதலானும், ஆண்டுத் தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின், அதுவும் சிறந்தது ஆயிற்று. குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற் புணர்ச்சி பொருளாதலின், அப்புணர்ச்சிக்குத் தனி இடம் வேண்டுமன்றே, அது கூதிர்காலத்துப் பகலும் இரவும் நுண்துளி சிதறி இயங்குவார் இலராம் ஆதலான். ஆண்டுத் தனிப்படல் எளிதாகலின், அதற்கு அது சிறந்தது. நடுநாள் யாமமும் அவ்வாறாகலின் அதுவும் சிறந்தது. மருதத்திற்கு நிலன் பழனஞ்சார்ந்த இடமாதலான், ஆண்டு உறைவார் மேன்மக்களாதலின், அவர் பரத்தையிற் பிரிவுழி அம் மனையகத்து உறைந்தமை பிறர் அறியாமை மறைத்தல் வேண்டி வைகறைக்கண் தம்மனையகத்துப் பெயரும்வழி, ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சார்கிலளாமாதலால், அவை அந்நிலத்திற்குச் சிறந்தன. நெய்தற்குப் பெரும் பான்மையும் இரக்கம் பொருளாதலின், தனிமையுற்று இரங்குவார்க்குப்

பகற்பொழுதினும் இராப்பொழுது மிகுமாதலின், அப் பொழுது வருதற்கேதுவாகிய எற்பாடு கண்டார் இனி வருவது மாலையென வருத்த முறுதலின், அதற்கு அது சிறந்தது என்க. பாலைப்பொருளாவது, பிரிவு. அப் பிரிவின்கண் தலைமகற்கு வருத்தம் உறும் என்று தலைமகள் கவலுங்கால் நிழலும் நீரும் இல்லாத வழி ஏகினார் எனவும் கவலுமாகலின், அதற்கு அது சிறந்தது என்க என உரை விளக்கம் தருவார் இளம்பூரணர்.

## 1.6 பாலைக்கு உரிய பொருள்:

இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
உரிய தாகும் என்மனார் புலவர்.

இது, பாலைக்கு உரிய பொருள் உணர்த்திற்று. இருவகைப் பிரிவான தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும் பாலைக்கு உரிய பொருளாகும்.

## 1.7 திணை மயக்கம்:

திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே.

ஒரு திணைக்கு உரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற்பொருளோடு சேரநிற்றலும் கடியப்படாது. அவ்வாறு மயங்க நிற்கும் இடத்து நிலம் மயங்காது. எனவே, காலமும் கருப்பெருளும் மயங்கும் என்பது பெறப்பட்டது.

**காலம் மயங்கியதற்கான செய்யுள்:**

தொல்ஊழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தான்
எல்லைக்கு வரம்பாய இடும்பைகூர் மருள்மாலை;

### 1.7.1 கருப்பொருளும் முதற்பொருளும் மயங்கல்:

உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும், முதற்பொருளுள் காலமும் மற்றொரு திணையொடு சேர நிற்கவும் பெறும்.

ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன் (அகநா.48)

என்பதில், மருதத்திற்குக் கருப்பொருளாகிய செங்கழுநீரும் குறிஞ்சிக்குரிய வெட்சிப் பூவும் அணிந்தோன் என்பது குறிக்கப்பெற்றமையால் கருப்பொருள் மயக்கமாயிற்று.

## 1.8 உரிப்பொருள்:

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத்திணைக்குரிப் பொருளே.

புணர்தலும், பிரிதலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும் அவற்றின் நிமித்தமும் என்று சொல்லப்பட்டவை ஆராயுங்காலத்து ஐந்திணைக்கும் உரிப்பொருளாம்.

பிரிவு பாலைக்கு உரித்தாதல் முன்னரே சொல்லப்பட்டது. இதனுள் புணர்தல் என்பது குறிஞ்சிக்கும், இருத்தல் என்பது முல்லைக்கும், இரங்கல் என்பது நெய்தற்கும், ஊடல் என்பது மருதத்திற்கும் பெரும்பான்மையும் உரித்தாகவும் சிறுபான்மை எல்லாப்பொருளும், எல்லாத்திணைக்கும் உரித்தாகவும் வரும். இருத்தல் என்பது தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல்; இரங்கல் என்பது ஆற்றாமை என்பதாகும்.

**1.8. 1 பாலை, பெருந்திணைக்கு உரியன**:

கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத் தான.

கொண்டு தலைக்கழிதல் பாலைத்திணையிலும், பிரிந்தவன் இரங்கல் பெருந்திணையலும் வரும். கொண்டு தலைக்கழிதல் என்பது தலைவியை உடன்கொண்டு பெயர்தல். அது, நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும், உடன்கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும், வேறு உணர்த்தப்பெற்றது. பிரிந்தவன் இரங்கலாவது ஒருவரை ஒருவர் பிரிந்த இடத்து இரங்கல் ஆகும். அது நெட்டாறு சென்ற வழி இரங்குதல் இன்மையானும் ஒருவழித்தணந்த வழி ஆற்றுதலின்றி வேட்கை மிகுதியால் இரங்குதலானும் வேறு ஓதப்பட்டது. இதற்கு ஏறிய மடற்றிறமும் தேறுதல் ஒழிந்த காமத்துமிகுதிறமும் முதலாயின பொருள். இது பெருந்திணைக்கு உரியதாகும்.

கலந்த பொழுதும் காட்சியும் அன்ன

இதுவும் அது. தலைவனைக் கண்ணுற்ற வழி மனநிகழ்ச்சி உளதாங் காலமும், அதன் பின்னர்க் குறிப்பறியும் துணையும் நிகழும் நிகழ்ச்சியும், தலைவியை எதிர்ப்படுதலும் ஓரிடத்து நிகழும் உரிப்பொருள் ஆகும்.

## 1.9 கருப்பொருள்:

தெய்வம் உணாவே மா மரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப

இது, கருப்பொருள் உணர்த்திற்று. தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின்பகுதியும் என்பனவும் அத் தன்மைய பிறவும் கருப்பொருள் எனப்படும்.

"மாயோன் மேய காடுறை உலகம்"(அகத். 5) என்றதனால், முல்லைக்குத் தெய்வம் கண்ணன்.

'காடுறை உலகம்" என்றதனானுங் "காரும் மாலையும் முல்லை"(அகத்.6) என்றதனானுங், காட்டினும் கார் காலத்தினும் மாலைப்பொழுதினும் நிகழ்பவை கொள்க.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்" (அகத். 21) என்றதனாலும், நிலமும் காலமும் பற்றி வருவன கருப்பொருள் என்பது உணர்க.

**1.9.1 முல்லைக்குரிய கருப்பொருள்:**

உணவு - வரகு, முதிரை, மா – மான், முயல், மரம் - கொன்றை, குருந்தம், புதல் புள் - கானாங்கோழி. பறை - ஏறு கோட்பறை. செய்தி - நிரை மேய்த்தல். யாழின் பகுதி என்பது பண். அது சாதாரி. பிறவும் என்றதனால், பூ முல்லையும் பிடவும் தளவும். நீர் - கான்யாறு. என்பனவும் அமையும்.

**1.9.2 குறிஞ்சிக்குரிய கருப்பொருள்:**

குறிஞ்சிக்குத் தெய்வம் சேயோன் என்னும் முருகன். உணவு – தினை, ஐவனம், வெதிர்நெல், மா – யானை, புலி, பன்றி, கரடி, மரம் - வேங்கை, கோங்கு புள் - மயில், கிளி, பறை - வெறியாட்டுப் பறை, தொண்டகப் பறை. செய்தி - தேனழித்தல், பண் - குறிஞ்சி. பிறவும் என்றதனால், பூ - வேங்கைப்பூவும், காந்தட்பூவும், குறிஞ்சிப் பூவும். நீர் - சுனை நீரும், அருவி நீரும், பிறவும் அன்ன.

**1.9. 3 பாலைக்குரிய கருப்பொருள்:**

தெய்வம் - கொற்றவை. உணவு - ஆறலைத்தலான் வரும் பொருள். மா - வலியழிந்த யானையும், வலியழிந்த புலியும், வலியழிந்த செந்நாயும். மரம் - பாலை, இருப்பை,கள்ளி, சூரை. புள் - எருவையும். பருந்தும். பறை - ஆறலைப்பறையும், சூறைகொண்ட பறையும். செய்தி - ஆறலைத்தல். பண் - பாலை. பிறவும் என்றதனால். பூ - மராம்பூ. நீர் - அறுநீர்ச் சுனையும், பிறவும் இந்நிகரன கொள்க.

**1.9.4 மருதத்திற்குரிய கருப்பொருள்:**

தெய்வம் இந்திரன்; உணவு - நெல். மா - எருமையும், நீர்நாயும், மரம் - மருதும். காஞ்சியும், புள் - அன்னமும் அன்றிலும். பறை - நெல்லரி பறை, செய்தி - உழவு. பண் - மருதம். பிறவும் என்றதனால், பூ தாமரையும் கழுநீரும். நீர் - ஆற்றுநீரும் பொய்கை நீரும். பிறவும் அன்ன.

**1.9.5நெய்தற்குரிய கருப்பொருள்:**

தெய்வம் - வருணன், உணவு - உப்பும் மீனும் விற்றுக் கொள்ளப்பட்டன. மா - கராவும் சுறவும். மரம் - புன்னையும் கைதையும். புள் - கடற்காக்கை. பறை - நாவாய்ப் பறை. செய்தி - மீன்படுத்தலும் உப்பு விளைத்தலும். பண் - செவ்வழி. பிறவும் என்றதனால், பூ - நெய்தல், நீர் - கேணி நீரும் கடல் நீரும். பிறவும் அன்ன.

**1.9.6 கருப்பொருளுக்குரிய சிறப்பு விதி:**

எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

இது, மேலதற்கு ஒரு புறனடை உணர்த்திற்று.

யாதானும் ஒரு நிலத்திற் குரிய பூவும் புள்ளும், அந் நிலத்தொடும் பொழுதொடும் வந்திலவாயினும், வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

**1.9. 10 திணைநிலைப்பெயர்:**

பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய
திணை தொறும் மரீஇய திணைநிலைப் பெயரே

திணைதொறும் மருவிப் பிறக்கும் திணைநிலைப்பெயர். குலப்பெயரும் தொழிற்பெயரும் என இருவகைப்படும்.

திணைநிலைப்பெயர் என்றதனால் அப்பெயருடையார் பிறநிலத்து இரார் என்று கொள்ளப்படும். அதனானே எல்லா நிலத்திற்கும் உரியராகிய மேன்மக்களை ஒழித்து நிலம்பற்றி வாழும் கீழ்மக்களையே குறித்து ஓதினார் என்று கொள்க. பெயர் என்றதனால் பெற்ற தென்னை? மக்கள் என அமையாதோ? எனின், மக்களாவார் புள்ளும் மாவும் போல வேறு பகுக்கப் படார். ஒரு நீர்மையராதலின் அவரை வேறுபடுக்குங்கால் திணைநிலைப்பெயரான் அல்லது வேறுபடுத்தல் அருமையின், பெயர் என்றார் என்பது உரையாசிரியரின் உரை விளக்கம்.

**1.9. 11 மக்கட்பெயர்:**

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.

இது முல்லைக்குரிய மக்கட்பெயர் உணர்த்திற்று.

ஆண் மக்களைப்பபற்றி வரும் திணைப்பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும். அவ்விடத்து வரும் கிழவரும் உளர்.

ஆயர் என்பார் நிரைமேய்ப்பார். வேட்டுவர் என்பவர் வேட்டைத் தொழில் செய்வார். அ.்.து எயினர் என்னும் குலப்பெயருடையார் மேல் தொழிற்பெயராகி வந்தது. "வந்தது கொண்டு வாராதது முடித்தல்'' (மரபு. 112) எனபதனான் ஆய்ச்சியர் எனவும் கொள்க. அவ்விரு திறத்தாரும் காடு பற்றி வாழ்தலின் அந்நிலத்தின் மக்களாயினார். அவ்வயின் வரூஉம் கிழவர் இருவகையர் ஆவர். அவர் முறையே அந்நிலத்தை ஆட்சி பெற்றோரும், அந்நிலத்து உள்ளோரும் ஆம். "குறும்பொறைநாடன் - ஆட்சிபற்றி வந்தது. பொதுவன் ஆயன் - குலம் பற்றி வந்தது.

**1.9.12 திணைநிலைப்பெயர்:.**

ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே.

இது, குறிஞ்சி முதலாய திணைக்கண் வரும் திணை நிலைப்பெயர் உணர்த்திற்று.

ஏனை நிலத்துள்ள மக்கள ் மாட்டும் ஆராயுங்காலத்து, அவ்விடத்து அவ்வகைய திணைநிலைப் பெயர் அமையும். திணைதொறும் குலப்பெயரும் தொழிற்பெயரும் கிழவர் பெயரும் வரும். அவை வருமாறு - குறிஞ்சி - மக்கட் பெயர் குறவன் குறத்தி - தலைமக்கட்பெயர், மலைநாடன் வெற்பன்

பாலை - மக்கட்பெயர், எயினர் எயிற்றியர், தலை மக்கட்பெயர் – மீளி, விடலை

மருதம்- மக்கட்பெயர், உழவர் உழத்தியர், தலைமக்கட்பெயர் - ஊரன், மகிழ்நன்

நெய்தல்- மக்கட்பெயர், நுளையர் நுளைச்சியர், தலைமக்கட்பெயர் - சேர்ப்பன் துறைவன் கொண்கன்

முல்லைத்திணைக்குச் செய்யுள்.

முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு ( அகம் 4 ) - முல்லைக்கு உரித்தாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இருத்தலாகிய உரிப்பொருளும் வந்தமைந்த பாடல்.

**பயிற்சி வினாக்கள்:**

1. முப்பொருள் வழக்கு குறித்து எழுதுக.

பாடப்பகுதி 1.3 பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

2. உரிப்பொருள் என்பதனைச் சுட்டியுரைக்க.

பாடப்பகுதி 1.8 பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

3.ஐந்நிலங்கள் குறித்து எழுதுக.

பாடப்பகுதி 1.4 பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக

# கூறு: 2: அகத்திணையியல்- கூற்று வகைகள

**நோக்கம்: அகத்திணைப் பிரிவுகளை அறிதல் - பிரிவின்கண் நிகழும் கூற்று வகைகளை அறிதல் - கைக்கிளை – பெருந்திணை பற்றி அறிதல்**

## 2. பிரிவும் வகைகளும்:

தொல்காப்பியர் பாலைத் திணைக்குரிய பிரிவினைப் பலவகையாக பிரித்துக் கூறுவார். பிரிவினை முதலில் இருபெரும் பிரிவினுள் அடக்குவார்.

இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
உரியதாகும் என்மனார் புலவர்

இதனுள் குறிக்கப்படும் இருவகைப்பிரிவினை தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப்பிரிதலும் என இருவகைப்படும் என குறிப்பார் இளம்பூரணர். ஆனால் பிற உரையாசிரியர்கள் காலிற்பிரிவு, கலத்திற்பிரிவு என்றும் வேனில் பிரிவு பின்பனிப்பிரிவு என்றும் வகைப்படுத்துவர்.

கைக்கிளை முதலாக எழுதிணையும் உணர்த்தினார் தொல்காப்பியர், அவற்றுள் நிலம் பகுக்கப்பட்ட முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நான்கு திணையும் களவு, கற்பு என்னும் இருவகை கைக்கோளின் நிகழ்தலின் அவற்றை நீக்கி நிலம் பகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் பாலையும் இதனுள் உணர்த்துகின்றார். ஆதலின் அவற்றுள் பாலைக்கு உரித்தாகிய பிரிவு உணர்த்தும் பொருட்டு பிரிவுக்கு நிமித்தம் உணர்த்துகின்றார் தொல்காப்பியர்.

ஓதல் பகையே தூதிவை பிரிவே

ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்ட இத் தன்மைய பிரிவிற்கு நிமித்தமாம்.

### 2.1 பகைவயிற்பிரிவு:

பகைவயிற் பிரிவு என்பது தன் அரசன் மாற்றரசனோடு போர் செய்யும் காலத்துத் தலைமகன் தலைமகளைப் பிரியும் பிரிவு ஆகும். பகைவர் காரணமாகி பிரியும் பிரிவு அரசன் தானே சேறலும், அவனொடு கூடி ஒழிந்தோர் சேறலும் வேந்தன் மேற்று ஆகும். இதனுள் அரசன் தலைமகனாய வழி அது பகைதணிவினைப் பிரிவு எனவும், அவனொடு சிவணி ஏனோர் தலைவராயவழி வேந்தற்குற்றுழிப் பிரிவு எனவும் இரு வகையாகக் கொள்ளப்படும்.

தானே சேறலுந் தன்னொடு சிவணி
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே

### 2.2 தேவர் காரணமாய்ப் பிரியும் பிரிவு:

இது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது

பூசையும் விழாவும் காரணமாகவும் முறைமையில் தப்பியவழி தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும், செய்யப்பட்ட பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரியும் பிரிவாகும்.

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே

சேரன் செங்குட்டுவன் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவினைச் சிலப்பதிகாரம் உணர்த்தும். இத்துணையும் பிரிவு அறு வகைப்படும். பரத்தையிற் பிரிவு அதுநிலம் பெயர்ந்து உறையாமையானும், இவை போல் சிறக்காமையானும். அறமுறைமை செய்யப் பிரிதலும் பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினானும், கற்பியலுள் கூறப்படுகிறது.

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே

மேலோராகிய தேவரது முறைமையை நிறுத்தற்குப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரித்து.

மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.

முறை செய்தற்கு அரசன் தான் சேறல் வேண்டாமையின், அதற்குரியராய் அவனது ஏவல் வழி வரும் வணிகரும் வேளாளரும் உரியர் ஆவர்.

உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான

மன்னர்க்குப் பின்னோராகிய இருவகையோரிலும் உயர்ந்தோராகிய வணிகர்க்கு, ஓதுதல் நிமித்தமாகப் பிரிதலும் உரித்தாகும்.

வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர்மருங்கினும் எய்திடன் உடைத்தே

வேந்தனது வினை இயற்கையாகிய தூதுப் பிரிவு வேந்தனை ஒழிந்த வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரித்து.

பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே.

பொருள்வயிற் பிரிவும் மேற்சொல்லப்பட்ட வணிகர் வேளாளரிடத்தில் உரியதாகும்.

உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக் கத்தான

உயர்தோராகிய அந்தணர் பொருள்வயிற் பிரியுங்காலத்து ஒழுக்கத்தானே பிரிவர்.

இதனாற் சொல்லியது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் வாணிகம் முதலாயின பொருள் நிமித்தம் ஆகியதுபோல, அந்தணர்க்கு இவை பொருள் நிமித்தம் ஆகாது என்பதும், அவர்க்கு இயற்கை ஒழுக்கமாகிய ஆசாரமும், செயற்கை ஒழுக்கமாகிய கல்வியுமே பொருட்குக் காரணமாகும் என்பதும் பெறப்படும்.

## 2.3 முந்நீர் வழக்கம்:

முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை.

குறிப்பு

பொருள்வயிற் பிரிவு காலிற்பிரிவு கலத்திற்பிரிவு என இருவகைப்படும். அவற்றுள் கலத்திற்பிரிவு தலைவியுடன் இல்லை. எனவே, காலிற்பிரிவு தலைமகளை உடன்கொண்டு பிரியவும் பெறும் என்பது தெரியவரும்.

## 2.4 மடன்மேல் குறித்த வரையறை:

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான.

இது கைக்கிளை பெருந்திணைக்கு உரிய இயல்பு உணர்த்திற்று.

எத்திணை மருங்கினும் பெண்பால் மடலேறுதல் இல்லை; அது சிறப்புடைய நெறியும் ஆகாது.

## 2.5 உடன்போக்கில் நற்றாய் கூற்று:

தலைமகளைப் பிரிதல் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப்பிரிதல் என்னும் இருவகைப்பிரிவினுள் தமரைப் பிரிதலாகிய உடன்போக்கு நிகழ்ந்த காலத்து நற்றாய் கூற்று நிகழுமிடம் உணர்த்திற்று.

தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியு மவ்வழி உரிய.

**தன்னும் அவனும் அவளும் சுட்டல்:** தன்னையும் தலைமகனையும் தலைமகளையும் குறித்துக் கூறல்

**மன்னுநிமித்தம்:** ஆட்சி பெற்ற நிமித்தம்; அது பல்லி முதலாயினவாம்.

**மொழிப்பொருள்**:பிறர் தம்முள் கூறும் மொழிப்பொருளை நிமித்தமாகக் கோடல்; அதனை நற்சொல் என்பது.

**தெய்வம்**: உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினார் ஆவேசித்துக் கூறும் சொல்.

**நன்மை தீமை அச்சம்**: தனக்கும் அவர்க்கும் உளதாகிய நன்மையும் தீமையும் அச்சமும் குறித்தல்.

**சார்தல்**: அவர் தன்னை வந்து சார்தல்

என்பனவும் அத் தன்மையவாகிய பிறவும் அவற்றோடு கூட்டி, குறித்த காலம் மூன்றும் ஒருங்கு தோற்றுவித்து, தோழிமாட்டும் கண்டோர்மாட்டும் புலம்புதலும் உண்டு.

**முன்னியகாலம் மூன்றுடன் விளக்குதல்**: முன்பு இத் தன்மையள் ஆயினாள்; இப்பொழுது இத் தன்மையள் ஆகா நின்றாள்; மேல் இன்னள் ஆகுவள் என மூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல் ஆகும்.

“தோழியர் சூழத் துனறமுன்றில் ஆடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கால் - தாழாது
கல்லதர் அத்தத்தைக் காதலன் பின்போதல்

வல்லவோ மாதர் நடை'' (ஐந்திணை ஐம்பது - 37) தலைமகள் உடன்போகிய வழி நற்றாய் கவன்றுரைத்தது.

## 2.6 உடன்போக்கில் செவிலி:

ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்
தாமே செல்லுந் தாயரும் உளரே.

இது, தலைமகள் உடன்போகியவழிச் செவிலிக்கு உரியதோர்திறன் உணர்த்திற்று.

ஏமம் பொருந்திய பெரிய ஊரகத்துச் சேரியின்கண்ணும் ஊரினின்றும் நீங்கிய சுரத்தின்கண்ணும் தாமே செல்லுந் தாயரும் உளர்.

''தாமே செல்லுந் தாயர்'' என்பதனால் செவிலி என்பது பெறப்படும். ''தாயரும்'' என்றதனால் கைத்தாயர் பலர் என்று கொள்ளப்படும். அவ்வழிச் சேரியோரை வினாதலும், சுரத்திற் கண்டோரை வினாதலும் உண்டு. தாய் எனப் பன்மைகூறித் ''தாமே'' எனப் பிரித்ததனால் சேரிக்கு நற்றாய் சேறலும், சுரத்திற்குச் செவிலித்தாய் சேறலும் புலனெறி வழக்கிற்குச் சிறந்ததென்று உணர்க.

**சேரியோரை வினாதல்:**

இதுஎன் பாவைக் கினியநன் பாவை
இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்று
அலம்வரு நோக்கி னலம்வரு சுடர்நுதல்
காண்தொறுங் காண்தொறுங் கலங்கி
நீங்கின ளோவென் பூங்க ணோளே (ஐங்குறு-375)

**சுரத்திடை வினாதல்:**

''காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே'' (குறுந்-44)

### 2.6.1 பாலைக்கு உரியதோர் இயல்பு:

அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே.

சேரியினும் சுரத்தினும் பிரிதலன்றித் தமது மனை அயற்கண் பிரிந்தாராயினும் பிரிவின்கண்ணதே ஆகும்.

## 2.7 தோழி கூற்று நிகழிடம்:

தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்மையுங் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந் தோளை
அழிந்தது களையென மொழிந்தது கூறி

குறிப்பு

வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றுந் தோழி மேன.

தலைவரும் விழும நிலையெடுத் துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன தோழிமாட்டுப் பொருந்தித் தோன்றும் கிளவிகள் ஆகும்.

**தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தல்:** பின்பு வரும் நோய் நிலையை எடுத்துக் கூறுதல்.

"பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை ---
கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ;---
ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ;
எனவாங்கு,
பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு
எந்நாளோ நெடுந்தகாய் நீ செல்வது
அந்நாள்கொண்டு இறக்கும்இவள் அரும்பெறல் உயரே"(கலி. பாலை. 4)

எனவரும். இதனுள் "யாம் நுமக்குச் சிறந்தனமாதல் அறிந்தனிராயின்" என்றமையாலும், "பொய்ந் நல்கல் புரிந்தனை" என்றமையாலும் வரைவதன் முன்பென்று கொள்ளப்படும். இவள் இறந்துபடும் என்றமையால் உடன்கொண்டு போவது குறிப்பு அமைந்தது.

**போக்கற்கண்:** உடன்கொண்டு பெயர் என்று கூறுதற்கண்ணும் எனல்

"அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ வெமக்கு"(கலி. பாலை. 5)

**விடுத்தற்கண்**: தலைமகன் உடன்போக்கு ஒருப்பட்டமை தலைமகளுக்குக் கூறி அவளை விடுத்தல்.

"நின்னினும் மடவள் நனிநின் நயந்த
அன்னை அல்லல் தாங்கிநின் ஐயர்
புலிமருள் செம்மல் நோக்கி
வலியாய் இன்னுந் தோய்கநின் முலையே"(அகம். 259) - இது விடுத்தவழிக் கூறியது.

**நீக்கலின் வந்த தம்முறு விழுமம்** - தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின்கண்ணும் என்பதாம்.

விளம்பழங் கமழும் கமஞ்சூல் குழிசிப்
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத்து அன்றியுங் கலுழ்ந்தன கண்ணே"(நற். 12) இ∴து உடன்போக்குத் தவிர்தற்பொருட்டுக் கூறியது.

குறிப்பு

**வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளல்**: மெய்ம்மையும் பொய்ம்மையும் காணப்பட்ட அவனைச் சுட்டித் தாய்நிலை நோக்கி மீட்டுக்கொள்ளுதற்கண் கூறல்.

**நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை, அழிந்தது களையென மொழிந்தது கூறி, வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு,என்றிவை எல்லாம் இயல்பு நாடின், ஒன்றித் தோன்றும் தோழிமேன:**தலைமகன் பிரிதலால் வந்துற்ற நோய் மிகவும் பெருகித் தன் நெஞ்சு கலங்கியோளை அழிந்தது களைதல் வேண்டுமெனத் தலைமகன் சொன்ன மாற்றத்தைக் கூறி வன்புறையின் பொருட்டு நெருங்கி வந்ததன் திறத்தோடு இத்தன்மைய வெல்லாம் இயல்பு ஆராயின் தலைமகளொடு பொருந்தித் தோன்றும் தோழி மேலன என்பதாம்.

ஒன்றித் தோன்றுந் தோழி என்றதனால் தோழிமார் பலருள்ளும் இன்றியமையாதாள் என்று கொள்க.

“தோழி தானே செவிலி மகளே” (களவியல் - 35) என்றதனான், அவள் செவிலிமகள் என்று கொள்ளப்படும்.

**மொழிந்தது கூறி வன்புறை நெருங்குதல்**: தலைமகன் மொழிந்தது கூறி வற்புறுத்தலாம்.

‘‘இனைநலம் உடைய கானஞ் சென்றோர் ----
புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கொத்து இசைத்தன
நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே’’ (கலி - பாலை -11) – வன்புறை

என்றிவை எல்லாம் இயல்புற நாடின் என்றதனால், பருவம் வந்தது எனவும் பருவம் அன்று எனவும் வருவனவும் அமையும்.

இன்னும் ‘‘என்றிவை எல்லாம்’’ என்றதனால், பிரியுங்காலத்துத் தலைமகட்கு உணர்த்துகின்றேன் எனத் தலைமகற்கு உரைத்தலும், தலைமகட்கு அவர் பிரியார் எனக் கூறுதலும் கொள்க என்பார் இளம்பூரணர்.

### 2.8 கண்டோர் கூற்று:

பொழுது மாறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்பும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப.

இது, கண்டோர் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

**பொழுது மாறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றங் காட்டல்:** காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றும் தனமை காட்டி அவ்வழிச் செல்லின் தீங்கு நேரும்: எனவே செல்லற்க எனக் கூறும் வழி கூற்று நிகழும்.

**ஊரது சார்பும் செல்லுந் தேயமும்ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழி:** ஊரது அண்மையும் செல்லும் இடத்தின் சேய்மையும் ஆர்வ நெஞ்சமொடு கூறி எம் ஊரில் தங்கிச் செல்க என்னும் வழி கூற்று நிகழும்.

"எம்ஊர் அல்லது ஊர்நணித்து இல்லை
வெம்முரண் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
அரிய சேய பெருங்கல் ஆறே"(சிற்றட்டகம்)

**புணர்ந்தோர் பாங்கில் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்துஎதிர் கூறி விடுத்தல்**: தலைவனும் தலைவியும் தங்கள் ஊரில் தங்கிச் செல்ல உடன்படாத நிலையில் புணர்ந்து செல்கின்றோர் பக்கத்து விரும்பின நெஞ்சத்தோடு மனன் அழிந்து உங்கள் ஊருக்காயினும் செல்க எதிர்மொழி கூறி விடுத்தற்கண்ணும் கூற்று நிகழும்.

**ஆங்கு அத் தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்:** ஆண்டுப் பின் சென்ற அச் செவிலித்தாயது நிலைமையைக் கண்டு போகாமல் தடுத்தற்கண்ணும் போகவிடுத்தற் கண்ணும் கூற்று நிகழும்.

"பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி
சிலம்புகெழு சீறடி சிவப்ப
இலங்குவேற் காளையோ டிறந்தனள் சுரனே." - இது தடுத்தற்கண் வந்தது.

"நெருப்பவிர் கனலி உருப்புசினந் தணியக் ---
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே." (ஐங்குறு – 388 - இது விடுத்தற்கண் வந்தது,

**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்:**சேய்மைக்கண் அகன்றோர் செல்லுத்தற்கண்ணும் வரவின்கண்ணும் கூற்று நிகழும்.

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்நெற் றொலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே" (குறுந் - 7)

## 2.9 தலைமகன் கூற்று நிகழிடம்:.

ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்

இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையும் இளமைய தருமையுந்
தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினுங் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியிற் பிரிந்தோள் குறுகி
இரத்தலுந் தெளித்தலும் எனஇரு வகையோடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.

இது பிரிவின்கண் தலைமகற்குக் கூற்றுநிகழும் இடன் உணர்த்திற்று.
வரைவு உடன் படாத தமர்கண்ணும் தலைமகன் கூற்று நிகழும்.
பருவத்தின்கண்ணும் தலைமகன் கூற்று நிகழும்.சுரத்தின்கண்ணும் தலைமகன் கூற்று நிகழும்.
பொருந்திய சொல்லொடு தலைமகளை உடன் கொண்டுபோகத் துணியினும் விடுத்துப்போகினும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மோ டுணீஇயர்
வருகதில் அம்ம தானே
அளியளோ அளியள்என் நெஞ்சமர்ந் தோளே" (குறுந்.56) அவ்வழி இடைச்சுரத்திற் கூறியதற்குச் செய்யுள்

தலைமகள் செல்கின்ற இடைச்சுரத்திடைத் தலைமகள் தமர் எய்தி மீட்டுக்கொண்டு பெயர்தல் மரபாதலின் அங்ஙனம் பெயர்வர் எனக் கலங்கி வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த அலர் உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின் கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.அக் கூற்றானது

தமர் வருவர் என ஐயுற்றுக் கூறலும் வந்தவழிக் கூறலும் என இருவகைப்படும்.

“வினையமை பாவையின் இயலி நுந்தை ---

அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன்

நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே.” (நற்.362) - இது வருவர் என ஐயுற்றுக்கூறியது.

நாளது சின்மையும், இளமையது அருமையும், தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும், இன்மையது இளிவும், உடைமையது உயர்ச்சியும், அன்பினது அகலமும், அகற்சியது அருமையும், ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்பதாகச் சொல்லப்பட்ட எட்டனையும் பொருந்தாத பொருட்கண் ஊக்கிய பக்கத்தினும் அவற்றுக் கூற்று நிகழும்.

**நாளது சின்மையை ஒன்றாமை**: யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

**இளமையது அருமையை ஒன்றாமை**: பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

**தாளாண் பக்கத்தை ஒன்றாமை:** முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

**தகுதியது அமைதியை ஒன்றாமை**: பொருண்மேற் காதல் உணர்ந்தோர்க்குத் தகாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை,

**இன்மையது இளிவை ஒன்றாமை**: இன்மையான் வரும் இளி வரவினைப் பொருந்தாமை.

**உடைமையது உயர்ச்சியை ஒன்றாமை**: பொருள் உடையார்க்கு அமைவு வேண்டுமன்றே, அவ்வமைவினைப் பொருந்தாமை: அ.்.தாவது மென்மேலும் ஆசை செலுத்துதல்.

**அன்பினது அகலத்தை ஒன்றாமை**: சிறந்தார்மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை.

**அகற்சியது அருமையை ஒன்றாமை**: பிரிதலருமையைப் பொருந்தாமை.

வாயான் வகுத்த பக்கமோடும் கையான் வகுத்த பக்கமோடும் பயன் கருதிய ஒரு கூற்றானும் அவற்குக் கூற்று நிகழும்.

**வாயான் வகுத்த பக்கமாவது ஓதுதல். கையான் வகுத்த பக்கமாவது** - படைக்கலம் பயிற்றலும் சிற்பங் கற்றலும். ஊதியங் கருதிய ஒரு திறனாவது மேற்சொல்லப்பட்ட பொருள்வயிற் பிரிதலன்றி அறத்திறங் காரணமாகப் பிரியும் பிரிவு. இது மறுமைக்கண் பயன் தரும் என்பர்.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை

மறத்தலி னூங்கில்லை கேடு” (குறள் - 32)

பிரிந்ததனால் வரும் புகழும் பிரியாமையால் வரும் குற்றமும் குறித்துத் தலைமகளை யான் வருந்துணையும் ஆற்றியிருத்தல் வேண்டுமெனக் கூறுதற் கண்ணும் தலைமகனுக்கக் கூற்றுநிகழும்.

“அறனு மீகையு மன்புங் கிளையும்

புகழு மின்புந் தருதலிற் புறம்பெயர்ந்து
தருவது துணிந்தமை பெரிதே
விரிபூங் கோதை விளங்கிழை பொருளே'' - என வரும்.

இரு பெரு வேந்தர் போருக்கு எதிர்ந்த வழி சந்து செய்தற்குத் தூதாகிச் செல்லும் வகையின் கண்ணும் தலைமகனுக்குக் கூற்று நிகழும்.

வேந்தற்கு உற்றுழிப் பிரியும் பிரிவு பிரியும் வழியும் தலைமகனுக்குக் கூற்று நிகழும்

மூன்றன் பகுதியாவன, நால்வகை வலியினும் தன்வலியும் துணைவலியும் வினைவலியும் என்பன. அவை பகைவர்மாட்டுள்ளன.

**மண்டிலத்து அருமை**:, பகைவர் மண்டிலங் கொண்ட அருமை

**மாற்றோர் மேன்மை:** மாற்றோரது உயர்ச்சி

**பாசறைப் புலம்பல்**: பாசறைக்கண் தலைமகன் தனிமையுரைத்தல் .

தூதினும் வேந்தற்கு உற்றுழியினும் பகை தணிவினையினும் பாசறைக்கட் புலம்பலினும் தலைமகனுக்குக் கூற்று நிகழும்.

''வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த ----
நற்றோள் நெகிழ வருந்தினள் கொல்லோ
நுண்பல் தித்தி மாஅ யோளே.'' (அகம். 41) - என்பது பகையிற் பிரியும் தலைமகன் கூற்று.

வினை முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பப்பட்ட வினைத் திறத்தினது வகையின் கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.அது பாசறைக்கட் கூறலும், மீண்டு இடைச்சுரத்துக் கூறலும் என இருவகைப்படும். இன்னும், “வகை'' என்றதனான் நெஞ்சிற்குக் கூறியனவுங் கொள்ளப்படும்.

''வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும் ---
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே.'' (அகம்.9) - இது இடைச்சுரத்துச் சொல்லியது.

காவற்பக்கமாகிய இடத்தின்கண் தலைவனுக்குக் கூற்று நிகழும். ''நின்னாங்கு வரூஉமென் நெஞ்சினை” (கலி. பாலை.22) என்றாற் போலக் கொள்க. இது வாரியுள் யானை காணவும், நாடுகாணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் பிரியும் பிரிவு. ஒருபக்கம் நாட்டெல்லையிலிருந்து பகைவரைக் காக்கவேண்டிப் பிரிவது பகைவயிற் பிரிவின் அடங்குதலின் அ.்.ததன் உண்மைக்கண் பிரியும் பிரிவு என்று கூறப்பட்டது.

**பரத்தையின் அகற்சி:** பரத்தையரிற் பிரியும் பிரிவின்கண்ணும் என்பதாம். மேற்கண்ட இடங்களில் எல்லாம் தலைவன் கூற்று நிகழும்.

## 2.10 எஞ்சியோர் கூற்று:

எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே.

இதுகாறும் பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும் நற்றாயும், செவிலியும், கண்டோரும், தோழியும், தலைமகனும் கூறுங்கூற்றுக் கூறினார். இ∴து அவரை ஒழிந்த தலைமகட்கும், பாங்கற்கும், பார்ப்பார்க்கும், பாணர்க்கும், கூத்தர்க்கும், உழையோர்க்கும் கூற்று நிகழுமாறு உணர்த்துதல் பொருட்டு அமைந்தது.

முன்னர்க் கூறாது எஞ்சி நின்றார்க்கும் கூற்று ஒழிதல் இல்லை என்பது இதன் பொருள் ஆகும்..

“பாங்கர் முதலாயினாரை இச் சூத்திரத்தாற் கூறுப; தலைமகள் கூற்றுத் தனித்துக்கூறல் வேண்டும். இவரோடு ஒரு நிகரன்மையின்'' எனின் ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழைமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும், ஆசிரியர் இச் சூத்திரத் தானும் பொருள் கொள்ள வைத்தமையின், தலைமகள் கூற்று வருமாறு; தலைமகள் பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக் கண்டு கூறுதலும், பிரிவுணர்ந்து கூறுதலும், பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறுதலும், உடன் போவல் எனக் கூறுதலும் இடைச்சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லி விட்டனவும், தமர் வந்துற்றவழிக் கூறுதலும், மீளலுற்றவழி ஆயத்தார்க்குக் கூறிவிட்டனவும், பிரிவாற்றாமையும், ஆற்றுவல் என்பது படக் கூறுதலும், தெய்வம் பராவலும், பருவங்கண்டு கூறுதலும், வன்புறை எதிரழிந்து கூறுதலும் இவையெல்லாம் கூறப்படும் என உரை விளக்கம் செய்வார் இளம்பூரணர்,

## 2.11 பாலைத்திணைக்குரிய மரபு:

நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே.

முன்பு நிகழ்ந்ததனைக் கூறிப் போகா தொழிதலும் பாலைத் திணையாகும்.

‘‘ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப் ----
வினைமுடித் தன்ன இனியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே.” (நற்றிணை -3)

மரபுநிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

இதுவும் மேற்கண்டதாகும். மரபுநிலை திரியாத மாட்சிமையுடையவாகி விரவும் பொருளும் விரவும்.

அ∴தாவது பாலைக்கு ஓதிய பாசறைப் புலம்பற்கண்ணும், தேர்ப்பாகற்குக் கூறுதற்கண்ணும் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாம்.

**2.11.1 மரபுநிலை திரியாமை:** பாசறைக்கண் வினை முடித்த வழிக் கார்காலம் வந்ததாயின் ஆண்டுக் கூறும் கூற்று. அ∴து அக்காலத்தைப் பற்றி வருதலின் மரபு நிலை திரியாதாயிற்று.

சான்று - ‘‘வேந்து வினை முடித்த ” என்னும் அகப்பாட்டினுள் (14) கண்டு கொள்க.

குறிப்பு

இன்னும் “மாட்சியஆகி விரவும் பொருளும் விரவும்” என்றதனால் பாசறைக்கண் தூது கண்டு கூறுதலும், தலைமகளை இடைச்சுரத்து நினைத்துக் கூறுதலும் வந்தமையும்.

“நீடினம் என்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்து
யாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லியது உரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே.” (ஐங்குறு - 478) - இது தூது கண்டு கூறியது.

**2.12.1 உள்ளுறை உவமம் ஏனை உவமம்:**

உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளாது ஆகுந் திணையுணர் வகையே.

இ.்.து, உவம வகையான் ஐந்திணைக்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

உள்ளுறைக்கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையாலும், திணை உணரும் வகை தப்பாது அமையும்.

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே.

உள்ளுறையாவது கருப்பொருள் தெய்வம் ஒழிந்த பொருளை, இடமாகக் கொண்டுவரும்.

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்.

உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனோடு ஒத்து முடிக என உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம்.

எனவே, உவமையாற் கொள்ளும் வினை, பயன், மெய், உருவன்றிப் பொருளுவமையாற் கொள்ளப்படுவது என்பது தெரியவரும்.

“வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமதுச்சேர்ந்து
உண்டாடுந் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்தா மரைபிரிந்த வண்டு” (தண்டியலங்காரம்); ஒட்டணி

இது வண்டோரனையர் மாந்தர் எனக் கூறுதலான் உவமிக்கப்படும் பொருள் புலப்படாமையின் உள்ளுறையுவம் ஆயிற்று. இதனுட் காவியும் தாமரையும் கூறுதலான் மருதமாயிற்று.

**2.12.2 ஏனை உவமம்:**

ஏனை உவமம் தானுணர் வகைத்தே.

உள்ளுறை ஒழிந்த ஏனைஉவமம் தான் உணரும் வகையான் வரும்.

தான் உணரும் வகையாவது, வண்ணத்தானாதல் வடிவானாதல் பயனானாதல் தொழிலானாதல் உவமிக்கப்படும் பொருளொடு எடுத்துக் கூறுதல். அது வருமாறு உவமவியலுள் கூறப்படுகிறது..

“உரைத்திசிற் றோழியது புரைத்தோ அன்றே

துருக்கங் கமழும் மென்தோள்

துறப்ப என்றி இரீஇயர்என் உயிரே''. (சிற்றட்டகம்) இது துருக்கம் என உவமை கூறுதலாற் குறிஞ்சியாயிற்று.

## 2.13. கைக்கிளைக் குறிப்பு:

காமம் அமையாத இளையவள் மாட்டு ஏமம் அமையாத இடும்பை எய்தி, புகழ்தலும் பழித்தலுமாகிய இரு திறத்தால், தனக்கும் அவளுக்கும் ஒத்தன சுட்டிச் சொல்லி சொல் எதிர் பெறாத ஆண்மகன் தானே சொல்லி இன்புறுதல் பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு ஆகும்.

காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

''புல்லித்தோன்றும்'' என்றதனால், புல்லாமற்றோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதாவது - காமஞ்சான்ற தலைமகள் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி. அது களவியலுள் கூறப்படுகின்றது என்பது இளம்பூரணர் உரைக்குறிப்பாம்.

காமம் சாலா இளமையோள்வயின் கூறியதற்குச் செய்யுள்

''ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்கால் ---
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடை யான''. - காமம் சாலா இளமையோள்வயின் கூறியது

## 2.14 பெருந்திணை:

ஏறிய மடற்றிறமும், இளமை தீர்திறமும், தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமும், மிக்க காமத்து மாறாய திறனொடு கூட்டி, சொல்லப்பட்ட நான்கு திறமும் பெருந்திணைக்குரியதாம்.

ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

கைக்கிளை புணராது நிகழும் என்றமையால், இது புணர்ந்தபின் நிகழும் என்பது பெறப்படும். ஏறிய மடற்றிறம் தலைமகற்கே உரித்து.

''எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தால் ---
அன்புறு கிளவியாள் அருளிவந் தளித்தலின்
துன்பத்தில் துணையாய மடல்இனி இவட்பெற
இன்பத்துள் இடம்படலென் றிரங்கினள் அன்புற்று

அடங்கருந் தோற்றத்து அருந்தவ முயன்றோர்தம்
உடம்பொழித்து உயருல கினிதுபெற் றாங்கே." ( கலித் . நெய் .21)

இளமை தீர் திறமாவது, இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது அது மூவகைப்படும். தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதல், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதல், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத்தின்மேல் மனம் நிகழ்தல் என்பதாம்.

"உளைத்தவர் கூறும் உரையெல்லாம் நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம் - விளைத்த
பழங்கள் அனைத்தாய்ப் படுஇளி செய்யும்
முழங்கு புனலூரன் மூப்பு." (புறப். இருபாற் பெருந்திணை . 14 ) - தலைமகன் இளமை தீர் திறம் வந்தவாறு காண்க.

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்:** : தெளிவு ஒழிந்த காமத்தின் கண்ணே மிகுதல்.

இது பெரும்பான்மை தலைமகட்கே உரித்து,

"புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை ---
கலங்கிய நீர்போல் தெளிந்து நலம்பெற்றாள்
நல்லெழின் மார்பனைச் சார்ந்து" ( கலித் - நெய் . 25)

**மிக்க காமத்து மிடல்** : ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது . அதாவது, வற்புறுத்துந் துணையின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும் இழிந்திரந்து கூறுதலும், இடையூறுகிளத்தலும் அஞ்சிக்கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறள்வயிற் சேறலும், இன்னோரன்ன ஆண்பாற்கிளவியும், முன்னுறச் செப்பலும், பின்னிலை முயல்தலும் கணவனுள்வழி இரவுத்தலைசேறலும், பருவம் மயங்கலும், இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குற்றிசையும்; குறுங்கலியும் இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், பிறவுமாகிய ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் கொள்ளப்படும்.

"நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப
ஒடுங்கி உயங்கல் ஒழியக் - கடுங்கணை
வில்லோர் உழவர் விடரோங்கு மாமலைச்
செல்லேம் ஒழிக செலவு." ( புறப் . இருபாற்பெருந்தணை . 1) - இது செலவழுங்குதல்.

**2.15. கைக்கிளைக்குரியதொரு மரபு:**

முன்னைய நான்கும் முன்னதற் கென்ப .

மேற்சொல்லப்பட்ட நான்கினும் முந்துற்ற நிலைமை நான்கும், முன்னதற்கு என்ப முற்கூறப்பட்ட கைக்கிளைக்காம் என்ப.

அவையாவன:- ஏறா மடற்றிறம், இளமை தீராத்திறம் , தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறாகாத்திறம் என்பன.

குறிப்பு

ஏறாமடற்றிறம் வெளிப்பட இரத்தலாம், இளமை தீராத்திறம், நலம் பாராட்டலாம். தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், புணராவிரக்கமாம். மிக்க காமத்தின் மாறாகாத்திறம், நயப்புறுத்தலாம்.

"கைக்கிளை செந்திறம் பெருந்திணை நோந்திறம்
அத்திறம் இரண்டும் அகத்திணை மயங்காது
அத்திணை யானே யாத்தனர் புலவர்."

இதனானே கைக்கிளை இன்பம் பயப்ப வருமென்பதுடிஅம், பெருந்திணை துன்பம் பயப்ப வரும் என்பதும் தெரியவரும்.

**முன்னைய நான்கு** : இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சி, ஐயம், தெரிதல், தேறல் என்பன.

## 2.16 அகத்திணை மரபுகள்:

அகத்திணையின் இறுதியில் அகத்திணை மரபுகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். அதனுள் வழக்கு என்பதும் ஒன்றாம்.வழக்கு இரண்டு வகைப்படும்.அவை நாடக வழக்கு, உலகியல் வழக்கு என இரு வகைப்படும். மேலும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் கலி, பரிபாடல் ஆகிய இருவகை பாவினால் அமையும்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர் .

நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அதாவது செல்வத்தானும், குலத்தானும் ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரும் இன்றி அடுப்போரும் இன்றி வேட்கை மிகுதியால் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்.

உலகியல் வழக்காவது, உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது.

பாடல் சான்ற புலன் நெறி வழக்கம் - இவ்விருவகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருள். அவ் அகப்பொருள்கலியும் பரிபாடலும் என்னும் இரண்டு பாவிலும் உரிமையுடைத்தாம் என்று உரைப்பர் புலவர்.

ஒழிந்த பாக்கள் இத்துணை அகப்பொருட்கு உரியவாய் வருதலின்றிப் புறப்பொருட்கும் உரியவாய் வருதலின் கூறாது விடுத்தார். புறப்பொருள் உலகியல்பால் அன்றி வாராமையின், அது நாடக வழக்கம் அன்றாயிற்று.

### 2.16.1 சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறா மரபு:

அகத்திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரியவாகிய நிலமும் காலமும் கருப்பொருளுமன்றி மக்களைப்பற்றி வரும்

புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மையும், அவ்வைந்திணைக் கண்ணும் தலைமகனாகப் புலனெறி வழக்கம் செய்ய வேண்டின் நாடன், ஊரன், சேர்ப்பன் என்னும் பொதுப்பெயராலே குறிக்கப்பெறுவர். ஒருவர்க்கு உரித்தாகி வரும் பெயரால் சுட்டியுரைக்கமாட்டார் புலவர். இதன்வழி தலைமக்கள் பெயர் பாடலுள் சுட்டும் மரபு தமிழ் மரபு அன்று என்பது தெரியவரும்.

மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டிஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.

இதனால் ஒருவர்க்குரித்தாகி வரும்பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப் பெறாது என்பதும், புறத்திணையுள் வரும் என்பதும் ஆங்கும் பாடாண் பாட்டுக் காமம் பொருளாக வரின் அவ்வழி வரும் என்பதும் புலனாகிறது. இதனான் அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வரும் என்பதை அறிய முடிகிறது.

புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.

**பயிற்சி வினாக்கள்:**

**1.** உடன்போக்கில் செவிலி பெறுமிடத்தை விளக்குக.
பாடப்பகுதி 2.6 இன் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
2. தோழி கூற்றின் தன்மைகளைச் சுட்டியுரைக்க.
பாடப்பகுதி 2.7 இன் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
3. கைக்கிளையின் இலக்கண மாபினை விளக்குக.
பாடப்பகுதி 2.13 இன் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
4.சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறா மரபு தமிழின் அக மரபிரைனத் தருக.
பாடப்பகுதி 2.16.1 இன் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
5. முந்நீர் வழக்கம் குறித்து எழுதுக.
பாடப்பகுதி 2.3 இன் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
6.உள்ளுறை உவமம் ஏனை உவமம் - கட்டுரைக்க
பாடப்பகுதி 2.12.1 இன் விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

## கூறு: 3 – புறத்திணையியல் - அறிமுகம் - திணைவகைகள் - வெட்சித்திணை

**நோக்கம்: புறத்திணைகளை அறிதல் - எழுவகைப் புறத்திணைகளுள் ஒன்றாய வெட்சித் திணையினைத் தெரிதல்**

குறிப்பு

### புறத்திணையியல்

அகத்திணையியலில் அகத்திற்கு இலக்கணம் கூறிய தொல்காப்பியர் புறத்திணையியலில் புறத்திற்கு இலக்கணம் கூறுகின்றார். புறப்பொருள் என்று சுட்டப்பெறுவது மறம் செய்தலும் அறம் செய்தலும் ஆதலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலான் புறம் என்றும் வரையறுப்பர் இலக்கண நூலார். இதனுள் அகத்திணையாகிய எழுதிணையும் சாற்றி, அவற்றின் புறத்து நிகழ்வன எழுதிணை உணர்த்தினார். இப் புறத்திணை வெட்சி முதலாக பாடாண் ஈறாகக் குறிக்கப்படுகிறது.

## 3.1 வெட்சித்திணை:

வெட்சி குறிஞ்சிக்குப் புறனாகிய திணை ஆகும். நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயின் பிறநாட்டு ஆநிரையைக் களவிற்கோடல் ஒரு புடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும், வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று. மேலும் சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்.

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.

வெட்சித்துறை பதினான்கு துறையை உடையதாகும்.

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.

வேந்தனால் விடப்பட்ட படைவீரர்கள் வேற்று நாட்டின்கண் களவினானே ஆநிரைகளைக் கொண்டு வந்து பாதுகாத்தல் ஆகும்.

ஓம்புதலாவது, மீளாமல் காத்தல், புறப்பொருட் பாகுபாடாகிய பொருளினும் அறத்தினும் பொருள் தேடுதற்குரிய நால்வகை வருணத்தாரினும் சிறப்புடையார் அரசராதலானும், அவர்க்கு மாற்றரசர் பால் திறைகொண்ட பொருள் மிகவும் சிறந்ததாகலானும், அப்பொருள் எய்துங்கால் அவரைப் போரில் வென்று கோடல் வேண்டுதலானும், போர்க்கு முந்துற நிரைகோடல் சிறந்ததாகலானும், இப்பொருள் முன் கூறப்பட்டது என்பது இளம்பூரணம்.

## 3.2 வெட்சியின் துறைகள்:

படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகியசெலவே புடைகெட

ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்துஇறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்.

படையியங்கு அரவம் முதலாகக் கொடை ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு துறையை உடைத்து வெட்சித்திணை.

**3.2.1படையியங்கு அரவம்**: நிரைகோடல் கருதிப் படையெழும் அரவம்.

''நெடிபடு கானத்து நீள்வேல் மறவர்
அடிபடுத் தாரதர் செல்வான் - துடிபடுத்து
வெட்சி மலைய விரவார், மணிநிரைக்
கட்சியுள் காரி யெழும்'' (புறப்.வெட்சி . 3)

**3.2.2 பாக்கத்து விரிச்சி**: பாக்கத்துக்கண் நற்சொல் கேட்டல்.

''எழுவணி சீறூர் இருள்மாலை முன்றில்
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவில்
குடக்கள்ளுக் கொண்டுவா என்றாள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும்.'' (புறப்.வெட்சி.4)

**3.2.3புடை கெடப் போகிய செலவு**. மாற்றரசர் பக்கத்தாராகித் தம்மாட்டு ஒற்றொடுநிற்பார் அறியாமல் போதல். பக்கத்திலுள்ளாரைப் பக்கம் என்றார்.

''கூற்றினத்து அன்னார் கொடுவில் இடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படர்ந்து - ஏற்றினம்
நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர்.'' (புறப்.வெட்சி.5)

**3.2.4ஒற்றின் ஆகிய வேய்**: மாற்றரசர் பக்கத்துள்ளார் அறியாதவகை ஒற்றரால் ஆகிய ஒற்றுதல்.

''நிலையும் நிரையும் நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி - இலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர்.'' (புறப். வெட்சி.6)

**3.2.5வேய் புறம் முற்றின் ஆகிய புறத்து இறை** : வேய்க்கப்பட்ட இடத்தின் புறத்தினைச் சூழ்தலான் ஆகிய புறத்திருக்கை.

வேய் என்பது ஆகுபெயராய் அவ்விடத்தின்மேல் நின்றது.

''--- ஒற்றினான் ஒற்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினார் போகாமற் சூழ்ந்து.'' (புறப்.வெட்சி.7)

**3.2.6 முற்றிய ஊர்கொலை:** ஊரை அழித்தல்.

''இகலே துணையா எரிதவழச் சீறிப்
பகலே அரிதென்னார் புக்குப் -பகலே

தொலைவில்லார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவில்லார் கொண்டார் குறும்பு''. (புறப்.வெட்சி.8)

**3.2.7 ஆ கோள்** - நிரையைக் கோடல்.

''கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும் - நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை." (புறப்.வெட்சி.9)

**3.2.8பூசல் மாற்று** - பூசல் மாற்றிப் பெயர்தல்.

''சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார்'' (புறப்.வெட்சி.10)

**3.2.9நோய் இன்று உய்த்தல்** - நிரையை வருந்தாமல் உய்த்தல்.

''-----------------------------------------------------
புல்லார் இனநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென எண்ணிச்
சிலையின் மாற்றி யோனே அவைதாம்'' (புறம்.257)

**3.2.10நுவல்வழித் தோற்றம்** - ஆநிரை கவரச் சென்றவர்கள் இன்னும் வரவில்லை என்று கவன்ற வழி அவர்கள் முன் ஆநிரையுடன்சொல்லியவழித் தோன்றுதல்.

''நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின் ---
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று
நிரையொடு வரூஉம் என்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே" (புறம்.262)

**3.2.11தந்து நிறை** - கொள்ளப்பட்ட நிரையைத் தம் ஊரகத்துக் கொணர்ந்து நிறுத்தல்.

--- அணிநிரை வாள்முறுவல் அம்மா எயிற்றி
மணிநிரை மல்கிய மன்று." (புறப்.வெட்சி.13)

**3.2.12 பாதீடு** - அந்நிரையைக் கூறிட்டு வழங்கல்

'' ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை." (புறப்.வெட்சி.14)

**3.2.13உண்ட ஆட்டு** - நிரையைப் பாதீடு செய்த மறவர் களிப்பினால் அயரும் விளையாட்டு.

''இளிகொண்ட தீஞ்சொல் இளமா எயிற்றி
களிகொண்ட நோக்கம் கவற்றத் - தெளிகொண்ட
வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றார்மேல்
செங்கண் மறவர் சினம்." (புறப்.வெட்சி.15)

**3.2.14கொடை** - (பாதீடு செய்த நிரையை வேண்டி இரப்பார்க்குக் கொடுத்தல்.

"இளமா எயிற்றி இவைகாண் நின்ஐயர்
தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் ஆநிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர்சீர் வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன"

மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.

மறத்தொழில் முடித்தலையுடைய குடியினது நிலைமையைக் கூறலும், சிறந்த கொற்றவையது நிலைமையைக் கூறலும், குறிஞ்சித்திணைப் புறனாகிய வெட்சித் திணையாம்.

**3.2.15குடிநிலை** – குடியின் நிலையைக் கூறுவது குடிநிலை எனப்படும். இது மைந்தர்க்கும் மகளிர்க்கும் பொதுவாகும். ஆடவர்க்காயின் இல்லான் முல்லை என்றும் பெண்டிர்க்காயின் மூதின் முல்லை என்றும் குறிக்கப்படும்..

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட்டனனே;
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே" (புறம்.279) பெண்பால் பற்றி வந்ததனை மூதின்முல்லை.

**3.2.16கொற்றவை நிலை** – போரில் வெற்றி தரும் தெய்வமாகிய கொற்றவையின் நிலையைக் கூறும் பகுதி ஆகும்.

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி வலிபடைக் கொற்றவை - மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்" (புறப் - வெட்சி.20) (4)

## 3.3 கரந்தைத் துறைகள்:

வெட்சித்திணையின் ஒரு பகுதி ஆநிரை கவர்தல் என்றால் அதன் பிறிதொரு பகுதி ஆநிரை மீட்டல் என்பதாகும்.இது பிற்காலத்து கரந்தை என்னும் தனித்துறையாக வளர்ச்சி பெற்றது, ஆனால் தொல்ாப்பியர் அதனை தனித்துறையாகக் கூறாது வெட்சித் திணியின் ஒரு கூறாகவே கருதி விரித்துரைத்தார்.

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை

வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று
இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே என்பதாகும்..

இதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந் நிலத்தின்கண் நிகழ்வதாகலின் வெட்சிப்பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று.வெறியாட்டயர்ந்த காந்தளும் என்பது முதலாகத் தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று துறையும் காட்சி முதலாக வாழ்த்தல் ஈறாகக் கல்லொடு புணர்த்துக் கூறும் துறையொடுங் கூடச் சொல்லப்பட்ட இருபத்தொரு துறைத்து ஆகும்.

**3.3.1வெறியாட்டு அயர்ந்த காந்தள்:** வெறி ஆடுதலை அறியும் சிறப்பினையுடைய வெவ்விய வாயினையுடைய வேலன் வெறியாடிய காந்தள்

“வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா
ஐய நனிநீங்க ஆடினாள் - மையல்
அயன்மனைப் பெண்டிரொடு அன்னைசொல் அஞ்சி
வியன்மனையுள் ஆடும் வெறி”

**3.3.2மாபெருந் தானையர் மலைந்த பூ:**மிக்கபகை வேந்தன் வேறுபாடு தெரிதல் வேண்டி உயர்ந்த புகழையுடைய போந்தை எனவும் வேம்பு எனவும் ஆர் எனவும் தமிழ்நாட்டு நிலவேந்தர் சூடிய பூ

”தொடியணிதோள் ஆடவர் தும்பை புனையக்
கொடியணிதேர் கூட்டணங்கும் போரின் - முடியணியும்
காத்தல்சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி

ஏத்தல்சால் வேம்பின் இணர்". - இது பாண்டியன் பூ.

நிரைகோள் கேட்டவழி நெடுநில வேந்தரும் கதுமென எழுவராதலின், நிரை மீட்டலின்கண் பூப் புகழப்பட்டது.

**3.3.3வாடா வள்ளி** - வாடுதல் இல்லாத வள்ளி. "வள்ளி'' என்பது ஒருகூத்து; அ.்.து அந்நிலத்தின் நிகழ்தலின் வாடா வள்ளி, என்றார்.

**வயவர் ஏத்திய ஓடா கழல் நிலை** - வீரராற் புகழப்பட்ட கெடாத கழல் நிலை.

''வாள் அமரின் முன்விலக்கி வாள்படர்வார் யார்கொலோ
கேளலார் நீக்கிய கிண்கிணிக்கால் - காளை
கலங்கழல் வாயில் கடுத்தீற்றி அற்றால்
பொலங்கழல் கான்மேல் புனைவு"

**3.3.4ஓடா உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலை:** ஓடாத வெண்குடை வேந்தரின வெற்றியை எண்ணிய உன்ன நிலை. "உன்னம்" என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடுவருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்.

''துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க - மன்னரும்
ஈடெலாந் தாங்கி இகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை"

**3.3.5பூவைநிலை**: மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ்சிறப்பினையுடைய கெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவை நிலை. பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப்புகழ்தல். நாடெல்லை காடாகையால் அக் காட்டிடைச் செல்வோர் காயம்பூவின் மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப்புகழ்தல். அப்பூவையைக் கண்டு கூறுதல். உன்னம் கண்டு கூறினார் போல இதுவும் நிமித்தம் பார்க்கும் மரபு ஆகும்.

''பூவை விரியும் புதுமலர் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரோம் - மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நழறத்தெர்டு நேர் தருதலான்''

**3.3.6ஆர் அமர் ஓட்டல்**: - அரிய அமரைப் போக்குதல்

''அருமுனை வெஞ்சுரத் தான் பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து."

**3.3.7ஆபெயர்த்துத்தருதல்** - நிரை மீட்டல்.

''அழுங்கல்நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றால் - செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கொண்டார்
நேரார்கைக் கொண்ட நிரை"

**3.3.8சீர்சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தல்** - சீர்மை பொருந்திய வேந்தனது மிகுதியை எடுத்துக் கூறல்

**3.3.9தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்** - தன்மாட்டுள்ள போர்வலி முயற்சியினாலே கொடுஞ் சொற்களைத் தன்னொடு புணர்த்திக் கூறல்

"ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவம் யாமாக – நாளுங்
கழிமகிழ் வென்றிக் கழல் வெய்யோய் ஈயப்
பிழிமது உண்பார் பிறர்" ( புறப் கரந்தை – 11 )

**3.3.10வரு தார் தாங்கல்:** எதிர்த்து வரும் பகைவர் தம் முன்னணிப் படையைத் தனி ஒருவனாய் நின்று தடுத்தல் வருதார் தாங்கல் எனப்படும்.

"பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாள்எறிந்து
கொள்ளைகொள் ஆயந் தலைக்கொண்டார்-எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றான் உளன"

**3.3.11வாள் வாய்த்து கவிழ்தல்** - பகைவர் வாளுக்கு இரையாகி வீழ்தல்

**3.3.12வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடு அவர்க்கு அருளிய பிள்ளையாட்டு** – வாளால் மாறுபட்டு இறந்த மறவனை மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டு

"மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய எ.்.கம் குடர் மாலை - சூட்டியபின்
மாறுஈரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேல்திரிய விம்முந் துடி"

**3.313காட்சி** - போர்க்களத்துப் பட்ட வீரரைக் கல்நிறுத்தற் பொருட்டுக் கல் காண்டல்.

"மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப் - பகையணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல்".

**3.3.14கல்கோள்** - அவ்வாறு காணப்பட்ட கல்லைக் கைக்கொள்ளுதல்.

"பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப - மேவார்
அழன்மறம் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல்"

**3.3.15நீர்ப்படை** - அக் கல்லை நீராட்டித் தூய்மைப்படுத்தல்.

"காடு கனற்றக் கதிரோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப் - பாடி
நயத்தக மண்ணி நறுவிரை கொண்டாட்டிக்

குறிப்பு

கயத்தகத்து உய்த்திட்டார் கல்".

**3.3.16 நடுதல்** - அக்கல்லை நடுதல்.

"மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி அணிந்து பெயர் பொறித்து - வேலமருள்
ஆண்டக நின்ற அமர்வெய்யோற்கு இ.்.தென்று
காண்டக நாட்டினார் கல்."

**3.3.17சீர்தகு மரபின் பெரும்படை** - மிகவுந் தக்க மரபினையுடைய பெரும்படை அதாவது, நாட்டிய கல்லிற்குக் கோயில் எடுத்தல்

"வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி அன்ன குரிசில்கல் - ஆட்கடிந்து
விற்கொண்ட வென்றி வியன்மறவர் எல்லாரும்
இற்கொண்டு புக்கார் இயைந்து"

**3.3.18 வாழ்த்து** - அக் கல்லைத் தெய்வமாகக் கருதி வாழ்த்துதல்

"அடும்புகழ் பாடி அழுதழுது ஆற்றாது9
இடும்பையுள் வைகி இருந்த - கடும்பொடு
கைவண குரிசில்கல் கைதொழுது செல்பாண
தெய்வமாய் நின்றான் திசைக்கு".

இவை யெல்லாம் கரந்தைக்கு உரித்தாக ஓதப்பட்டனவேனும், "ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிப" பொருளியல் - என்றதனான், மறத்துறை ஏழிற்கும் கொள்ளப்படும்.ஈண்டு ஓதப்பட்ட இருபத்தொரு துறையினும் நிரை மீட்டற் பொருண்மைத்தாகிக் கரந்தையென ஓதப்பட்டன ஏழாயின. கரந்தையாயினவாறு என்னையெனின், வெறியாட்டும் வள்ளிக்கூத்தும் மலைசார்ந்த இடத்து வழங்குதலின், வந்த நிலத்திற்கு உரிய பொருளாகி வந்தன. பூவை நிலையும் அந்நிலத்தைச் சார்ந்து வருவதொரு தெய்வமாதலின், அந்நிலத்தின் கருப்பொருளாகி வந்தது. கற்கோள் நிலையாறும் உன்ன நிலையும் முடியுடைய வேந்தர் சூடும் பூவும் கழல் நிலையும் ஏனையவற்றிற்கும் பொதுவாகலான் எடுத்துக்கொண்ட கண்ணே கூறுதல் இலக்கணமாதலின் ஈண்டு ஓதப்பட்டதென உணர்க என்பார் இளம்பூரணர்.

**பயிற்சி வினாக்கள்:**

1.வெட்சியின் துறைகள் குறித்த எழுதுக.

பாடப்பகுதி 3.2 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

2.பாக்கத்து விரிச்சி – விளக்குக

பாடப்பகுதி 3.2.2 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

3.பாதீடு – சுட்டியுரைக்க

பாடப்பகுதி 3.2.12 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

4.கரந்தைத் துறைகளை விளக்கி வரைக.

பாடப்பகுதி 3.3 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

5.கல்கோள் என்னும் துறையினை விவரி.

பாடப்பகுதி 3.3.14 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

# கூறு: 4 – புறத்திணையியல் - வஞ்சித்திணை – உழிஞைத்திணை

குறிப்பு

**நோக்கம்: புறத்திணைகளுள் வஞ்சித்திணை, உழிஞைத்திணை வெற்றின் துறைகள் பற்றி அறிதல்.**

## 4.1 வஞ்சித்திணை:

மாற்றார் மண்ணின்மேல் ஒழியாத ஆசை கொண்ட வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தது ஆகும். ஒழியாத மண்ணை நச்சுதலாவது வேண்டிய அரசர்க்குக் கொடாமை ஆகும். இதற்குத் தொல்காப்பியர் உரைக்கும் நூற்பா

வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே என்பதாகும்.

வஞ்சியாகிய புறத்திணை முல்லையாகிய அகத்திணைக்குப் புறனாகும். இத்திணை முல்லைக்கு புறனாகியவாறு எவ்வாறெனின் மாயோன் மேய காடுறை யுலகமும் கார்காலமும் முல்லைக்கு முதற்பொருளாம். பகைவயிற் சேறலாகிய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டப்படும். அடர்ந்த காடாகிய மலைசார்ந்த குறிஞ்சி இடம் பகைமேல் செல்லுதற்குப் பொருந்தாதாகையால் காடும் காடு சார்ந்த இடமும் ஆகிய முல்லையே பொருந்தும் ஆதலானும் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று.

## 4.2 வஞ்சித்திணையின் துறைகள்:

இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருள் இன்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்யொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே.

இயங்குபடை அரவம் முதலாகத் தழிஞ்சியொடு கூடச் சொல்லப்பட்ட பதின்மூன்றும் வஞ்சித்துறையாகும்.

**4.2.1 படை இயங்கு அரவம்** - படையெழும் அரவம்.

சிறப்புடை மரபின் பொருளு மின்பமும் எனத் தொடங்கும் புறநானூற்றின் 31 வது பாடல் சான்றாகும்

“----------------------------------------------------

போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காட்டிடைக் கடந்த நாடுநனி சேய
செல்வேம் அல்லேம் கல்லென்
விழவுடை யாங்கன் வேறுபுலத்து இறுத்து”

**4.2.2 எரி பரந் தெடுத்தல்** -பகைவரது நாட்டினைத் தீயிட்டுக் கொளுத்துதல்.

“--- பனிப்பகன்றைக் கனிப்பாகல்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னாடு ஒள்ளரி ஊட்டினை” (புறம்.16)

**4.2.3வயங்கல் எய்திய பெருமை:** போர் மேல் செல்வோர் வினை மற்றும் வெற்றிகளால் எய்திய பெருமை

“இருங்கண் யானையொடு அருங்கலந் தெறுத்துப்
பணிந்துகுறை மொழிவ தல்லது பகைவர்
வணங்கார் ஆதல் யாவது மற்றே” ( பதிற்றுப்பத்து )

**4.2.4கொடுத்தல் எய்திய கொடைமை** – புலவர், பாணர் போன்றோருக்குக் கொடுத்தலைப் பொருந்திய கொடைமை.

“பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிதுவிறல்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே”. (புறம்.12)

**4.2.5அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம்** - பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக்கொன்ற கொற்றம்

“வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய
அருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே”. (புறம். 93)

**4.2.6 மாராயம் பெற்ற நெடு மொழி** -

மாராயமாகிய பரிசினால் பெற்ற பாராட்டு உவகை பெற்ற நெடிய மொழி

“துடியெறியும் புலைய எறிகோல்கொள்ளும் இழிசின
துடியெறியும் புலைய எறிகோல் கொள்ளு மிழிசின ----
இம்பர் நின்றும் காண்டிரோ வரவே”. - புறநானூற்றின் 287 ஆம் பாடல்.

**4.2.7பொருள் இன்று உய்த்த பேர் ஆண் பக்கம்** -

பகைவரைப் பொருளாக மதியாது செலுத்தின பேர் ஆண் பக்கமும்.

“ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மினென ----
நன்னீர்ப் ப∴றுளி மணலினும் பலவே." (புறம்.1)

**4.2.8விசைவரு புனலைக் கற்சிறைபோல ஒருவர் தாங்கிய பெருமை** - விசை கொண்டு வரும் புனலைக் கற்சிறை தாங்கினாற் போல ஒருவர் தாங்கிய பெருமை.

"கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம்" (புறப்.வஞ்சி.91)

**4.2.9பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை** – தம் படை மறவர்களுக்கு பெருஞ்சோறு வழங்கிய நிலை

"இணர்ததை ஞாழல் கரைகெழு பெருந்துறை" – எனத்தொடங்கும் பதிற்றுப்பத்தின் 30 ஆம் பாடல்.

**4.2.10வென்றோர் விளக்கம்**- போரில் வெற்றி பெற்ற மன்னர்களிடத்து விளங்கும் வென்றோர்மாட்டு உளதாகிய விளக்கம்.

"மெய்பனி கூரா அணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் ஊழி" (பதிற்றுப்.71)

**4.2.11தோற்றார் தோய்வு** - தோற்றோர் தேய்வு கூறுதல் -
வான்மருப்பின் களிற்றியானை – எனத்தொடங்கும் பதிற்றுப்பத்தின் 80 ஆம் பாடல்.

**4.2.12குன்றா சிறப்பின் கொற்றவள்ளை**: - குறையாத வெற்றிச் சிறப்பினையுடைய கொற்றவள்ளை. கொற்றவள்ளை என்பது தோற்றவேந்தன் அளிக்கும் திறைப்பொருள்.

"வேரறுகு பம்பிப் கரைபரந்து வேளை பூத்து
ஊரறிய லாகா கிடந்தவை போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
அகைஇலைவேல் காய்த்தினார் நாடு"

**4.2.13அழிபடை தட்டோர் தழிஞ்சி** - மாற்றார் விடுபடைக்கலன் முதலியனவற்றைத் தம்மாட்டுத் தடுத்து உளன் அழிந்தோர்ப் பேணித் தழுவிக்கோடல்.

"வருகதில் வல்லே வருகதில் வல்லென ---
தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே". என்னும் புறநானூற்றுப் பாடல்.

இவ்வாறு வஞ்சித்திணை மிகப் பெருஞ் சிறப்புடைய பதின்மூன்று துறைத்தாம்.

## 4.3.உழிஞைத்திணை:

உழிஞை தானே மருதத்துப் புறனே

படையெடுத்துப் செல்லும் மன்னரின் மாவீர்களின் படை, பகை, நாட்டின் கோட்டையை முற்றுகை இடுதலும் கோட்டைக்குள் உள்ள பகை நாட்டினர் முற்றுகை எதிர்த்தலும் உழிஞைத்திணை எனப்படும்.பின்னர் இரண்டு திணையாக்கி உழிஞை என்பது முற்றுகையிட்டு அரணை அழித்தல் என்றும் நொச்சி அரணைக்காத்தல் என்றும் கூறினர் தொல்காப்பியர் உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப்புறனாம்.

முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப.

முதல் அரணம் என்றதனான் தலையும் இடையும் கடையும் என மூவகைப்படுமவற்றுள் தலையரண். அதாவது, அரணிற்குக் கூறுகின்ற இலக்கணம் பலவும் உடைத்தாதல். மருதத்திற்கு இது புறனாயவாறு என்னையெனின், வஞ்சியிற் சென்ற வேந்தனொடு போர்செய்தல் ஆற்றாது உடைந்து மாற்றுவேந்தன் அரண் வலியாகப் போர் செய்யுமாகலானும், அவர் நாட்டகத்தாகலானும், அவ்வழிப் பொருவார்க்கு விடியற்பொழுது காலமாகலானும், அதற்கு இது புறனாயிற்று. நாட்டெல்லையின் அழிப்பு உழிஞையாகுமோ எனின், அது பெரிதாயின் அதன்பாற்படும். சிறிதாயின் வெட்சியும் ஓதின ஊர்க்கொலை புறத்திணையுள் அடங்கும் என்பார் இளம்பூரணர்.

**4.3.1 உழிஞைத்திணை வகை:**

அதுவே தானும் இருநால் வகைத்தே.

உழிஞைத்துறைதான் எட்டு வகைத்து ஆகும்.

## 4.4 உழிஞைத்திணையின் துறைகள்:

கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்லெயிற் றிவர்தலுந் தோலது பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறற்பட
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே.

இதுவும், உழிஞையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் முதலாகச் சொல்லப்பட்டன உழிஞைத் துறையாம்.

**4.4.1 கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்** - பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும். இதனுள் கொள்ளார் என்பவர் தன்னை அரசு எனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும் ஆவர்.

“புலவர் எல்லாம் நின்நோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக்
கூற்று வெகுண்டு அன்ன முன்பொடு

மாற்றுஇரு வேந்தர் மண்நோக்கினையே." (புறம்.42)

**4.4.2உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு** - நினைத்தது முடிக்கலாகும் வேந்தனது சிறப்பு

"அடுநை ஆயினும் விடுநை ஆயினும் -----
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே''. (புறம்.36)

**4.4.3தொல் எயிற்று இவர்தல்** - நினைத்ததை நினைத்தவாறே முடித்திடும் வேந்தானது பெருமையைப் பேசுவது இத்துறை ஆகும்.

"புல்லார் புகழொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி - ஒல்லார்
நிறத்திறுத்த வாள்தானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னான்" (புறப்.உழிஞை.10)

**4.4.4தோலது பெருக்கமும்** - தோற்படையினது பெருமை

**4.4.5அகத்தோன் செல்வம்** - அரணுள் இருந்த அகத்தரசனது செல்வம்

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலைவெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே --------
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரைஒலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே''. (புறம்.109)

**4.4.6அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்** - அன்றியும் பகைத்த புறத்தரசன் வருந்திய பக்கம்

"நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த'' – எனத் தொடங்கும் புறநானூற்றின் 37 ஆம் பாடல்.

**4.4.7திறற்பட ஒருதான் மண்டிய குறுமை** - வலிபட ஒரு தானாகிச் சென்ற குற்றுழிஞை

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்'' - புறநானூற்றின் 77 ஆம் பாடல்.

**4.4.8 உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்** - வெகுண்டு வருகின்ற படையைப் பேணார் ஆரெயில் உழிஞை.

உளப்பட சொல்லப்பட்ட நாலிரு வகைத்து - உட்படக் கூறப்பட்ட எட்டு வகைத்து.

## 4.5 உழிஞைத்திணையின் துறைகள் - விரி

குடையும் வாளும் நாள்கோள் அன்றி

மடையமை ஏணிமிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
மதில்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்
இகல்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்
வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்
தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

குடை நாட்கோள் முதலாகச் சொல்லப்பட்டுள்ள பன்னிரண்டு துறையும் உழிஞைக்குரிய துறை ஆகும். மேற்சொல்லப் பட்டவற்றின் விரியும் பன்னிரண்டு உள என்பதாம்.

**4.5.1 குடைநாள்கோள்:**போருக்குச் செல்லும் வேந்தன் நல்லநாளில் தன் வெண்கொற்றக்குடையை அரண்மனையை விட்டு வெளியே புறப்பாடு செய்தல்.

“-----------------------------------------------வையகத்து
முற்றக் கடியரணம் எல்லா முரண் அவிந்த
கொற்றக் குடைநாட் கொள்.” (புறப்.உழிஞை.2) - இது குடைநாட்கோள்.

**4.5.2 வாள்நாள்கோள்**: போருக்குச் செல்லும் வேந்தன் நல்லநாளில் தன் வாளினை அரண்மனையை விட்டு வெளியே புறப்பாடு செய்தல்.

”வாள்நாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடூஉம் பேர்மதில் - பூணார்
அணிகொள் வனமுலையார் ஆடரங்கம் ஏறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து.” (புறப்.உழிஞை.3) - இது வாள்நாட்கோள்.

**4.5.3 மடை அமை ஏணி மிசை மயக்கம்** - மதிலிடத்துமடுத்தல் அமைந்த ஏணிசார்த்தி அதன்மேல் எறுவோரும் எதிர்ப்போரும் ஒருவரோடு ஒருவர் போர் செய்வது.

“கடுமுரண் எ.்.கங் கழிய - அடுமுரண்
ஆறினார் அன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினார் ஏணி பலர்”. (புறப். உழிஞை. 19)

**4.5.4 கடைஇச் சுற்றமர் ஒழிய வென்றுகைக்கொண்டு முற்றியமுதிர்வு** – கோட்டையை முற்றுகை இட்ட வன் தன் படை மறவரை முன் செலுத்தி எதிர்த்தோரைப் போரிட்டு மதிற்புறப் போர் ஒழியுமாறு வென்று மதிலைக்கைப்பற்றி அக்கோட்டையின் அகத்தே உள்ள வீரர்களைச் சூழும் முதிர்வு

“----------------------------------------------------மாலை

குறிப்பு

அடுதும் அடிசிலென்று அம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு''

**4.5.5 முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி** – புறத்தே இருப்பவர்களால் சுற்றி வளைக்கப்பட்ட கோட்டையின் அகத்தினுள்ளான் வீழ்ந்த நொச்சி

''நீரறவு அறியா நிலமுதற் கலந்த'' – புறநானூற்றின் 271 ஆம் பாடல்

**4.5.6 நீர்ச்செரு வீழ்ந்த பாசி** – அகழியிடத்து நிறைந்துள்ள பாவியானது தள்ளத் தள்ள திரும்பிச் சேறல் போன்று இருதிறத்து வீரரும் திரும்பத் திரும்ப போர் செய்தல்.அதாவது கிடங்கின் உளதாய போரின் கண்ணே வீழ்ந்த பாசி

''-------------------------------------------------------பூவார்
அகழி பரந்தொழுகும் அங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர்'' (புறப். உழிஞை.17)

**4.5.7 ஊர்ச்செரு வீழ்ந்த பாசி மறன்** - கோட்டையின் உள்ளே ஊரில் போரை விரும்பி ஒருவரை ஒருவர் முனைந்து பொருதும் பாசிமறன்

''பாயினார் மாயும் வகையாற் பலகாப்பும்
ஏயினார் ஏய இகல்மறவர் - ஆயினார்
ஒன்றி யவரற ஊர்ப்புறத்துத் தார்தாங்கி
வென்றி அமரர் விருந்து'' (புறப். நொச்சி.2)

**4.5.8 மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர்பக்கம்** - மதின்மேல் ஏறி மதிலைக் கொள்வதற்கு முயன்ற மதில் வீரர் பக்கம்.

''அகத்தன வார்கழல் நோன்தாள் அரணின்
புறத்தன போரெழில் திண்தோள் - உறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னான்.'' (புறப். நொச்சி.7)

**4.5.9 இகல் மதில் குடுமி கொண்ட மண்ணு மங்கலம்** - தம்முடன் மலைந்து மதில்மேல் நின்றானை வென்று அவன் மணிமுடியைக் கைப்பற்றிய மண்ணு மங்கலம்.

''-------------------------------------------கொங்கலர்தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி'' (புறப். உழிஞை.28)

**4.5.10 வென்ற வாளின் மண்ணு மங்கலம்.** - வென்ற வாளினை தங்கள் வாளினை தூயநீரில் நீராட்டல்.

''தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்'' (புறப். உழிஞை.27)

**4.5.11 தொகைநிலை** - அம் மதிலழித்தமையான் மற்றுள்ள மதில்கள் வரைப்பில் மாறுபட்ட வேந்தரும் முரண் அவிந்தபடி அடைதல்.

''வென்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்துவர்'' – பதிற்றுப்பத்தின் 52 ஆம் பாடல்

என்னும் துறையோடு கூடிய உழிஞைவகை பன்னிரண்டு ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1.பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை – என்பதனை விளக்குக.

பாடப்பகுதி 4.2.9 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

2.அகத்தோன் செல்வம் - விளக்குக.

பாடப்பகுதி 4.4.5 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

3.ஊர்ச்செரு வீழ்ந்த பாசி மறன் - சுட்டியுரை

பாடப்பகுதி 4.5.7 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

# பிரிவு – II புறத்திணையியல - களவியல் - கற்பியல்

குறிப்பு

**கூறு 5: புறத்திணையியல் - தும்பைத்திணை – வாகைத்திணை**

**நோக்கம்: புறத்திணையியலில் தும்பைத்திணை, வாகைத்திணை ஆகியவற்றின் துறைகள் குறித்து அறிதல்.**

## 5.1தும்பைத்திணை:

தும்பை என்னும் திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாம்.வலி பொருளாகப் போர்கருதி வந்த அரசன்கண் சென்று அவனைத் தலையழிக்கும் சிறப்பினை யுடைத்து.

தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

தும்பை என்னும் திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாயவாறு எவ்வாறெனின் இருபெருவேந்தரும் ஒருகளத்துப் போர்செய்ய இடம் காடும் மலையும் கழனியும் ஆகாது. களரும் மணலும் பரந்த வெளிதான் போர் செய்ய வேண்டுதலானும், அந்நிலம் கடல்சார்ந்த நெய்தல் நிலமே அன்றி வேறு இன்மையானும், நெய்தற்கு ஓதிய எற்பாடு போர்தொழிற்கு முடிவாதலானும் இத்திணை நெய்தற்குப் புறனாயிற்று. தும்பைத்திணையின் சிறப்பினைக் கீழ்க்கண்ட பாடல் உணர்த்தும்.

### 5.1.2 சிறப்புநிலை:

கணையும் வேலும் துணையுற மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலந் தீண்டா அருநிலை வகையொடு
இருபாற் பட்டஒருசிறப் பின்றே.

இது மேலனபோல ஒருபாற்கு மிகுதலின்றி இருவகையார்க்கும் ஒத்த இயல்பிற்றாம். ஒருவர்மாட்டும் மிகுதல் இல்லை.

கணையும் வேலும் படைத்துணையாகக் கொண்டு பொருதல் காரணமாகச் சென்ற உயிரின் நீங்கிய உடலானது நீர் அட்டை காலவயப்பட்டு உடலினின்று உயிர் பிரிக்கப்படுமாறு, இருபால் பகுக்கப்படும். அற்ற துண்டம் இணைந்தது போன்று ஆடல் ஒத்த பண்பினையுடையது.

## 5.2 தும்பைத்திணையின் துறைகள்:

தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய பெருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்

களிறெறிந்து எதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ
ஒருவனைமண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

**5.2.1 நோனார் உட்கும் தானை யானை குதிரை என்ற மூவகை நிலை** - பகைவரால் எதிர்க்கப்படுகிற தானையும் யானையும் குதிரையுமாகிய மூவகைப்பட்டவற்றினது நிலை.

**5.2.2 தானைநிலை:** பகை மன்னர் அஞ்சும் வண்ணம் அமைந்த படையின் பெருமையினைப் பாடுவது

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்." (குறள். 774)

**5.2.3 யானை நிலை:** பகை மன்னர் அஞ்சும் வண்ணம் அமைந்த யானையின் பெருமையினைப் பாடுவது

"-----------------------------------------------பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே அங்கோர்
வயவெம்போர் மாண்ட களிறு."

**5.2.4 குதிரை நிலை:** பகை மன்னர் அஞ்சும் வண்ணம் அமைந்த குதிரையின் பெருமையினைப் பாடுவது

**5.2.5 வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான்மீண்டு எறிந்த தார்நிலை:** - வேற்படையோடு வெற்றி நோக்கிக் களத்து முகப்பிற் சென்ற வேந்தனை மாற்றார் படை சூழ்ந்த இடத்து, வேந்தன் பால் பற்றுடைய மற்றொரு தலைவன் தன் நிலை விட்டுத் தன்வேந்தன் மாட்டு அடுத்துத் துணையாய் மாற்றாரை எறிந்த தார்நிலையும்.

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண்நோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பாசிப் பகைஞன்" (புறம். 180) பாணன் அது தோன்றப் புகழ்ந்தது.

**5.2.6 அன்றி இருவர் தலைவர் தபுதிபக்கம்** - இருபெரும் படைத்தலைவரும் ஒருவருடன் பொருது இருவரும் அழிந்து படல்.

“காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர - ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையும் நீங்கா இகல்.” (புறப். தும்பை. 12)

**5.2.7 கூழை தாங்கிய பெருமை** - ஒருவன் ஒருவனைக் கெடுபடையின்கண் புக்குக் கூழை தாங்கிய பெருமை. தொவது சிதறவிருக்கும்தன் படையின்கண் சென்று அதன் பிண்ணனிப் படையைத் தாக்கி பகைவரைத் தடுத்து கூழை தாங்கும் பெருமை.

**5.2.8 படை அறுத்து பாழிகொள்ளும் ஏமம்** - பகைவரின் படைக்கருவியை அறுத்து தன் உடல்வலிமையால் கொள்ளும் ஏமம்.

**5.2.9 களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்** - பகைவரின் களிறுப் படையினை வென்ற வீரனின் புகழிஜனைப் பாடுதல்.

“ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
குன்றத்து அன்ன களிற்றொடு பட்டோன்” (புறம். 307)

**5.2.10 களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலை** - களிற்றுடன் பொருது இறந்துபட்ட மன்னனை அவனைக் கொன்ற வேந்தனின் வீரர்கள் தன் வேந்தனின் புகழைப்˙ பாடும்பாட்டு.

“வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே.” (பதிற்றுப். 56)

**5.2.11வாள் வாய்த்து இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியா தொகைநிலை** - வாள் தொழில் முற்றி இரு பெருவேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாமல் போர்க்களத்தில் இறந்து படல்.

“பருத்தருந்து உற்ற தானையொடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே -----
இடங்கெட ஈண்டிய வியன்கண் பாசறைக்
களங்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றால்” (புறம். 62)

**5.2.12 செரு அகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ ஒருவனை மண்டிய நல்லிசை நிலை** -பொருகளத்துத் தன்வேந்தன் பட அதுகண்டு கறுத்தெழுந்து படைத்தலைவன் வீரனொருவனை நெருங்கிப் பொருத ஒரு நற்புகழ் நிலைமை

“வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா
மானமே நெய்யா மறம் விறகாத் - தேன்இமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
ஒள்ளழலுள் வேட்டான் உயிர்.” (புறப். தும்பை. 26)

**5.2.13 பலபடை ஒருவற்கு உடைதலின் அவன் ஒள்வாள் வீசிய நூழில்** - பல படை ஒருவற்குக் கெடுதலின் அவன் ஒள்ளிய வாள் வீசிய நூழில்

“வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழில் ஆட்டு.” (மதுரைக்காஞ்சி. 255-7)

இவ்வாறு இத்திணை பன்னிருதுறைகளை உடைத்தாகும்.

குறிப்பு

## 5.3 வாகைத்திணை:

வாகைத்திணை பாலை என்னும் அகத்திணையினது புறனாம்.அது கேடில்லாத கோட்பாட்டினையுடைய தத்தமக்குள்ள இயல்பை வேறுபட மிகுதிப்படுத்தல் என்பர். வாகை பாலைக்கு புறனாயவாறு என்னையெனின், பாலையாவது தனக்கென ஒருநிலமின்றி எல்லா நிலத்தினும் காலம்பற்றிப் பிறப்பது போல இதுவும் எல்லா நிலத்தினும் எல்லாக் குலத்தினும் காலம்பற்றி நிகழ்வதாகலினாலும், ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறுபோலத் தன்னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழ்ப்படுதலாலும் அதற்கிது புறனாயிற்று.

வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.

### 5.3.1வாகைத்திணை பாகுபாடு:

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபில் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையால்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.

பார்ப்பனப் பக்கம் முதலாகப் பொருநர் பக்கம் ஈறாகச் சொல்லப்பட்ட அத்தன்மைத்தாகிய நிலைவகையோடே ஏழ்வகையால் தொகை நிலைபெற்றது.

**5.3.2 அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்** - ஆறு திறனாகிய அந்தணர் பக்கம்

அறுவகைப்பட்ட பக்கமாவன:- ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன.

ஓதலாவது கல்வி.

“இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.” (நாலடி.கல்வி. 2)

இது கல்வியின் விழுப்பம் கூறிற்று. இது கற்றோர்க்கு உளதாகும் விழுப்பம் கூறிற்று. இஃது ஏனைய மூன்று வருணத்தார்க்கும் ஒக்கும்.

**ஓதுவித்தல்** - கற்பித்தல்.

“எண்பொருள ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்

நுண்பொருள் காண்பது அறிவு.” (குறள் - 124)

**வேட்டல்** - வேள்வி செய்தல்.

“நன்றாய்ந்த நீள்நிமிர்சடை” – எனத் தொடங்கும் புறநானூற்றின் 166 ஆம் பாடல்.

**வேட்பித்தல்** - வேள்வி செய்வித்தல். நளிகடல்இருங் குட்டத்து என்னும் புறப்பாட்டினுள்,

“ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்றம் ஆக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாள்வாய் வேந்தே” (புறம். 26) அரசன் வேட்பித்ததும், பார்ப்பார் வேட்டதும்

**ஈதல்** - இல்லென இரந்தோர்க்குக் கொடுத்தல்.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. (குறள்.223)

**ஏற்றல்** - கோடல்: கொள்வோன் தனது சிறப்பிற் குன்றாமல் கோடல்.

“இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண்இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண்இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே.” (புறம்.112)

**5.3.3 ஐவகை மரபின் அரசர் பக்கம்** - ஐவகைப் பட்ட அரசர் பக்கம்.

அவையாவன: ஓதலும் வேட்டலும் ஈதலும் படைவழங்குதலும் குடியோம்புதலுமாம். இவற்றுள் முந்துற்ற மூன்றும் மேற்சொல்லப் பட்டன. ஏனைய இரண்டும் இனிக் கூறப்படுகின்றன.

**படை வழங்குதல்:**

கடுங்கண்ண கொல்களிற்றால் - எனத் தொடங்கும் புறநானூற்றின் 14 ஆம் பாடல் ஆகும்.

**குடியோம்புதல்:** குடிகளைப் பாதுகாத்தல்

“பகைவர் உண்ணா அருமண் ணினையே
அம்பு துஞ்சும் கடி அரணால்
அறந்துஞ்சும் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புறவு அறியா ஏமக் காப்பினை
அனையை ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே.” (புறப்.20)

**5.3.4 இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்** - ஆறு மரபினையுடைய வணிகர் வேளாளர் பக்கம்

குறிப்பு

வணிகர்க்குரிய ஆறுபக்கமாவன:- ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல்.

“உழுது பயன்கொண் டொலிநிரை ஓம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து - முழுதுணர
ஓதி அழல்வழிபட் டோம்பாத ஈகையான்
ஆதி வணிகர்க் கரசு” (புறப்.வாகை. 10)

வேளாண் மாந்தர்க்குரிய ஆறு மரபாவன: உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி.

“சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.” (குறள். 1031)

”கருமஞ் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்.”

“பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி.” (புறம். 35)

**5.3.5 மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்.** - குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கம்.

அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன்வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல். ஆதலான் மூவகைக் காலமும் நெறியின் ஆற்றின் அறிவன் என்றார்.

“புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத் - திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்
கண்ணி உரைப்பான் கணி.” (புறப்.வாகை. 20)

**5.3.6 நால் இரு வழக்கின் தாபத பக்கம்** - எட்டுவகைப்பட்ட வழக்கினையுடைய தாபதர் பக்கம்.

அவையாவன;- நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவுகோடல், தெய்வப்பூசையும் அதிதி பூசையும் செய்தல்.

“நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோல்உடையாச்
சோர்சடை தாழச்சுடர்ஓம்பி - ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத்து உய்க்கும் வழி.” (புறப்.வாகை. 14)

இவற்றுள்ளும் சில வந்தவாறு காண்க.

**5.3.7 பால் அறி மரபின் பொருநர் பக்கம்** - பாகுபாடு அறிந்த மரபினையுடைய பொருநர் பக்கம்

அஃதாவது, வாளானும் தோளானும் பொருதலும் வென்றி கூறலும் வாகையாம்.

வாளால் மிகுதல்:

“ஏந்துவாள் தானை இரிய உரைகழித்துப்
போந்துவாள் மின்னும் பொருசமத்து - வேந்தர்
இருங்களி யானை இனமிரிந் தோடக்
கருங்கழலான் கொண்டான் களம்.” (புறப்.வாகை. 26)

**அனை நிலைவகை** - வாளானும் தோளானும் பொருது வேற லன்றி அத்தன்மைத்தாகிய நிலைவகையான் வேறல்

அ∴தாவது, சொல்லான் வேறலும், பாட்டான் வேறலும், கூத்தான் வேறலும், சூதான் வேறலும், தகர்ப் போர் பூழ்ப் போர் என்பனவற்றான் வேறலும் உண்டு.

“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.” (குறள். 148)

இது சொல் வென்றி. இவை போல்வன பிறவும் கொள்க.

## 5.4 வாகைத்துறைகள்:

கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்
ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் மாவி னானுந்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கடிமனை நீத்த பாலின் கண்ணும்
எட்டுவகை நுதலிய அவையகத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடையி னானும்
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானுமென்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே.

கூதிர்ப்பாசறை முதலாகச் சொல்லப்பட்ட பதினெட்டுத் துறையும் வாகைத்துறையாம்.

**5.4.1 கூதிர் வேனில் என்று இரு பாசறை காதலின் ஒன்றி கண்ணிய வகை** - கூதிர்ப்பாசறையும் வேனிற்பாசறையும் என்று சொல்லப்பட்ட இருவகைப் பாசறைகளையும் போரின்மீது கொண்ட காதலாற் பொருந்திக் கருதிய போர்நிலை வகை.

"கவலை மறுகின் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூறை ஒடுங்கத் - துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதில் மடவாள் முயக்கு." (புறப்.வாகை. 117)

**5.4.2 ஏரோர் களவழி அன்றி களவழி தேரோர் தோற்றிய வென்றி** - ஏரோர் களவழி கூறுதலும் அன்றிப் போரோர் களவழி தேரோர் தோற்றுவித்த வென்றி

"ஓஒ உவமை உறழ்வின்றி ஒத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலாய்
ஆவுகை காளாம்பி போன்ற புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து." (களவழி. 39) - இது போரோர் களவழி.

**5.4.3 முன்தேர்க் குரவை** – வெற்றி பெற்ற வேந்தனின் தேர் முன் அவனது படைவீரர்கள் ஆடும் முன்தேர்க்குரவை.

**5.4.4பின்தேர்க்குரவை:** – வெற்றி பெற்ற வேந்தனின் தேர் பின் அவனது படைவீரர்கள் ஆடும் பின்தேர்க்குரவை.

"வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரும்
அஞ்சொல் விறலியரும் ஆடுபவே - வெஞ்சமத்துக்16
குன்றோர் மழகளிறுங் கூந்தற் பிடியும்போல்
பின்தேர்க் குரவை பிணைந்து." (புறப்.வாகை. 8)

**5.4.5 பெரும்பகை தாங்கும் வேல்** - பெரிய பகையினைத் தாங்கும் வேலினைப் புகழுமிடம்.

"..................................
நிலைதிரிபு எறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல் செழிய" (புறம். 25)
வேலினைப் புகழ்தல்.

**5.4.6 அரும்பகை தாங்கும் ஆற்றல்** - பொருதற்கரிய பகையைப் பொறுக்கும் ஆற்றல்.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்நின்று கல்நின் றவர்." (குறள். 77)

**5.4.7 புல்லாவாழ்க்கை வல்லாண் பக்கம்** - பொருந்தாத வாழ்க்கையினையுடைய வல்லாண் பக்கம்

“எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற” - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் 327

**5.4.8 அவிப்பலி** - பொருந்தாதார் நாணுமாறு தலைவரைக் குறித்து முன்பு சொன்ன வஞ்சின மரபின் ஒன்றொடு பொருந்தித் தொன்றுதொட்டு வருகின்ற உயிரை வழங்கிய அவிப்பலி

“இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.” (குறள். 776)

**5.4.9 ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கு** – பகைவர் நாட்டினைக் கைப்பற்றிய பின் அந்நாட்டின்கண் பொருந்தியிருக்கும் பாங்கு.

அஃதாவது, போரில்வழி நாடு கைத்தென்று கொண்டு உவத்தல். ( உவத்தல் - வெகுளிவிட்டிருத்தல்.)

“மாண்டனை பலவே போர்மிகு குருசில்நீ -----------
பிழையா விளையுள் நாடகப் படுத்து
வையா மாலையர் விசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத்து ஆயினும்
சினவாய் ஆகுதல் இறும்பூதாற் பெரிதே” (பதிற்றுப். 32)

என்பதனுள் பகைவர் நாடு கைக்கொண்டிருந்தவாறு அறிக.

**5.4.10சான்றோர் பக்கம்** - பகட்டினானும் ( எருது ) ஆவினானும் குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய சான்றோர் பக்கம்.

“உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனில் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.” (புறம். 182)

**5.4.11கடிமனை நீத்த பால்** - கடிமனை நீத்த பக்கமும். அஃதாவது, பிறர்மனை நயவாமை. மேல், “காமநீத்த பாலினானும்” என்று ஓதுகின்றாராகலின், இது மனையறத்தின் நின்றோரை நோக்கவரும்.

“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்(கு)
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.” (குறள் - 148)

எட்டுவகை நுதலிய அவையகம் - எட்டுப் பாகுபாட்டைக் குறித்த அவையகம். அவையாவன:- குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை அவாவின்மை என்பன ஆகும்.

**5.4.12 கட்டமை ஒழுக்கத்து கண்ணுமை** - கட்டுதல் அமைந்த ஒழுக்கத்தினைக் குறித்த நிலை அஃதாவது, இல்லறத்திற்கு உரித்தாக

நான்கு வருணத்தார்க்குச் சொல்லப்பட்ட அறத்தின் கண் நிற்றல். அவையாவன; அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெ.ஃ.காமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறை யுடைமை என்பன. மிகுதியாகலின், வாகை யாயின. அடக்க முடைமையாவது, பொறிகள் ஐம்புலன்கள் மேல் செல்லாமை அடக்குதல்.

‘‘ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து’’ (குறள். 126)

**ஒழுக்கமுடைமை**: தங்குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கமுடையராதல்.

‘‘ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்’’.(குறள். 131)

**நடுவுநிலைமை:** பகைவர் மாட்டும் நட்டார் மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமை.

‘‘சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.”(குறள். 118)

**வெ.ஃ.காமை:** பிறர் பொருளை விரும்பாமை.

‘‘படுபயன் வெ.ஃ.கிப் பழிப்படுவ19 செய்யார்
நடுவன்மை நாணு பவர்.”(குறள். 172)

**புறங்கூறாமை**: ஒருவரை அவர் புறத்துரையாமை.

‘‘அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.” (குறள். 181)

**தீவினையச்சம்**: தீவினையைப் பிறர்க்குச் செய்தலை அஞ்சுதல்.

‘‘தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.” (குறள். 311)

**அழுக்காறாமை**: பிறர் ஆக்கம் முதலாயின கண்டு பொறாமையால் வரும் மனக்கோட்டத்தைச் செய்யாமை.

‘‘ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு.” (குறள். 161)

**பொறையுடைமை**: பிறர் தமக்கு மிகுதியாகச் செய்தவழி வெகுளாமை.

‘‘மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.”(குறள். 158)

பிறவும் இந்நிகரனவெல்லாம் கொள்க.

**5.4.13 இடையில் வண்புகழ்க்கொடை** - இடைதலில்லாத வளவிய புகழினைத் தரும் கொடை

அ.ஃ.தாவது, கொடுத்தற்கு அரியன கொடுத்தல். இதுவும் பாகுபாடு மிகுதிப்படுதலின் வாகையாயிற்று.

‘‘மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே

**5.4.14 பிழைத்தோர்த் தாங்கும் காவல்** - தம்மாட்டுப் பிழைத்தோரைப் பொறுக்கும் ஏமம்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை." (குறள். 159)

**5.4.15 பொருளொடு புணர்ந்த பக்கம்** - மெய்ப்பொருள் உணர்ந்த பக்கமும்.

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" (குறள். 351)

**5.4.16 பொருளொடு புணர்ந்தபக்கம்**: அறம் பொருள் இன்பம் மூன்றினும் அறனும் இன்பமும் அன்றி ஒழிந்த பொருளொடு பொருந்திய பக்கமும் என்றுமாம். பொருளாவது நாடும் அரணும் பொருளும் அமைச்சும் நட்பும் படையும்.

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள். 381)

பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க

**5.4.17 அருளொடு புணர்ந்த அகற்சி** - அருளொடு பொருந்தின துறவும், அஃதாவது, அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு என்பனவற்றைப் பொருந்துதலாம். அவற்றுள், அருளுடைமை யொழிந்த எல்லாம் விடுதலான் "அகற்சி" என்றார்.

**அருளுடைமை:** யாதானும் ஓர் உயிர் இடர்ப்படுமிடத்துத் தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரமுடைமை.

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள." (குறள். 141)

**கொல்லாமை:** யாதொன்றையும் கொல்லாமை.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும். (குறள். 321)

**பொய்யாமை**: தீமை பயக்கும் சொற்களைக் கூறாமை.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல்." (குறள். 291)

**கள்ளாமை:** பிறர்க்குரிய பொருளைக் களவினாற் கொள்ளாராதல்.

"களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்." (குறள். 287)

**புணர்ச்சி விழையாமை:** பிரமசரியம் காத்தல்

கள்ளுண்ணாமையாவது, கள்உண்டலைத் தவிர்தல்.

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்." (குறள். 928)

**துறவு:** தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல்.

குறிப்பு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.” (குறள். 341)

**5.4.18 காமம் நீத்த பால்** - ஆசையை நீத்த பக்கம்

“காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்.” (குறள். 360)

என்று இரு பால்பட்ட ஒன்பதின் துறைத்து- என்று இரண்டு கூறுபட்ட ஒன்பது துறைத்து.

**பயிற்சி வினாக்கள்:**

1.தும்பைத்திணை என்பதனை விளக்குக.

பாடப்பகுதி 5.1 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

2.முன்தேர்க் குரவை குறித்தெழுதுக.

பாடப்பகுதி 5.4.3 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

3.வாகைத் திணையின் துறைகளை விளக்கி வரைக.

பாடப்பகுதி 5.4. இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

4.தும்பைத்திணையின் துறைகளை விவரி

பாடப்பகுதி 5.2 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

## கூறு: 6 – காஞ்சித்திணை – பாடாண்திணை

**நோக்கம் : காஞ்சித்திணை, பாடாண்திணை ஆகியவற்றின் துறைகள் குறித்து அறிதல்**

**காஞ்சித்திணை:**

காஞ்சி என்னும் திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாம், அது பாங்காதல் அரிய சிறப்பினாற் பல நெறியாயினும் நில்லாத உலகத்தைப் பொருந்திய நெறியை உடைத்து ஆகும். அதற்கு இது புறனாயவாறு என்னையெனின் ஏறிய மடற்றிறம் முதலாகிய நோந்திறக் காமப் பகுதி அகத்திணை ஐந்தற்கும் புறனாயவாறு போல இது புறத்திணை ஐந்தற்கும் புறனாகலானும் இதுபோல அதுவும் நிலையாமை நோந்திறம்பற்றியும் வருதலானும் அதற்கு இது புறனாயிற்று.

காஞ்சி பெருந்திணைப் புறனாவது எவ்வாறெனின், எண்வகை மணத்தினும் நான்கு மணம் பெற்ற பெருந்திணை போல இக் காஞ்சியும் அற முதலாகிய மும்முதற் பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றற்கும் உரித்தாய் எல்லாத் திணைகட்கும் ஒத்தமரபிற்றாகலானும், பின்னர் நான்கும் பெருந்திணைபெறும் என்ற நான்கும் சான்றோர் இகழ்ந்தாற்போல அறம் முதலியவற்றது நிலையின்மையுணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், "ஏறிய மடற்றிறம்" முதலிய நான்கும் தீய காமம் ஆயினவாறு போல உலகியல் நோக்கி நிலையாமையும் நற்பொருள் அன்றாகலானும், உரிப்பொருள் இடைமயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணை போல அறம் பொருள் இன்பம்பற்றி யன்றி வேறுவேறு நிலையாமை என்பதொரு பொருளின்றாதல் ஒப்புமையானும், பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று. (தொல்.புறம்.22) என விளக்குவார் இளம்பூரணர். இதனைச் சொல்லும் நூற்பா.

**6.1 காஞ்சித்திணையின் இலக்கணம்:**

> காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
> பாங்கருஞ் சிறப்பிற் பின்னெறி யானும்
> நில்லா உலகம் புல்லிய நெறித்தே. என்பதாகும்.

பாங்கருமையாவது, ஒருவற்கு ஒரு துணையாகாமை. நிலையாமை மூவகைப்படும். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை.

இளமை நிலையாமை:

"பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்
கனிஉதிர்ந்து வீழ்ந்தற் றிளமை - நனிபெரிதும்
வேற்கண்ணள் என்றிவளை வெ.்.கன்மின் மற்றிவளும்
கோற்கண்ணள் ஆகுங் குனிந்து" (நாலடி - இளமை. 7)

செல்வம் நிலையாமை:

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று." (நாலடி.செல்வம்.1)

## 6.2 காஞ்சித்திணையின் துறைகள்:

மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
இன்னனென்று இரங்கிய மன்னை யானும்
இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவற் றீர்த்த வேலின்
பெயர்த்த மனைவி வஞ்சி யானும்
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனுஞ் சேர்த்திக் கொண்டான்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்
கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட மாலை நிலையும்
அரும்பெருஞ் சிறப்பிற் புதல்வன் பயந்த
தாய்தப வரூஉந் தலைப்பெயல் நிலையும்

மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண்டு உடைத்தே.

''மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை'' முதலாகத் தலையொடு முடிந்த நிலையொடு கூடப் பத்தாகும் என்பர் சிலர். ''பூசல் மயக்கம்'' முதலாகக் ''காடுவாழ்த்து'' உட்பட வருவனவற்றொடும் இருவகைப்பட்ட துறையை உடைத்து.

எனவே, முற்கூறிய பத்தும் ஒருவகை என்பதும் பிற்கூறிய பத்தும் மற்றொரு வகை என்பதும் பெறப்பட்டன.

**6.2.1 மாற்று அருங் கூற்றம் சாற்றிய பெருமை** - மாற்றுதற்கு அரிய கூற்றம் வருமெனச் சொல்லப்பட்ட பெருங்காஞ்சி

''இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவணது இடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே'' (புறம்.363)

**6.2.2 முதுமைக்காஞ்சி** - அறிவான் மிக்கோர் அல்லாதார்க்குச் சொன்ன முதுகாஞ்சி

''பல்சான் றீரே பல்சான் றீரே -----
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படுஉம் நெறியுமா ரதுவே.'' (புறம்.95)

**6.2.3 மறக்காஞ்சி** - இயல்புற வரும் பகுதிநோக்கிப் புண்கிழித்து முடியும் மறக்காஞ்சி

''நகையமர் ஆயம் நடுங்க நடுங்கான்
தொகையமர் ஓட்டிய துப்பின் - பகைவர்முன்
நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலான்
பொங்கிப் பரிந்திட்டான் புண்.'' (புறப்.காஞ்சி.15)

**6.2.4 பேய்க்காஞ்சி** – பாதுகாக்கும் சுற்றம் இன்மையாற் புண்ணோனைப் பேய் பேணுதலைக் குறிக்கும் பேய்க்காஞ்சி

''ஆயும் அடுதிறலாற் கன்பிலார் இல்போலும்
தோயுங் கதழ்குருதி தோள்புடைப்பப் - பேயும்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்
உளம்புகல ஓம்பல் உறும்.'' (புறப். காஞ்சி.16)

குறிப்பு

**6.2.5 மன்னைக்காஞ்சி -** இத்தன்மையான் என உலகத்தார் இரங்கிய மன்னைக் காஞ்சி.

"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே -------

ஈயாது வீயும் உயிர்தவப் பலவே." (புறம்.235)

6.2.6 **வஞ்சினக்காஞ்சி** - இன்னவாறு செய்தலைப் பிழைத்தேனாயின் இன்னேன் ஆகக் கடவேன் எனக் கூறிய அரிய சிறப்பினையுடைய வஞ்சினக் காஞ்சி

"என்நிழல் வாழ்நர் செல்நிழற் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே." (புறம் . 72 )

**6.2.7 தொடாக் காஞ்சி** - இனிய நகையார்ந்த மனைவி பேய் தன் கணவனின் புண்ணைத் தொடாதவாறு காத்த தொடாக்காஞ்சி

"காக்கம் வம்மோ காதலம் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே." ( புறம் . 281)

**6.2.8 ஆஞ்சிக்காஞ்சி** - தன்னை நீத்த கணவன் விடுத்த வேலினானே மனைவி தன் உயிரையும் போக்கிக் கொண்ட ஆஞ்சிக்காஞ்சி.

"கௌவைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன் - அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்கண் அவன்காதற்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று." (புறப் . காஞ்சி . 23)

**6.2.9 மகட்பாற்காஞ்சி -** தொல்குலத்தைச் சேர்ந்த வேந்தன் ஒவ்வாக் குடியினன் ஒருவன் வந்து பெண் கேட்டபொழுது மறுத்து தன் உயிரைப் பெரிதெனக் கருதாது போரிட்ட மகற்பாற்காஞ்சி

"நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையும்
நெடிய அல்லது பணிந்துமொழி யலனே
இ∴திவர் படிவம் ஆயின் வைஎயிற்று
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
மரம்படு சிறுதீப் போல
அணங்கா யினள்தான் பிறந்த ஊர்க்கே." ( புறம் . 341)

**6.2.10 முதுகாஞ்சி-** தன்னைக் கொண்டான் ஆகிய தன் கணவனின் தலையொடு தனது முலைகளையும் தம் முகத்தையும் சேர்த்தி மனைவியும் இறந்த நிலை கூறும் முதுகாஞ்சி

"கொலையானாக் கூற்றே கொடிதே கொழுநன்
தலையானான் தையலாள் கண்டே- முலையான்
முயங்கினாள் வாள்முகமுஞ் சேர்த்தினாள் ஆங்கே
உயங்கினாள் ஓங்கிற்று உயிர்." ( புறப் . காஞ்சி . 13 )

**6.2.11 பூசல்மயக்கம்** - பெரிய புகழையுடையவனாய் மாய்ந்தவனைச் சுற்றிய சுற்றத்தார் அவன் மாய்ந்தமைக்கு அழுத மயக்கம்

"மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே ( புறம் . 227 )

**6.2.12 தாங்கு அரும் பையுள்**: - சிறைப்பட்டார் தாம் உற்ற பொறுத்தற்கு அரிய துன்பத்தினைக் கூறுங் கூற்று

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ் உலகத்தானே"

**6.2.13 மூதானந்தம்** - கணவனொடு இறந்த செலவை நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தம்

"ஒருயி ராக உடர்கலந்தார்க்கு
ஈருயிர் என்பர் இடைதெரியார் - போரில்
விடன்ஏந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே உலந்தது உயிர்." (புறப் . சிறப்பிற்பொதுவியல் - 9)

**6.2.14 முதுபாலை** - மிகுதி மிக்க சுரத்திடைக் கணவனை இழந்து தனியளாய்த் தலைமகள் வருந்திய முதுபாலை

"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்
என்போற் பெருவிதிர்ப்பு உறுக நின்னை
இன்னா செய்த அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசின் சிறிதே" ( புறம் . 255)

**6.2.15 கையறு நிலை** - இறந்தோர்மாட்டுச் இறவாதார் வருத்தமுற்றுப் புலம்பிய கையறு நிலை

"செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினும்

உற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர்க் கடக்குந் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே." ( புறம் 226)

**6.2.16 தபுதாரநிலை** – மனைவியை இழந்த கணவனது தபுதாரநிலை.

"யாங்குப்பெரி தாயினும் நோயள வெனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையின்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே." ( புறம் 245)

**6.2.17 தாபத நிலை** – மனைவி கணவனை இழந்து நிற்கும் தாபத நிலை

"அளிய தாமே சிறுவெள் ஆம்பல்
இளையம் ஆகத் தழையா யினவே , இனியே
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து
இன்னா வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே." ( புறம் . 248 )

**6.2.18 மாலைசொல் நிலை** - கணவனொடு கிழத்தி பெரிய நெருப்பிற்புகுவழி இடையிட்ட மாலைக்காலத்துக் கூறும் கூற்று

"பல்சான் றீரே பல்சான் றீரே ------
நுமக்கரிது ஆகுக தில்ல எமக்கெம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓர் அற்றே." ( புறம் . 246)

**6.2.19 தலைப் பெயல் நிலை** - அரும்பெருஞ் சிறப்பினையுடைய மகற்பெற்ற தாய் சாதற்கண் அவனைத் தலைப்பெயல் நிலை

"இடம்படு ஞாலத்து இயல்போ கொடிதே
தடம்பெருங்கண் பாலகன் என்னுங் - கடன்கழித்து
முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரண் அவியா
வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய்." ( புறப் . சிறப்பிற் பொதுவியல் - 5)

**6.2.20 காடு வாழ்த்து** – மலர்தலை உலகத்தின் மரபு நன்கு விளங்கப் பலரும் மாயத் தான் மாயாத புறங்காடு வாழ்த்துதல்

"களரி பரந்து கள்ளி போகிப்
பகலுங் கூவுங் கூகையொடு பேழ்வாய்
ஈம விளக்கின் பேஎய் மகளிரொடு
அஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு". ( புறம் . 356)

**பாடாண்திணை:**

பாடாண் திணைப்பகுதி கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாகும்,அது எட்டுவகையினை உடைத்து.அவையாவன:- கடவுள் வாழ்த்துவகை, வாழ்த்தியல்வகை, மங்கல வகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படைவகை, பரிசிற்றுறைவகை, கைக்கிளைவகை, வசைவகை என்பன.

பாடாண்பகுதி கைக்கிளைக்குப் புறனாயவாறு எவ்வாறெனின், கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கு உரித்தன்றி ஒருதலைக் காமமாகி வருவது போல இதுவும் ஒருபாற்கு உரித்தன்றி ஒருவனை ஒருவன் யாதானும் ஒரு பயன் கருதியவழி மொழிந்து நிற்பது ஆதலானும், கைக்கிளையாகிய காமப் பகுதிக்கண் மெய்ப்பெயர்பற்றிக் கூறுதலானும், கைக்கிளை போலச் செந்திறத்தாற் கூறுதலானும், அதற்கு இது புறனாயிற்று இத்தகைய செய்திகளைச் சொல்லும் நூற்பா.

**பாடாண்திணை இலக்கணம்:**

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே. என்பதாகும்.

## 6.3 பாடாண் பாட்டின் பொருண்மை:

அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப..

**6.3.1 அமரர்கண் முடியும் அறுவகையாவன**: கொடிநிலை கந்தழி வள்ளி புலவராற்றுப்படை புகழ்தல் பரவல் என்பனவாகும்.

**6.3.2 புரைதீர் காமம் புல்லிய வகை** - குற்றந் தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையினும். அ∴தாவது, ஐந்திணை தழுவிய அகம். அவை இற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண் திணை ஆதற்குப் பொருந்தும் அதாவது, கொடிநிலை முதலிய ஆறும் கடவுள் புகழ்ச்சியின்றிப் பாட்டுடைத்தலைவனைச் சார்த்தி வருதல், காமப்பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விருவகையானும் ஒருவனைப் புகழ்தலாற் பாடாண்பாட்டு ஆயிற்று.

இன்னும் "புரைதீர் காமம் புல்லிய வகையினும் ஒன்றன்பகுதி'' என்ற அதனான் ஐவகைப்பொருளினும் ஊடற்பொருண்மை பாடாண் பகுதிக்கு ஒன்றும் என்பதாம்.. இன்னும் இதனானே இயற்பெயர் சார்த்திவாராது நாடும் ஊரும் இதுவென விளங்க வரும் ஊரன், சேர்ப்பன் என்னும் பெயரினான் ஒரு கூறு குறிப்புப்பற்றி வரும் பகுதியும் பாடாண்பாட்டாம் என்றும் கொள்க என்பார் இளம்பூரணர்.

## 6.4 பாடாண்பாட்டிற்குரிய செய்யுள் மரபு:

வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை

வண்ணப் பகுதி வரைவின் றாங்கே.

அமரர்கண் முடியும் ஆறுவகையும் வழக்கில் பொருந்தி வரும் போது பரவல: புகழ்ச்சி ஆகியவையும் முன்னோர் கூறிய காமக்குறிப்பினும்செந்துறைப்பாட்டினும் வரும் வண்ணப்பகுதி நீக்கப்படாது என்பது இதன் பொருள் ஆகும். அதாவது இசைத்தமிழல் தேுவபாணியும் அகப்பொருள் பாட்டும் பாடப்படலாம் என்ற விதிமுறை உண்டு,ஆாபோன்ற விதிமுறை பாடாண்பாட்டிற்கு இல்லை.எல்லாச் செய்யுளும் பாடாண்பாட்டில் வரப்பெறும் என்பதாம்.பரவல் என்பது முன்னிலைக்கண்ணும் புகழ்ச்சி என்பது படர்க்கை இடத்தும் நிகழ்வதாகும்.

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் - நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.” ( திரிகடுகம் ; கடவுள் வாழ்த்து) - புகழ்தல்,

“வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய உருவம் வெளிப்படுத்தாய் - வெய்ய
அடுந்திறல் ஆழி அரவணையாய் என்றும்
நெடுந்தகை நின்னையே யாம்.” ( புறப் . பாடாண் . 3 ) - பரவல்,

“வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் சேறி 3
நெறிகொள் படிவத்தோய் நீயும் - பொறிகட்கு
இருளீயும் ஞாலத்து இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்.” ( புறப்.பாடாண் . 42) - புலவராற்றுப்படை,

“மாயவன் மாயம் அதுவால் மணிநிரையுள்
ஆயனா எண்ணல் அவனருளான் - காயக்
கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ.” ( புறப் பாடாண் . 40 ) - கந்தழி.

“வேண்டுதியால் நீயும் விழைவோ விழுமிதே
ஈண்டியம் விம்ம இனவளையார் - பூண்தயங்கச்
சூலமோ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனோ டாடும் வெறி.” ( புறப் .பாடாண் . 41)

- வள்ளி. வள்ளி என்பது ஈண்டு வெறியாட்டு. கொடிநிலை வந்த வழிக் காண்க.

இனிக் காமப்பகுதி வருமாறு :-

“மலைபடு சாந்தம் மலர்மார்ப யாம்நின்
பலர்படி செல்வம் படியேம் - புலர்விடியல்
வண்டினங்கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரிற்
கண்டனங் காண்டற் கரிது.’’ ( புறப் . பாடாண். 47)

இது ஊடற்பொருண்மைக்கண் வந்தது.

“வையைதன்

நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
போர் முற்றொன்று அறியாத புரிசைசூழ் புனலூரன்." (கலி.மருதம் . 2)

- குறிப்பினாற் பாட்டுடைத் தலைமகனே கிளவித்தலைமகனாக வந்தது.

"பூந்தண்டார்ப் புலர்சாந்தில் தென்னவன் உயர்கூடல்
தேம்பாய அவிழ்நீலத் தலர்வென்ற அமருண்கண்
ஏந்துகோட் டெழில்யானை ஒன்னாதார்க் கவன்வேலில்
சேந்துநீ இனையையால் ஒத்ததோ சின்மொழி." (கலி. குறிஞ்சி.21)

- காமத்தின்கண் வந்தது .

காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.

காமப்பகுதி கடவுள் மாட்டும் வரையார். ஏனோர்மாட்டும் வரையார் என்பர் புலவர்.

கடவுள் மாட்டுத் தெய்வப்பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப்பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்பெறும்.

"நல்கினும் நாமிசையாள் நோம்என்னும் சேவடிமேல்
ஒல்கினும் உச்சியாள் நோம்என்னும் - மல்கிருள்
ஆடல் அயர்ந்தாற்கு அரிதால் உமையாளை
ஊடல் உணர்த்துவதோர் ஆறு." (புறப்.பாடாண். 48) - தெய்வப் பெண்டிர் நயந்த பக்கம்.

"அரிகொண்ட கண்சிவப்ப அல்லினென் ஆகம்
புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி - வரிவண்டு
பண்நலங்கூட் டுண்ணும் பனிமலர்ப் பாசூர்என்
உண்ணலங் கூட்டுண்டா னூர்." (புறப்.பாடாண். 49)) - மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்.

குழவி மருங்கினும் கிழவ தாகும்.

இது, குழவிப் பருவத்தும் காமப்பகுதி பாடப்பெறும் என்பது உணர்த்துதல் வலியதாகும். இதுவே பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றம் ஆகும்.

குழவிப் பருவத்தும் காமப்பகுதி கூறல்பெறும்.

வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
அரிக்கண்ணி அஞ்சி அலற - எரிக்கதிர்வேல்
செங்கோலன் நுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்
எங்கோலம் தீண்டல் இனிது.

ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான.

ஊரின்கண் காமப்பகுதி நிகழ்த்தலும் உரித்து என்று சொல்வர் புலவர், அது நிகழுங் காலத்து வழக்கொடு பொருந்திநடக்கும். பிற்கால உலா இலக்கியத்திற்கு இந்நூற்பா தோற்றுவாய் ஆயிற்று.

குறிப்பு

“ஊரொடு தோற்றம்” என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது. “வழக்கு” என்பது சொல்லுதற்கு ஏற்ற நிலைமை. ‘வகை’ என்பது அவரவர் பருவத்திற்கு ஏற்கக்கூறும் வகைச்செய்யுள்.

## 6.5 பாடாண்பாட்டிற்குரிய மரபு

மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே

அகத்திணையியலில் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார் என்றது. ஆனால் பாடாண்பாட்டின்கண் இது காதல் பாடலாய் இருந்தாலும் இயற்பெயர் சுட்டப்பெறலாம் என்பது மேற்கண்ட நூற்பாவால் பெறப்படும்.

## 6.6 கடவுள் வாழ்த்தொடு வரும் பாடாண்:

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும், பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி வருங்காலத்துக் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும்.

“பூங்கண் நெடு முடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல - ஓங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி.” (புறப்.பாடாண் . 39) - கொடிநிலை.

“அன்றெறிந் தானும் இவனால் அரண்வலித்து
இன்றிவன் மாறாய் எதிர்வார்யார் - கன்றும்
அடையார் மணிப்பூண் அடையாதார் மார்பின்
சுடராழி நின்றெரியச் சோ”. (புறப்.உழிஞை. 7) - கந்தழி

வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழிக் கண்டுகொள்க . ”வந்தது கொண்டு வாராத துணர்த்தல்” (தொல்.மரபி .110) என்பதனால் புலவராற்றுப்படை முதலாகிய மூன்றும் சார்த்தி வரும் என்பதும் கொள்ளப்படும்.. முருகாற்றுப்படையுள்,

“மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி” (திருமுருகு . 71-73)

என்றவழி, ஒரு முகத்தாற் பாண்டியனையும் இதனுட் சார்த்தியவாறு வந்தது. இனிப் பரவற்குச் சார்ந்து வருமாறு :-

“கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன்” என்னுங் கலிப்பாட்டினுள்,

“அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மார்பில்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயல்உறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
ஒன்று முதுகடல் உலகம் முழுவதும்

ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே" (யாப்-விரு. 83. மேற்கோள்)
என்பதனுட் பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தியவாறு வந்தது.

## 6.7 பாடாண் திணைக்கு உரியதொரு பொருள் வேறுபாடு:

கொற்ற வள்ளை ஓரிடத்தான.

கொற்ற வள்ளையும் ஓர் இடத்துப் பாடாண்பாட்டாம்.

"வல்லா ராயினும் வல்லுந ராயினும் ------
கடிமரந் தடித லோம்புநின்
நெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே."

## 6.8 பாடாண்திணையின் துறைகள்:

கொடுப்போர் ஏத்திக் கொடா அர்ப் பழித்தலும்
அடுத் தூர்ந் தேத்திய இயல்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉவும்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇத்
தொக்க நான்கும் உளவென மொழிப .

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல், முதலாக வேலை நோக்கிய விளக்குநிலை ஈறாகச் சொல்லப் பட்டனவும், வாயுறை வாழ்த்து முதலாகக் கைக்கிளை உளப்பட்ட நால்வகையும் பாடாண்திணைக்குத் துறையாகும்.

**6.8.1 கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்** - இது கொடுப்போர் ஏத்தல் எனவும், கொடார்ப் பழித்தல் எனவும், கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் எனவும் மூன்று வகைப்படும்.

இதனாற் பெற்றது, ஈவோரைப் புகழ்தலும், ஈயாதோரைப் பழித்தலும், ஈவோரைப் புகழ்ந்து ஈயாதோரைப் பழித்தலும் என்பதாகும்.

கொடுப்போர் ஏத்தல் வருமாறு:

"பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே." ( புறம்.107)

கொடார்ப் பழித்தல் வருமாறு:

"ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லாது அல்லென மறுத்தலும் இரண்டும் -----
சுவைக்கினி தாகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி

உரைசால் ஓங்குபுகழ் ஒரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே." (புறம்.127) இதனுள் ஏத்தப்பட்டவன் ஆய். பழிக்கப்பட்டவர் செல்வர்.

**6.8.2 வென்றியும் குணனும் அடுத்துப் பரந்து ஏத்திய இயல்மொழி வாழ்த்து.**

- இது, இயல்மொழி எனவும், வாழ்த்து எனவும், இயல்மொழி வாழ்த்து எனவும் மூன்று வகைப்படும்.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே"(புறம் . 14 ) - இயல்மொழி.

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பாடிற்றே ஆயிழை கணவ
இமயத்து ஈண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாழிய பலவே" (புறம்.34) - வாழ்த்து.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்பொற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மினென
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் ப.ஃறுளி மணலினும் பலவே." (புறம் .9 ) - இயல்மொழி வாழ்த்து

**6.8.3 கடை நிலை** – தொலைவிலிருந்து வருகின்ற புலவர்கள் தம் உடல் வருத்தம் தீர வாயில் காவலர்க்கு உரைத்த வாயில் நிலை .

"வாயி லோயே வாயி லோயே -----
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே." (புறம்.206)

**6.8.4 கண்படைநிலை** – மன்னன் நன்கு துயில் கொண்ட நிலையைக் குறித்த கண்படை நிலைஅரசன்..

"மேலார் இறைஅமருள் மின்னார் சினஞ்சொரியும்
வேலான் விறன்முனை வென்றடக்கிக் - கோலால்

குறிப்பு

கொடிய உலகில் குறுகாமை எங்கோன்
கடியத் துயிலேற்ற கண்''.(புறப் பாடாண்.8)

**6.8.5 வேள்விநிலை** – கபிலை குறித்த வேள்விநிலை

"பருக்காழும் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கண் கபிலை கொடுத்தான் - செருக்கோடு
இடிமுரசத் தானை இகலிரிய எங்கோன்
கடிமுரசங் காலைச்செய் வித்து"(புறப் பாடாண்.14)

**6.8.6 விளக்குநிலை** - வேலினைக் குறித்த விளக்கு நிலை. அதாவது விளக்கு ஏதுவாக வேலின் வெற்றியைக் காட்டுதல்.

"வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந்தாங்கு ஓங்கி வரலால் - அளிசிறந்து
நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு"(புறப். பாடாண்.12)

**6.8.7 வாயுறை வாழ்த்து -** வேம்பும் கடுவும்போல பிற்பயக்குமென்று கடுஞ்சொல்லைக் கொண்டு ஓம்படைக் கிளவியாலே மெய்யுறக் கூறுதல்.

**வாயுறை வாழ்த்தின் இலக்கணம்:**

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே." ( தொல் . செய்யு . 108 )

"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு ஆயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே" (புறம் . 184)

**6.8.8 செவியறிவுறூஉ** - உயர்ந்தோர்மாட்டு அடங்கி ஒழுகுதல் வேண்டும் எனச் செவியறிவுறுத்துக் கூறுதல்.

**செவியுறையின் இலக்கணம்**:

செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே." (தொல்.செய்யு.110)

"அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்

குறிப்பு

தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே - முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டல் முறை"( புறப். பாடாண் . 33 )

**6.8.9 புறநிலை வாழ்த்து** - மன்னன் இடத்ததாகி வரும் புறநிலை வாழ்த்து,

**புறநிலை வாழ்த்தின் இலக்கணம்:**

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"( தொல் . செய்யு . 106 )

என்பதனால் , இனிது வாழ்மின் என்னும் பொருள்மேல் வரும் .

"தென்றல் இடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்ஏற்றான் நிற்காப்ப - என்றுந்
தீரா நண்பின் தேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே"(யா.விரு , 55-மேற்கோள்)

**6.8.10 கைக்கிளை** - ஒருதலைக்காமம் கைக்கிளை எனப்படும். இது ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இரு வகைப்படும்.. இவையும் பாடாண் பாட்டாம்.

"அணியாய செம்பழுக்காய் வெள்ளிலையோ டேந்திப்
பணியாயோ எம்பெருமான் என்று - கணியார்வாய்க்
கோள்நலங் கேட்பதூஉங் கொங்கர் பெருமானார்
தோள்நலஞ் சேர்தற் பொருட்டு"

## 6.9 பாடாண்திணையின் துறைகள்:

தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயில்எடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்
மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்

காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே.

துயிலெடைநிலை முதலாகப் பரிசில் விடை ஈறாகச் சொல்லப்பட்டனவும், நாளும் புள்ளும் நிமித்தமும் ஓம்படையும் உட்பட்ட உலக வழக்கின் அறியும் மூன்று காலமும் பற்றி வரும் பாடாண்திணை.

**6.9.1 துயில்எடை நிலை** – உறங்கும் புலவர்க்குக் கேடு இல்லாத நற்புகழைப் பொருந்த வேண்டிச் சூதர் ஏத்திய துயில் எடைநிலை

"அளந்த திறையார் அகலிடத்து மன்னர்
வளந்தரும் வேலோய் வணங்கக் - கனந்தயங்கப்
பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்மைசூழ் தாமரைத்
தூமலர்க்கண் நேர்க துயில்".(புறப். பாடாண் . 9 )

**6.9.2 ஆற்றுப்படை**: கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇ சென்று பயன் எதிர் சொன்ன பக்கம்

பக்கமும் என்றதினால் ஆற்றினது அருமையும் அவன் ஊரது பண்பும் கூறப்படும். அவற்றுள்,

கூத்தராற்றுப்படை:

திருமழை தலைஇய ( மலைபடுகடாம், 1 ) என்னும் பாட்டு

பாணாற்றுப்படை:

"பாணன் சூடிய பகம்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக் ---
உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக் கீத்த எங்கோ
சுடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே பிறர்
வறுமைநோக் கின்றவன் கைவண் மையே." ( புறம் . 141)

விறலியாற்றுப்படை:

"மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற் ----
மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே" ( புறம் . 133)

**6.9.3 பெருமங்கலம்** - சிறந்த நாட்கண் உண்டாகிய சினத்தை நீக்கிப் பிறந்த நாட்கண் உளதாகிய பெருமங்கலம்.

"அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார் - எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வா"(முத்தொள் . 82)

**6.9.4 மண்ணுமங்கலம் -** ஆண்டுதோறும் முடிபுனையும் வழி நிகழும் மிகப் புண்ணிய நீராட்டு மங்கலம்.

**6.9.5 குடை நிழல் மரபு** - ஒழுக்கத்தை மிகுத்து ஏத்தப்பட்ட குடைநிழல் மரபு.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்." (சிலப். மங்கல. 1)

**6.9.6 வாள் மங்கலம் -** பகைவரைக் கருதிய வாள் மங்கலம்

"பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை உடைத்தே ----
இருங்கடல் தானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னாதே" ( புறம் . 332)

**6.9.7 மண்ணு மங்கலம் -** நிலைபெற்ற எயிலை அழித்த மண்ணு மங்கலம.அதாவது பகைவரது மதிலை அழித்த பின் நீராடும் மண்ணு மங்கலம். இ∴து உழிஞைப் படலத்துக் கூறப்பட்டதாயினும் மண்ணு நீராடுதலின் இதற்கும் துறையாயிற்று.

**6.9.8 பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை** - பரிசில் கடாவுதலாகிய கடைக்கூட்டு நிலையும். அதாவது மன்னனின் தலைவாயிலை புலவர் அணுகிப் புகழ்ந்து பரிசில் கேட்கும் நிலை.

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின் -------
பண் அமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே." (புறம்.164)

**6.9.9 பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றிய இருவகை விடை** - பரிசில் பெற்ற பின்னரும் அவன் கொடுத்த மிக்க வளனை ஏத்தி வழக்கின்கண் தோன்றிய இருவகை . விடை அவையாவன புலவன் தான் போகல் வேண்டும் எனக் கூறல். அரசன் பரிசு கொடுத்து விடுப்ப புலவன் போதல்.

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய ------
அறத்துறை அம்பியின் மான மறப்பின்று
இருங்கோள் ஈராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதல் மகனே." ( புறம் . 381) அரசன் விடைகொடுப்பச் சென்றவன் கூற்று

"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும் -----
இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்

திருந்துவேல் குமணன் நல்கிய வளனே." ( புறம் -163) இருவகை விடையும் என்றதனால், பரிசில் பெற்றவழிக் கூறுதலும் பெயர்ந்தவழிக் கூறுதலும் ஆகும்.

**6.9.10 காலம் கண்ணிய ஓம்படை** - அச்சமும் உவகையும் ஒழிவு இன்றி நாளானும் புள்ளானும் பிற நிமித்தத்தானும் காலத்தைக் குறித்த ஓம்படை அச்சமாவது, தீமை வரும் என்று அஞ்சுதல் உவகையாவது நன்மை வரும் என்று மகிழ்தல், நாளாவது நன்னாள் தீநாள். புள்ளாவன, ஆந்தை முதலியன, பிற நிமித்தமாவன, அலகு முதலாயின. காலங் கண்ணுதலாவது, வருங்காலங் குறித்தல்.

"..................................
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புறல் அறியா ஏமக் காப்பினை
அனையை ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின் அஞ் சும்மே"( புறம் . 20 ) - புள்பற்றி வந்தது
"காலனுங் காலம் பார்க்கும்" ( புறம் . 41 - நிமித்தம்பற்றி வந்தது .
நல்லதுசெய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்" ( புறம் . 195) - ஓம்படைபற்றி வந்தது .

**பயிற்சி வினாக்கள்:**

1.காஞ்சித்திணையின் துறைகளை விவரி
பாடப்பகுதியின் 6.2 இன் பகுதியை எழுதுக.
2.கடவுள் வாழ்த்தொடு வரும் பாடாண்பகுதி குறித்து எழுதுக.
பாடப்பகுதியின் 6.6 இன் பகுதியை எழுதுக.
3.ஆற்றுப்படை – விளக்குக.
பாடப்பகுதியின் 6.9.2 இன் பகுதியை எழுதுக.
4.துயில்எடை நிலை என்பதனை விளக்குக
பாடப்பகுதியின் 6.9.1 இன் பகுதியை எழுதுக.
5.செவியறிவுறூஉ – என்பதனை விவரி
பாடப்பகுதியின் 6.8.8 இன் பகுதியை எழுதுக.

குறிப்பு

# கூறு: 7 – களவியல்

**நோக்கம்: களவில் தலைமக்கள் பெறும் இடம், களவிற்குரிய மரபுகள் போன்றவற்றை அறிதல்.**

**களவியல்**

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயல் களவியல் என்பது ஆகும்.ஒத்த தலைவன் தலைவி இருவருக்குமிடையே ஆன களவொழுக்கத்தினை உணர்த்தியமையின் இவ்வியல் களவியல் எனப்பட்டது. களவாவது, பிறர்க்குரிய பொருள் மறையிற்கோடல், இன்னதன்றி, ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தம்மவர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர், தம் விருப்பத்தினால் தம்மவர்களை மறைத்துப் புணர்ந்து பின்னும் அந் நிலை வாழாமல் நிற்றலால் இ.்.து அறமெனப்படும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயலாகக் களவியல் அமைக்கப்பட்டிருப்பதன் பொருத்தப்பாட்டினைக் கைக்கிளை முதற் பெருந்திணை இறுதியாக எழுதிணைகளை அகத்திணையியலில் கூறி அவற்றின் புறத்து நிகழுந் திணைகளை புறத்திணையியலில் கூறினார். அவ்வெழுதிணையினும் ஒருதலை வேட்கையாகிய கைக்கிளையும், ஒப்பிற்கூட்டமாகிய பெருந்திணையும் ஒழித்து தலைமக்கள் இருவரன்பும் ஒத்தநிலைமையாகிய நடுவண் ஐந்திணைக்கண் புணர்தலும் பிரிதலும் இரத்தலும் இரங்கலும் ஊடலுமாகிய உரிப்பொருள் களவு, கற்பு என்னும் இருவகைக் கைக்கோளினும் நிகழுமாதலால் அவ்விருவகைக் கைக்கோளினும் களவு என்னும் கைக்கோள் இதனுள் உணர்த்துவதால் அவற்றின் பின் கூறப்பட்டது.இதனுள் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்பன விளக்கப்படுகின்றன.

''காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் போழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதன் மறையோர் ஆறே'' (செய்யுளியல், 178)

என்பதனான் இந்நால்வகையும் இதனுள் உரைக்கப்படுகின்றதென்று கொள்ளப்படும், காமப்புணர்ச்சி யெனினும், இயற்கைப்புணர்ச்சியெனினும், முன்னூறு புணர்ச்சியெனினும், தெய்வப் புணர்ச்சி யெனினும் ஒக்கும். இவையெல்லாம் காரணப்பெயர். அ.்.தாவது, ஒத்தார் இருவர் தாமே கூடுங்கூட்டம். இடந்தலைப் பாடாவது இயற்க்கை புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிற்றை ஞான்றும் அவ்விடத்துச் சென்று எதிர்ப் படுதல் . பாங்கற் கூட்டமாவது, இப் புணர்ச்சி பாங்கற்கு உரைத்து, நீயெமக்குத் துணையாக வேண்டுமென்ற அவன் குறிவழிச் சென்று தலைமகள் நின்ற நிலையை யுணர்த்தச் சென்று கூடுதல், தோழியிற் கூட்டமாவது, இவற்றின் பின்னர் இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல்.அவை நான்கும் இம்முறையே நிகழும் என்று

குறிப்பு

கொள்க. இனி இம்முறை நிகழாது இடையீடு பட்டு வரும். அஃதாமாறு, தலைமகள் எதிர்பட்டுழி அன்புடையார் எல்லார்க்கும் இயற்க்கைப் புணர்ச்சி முட்டின்றிக்கூடுதல் உலகியல் அன்மையான் தலைமகளை யாதானும் ஓரிடத்து எதிர்ப்பட்ட தலைமகன் அவன் காதற் குறிப்புணர்ந்து நின்று, கூட்டத்திற்கு இடையீடு உண்டாயுழியும் ஆண்டுச் சென்ற வேட்கை தணி யாது நின்று, முன்னைஞான்று கண்டாற் போலப் பிற்றை ஞான்றும் காணலாகுமோ என ஆண்டுச் சேறலும் , தலைமகளும் அவ்வாறே வேட்கையான் அடர்ப்புண்டு ஆண்டுவருதலும் ஆகிய வழிப் புணர்ச்சி நிகழும். ஆண்டு ஆயத்தாரானாதல் பறரானாதல் இடையீடுஉபட்டுழித் தன் வருத்தத்தினைப் பாங்கற்கு உணர்த்தி அவன் தலைமகள் நின்றுழியறிந்து கூற, ஆண்டுச்சென்று புணரும். அவ்விடத்தும் இடையீடு பட்டுழித் தோழிவாயிலாக முயன்றெய்தும் இவ்வாறும், ஒரொவொன்று இடையீடுபட்டு வருதலும் உளவாம்.அவ்வாறாயின், இயற்க்கைப் புணர்ச்சி இடையீடு பட்டுழிவரைந்தெய்தல் தக்கதன்றோ எனின் வரைந்தெய்துந்திறம் நீட்டிக்கு மாயின் வேட்கை நிறுத்தலாற்றாதார் புணர்ச்சி கருதி முயல்ப.இவ்வாறு சான்றோர் செய்யுள் வந்தனவும் உளவோ எனின், சான்றோர் செய்யுட்களும் இவ்வாறு பொருள் கொள்ள ஏற்பன உள, அவையாவன :-

''மருந்தின் தீரா மண்ணின் ஆகாது -------<br>ஆடுகொடி மருங்கின் அருளின் அல்லது<br>பிறிதில் தீரா தென்பது பின்நின்று -----<br>அறியக் கூறுதும் எழுமோ நெஞ்சே<br>பன்மாண் சாயல் பரதவர் மகட்கே.''

இதனுள் ''ஆடுகொடி மருங்கின் அருளின் அல்லது பிறிதில் தீராது'' என்பதனான் இயற்கைப் புணர்ச்சி இடையீடு பட்டுப் புணர்ச்சி கருதிக் கூறியவாறு காண்க.

''மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த் திரையுள்<br>பயில்வதோர் தெய்வங்கொல் கேளிர் - குயில்பயிரும்<br>கன்னி இளஞாழல் பூம்பொழில் நோக்கிய<br>கண்ணின் வருந்தும்என் நெஞ்சு.'' (திணைமொழி 49) - ஐயநிலையைப் பாங்கற்கு உரைத்தலின் புணர்ச்சி இன்றாயிற்று.

''கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த -----<br>பின்னிலை முனியல்மா நெஞ்சே என்னதூஉம்<br>அருந்துயர் அவலந் தீர்க்கும்<br>மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே.'' (நற்றிணை-140)

இதனுள் ''அருளினும் அருளாளாயினும்'' என்றமையால் கூட்டமின்மையும் ''பின்னிலை முனியல்'' என்றமையால் இரந்து பின்னிற் பானாகத் துணிந்தமையும், தோழியிற் கூட்டத்து இயற்கைப் புணர் ச்சிக்கு ஒருப்பட்டமையும் உணர்க.

குறிப்பு

"நறவுக்கமழ் அலரி நறவுவாய் விரிந்து -------
கைதை வேலி இவ்வூர்ச்
செய்தூட் டேனோ சிறுகுடி யானே." - பெரியீரெனச் சேட்படுத்தவழிக் கூறியது.

"கூறுவம் கொல்லோ கூறலம் கொல்லெனக்
கரந்த காமம் கைநிறுக் கல்லாது -----------
நேர்மலை நிறைசுனை உறையுஞ்
சூர்மகள் மாதோ என்னுமென் நெஞ்சே." (அகம். 198) இது தோழியிற் கூடிய தலைமகன் கூற்று.

"அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்
கவரி மடமா கதூஉம் படர்சாரல்
கானக நாட மறவல் வயங்கிழைக்கு
யானிடை நின்ற புணை" (ஐந்திணையெழு-1)

இதனானே முந்துற்ற கூட்டமின்மை யுணர்க. இனி ஒரு கூட்டமும் நிகழாது ஆண்டு வந்துடைவேட்கை இருவருக்கும் தணியாது நின்று வரைந்தெய்தலும் ஒன்று. இவ்வகையினாள் இக் களவொழுக்கம் மூவகைப்படும்.

## 7.1 இயற்கைப்புணர்ச்சி

காமப்புணர்ச்சி எனினும், இயற்கைப்புணர்ச்சி எனினும், முன்னுறு புணர்ச்சி எனினும், தெய்வப் புணர்ச்சி எனினும் ஒனறேயாம். இவை எல்லாம் ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவிகள். இவையெல்லாம் காரணப்பெயர் . அதாவது, ஒத்த தலைவனும் தலைவியும் நல் ஊழின் காரணமாகத் தாமே கூடுங்கூட்டம்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே.

அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றதனால் கைக்கிளை பெருந்திணையை ஒழித்து நின்ற முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன்பொடு புணர்ந்தவாறு என்னை யெனின், கைக்கிளை பெருந்திணையைப் போலாமை, ஒத்த அன்பினராகிப் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் நிகழ்த்துப ஆகலானும், அவை நிகழுங்கால் அத் திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருப்பொருளும் துணையாகி நிகழுமாகலானும், இவை அன்பொடு புணர்ந்தனஆகும்..அ∴தேல், ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தனவாம் எனின், அவை அன்புடையார் பலர் கூடி நிகழ்த்துபவையாகலின், அன்பொடு புணர்ந்தனவாம்.

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்

மறத்திற்கும் அஃதே துணை.” (குறள் - 76 ) என்பதனாலும் கொள்க.

இனி, இவ் ஐந்திணையும் இன்பமும் பொருளும் அறமும் ஆயினவாறு. என்னையெனின் புணர்தல் முதலாகிய ஐந்து பொருளும் இன்பந் தருதலின் இன்பமாயின, முல்லை முதலாகிய ஐந்திணைக்கும் உறுப்பாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இவற்றின் புறத்தாகிய வெட்சி வஞ்சி உழிஞை தும்பை என்பனவும் வாகையுள் ஒரு கூறும் பொருளாகலானும் புணர்தல் முதலாகிய உரிப்பொருளான் வருவதொரு கேடின்மையானும், பொருளாயின. இவ்வொழுக்கங்கள் அறத்தின்வழி நிகழ்தலானும், பாலையாகிய வாகைப்படலத்துள் அறநிலை கூறுதலானும், இவை அறமாயின. அஃதேல், கைக்கிளை பெருந்திணையும் இவற்றின் புறமாகிய பாடாண்பாட்டும் காஞ்சியும் அறமுதலாகிய மூன்றுமன்றி அன்பொடு புணர்தல் வேண்டுமெனின், காஞ்சி அன்பொடு புணராமையும் பாடாண்பாட்டும் அன்பொடு புணர்தல் ஒரு தலையன்மையும் அவ்வோத்தினுள் கண்டுகொள்க. ஏனையிரண்டும் அன்பொடு புணராமை மேற்சொல்லப்பட்டன. இனி அவை அறனும் பொருளுமாய் இன்பமாகா; அஃதேல், அறனும் பொருளும் ஆகாமையும் வேண்டுமெனின் குலனுங் குணனுங் கல்வியும் உடையராகிய அந்தணர் என விசேடித்தவழி ஏனையோர்க்கு இம் மூன்று பொருளும் இயைதல் வேண்டுமென்னும் நியமம் இன்மையின் ஏற்றவழிக் கொள்ளப்படும்.

இனி, ஐந்திணைமருங்கிற் காமக்கூட்டம் என்பது புணர்தல் முதலாகிய உரிப்பொருளும், அந் நிலமும் காலமும் கருப்பொருளும், களவினும் கற்பினும் வருதலின், அவை ஒரோவொன்று இருவகைப்படும். அவற்றுள், புணர்ச்சியாகிய இருவகையினும் களவாகிய காமக்கூட்டம் எனக் கொள்க. இன்னும் அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டம் என்றதனால் எல்லா நிலத்தினும் காமக்கூட்டம் நிகழப்பெறும் என்று கொள்க என உரை விளக்கம் செய்வார் இளம்பூரணர்.

**மறையோர் தேயத்து மன்றல் எட்டு:**

மறையோர் என்றது அந்தணரை ஆகும். தேஎம் என்றது அவர்களுடைய நூலையாம். மணம் எட்டாவன: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. பிரமமாவது கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியாயிருப்பான் ஒருவனுக்குத் தானமாகக் கொடுப்பது. பிரசாபத்தியமாவது, மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டியவழி இருமுதுகுரவரும் இயைந்து கொடுப்பது. ஆரிடமாவது, ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொடுப்பது. தெய்வமாவது, வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள்ளும் ஒருவர்க்கு வேள்வித்தீ முன்னர்க் கொடுப்பது. காந்திருவமாவது ஒத்த இருவர் தாமே கூடுங்கூட்டம். அசுரமாவது வில்லேற்றினானாதல் திரிபன்றி எய்தானாதல் கோடற்குரியனெனக் கூறியவழி அது செய்தார்க்குக் கொடுத்தல். இராக்கதமாவது தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது

வலிதிற்கொள்வது. பைசாசமாவது, களித்தார் மாட்டுந் துயின்றார்மாட்டுங் கூடுதல்.

## 7.2 காட்சி:

அன்பின் ஐந்திணைக்குரிய காதல் வாழ்வில் முதலில் நிகழ்வது இதுவாகும். அதாவது ஒத்த தலைவனும் தலைவியும் ஓழின்வலிமையால் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்வது. இவ்வாறு ஒருவரை ஒருவர் காண்பதே காட்சி எனப்படும். இத்தகைய தலைமக்களிடத்து இருக்கவேண்டிய ஒப்புமைத் தன்மைகளையும் தொல்காப்பியர் குறித்துரைப்பார்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே.

ஒருவரை ஒருவர் காணும் வழி இருவரடத்துப் புணர்சி வேற்கைத் தோன்றாது. அவ்வாறு தோன்ற வெண்டுமாயின் பாலது ஆணையானது வேண்டும். எனவே பாலது ஆணையின் என்றார். தலைவனும் தலையும் ஓத்த பண்புடையோராய் அமைதல் வேண்டும்.எனவே தான் ஒத்த தலைவனும் தலைவியும் காண்ப என்றார் தொல்காப்பியர்.தலைவன் தலைவயினும் மிக்கோனாய் இருத்தல் வேண்டும். ஒருக்காலும் இழிந்தோனாய் இருத்தல் கூடாது. அதன்வழி உயர்ந்ததன் மேற்சொல்லும் மனநிகழ்ச்சி உயர்ந்த பாலாயிற்று. காம நிகழ்ச்சியின்கண் ஒத்த அன்பினராய்க் கூடுதல் நல்வினையான் அல்லது வாராதென்பது கருத்தாகும். ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்பதில் உள்ள ஒத்ததன்மை என்பது பத்துவகைப்படும். அவை,

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.” (மெய்ப்.25)

என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்துள் கூறிய பத்துமாம். அவற்றுள் பிறப்பாவது, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர், நுளையர் என்றாற்போல வருங் குலம். குடிமையாவது அக்குலத்தினுள்ளார் எல்லாருஞ் சிறப்பாக ஒவ்வாமையின் அச்சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவைக் குடிமை என்றார்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.” (குறள். 972)

எனப் பிறரும் குலத்தின்கண்ணே சிறப்பென்பது ஒன்றுண்டென்று கூறினாராகலின். ஆண்மையாவது, ஆண்மைத்தன்மை. அஃதாவது, ஆள்வினையுடைமையும் வலி பெயராமையுமாம்.

“மொழியா ததனை முட்டின்று முடித்தல்” (மரபியல். 190)

என்பதனால் தலைமகள்மாட்டுப் பெண்மையும் கொள்ளப்படும். அது பெண்டிர்க்கு இயல்பாகிய நாணம் முதலாயினவும் பெண்ணீர்மையும்.

ஆண்டென்பது, ஒருவரினொருவர் முதியரன்றி ஒத்த பருவத்தராதல்; அது குழவிப்பருவங் கழிந்து பதினாறு பிராயத்தானும் பன்னிரண்டு பிராயத்தாளும் ஆதல். உருவு என்பது வனப்பு. நிறுத்த காமவாயில் நிலைநிறுத்தப்பட்ட புணர்ச்சிக்கு வாயில். அஃதாவது, ஒருவர் மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு. நிறை என்பது அடக்கம். அருள் என்பது பிறர் வருத்தத்திற்குப் பரியும் கருணை, உணர்வென்பது அறிவு. திரு என்பது செல்வம். இப்பத்து வகையும் ஒத்த கிழவனும் கிழத்தியும் எதிர்ப்படுவர் எனக் கொள்க.இக்குணங்களால் தலைமகன் மிக்கானாயினுங் கடியப்படாது. எனவே இவற்றுள் யாதானும் ஒன்றினாயினும் தலைமகள் மிக்காளாயின் ஐந்திணையிற் கடியப்படும் என விளக்குவார் இளம்பூரணர்.

## 7.3 ஐயம்:

சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப
இழிந்துழி இழிவே சுட்ட லான.

தலைவன் தலைவியைக் கண்டவழி அவ் இருவகையும் உயர்வுடையராயின் அவ்விடத்து, ஐயம் சிறந்தது ஆகும். அவர் இழிபுடையராயின், அவ்விடத்து அவன் இழிபினையே சுட்டியுணர்தலான் என்றவாறாம். சிறப்பு என்பது மிகுதி, ஐயமிகுதலாவது மக்களுள்ளாள் அல்லள் தெய்வமோ என மேலாயினாரோடே ஐயுறுதல், சிறந்துழி என்பதற்குத் தலைமகள் தான் சிறந்துழியும் கொள்ளப்படும்,அவளைக் கண்ட இடம் ஐயப்படுதற்குச் சிறந்துழியும் கொள்ளப்படும். உருவ மிகுதியுடையளாதலின் ஆயத்தாரிடைக் காணினும் தெய்வம் என்று ஐயுறுதல. அவ் ஐயமும் தலைமகன் மாட்டே நிகழும் என்பதனை,

“உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே.” பொருளியல். 42

என்பதனால் உணர்த்தினார் தொல்காப்பியர், தலைமகள் ஐயப்படாதது என்னையெனின். அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ என்று ஐயுறல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும். அஃது ஏதுவாகக் காம நிகழ்ச்சி யுண்டாகாது என்பது இளம்பூரணம்.

“அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு” - தலைவன் ஐயுற்று உரைத்தது.

## 7.4 தெளிதல்:

தலைமகளைப் பார்த்து அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ என ஐயுற்ற தலைவன் சில குறிகளால் இவள் மானிடப்பெண் என்று தெளிவு கொள்கிறான்.இதுவே தெளிவு எனப்படும்.இத்தகைய தெளிவினைப் பெறுவதற்கு ஏதுவாகிய கருவிகள் என்று தொல்காப்பியர் சிலவற்றைச் சுட்டுவார். அதனை உணர்த்தும் நூற்பா பின்வருமாறு.

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ

நின்றவை களையுங் கருவி என்ப.

தெய்வ மகளோ என்று ஐயுற்றவன் துணிதற்குக் வண்டே இழையே வள்ளி பூவே கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்னும் எட்டும் கருவியாகும் என்பதனை உணர்த்திற்று,

வண்டாவது மயிரின் அணிந்த பூவைச் சூழும் வண்டு. அது பயின்றதன் மேலல்லது செல்லாமையின் அதுவும் மக்களுள்ளாள் என்றறிதற்குக் கருவியாயிற்று. இழையென்பது அணிகலன். அது செய்யப்பட்டதெனத் தோற்றுதலானும், தெய்வப்பூண் செய்யா, அணியாதலானும் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. வள்ளி என்பது முலையினும் தோளினும் எழுதிய கொடி. அதுவும் உலகின் உள்ளதாகித் தோன்றுதலின் (அதுவும்) கருவியாயிற்று. அலமரல் என்பது தடுமாறுதல். தெய்வமாயின் நின்றவழி நிற்கும். அவ்வாறன்றி, நின்றுழி நிற்கின்றிலள் என்று சுழற்சியும் அறிதற்குக் கருவியா யிற்று. இமைப் பென்பது கண்ணிமைத்தல். தெய்வத்திற்குக் கண் இமையாமையின் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. அச்சமென்பது ஆண்மக்களைக் கண்டு அஞ்சுதல். அது தெய்வத்திற்கு இன்மையான் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. அன்னவை பிறவும் என்றதனான் கால் நிலந்தோய்தல் வியர்த்தல் நிழலாடுதல் கொள்க. இவை கருவியாகத் துணியப்படும்.

காட்சி, ஐயம், தெளிவு, தேறல் முதலாகிய இத்துணையும் கைக்கிளைக் குறிப்பாம். இனிக் குறிப்பறிதல் கூறுகின்றாராகலின், அக்குறிப்பு நிகழும் வழி இவையெல்லாம் அகமாம் என்பார் இளம்பூரணர்.

“உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று”.

## 7.5 தேறல்:

இவ்வாறு துணிந்த தலைவன் புணர்ச்சி வேட்கை தூண்ட தலைவியைக் கூடுதற்கு ஆயத்தம் செய்வான். இதனைத் தேறல் எனக் குறிப்பர் இலக்கண நூலார். தலைமகளை இத்தன்மையள் எனத் துணிந்த தலைமகன் தலைமகள் குறிப்பறியாது சார்வான் ஆயின் அது பெருந்திணைப் பாற்படும். எனவே கந்திருவநெறிக்கு ஒத்த உள்ளத்தினராய் இருத்தல் வேண்டும் ஆதலால்,தலைவனும் தலைவியும் ஒருவரோடொருவர் சொல்லாடுதல் மரபின்மையாலும். அவருள்ளக் கருத்தறிதல் வேண்டுதலின், பொருட்டு நாட்டம் கருவியாய் அமையும்.

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்குங் குறிப்புரை யாகும்.

தலைமகன், தலைமகள் என்ற இருவர்க்கும் கவர்த்து நின்ற இருவரது அறிவினையும் ஒருமைப்படுத்தற்கு பொருட்டு தமது வேட்கையினைக் கூட்டி ஒருவர் ஒருவருக்கு உரைக்குங் காமக் குறிப்புச் சொல் இருவரது நாட்டமாகும் என்பதாகும்.

“கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல’’ (திருக்குறள் - 1100 )

குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்.

ஒருவர் குறிப்பு ஒருவர் குறித்ததனைக் கொள்ளுமாயின், அவ்விடத்துக் கண்ணினால் வருங் குறிப்புரை நிகழும். எனவே, குறிப்பைக் கொள்ளாதவழி அக் குறிப்புரை நிகழாது. இதனாற் சொல்லியது கண்ட காலத்தே வேட்கை முந்துற்றவழியே இக்கண்ணினான் வருங் குறிப்பு நிகழும். அல்லாதவழி நிகழாது. அவ்வாறு தலைவன் தலைவியரிடத்துத் குறிப்புப் பற்றியும் அதன் வேறுபாடும் மெய்ப்பாட்டியலுள் புதுமுகம் புரிதல் முதலான நூற்பாக்களுள் விரித்துக் கூறுவார் தொல்காப்பியர்.

குறிப்பு

“அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.” (குறள். 1098) இது தலைவன் கூற்று.

## 7.7 தலைமகன் இயல்பு:

தலைமகளது வேட்கைக் குறிப்புக் கண்ட தலைமகன், அந்நிலையே புணர்ச்சியை நினையாது வரைந்து எய்துவான். அதற்கான காரணம். தலைமகன் பெருமையும் உரனும் உடையோனாய் இருத்தலே ஆகும்.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன.

பெருமை யாவது என்பது பழியும் பாவமும் அஞ்சுதல். உரன் என்பது - அறிவு. இவை யிரண்டும் ஆண்மகனுக்கு இயல்பு

## 7.8 தலைமகள் இயல்பு:

தலைவன் பெருமையும் உரனும் உடையான் போன்று தலைமகளும் உயர்ந்த பண்புகளைப் பெற்று அமைவாள். அவை முறையே,

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப.

என்பதாம்.

## 7.9 சிறப்புடை மரபினவை களவு:

உள்ளப் புணர்ச்சியே மெய்யுறு புணாச்சிக்கு நிமித்தமாகும். எனினும் பெருமையும் உரனும் உடைய தலைமகனும் அச்சமும் நாணும் மடனும் பயிர்ப்பும்
உடைய தலைமகளும் தாம் கண்ட முதற்காட்சியிலே மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்படல் சிறப்புடைய செயலன்று, உள்ளப்புணர்ச்சி மேற்கொண்டு வரைந்து கொள்ளப்பட்டபின் புணர்தலே சிறப்புடைத்தாம். எனவே தொல்காப்பியர் மெய்யுறு புணர்ச்சிக்கு முந்தைய சில நிலைகளைத் தெளிவுறுத்துகிறார். அவைமுறையே

வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கஞ் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப. என்பதாம்.

குறிப்பு

வேட்கை முதலாகச் சாக்காடு ஈறாக சொல்லப்பட்ட காமச் சிறப்புடையனவற்றாற் களவு ஆகுமென்று சொல்லுவர் என்பது இதன் கருத்தாம்.

**7.9.1 வேட்கை** – ஒருவரை ஒருவர் பெறல்வேண்டும் என்னும் உள்ள நிகழ்ச்சி.

**7.9.2 ஒருதலையுள்ளுதல்** - இடைவிடாது நினைத்தல்.

"உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆரம் நாறும் அறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே."(குறுந். 286)

**7.9.3 மெலிதல்** - இடைவிடாது நினைத்துக் கொண்டிருத்தலால் உண்ணாமையால் வருவது.

**7.9.4 ஆக்கஞ்செப்பல்** - உறங்காமையும் உறுவ ஓதலும் முதலாயின கூறுதல்.

"ஒண்தொடி அரிவை கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக்கடல் ஒலித்திரை போல
இரவி னானுந் துயிலறி யேனே". (ஐங்குறு. 172)

**7.9.5 நாணுவரையிறதல்** - நாண் நீங்குதல்.

"காமம் விடுவொன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு". (குறள். 1247)

**7.9.6 நோக்குவ எல்லாம் அவையே போறல்** - தன்னாற் காணப்பட்டன எல்லாந் தான் கண்ட உறுப்புப் போல் தோன்றல்

ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லுங்
காந்தட் கிவரும் கருவிளம் பூக்கொள்ளும்
மாந்தளிர் கையில் தடவரு மாமயில்
பூம்பொழி னோக்கிப் புகுவன பின்செல்லுந்
தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடு
நீள்கதுப் பிஃதென நீர் அறல் உட்புகும்".

**7.9.7 மறத்தல்** - பித்தாதல்.

**7.9.8 மயக்கம் -** மோகித்தல்.

**7.9.9 சாக்காடு** - சாதல், இவற்றுள் சாதல் பத்தாம்.

இவற்றை அவத்தைகள் என்பார் இளம்பூரணர். ஈண்டு அமைந்த ஒன்பதினுடன் சேர்த்தால் பத்து அவத்தைகள் வரும்.இதுதலைமகனுக்கும் தலைமகளுக்கும் பொருந்தும்.

## 7.10 இயற்கைப் புணர்ச்சித் திறன்:

தனியாகத் தலைவியை எதிர்ப்பட்ட தலைவன் தனது பெருமையும் அறிவும் நீக்கி வேட்கை மீதூரப் புணர்ச்சி வேண்டுவான்.ஆயினும் தலைவி

மாட்டு நிற்கும் அச்சமும் நாணும் மடனும் தடையாகும். எனவே அவற்றை நீக்குதலும் வேண்டும். அவற்றை நீங்குதற்பொருட்டு தலைமகன் தலைமகள்மாட்டு சிலவற்றை உரைப்பான். தொல்காப்பியர் அவற்றைப் பின்வருமாறு விளக்குவார்.

முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைநனி உறாஅ
அந்நிலை யறிதல் மெலிவுவிளக் குறுத்தல்
தன்னிலை யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்று
இன்னவை நிகழும் என்மனார் புலவர்.

**7.10.1 முன்னிலையாக்கல்**

முன்னிலையாக்கல் என்பது காமக் குறிப்பு உண்மை அறிந்த தலைவன் வேட்கை மீதூரத் தலைவியைச் சேர நினைத்த காலத்து தலைவியும் வேட்கைக் குறிப்புடையவள் ஆயினும் மரபின் வழி வந்த இயற்கையால் நாணமும் அச்சமும் மீதுர அக் குறிப்பில்லாதாரைப் போல் நிற்பாள். அப்பொழுது அவளை முன்னிலையாகப் படுத்திச் தலைவன் சில கூறுதல்.

"--------------------------------------------------

சொல்இனி மடந்தை என்றனென் அதன்எதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லிதழ் உண்கணும் பரந்தவால் பனியே." (நற்றிணை-155)

**7.10.2 சொல்வழிப்படுத்தல்** - தலைவன் தான் சொல்லுகின்ற சொல்லின்வழி அவள் நிற்குமாறு படுத்துக் கூறுதல்.

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
-----------------------------------------------------------
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே". ( நற்றிணை-39)

**7.10.3 நன்னய முரைத்தல்** - தலைமகளினது தோற்றப் பொலிலினை உரைத்தல்.

"சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ்வாய்
சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ்வாய்
ஊர்திரை வேலி யுழக்கித் திரிவாள்பின்
சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ்வாய்". (சிலப்.கானல் 23)

**7.10.4 நகைநனி யுறாஅ அந்நிலை யறிதல்** - தலைமகன் தன் நன்னய முரைத்தலைக் கேட்ட தலைவிக்கு இயல்பாக அகத்து உளவாகும் மகிழ்வால் புறந்தோன்றும் முறுவற் குறிப்பு தோன்ற அந்நிலையினைத் தலைவன் அறிதல்.

"வறிதால் முறுவற் கெழுமிய
நுடங்குமென் பணைவேய் சிறுகுடி யோளே."

**7.10.5 மெலிவு விளக்குறுத்தல்** -தலைவன் தன் அகத்துறும் நோயாற் புறத்து நிகழும் தளர்வினைக் குறிப்பால் எடுத்துக்கூறல்.

**7.10.6 தன்னிலை யுரைத்தல்** -புறநிகழ்ச்சியின் பொலிவிழவைக் கண்ட தலைவன் தலைமகள் மாட்டுத் தன் உள்ள வேட்கை மீதூர்வினை நிலைப்படக் கூறுதல்.

சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்" என்னும் நற்றிணைப் பாட்டுள்,

"காமங் கைம்மிகில் தாங்குதல் எளிதோ
.... .... கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ அல்ல". (நற்றிணை. 39)

**7.10.7 தெளிவு அகப்படுத்தல்** - தலைவன் முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர் இயற்கைப் புணர்ச்சியினை விழைந்து நின்றானாக, அப்புணர்ச்சியினைக் கூறுவார் முன்னம் ஒத்த பண்புடைமை உள்ளத்து இருவர்மாட்டும் வேண்டுதலின் தலைமகள் பண்பினைத் தலைவன் அறிந்து அத்தெளிவைத் தன்னகப் படுத்துத் தேர்தல் ஆகும்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ" என்னும் குறுந்தொகைப் பாட்டுள்,

"அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே". (குறுந்.40)

மேலே குறிக்கக்கப்பெற்ற ஏழும் இயற்கைப் புணாச்சிக்கு உரிய திறன்கள் ஆகும். இளம்பூரணர் உரையை மறுத்துரைக்கும் நச்சினார்க்கினியர் முன்னிலையாக்கல் முதலாயின பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்று குறிப்பிடுவார்.

## 7.11 களவில் தலைவன் கூற்று நிகழிடங்கள்:

களவில் தலைவன் கூற்று நிகழுமிடங்களைப் பின்வரும் நூற்பா விளக்கியுரைக்கும்.

மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந் திரங்கல் கூடுத லுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்
குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேருங் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டா திரப்பினும் மற்றைய வழியும்

சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பி னவ்வழி மருங்கில்
கேடும் பீடுங் கூறலும் தோழி
நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமா ருண்டே.

**7.11.1 மெய்தொட்டுப் பயிறல்** - பெருமையும் உரனுமுடைய தலைமகன் தெளிவகப்படுத்தியது காரணமாகக் காதல் வெள்ளம் புரண்டோடத் தலைவியின் மெய்யைத் தீண்டிப் பயிறல்.

"தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே" ( குறுந் . 272)

**7.11.2 பொய் பாராட்டல்**. - தலைவியின் கூந்தல் முதலியன கலையாது இருந்தது எனினும் அது கலைந்ததாக கூறித் மருங்குசென்று தொட்டான் ஒரு காரணம் பொய்யாகப் படைத்து உரைத்துப் பாராட்டல்.

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக்கிடுகும் இடையிவல் கண்டாய்" (சிலப் கானல் . 17 )

**7.11.3 இடம்பெற்றுத் தழாஅல்** - பொய்பாராட்டல் காரணமாத் தலைவிமாட்டு அணிமையிடம் பெற்றுத் தழுவக்கூறல்

"கொல்யானை வெண்மருப்பும் கொல்வல் புலியதளும்
நல்லானை நின்னையர் கூட்டுண்டு - செல்வார்தாம்
ஓர் அம்பினானெய்து போக்குவர்யான் போகாமை
ஈர் அம்பி னானெய்தாய் இன்று" ( திணைமாலை . 22 )

**7.11.4 இடையூறு கிளத்தல்** - நாண் மடன் நிலைக்களனாகக் கொண்ட தலைவி தன் அறிவு நலன் இழந்து ஒன்றும் அறியாது உயிர்ப்பாள். அதாவது புதிதாய்ப் புக்கார், ஊற்றுணர்வு என்றும் பயிலாத தம் மெல்லிய உடம்பில்பட அறிவிழப்பினும் உள்நெக்கு உயிர்ப்பாள். அது பற்றிப் புலையன் தொடு தீம்பால் போல் காதல்கூரக் கொம்பானும் கொடியானும் சார்ந்து நின்று தலைவனைப் பாராது தவிர்ப்பாள். தலைவன் இப்பொழுது இவ்வூற்றின்பிற்கு இடையூறாய் நின்மனத் தகத்து நிகழ்ந்தவை யாவை? என வினவுவான். இது இடையூறு கிளத்தல் எனப்படும்.

**7.11.5 நீடுநினைந்திரங்கல் -** இருவர் இயலும் ஒருங்கு இணைந்தும் தலைவிபெருநாணால், விதிவழி நடக்கும் என எண்ணி எவ்வித மறுமாற்றமும் குறியும் காட்டாது கண்புதைப்பாள். அது கண்ட தலைவன் அவள் புறத்தே நின்று பார்த்தும் அவளைக் கூட முடியாமை நினைந்து இரங்குவான். இது நீடு நினைந்து இரங்கல் எனப்படும்.

**7.11.6 கூடுதலுறுதல்** - இங்஠னமாய்க் காட்சி நிகழ்வின் பின்னர்ப் புணர்ச்சி எய்தல்.

குறிப்பு

இதுவரை இயற்கைப்புணர்ச்சியாங் காரணங்கூறிக், கூடுதலுறுதலால் மெய்யுறு புணர்ச்சி கூறினார்.

"விழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு". (குறள். 1108) - கூடுதலுறுதல்.

**7.11.7 சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்:** -இயற்கைப் புணர்ச்சிக்குக் களனாக மேற்கூறப்பட்டவற்றுடன் அவ் இன்பத்தில் திளைத்தல்

"வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்." (குறள்.1005) - இடந்தலைப்பாட்டின் கண் தலைமகன் கூற்று

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள". (குறள்-1101) - ,இயற்கைப் புணர்ச்சிக்கண் நுகர்ச்சி பெற்ற தலைமகன் கூற்று

இத்தெய்வப் புணர்ச்சிக்குப் பொருள் கூறுங்கால், பயிறல், பாராட்டல், தழாஅல், கிளத்தல், இரங்கல், உறுதல், நுகர்ச்சி, தேற்றம் என்று சொல்லப்பட்ட இருநான்கு கிளவியும் எனக் கொள்ளல் வேண்டும்.

**7.11.8 தீராத் தேற்றம்** -இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தாலும் அதனகண் முடியாத தெளிவு உண்டு. அதனைத் தீரத்தேற்றம் எள்று குறிப்பர், தலைவன் தலைவியை தெளிவித்து நம்பிக்கை ஊட்டினும் அவள் ஆற்றாமை உடையவளாகவே இருப்பாள் என்பதனைக் குறிப்பது.

"-------------------------------------------
நேர்இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே." (குறுந்.53) - இயற்கைப்புணர்ச்சிப் பின் சொல்லிய தீராத் தேற்றம்.

இன்னிசை யுருமொடு" என்னும் அகப்பாட்டுள்,

"நின்மார் படைதலின் இனிதா கின்றே
நும்மில் புலம்பினும் உள்ளுதோறும் நலியும்". (அகம் 58) - இடந்தலைப்பாட்டில் நேர்ந்த தீராத்தேற்றம்.

மேற்கூறிய எட்டனுள் மெய்தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல், இடம்பெற்றுத் தழாஅல், இடையூறு கிளத்தல், நீடுநினைந்திரங்கல், கூடுதலுறுதல் என்னும் ஆறும் இயற்கைப்புணர்ச்சிக்கு உரியன. சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல், தீராத் தேற்றம் என்பன இயற்கைப்புணர்ச்சிக்கு மட்டுமன்றி இடந்தலைப்பாட்டிற்கும் உரியன. இவை எட்டினையும் ஆசிரியர் "பேராச் சிறப்பின் இரு நான்கு கிளவியும" எனக் குறிப்பார்.

இதுவரை இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும், மேல் வாயில் பெட்பினும் என்னும் அளவும் பாங்கற் கூட்டம். மேல் தொடர்பவை பாங்கியற் கூட்டம் ஆகும்.

## 7.12 பாங்கற் கூட்டம் - தலைவன் கூற்று:

தலைவன் தன் பாங்கனால் தலைவியைக் கூடும் கூட்டம் பாங்கற் கூட்டம் எனப்படும். இந்நிலையில் நான்கு கூற்றுகள் தலைவனுக்கு நிகழும். அவை

முறையே, பெற்றவழி மகிழ்ச்சி, பிரிந்தவழிக் கலங்கல், நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்தல், குற்றங்காட்டிய வாயில் பெட்டல் என்பனவாகும்.

**7.12.1 பெற்றவழி மகிழ்ச்சி** - இடந்தலைப் பாட்டினை ஒட்டி நிகழும் இன்பினைப் பெற்றவழி அகத்துத் தோற்றும் பெருமகிழ்வு

“நீங்கின் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.” (குறள்.1104)

**7.12.2 பிரிந்தவழிக் கலங்கல்-** இவ்வாறு கூடின தலைமகள் பிரிந்தவழித் தலைவன் கலக்க முறுதல்

“என்றும் இனிய ளாயினும் பிரிதல்
என்றும் இன்னாள் அளறே

இத்துணையும் இடந்தலைப்பாடு, பெற்றவழி மகிழ்தலும் பிரிந்த வழிக் கலங்கலும் பாங்கற் கூட்டத்தினும் தோழியிற் கூட்டத்தினும் நிகழும்.

**7.12.3 நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்தல்** - காம நுகர்ச்சி ஒன்றனையும் நினையாது இவளாலே நமக்கு இல்லறம் இனிது நடக்குமென்று உட்கோடல்.

“தேரோன் தெறுகதிர் மழுங்கினுந் திங்கள்
-----------------------------------------------------------------
குலத்தில் திரியாக் கொள்கையுங் கொள்கையொடு
நலத்தில் திரியா நாட்டமும் உடையோய் - நிற்பவை நினைஇக் கூறியது.

இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் கரக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நொண்டு கொளற்கரிதே.” (குறுந் 58) - நிகழ்பவை உரைத்தது.

**7.12.4 குற்றங்காட்டிய வாயில் பெட்டல்** - தலைவன் மாட்டுச் சோர்வானும் காதல் மிகுதியானும் நேர்வுற்ற பழிபாவங்களை பாங்கன் எடுத்துக்காட்டல். அத்தகைய பாங்கன் இவ்வியல் பண்டைப் ஊழ் வழியது என எண்ணி இவ்வாறு தலைமகன் மறுத்தவழி அதற்கு உடன்படல். அப்போது நின்னால் காணப்பட்டாள் எவ்விடத்தாள்? எத்தன்மையாள்? எனப் பாங்கன் வினாவுதல். அதற்குத் தலைமகன் இடமும் உருவுங் கூறுதல். அவ்வழிப் பாங்கன் சென்று காண்டலும், மீண்டு தலைமகற்கு அவள் நிலைமை கூறலுமெல்லாம் உளவாம். அவ்வழிப் பாங்கன் வினாதலும் தலைமகன் உரைத்தனவும் உளவாகும்.

“எலுவ சிறாஅர் ஏமுறு நண்ப
புலவர் தோழ கேளாய் ------ சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே.” (குறுந்-129) - அவ்வழித் தலைமகன் உரைத்தல்

குறிப்பு

"கழைபாடு இரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று ----
கொடிச்சி கையகத்து வேபிறர்
விடுத்தற் காகாது பிணித்தஎன் நெஞ்சே" . "( நற்றிணை - 95) - பாங்கற்குத் தலைமகன் உரைத்தவை.

"முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
------------------------------------------------------------
யாங்கா குவள்கொல் தானே
பெருமுது செல்வன் ஒருமட மகளே". ( குறுந் - 337) - ----- பாங்கன் நின்னை வருத்தியவள் எவ்விடத்தவள் எத்தகையவள் என்று வினாவிய போது தலைவன் உரைத்தது.

"இரவி னானும் இன்துயில் அறியாது
அரவுறு துயரம் எய்துப தொண்டித்
தண்ணறு நெய்த னாறும்
பின்னிருங் கூந்தல் அணங்குற் றோரே" ( ஐங் . 173) பாங்கன் அவ்வழிச் சென்று காண்டல்.

## 7.13 பாங்கியற் கூட்டத்தின்கண் தலைவன் கூற்று:

இனி வருவன பாங்கியற் கூட்டத்தின்கண் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் ஆகும். பாங்கனால் தலைமகளைப் பெற்ற பின்னும் வரைந்து கொள்ளாது மேலும் களவிற் புணர்ச்சி வேண்டித் தோழியை இரந்து பின்நின்று கூட்டக் கூடுவன் என்னும் உள்ளத்தவனாய் இரந்து நிற்பன். இவ்வாறு கூடுதல் பாங்கியற் கூட்டம் எனப்பெறும். இத்தகைய நிகழ்வின்கண் தலைவனுக்கு நிகழும் கூற்றுகள் பின்வருமாறு அமையும். அவை முறையே பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுத்தல்,ஊர் வினாதல்,பேர் வினாதல்,கெடுதி வினாதல், பிற வினாதல்,தோழி குறையைத் தலைமகளைச் சார்த்திமெய்யுறக் கூறுதல்,மற்றைய வினாதல், சொல்லவட் சார்த்தி புல்லிய வகை, அறிந்தோள் அயர்ப்பு, கேடு கூறுதல், அறிந்தோள் அயர்ப்பின் பீடு கூறுதல்,தோழி நீக்கலின் ஆகிய நிலைமை, மடன்மாக் கூறல் என்பனவாகும்.

**7.13.1 பெட்ட வாயில்பெற்று இரவு வலியுறுத்தல்**: பாங்கனால் தலைமகளைப் பெற்றுப் பின்னும் வரைந்தெய்தல் ஆற்றாது களவிற் புணர்ச்சி வேண்டித் தோழியை இரந்து பின்நின்று கூட்டக் கூடுவன் என்னும் உள்ளத்தனாய் அவ்விரத்தலை வலியுறுத்தல்

வலியுறுத்தலாவது, தான் வழிமொழிந்தது யாது தான் அவ்வாறு செய்குவன் எனல்.

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வார்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்

இடர்புக் கிடுகுமிடை யிழவல் கண்டாய்". ( சிலப் . கானல் . 17 )

இன்னும் பெட்ட வாயில் விருப்பமுள்ள தோழி என்றும் ஒரு பொருள் உண்டு. தலைவியின் விருப்பமுள்ள தோழி யார் எனக் கண்டறிந்து தலைவன் அவளிடம் வேண்டுதற்கு விழைதலுமாம்.

''தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலும'' (குறுந்.222)

**7.13.2 ஊர் வினாதல்:** தோழி தனித்தோ தலைவியுடன் இருக்கும் போதோ ''நும் ஊர் யாது? என வினாதல்

அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
------------------------------------------------------
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீர்'' (( நற்றிணை - 213 )

**7.13.3 பேர் வினாதல்**: தோழி தனித்தோ தலைவியுடன் இருக்கும் போதோ நும் பேர் யாது? என வினாதல்

**7.13.4 கெடுதி வினாதல்:** தோழி தனித்தோ தலைவியுடன் இருக்கும் போதோ தன்னால் வேட்டையாடப்பெற்ற யானையோ, பன்றியோ இவ்விடத்து வந்ததோ என வினாவல்

''நறைபரந்த சாந்தம் அறிஎறிந்து நாளால்
உறையெதிர்ந்து வித்திஊழ் ஏனல் - பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாள்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
ஏமரை போந்தன ஈண்டு." ( திணைமாலை . 1 ) கெடுதி வினாதல்

**7.13.5 பிற வினாதல்:** தோழி தனித்தோ தலைவியுடன் இருக்கும் போதோ யான் இவ்விடத்துத் தங்கினும் எம்மொடு புணரினும் கேடு உண்டோ? என வினாதல்

''இல்லுடைக் கிழமை யெம்மொடு புணரில்
தீதும் உண்டோ மாத ரீரே

தலைவன் இங்ஙனம் எல்லாம் வினாவித் தோழிக்குத் தன் குறையை அறிவிக்கும் கூற்றுகளும் நிகழும்.

தோழியைக் குறையுறல்:

தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்தல் ஒல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் தொண்டி அன்ன
எற்கண்டு மயங்கிநீ நல்காக் காலே'' ( ஐங்குறு - 178 )

**7.13.6 தோழி குறையைத் தலைமகளைச் சார்த்தி மெய்யுறக் கூறுதல்**: தலைவியை அடைதல் அருமை எனக் கூறி ஆற்ற நினைத்த தோழியிடம் கூறுதல்

**7.13.7 தண்டாது இரத்தல்**: தலைமகன் பலகாலும் சென்று இரத்தல்

**7.13.8 மற்றைய வழி:** தலைமகன் பலகாலும் சென்று இரத்தலைத் தவிர பிற வழிகளில் கூறல்.அதாவது பின்னும் வருவேன் எனல்

**7.13.9 சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகை**: தோழி முன்னுறு புணர்ச்சி முறையை நீங்கவிடாது உடன்பாட்டுக் கூறிய காலத்துத் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**7.13.10 அறிந்தோள் அயர்ப்பு:** தோழி தான் அறியாள் போல் கூறும் இடத்தும் தலைவி அறிவாள் ஒருத்தி அல்லள் என்று கூறும் போதும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**7.13.11 கேடு கூறல்**: உலகத்தார் மகட் கொள்ளுமாறு கொள்! எனத் தோழி கூறுமிடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**7.13.12 பீடு கூறுதல்**: தலைவனது பெருமையினைக் கூறி அவனை நீக்க எண்ணிய தோழியிடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**7.13.13 தோழி நீக்கலின் ஆகிய நிலைமை கூறல்**: தமையன்மார் வருகுவர், தாய் வருகுவர், காவலர் வருகுவர் எனக் கூறி தன் அச்சத்தினைத் தோழி தலைவனுக்கு அறிவிக்கும் இடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**7.13.14 மடன்மாக் கூறல்:** யான் மடலேறுவன் எனத் தலைவன் கூறல்

"மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே." (குறுந்-17)

அவ்வழித் தலைமகன் கூறிய சொற்கேட்டு, இது அறிவும் அருளும் நாணமும் உடையார் செய்யார் எனத் தோழி கூறியவழித் தலைமகனுக்குக் கூற்று நிகழும்.

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல". (குறள்-1133)

இரந்து பின்னிற்றலும் மடலேறுவல் என்றலும் கைக்கிளை பெருந்திணைப் பாற்படுமோ எனின், அவ்வாறு வருவன அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாமாறு வருகின்ற சூத்திரத்தின் விளங்கும். மடன்மாக் கூறல் என்பதனை அன்பின் ஐந்திணைக்கும் மடன்மா ஏறுதல் என்பதனை பெருந்திணைக்கும் கொள்ளல் பொருத்தப்பாடு உடையதாய் அமையும்.

## 7.14 சிறப்பு விதி:

பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே.

என்- எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

மேல் தலைமகன் மடல்மா கூறும் இடனுமாருண்டே என்றார். இ∴து அவன் மடல்மா கூறுதல் இடையூறு படுதலும் உண்டு எனக் கூறுகிறார். பண்பிற் பெயர்த்தல், பரிவுற்று மெலிதல்,அன்புற்று நகுதல், அவட்பெற்று மலியினும்ஆற்றிடை உறுதல் என்ற இவ் ஐந்திடத்தும் மடல்மா கூறுதல் இடையூறுபடுதலும் தோழியிற் கூட்டத்திற்கு இயல்பு என்பது இதன் பொருளாகும். அங்கும் தலைவனுக்குக் கூற்று நிகழும் களங்களே சுட்டப்படுகின்றன.

**7.14.1 பண்பிற் பெயர்த்தல்-** தோழி தலைவன் மடன்மாக் கூறின் தலைமகள் இளமைப்பண்பு கூறி விலக்குவாள். அப்பொழுது தலைமகன் கூற்று நிகழும்.

"குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி
வளையள் முளைவாள் எயிற்றள்
இளைய ளாயினும் ஆரணங் கினளே." (ஐங்குறு-256)

**7.14.2 பரிவுற்று மெலிதல்-** இரக்கமுற்றுத் தோழி மெலிந்த காலத்தும் தலைமகன் கூற்று நிகழும்

"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்குந் துயர்." (குறள். 1135)

**7.14.3 அன்புற்று நகுதல்-** அன்பு தோன்றும் உள்ளத்துடன் தோழி முறுவலித்த காலத்தும் தலைமகன் கூற்று நிகழும்

"நயனின் மையிற் பயனிது என்னாது
பூம்பொறிப் பொலிந்த அழலுமிழ் அகன்பைப்
--------------------------------------------------------
உறாஅ நோக்க முற்றவென்
பைதல் நெஞ்சம் உய்யு மாறே" . ( நற்றிணை. 75 )

**7.14.4 அவட்பெற்று மலிதல்** - தோழி உடம்பாட்டினைப் பெற்று மகிழ்தல், தலைமகளை பகற்குறி, இரவுக் குறி என்னும் இருவகை குறியினும் பெற்று மகிழினும் தலைமகன் கூற்று நிகழும்

"எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோள்
நன்னுதல் அரிவையொடு மென்மெல இயலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே." (ஐங்குறு . 175) - அவட்பெற்று மலியுந் தலைவன் கூற்று.

உள்ளப் புணர்ச்சியால் இன்றி இயற்கை இடையீடு பட்டவழியும், பின் தலைமகள் குறியிடங் கூறியவழியும் தலைவன் அதனைப் பாங்கற்கு உரைப்பான்.

"அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன
அங்கலிழ் மேனி அசையியல் எமக்கே". ( ஐங்குறு . 174 )
காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்

மாணிழை கண்ஒல்வேம் என்று"(குறள்.1114) - தலைவியைப் பகற்குறிக்கண் பெற்று மலிதல்.

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்"( குறள் . 1116) - இரவுக்குறிக்கண் தலைவன் அவட்பெற்று மலிந்தது.

**7.14.5 ஆற்றிடை உறுதல்** -தலைவன் தான்சேறும் வழியிடை இடையூறு உண்டாகிய இடத்தும் கூற்று நிகழும். வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் தான் சேறும் வழியின்கண் வருத்தமுற்றுக் கூறலும் கொள்ளப்படும்.

"குருதி வேட்கை உருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மாரி எண்கின் மலைச்சுர நீளிடை
நீ நயந்து வருதல் எவனெனப் பலபுலந்து
அழுதனை உறையும் அம்மா'' ( நற்றிணை.192) தலைவி ஆற்றினது அருமை கூறத் தலைவன் செப்பியது

"ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்

---------------------------------------------------------

புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே"( குறுந் . 235 ) தலைவன் வரைவிடை வைத்துச் சேறுவான் கூறியது.

## 7.15 பாங்கர் நிமித்தம்

பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப

பாங்கராயினார் துணையாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு வகையாகும்.

நிமித்தம் என்பது நிமித்தமாகக் கூடும் கூட்டம், அவையாவன:- பிரமம் முதலிய நான்கும், கந்திருவப் பகுதியாகிய களவும், உடன்போக்கும் அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும் காமக்கிழத்தியும், காதற்பரத்தையும், அசுரம் முதலாகிய மூன்றுமென இவை ஆகும்.

**7.15.1 கைக்கிளைக் குறிப்பு:**

முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே.

எண்வகை மணத்தினுள்ளும் முன்னையவாகிய அசுரம், இராக்கதம், பைசாசம் எனும் மூன்றும் கைக்கிளைப்பாற்படும்.

**7.15.2 பெருந்திணை பெறல்:**

பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே

எண்வகை மணத்தினுள்ளும் பிரமம், பிராபத்தியம், ஆரிடம், தெய்வம் எனும் நான்கும் பெருந்திணைப் பாற்படும்.

**7.15.3 ஐந்நிலம் பெறல்:**

முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே.

முதல் என்பது நிலமும் காலமும். நிலத்தொடும் காலத்தொடும் பொருந்திய கந்திருவர் பாற்பட்டன கெடுதலில்லாத சிறப்பினையுடையன ஐந்து வகைப்படும். அவையாவன களவும் உடன்போக்கும், இற்கிழத்தி, காமக்கிழத்தி, காதற்பரத்தையும் எனச் சொல்லப்பட்ட ஐவகைக் கூட்டம் ஆகும்.



## 7.16 தோழியிற் கூடிய தலைமகன் வரைந்தெய்தும் பொழுது அமையும் கூற்றுகள்:

இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்துங்
காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும்
தானகம் புகாஅன் பெயர்தல் இன்மையிற்
காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருப்பின் கண்ணுந்
தாளாண் எதிரும் பிரிவி னானும்
நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்
வரைவுடம் படுதலும் ஆங்கதன் புறத்தும்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோன் மேன என்மனார் புலவர்.

**7.16.1 இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும்** - பகற்குறியும் இரவிற்குறியும் பிழைப்பாகிய இடத்தும் தலைவன் கூற்று நிகழும். அத்தகைய குறி என்பது,

குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்ற தென்ப". (களவியல் - 40 ) என்னும் களவியல் நூற்பாவினுள் உரைக்கப்படும்.

அக்குறிக்கண் தலைவி வரவு பிழைத்த விடத்துத் தலைவன் கூற்று நிகழும்.

"மழைவர வறியா மஞ்ஞை யாலும்
அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி
தானெம் மருளாள் ஆயினும்
யாந்தன் உள்ளுபு மறந்தறி யேமே".(ஐங்குறு . 298) - குறிபிழைத்தவழித் தோழிக்குச் சொல்லியது

"இல்லோன் இன்பங் காமுற் றாஅங்கு
அறிதுவேட் டனையால் நெஞ்சே காதலி
நல்லா ளாகுதல் அறிந்தாங்கு

அரியா ளாகுதல் அறியா தோயே'' (குறுந் 120) - குறிபிழைத்தவழி உள்ளத்திற்குச் சொல்லியது,

**7.16.2 காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும்** - தலைமகளைக் காணாவகையிற் பொழுது மிகவும் கடப்பினுங் கூற்று நிகழும்.

''உள்ளிக் காண்பென் போல்வல் முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆரம் நாறும் அறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக'' (குறுந் 286)

**7.16.3 தானகம்புகாஅன் பெயர்தல் இன்மையிற் காட்சி ஆசையிற் களம்புக்குக் கலங்கிவேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்** - காணா வகையிற்பொழுது மிகக்கழிந்த வழிக் காட்சி ஆசையினாற் குறியிடத்துச் சென்று அங்குக் காணாது கலங்கி வேட்கையான் மயக்கமுற்றுச் செயலற்று நிற்குங் காலத்திலும் கூற்று நிகழும்.

**7.16.4 புகாஅக் காலை புக்கெதிர்ப் பட்டுழிப் பகாவிருந்தின் பகுதிக் கண்ணும்** - மனையகம் தான் புகுதற்குத் தகுதியில்லாத காலத்தில் தலைவன் அவள் அகம் புக்கு எதிர்ப்பட்டபோது அங்குள்ள தாய் முதலியோரால் நீக்கப்படாத விருந்தின் பகுதியான் ஆகிய வழியும் கூற்று நிகழும்.

''இரண்டறி களவின் நம்காத லோளே
------------------------------------------------
அமரா முகத்த ளாகித்
தமரோர் அன்னள் வைகறை யானே". (குறுந் 312)

**7.16.5 வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்-** தலைவி உதவி எதிர்ப்பட்ட விருப்பின்கண்ணும் கூற்று நிகழும்.

''சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
நலம்பெறு கையினென் கண்புதைத் தோயே
நீயல துளரோஎன் நெஞ்சமர்ந் தோரே". (ஐங்குறு 293) தலைவி கண்புதைத்தவழித் தலைவன் கூறியது,

**7.16.6 தாளாண் எதிரும் பிரிவினானும்** - தாளாண்மை எதிரும் பிரிவின் கண்ணும். எனவே நீண்டவழி சேறலன்றி அண்மைக்கண் பிரிவு நிகழும் இடத்தும் கூற்று நிகழும்.

''இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி அருவியின் வெண்டேர் முடுக''

**7.16.7 நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும்** : நாணம் கொண்ட தலைவி தன் நெஞ்சினை வருத்துதலானே அது, அலராகும் என்று அஞ்சி நீக்குதல், அவ்வழித் தலைவன் கூற்று நிகழும். அவ்வழி கூறும் பொழுது

குறிப்பு

புனைந்துரை எனக் கருதிக் கூறுதலும் மெய்யென்று கருதிக் கூறுதலும் உண்டு.

“களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது”. (குறள் 1045) - புனைந்துரையென்று கருதிக் கூறியது,

“உறாஅது ஊரறி கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து”. (குறள் 1142) - மெய்யுரை என்று கருதிக் கூறியது

**7.16.8 வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய எதிரும்** - வரைந்து கோடல் வேண்டித் தோழியாற் சொல்லப்பட்ட குற்றம் தீர்ந்த சொல் பொருந்திய எதிர்ப்பாட்டுக் கண்ணுங் கூற்று நிகழும்.

“நல்லுரை இகந்து புல்லுரைத் தாஅய்
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதால் அம்ம” (குறுந் 29)

**7.16.9 வரைவுடம் படுதலும்** - தோழி கூறிய சொற்கேட்டு வரைவு உடம்படுதற்கண்ணும் கூற்று நிகழும்.

“ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
------------------------------------------------------------
பரித்தனென் அல்லனே இறையிறை யானே”. (குறுந் 52)

**ஆங்கதன் புறத்தும்** - வரைவு நிகழ்ச்சிக் கண்ணுங் கூற்று நிகழும்.

**7.16.10 புரைபடவந்த மறுத்தலொடு தொகைஇ** - குற்றம்பட வந்த அவர் மறுத்தற்கண்ணும் கூற்று நிகழும்.

“பொன் அடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையுள்
கானலம் பெருந்துறைப் பரதவன் நமக்கே”. (அகம் 260)

இவ்வாறு சொல்லப்பட்டன எல்லாம் தலைவன் இடத்தன ஆகும். கூற்று என்னாது பொதுப்படக் கூறுதலால் உள்ள நிகழ்ச்சியும் கூற்றும் கொள்ளப்படும்.

## 7.17 களவின்கண் தலைவிக்கு கூற்று நிகழும் இடங்கள்:

தலைவியிடத்து நிலைமைபெற்று வருகின்ற நாணமும் மடனும் பெண்மைக்கு அங்கமாகலின், காமவொழுக்கத்தின்கண் குறிப்பினானும் இடத்தினானுமல்லது வேட்கை புலப்பட நிகழாது என்பதனை பின்வரும் நூற்பா விளக்கி நிற்கும்.

**7.17.1** காமத் திணையிற் கண்நின்று வருஉம்

நாணும் மடனும் பெண்மைய ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயின் ஆன.

"உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்தல் இன்று" (குறள்.1090) - தலைவனைக் கண்ட தலைவி தன்னுள் கருதியது.

வேட்கையுரைக்காத கண் உலகத்தில் இன்மையால் தலைவன் ஏமுறற் பொருட்டு நாணும் மடனும் தலைவிபால் உளவாம் என்னும் பொருளினை உணர்த்தும் நூற்பா பின்வருவன ஆகும்.

**7.17.2** காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளவென மொழிப.

தலைவிக்கு இயல்பாய்க் கூறப்பட்ட அச்சமும் நாணும் மடனும் என்பனவற்றுள் வேட்கையால் அச்சம் நீங்கினவழி நாணும் மடனும் நீங்காவோ எனறு ஐயுற்றார்க்கு, அவை தலைமகற்கு ஏமமாதற்பொருட்டு நீங்காவாம் என்பதும், வேட்கைக் குறிப்புக் கண்ணினான் அறியலாமென்பதும் உணர்த்தியவாறு என விளக்கம் செய்வார் இளம்பூரணர்.

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்." (குறள். 1137)

இதனுள் "கடலன்ன காமம் உழந்தும்" என்றதனான் வேட்கை மிக்க நிலையும், "மடலேறாப் பெண்" என்றமையான் நாணும் மடனும் நீங்கா நிலையும் கூறப்பட்டன.

**7.17.3** சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான.

தலைவன் இயற்கைப்புணர்ச்சி கருதிச் சில கூறுவான்.தலைவியும் அதற்கு உடன்படும் வேட்கையினள் ஆயினும் தலைவன் கூற்றிற்கு மாற்றாக உடன்படும் நெறியைக் கூறமாட்டாள். வ்வாறு எடன்பட்டுக் கூறல் அருமையாகும். எனவே உடன்பாடில்லாத கூற்றுமொழி அவள்பால் உண்டு என்பர் தொல்காப்பியர்.

"யாரிவன் என்னை விலக்குவான் நீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு
சொல்லலோம் பென்றார் எமர்" (கலித் 112)

களவின்கண் தலைவி கூற்று நிகழுமிடங்களைத் தொல்காப்பியர் கீழ்க்கண்ட நூற்பாவில் விரித்துரைப்பார்.

**7.17.4** மறைந்தவற் காண்டல் தற்காட் டுறுதல்
நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்
இட்டுப்பிரி விரங்கினும் அருமைசெய் தயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த் தழுங்கினும்

நொந்துதெளி வொழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்ற வழி மலியினும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரின் அது மாற்றுதற் கண்ணும்
நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையிற்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்
பொய்தலை அடுத்த மடலின் கண்ணுங்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினும் களவறி வுறினும்
தமர்தற் காத்த காரண மருங்கினும்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்
பொழுதும் ஆறும் புரைவ தன்மையின்
அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்
காமஞ் சிறப்பினும் அவனளி சிறப்பினும்
ஏமஞ் சான்ற வுவகைக் கண்ணும்
தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும்
அன்னவு முளவே ஓரிடத் தான.

என்னும் இந்நூற்பா, தலைவிக்கு இயற்கைப்புணர்ச்சி முதலாகக் களவின்கட் குறிப்பினும் இடத்தினும் மட்டுமல்லது நிகழ்ச்சி எல்லாவற்றினும் கூற்று நிகழுமிடம் உணர்த்திற்று. எனினும் தலைவிக்கு கூற்று நிகழா இடங்கள் மூன்றும் சேர்த்து இதனுள் உரைக்கப்படுகின்றன. அவை முறையே மறைந்தவற் காண்டல், தற்காட்டுறுதல், நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல் என்பன ஆகும்

**7.17.4.1 மறைந்தவற் காண்டல்** - தன்னைத் தலைவன் காணாமல் தான் அவனைக் காணுங் காட்சி. இங்கு கூற்று ஏதும் நிகழவில்லை. எனினும் தலைவியின் செயல் என்பதனால் சுட்டப்பட்டது.

**7.17.4.2 தற்காட்டுறுதல்** - தன்னை அவன் காணுமாறு நிற்றல். இங்கு கூற்று ஏதும் நிகழவில்லை. எனினும் தலைவியின் செயல் என்பதனால் சுட்டப்பட்டது.

**7.17.4.3 நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்** - நிரம்பிய வேட்கையால் தலைவன் கூறிய சொற் கேட்டு எதிர்மொழி கூறாது மடிந்து நிற்றல். ங்கு கூற்று ஏதும் நிகழவில்லை. எனினும் தலைவியின் செயல் என்பதனால் சுட்டப்பட்டது.

இம் மூன்றிடத்தினுங் கூற்று நிகழாது.

**7.17.4.4 வழிபாடு மறுத்தல் -** தலைவியின் வேட்கைக் குறிப்புக் கண்டு சாரலுற்றவழித் தலைவி அதற்கு உடம்படாது மறுத்தல். இது குறிப்பினானும் கூற்றினானும் வரும்.

''இகல் வேந்தன் சேனை'' என்னும் முல்லைக்கலியுள்,

''யாமுனியா ஏறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை
நீஎவன் செய்தி பிறர்க்கு
யாம்எவன் செய்தும் நினக்கு''. - வழிபாடு மறுத்தது.

**7.17.4.5 மறுத்தெதிர்கோடல்** - முதலில் மறுத்தவாறு மறுக்காது பின்பு ஏற்றுக்கோடல்.

''இகல் வேந்தன் சேனை'' என்னும் முல்லைக்கலியுள்,

''ஆம்பற் குழலாற் பயிர்பயிர் எம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங்குறி.'' (கலித். 108) - மறுத்தெதிர் கோடல்.

பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல் - குற்றந்தீர்ந்த முறுவல் சிறிது தோற்றுவித்தல்.

''கன்றொடு சேறும் புலத்து." (கலித் .110)

மறைந்தவற் காண்டல் முதல் பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல் எனும் ஆறு நிலையும் புணர்ச்சிக்கு முன் நிகழும். ஈண்டுங் குறிப்பு நிகழ்ச்சியே வரும். கூற்று நிகழ்ச்சி அருகியல்லது வாராது.

பின்வரும் பன்னிரு வகையும் தலைவி தன் தோழிக்குக் கூறுவதாய் வரும்.

**7.17.4.6 கைப்பட்டுக் கலங்குதல்** - தலைவன் கையகப்பட்ட பின்பு என்செய்தேம் ஆயினேம் எனக் கலக்கமுறல்.

''கொடியவுங் கோட்டவும்'' என்னுங் குறிஞ்சிக் கலியுள்,

''அல்லல் களைந்தனன் தோழி நந்நகர்
அருங்கடி நீவாமை கூறி னன்றென
நின்னொடு சூழ்வல் தோழி நயம்புரிந்
தின்னது செய்தாள் இவளென
மன்னா உலகத்து மன்னுவது புரைமே" (கலித் . 54 )

இதனுள் கைப்பட்டுக் கலிங்கியவாறும் அருமறை உயிர்த்தவாறும் இவ்வாறு செய்யாக்கால் இறந்துபடுவன் என்னும் குறிப்பினளாய் மன்னா உலகத்து மன்னுவுது புரையும் எனக் கூறி நின்றாள் தலைவி

**7.17.4.7 நாணுமிகவருதல்: -** தலைவிக்கு முன்புள்ள நாணத்தினும் மிக நாணம் வந்தவழி கூற்று நிகழும்.

"நோக்குங்கால் நோக்கித் தொழூஉம்பிறர் காண்பார்
எல்லா எவன்செய்வாம் நாம" (கலித் . 63 ) - நாணம் மிக்கவழித் தோழியொடு கூறியது.

**7.17.4.8 இட்டுப்பிரிவு இரங்கல்: -** தலைவன் இட்டு வைத்துப் பிரிவன் என "அஞ்சியதற்கு இரக்க முறல்.

அம்ம வழி தோழி காதலர்
பாவை யன்னஎன் ஆய்கவின் தொலைய
நல்மா மேனி பசப்பச்
செல்வேம் என்பதம் மலைகெழு நாட்டே" ( ஐங்குறு - 221 )

**7.17.4.9 அருமைசெய்து அயர்தல்**: தலைவன் வருதற்குக் காவலாகிய அருமை செய்ததினால் அவனும் வருதலைத் தவிர்த்தலை அயர்ப்பு எனக் குறிப்பார் தொல்காப்பியர். மேலும் புறத்து விளையாடுதற்கு அருமை செய்ய மயக்கம் வருதல் எனினும் பொருந்தும்.

"நெய்தற் புறவின் நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலுட் கண்டநாட் போலானாற்
செய்த குறிவழியும் பொய்யாயின் ஆயிழாய்
ஐயகொல் ஆன்றார் தொடர்பு" ( திணைமொழி . 41 )

**7.17.4.10 வந்தவழி எள்ளல்**: - தலைவன் வந்தவிடத்து அலராகும் என்றஞ்சி இகழுதல்.

"கண்திரள் முத்தம் மயக்கும் இருண்முந்நீர்ப்
பண்டங்கொள் நாவாய் வழிங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டேன் எனத்தெளிந்தேன்
நின்ற உணர்விலா தேன்" . ( ஐந்திணையெழு . 56 )

**7.17.4.11 விட்டுயிர்த்து அழுங்கல்:** - மறையாது சொல்லி இரங்குதல்.

பிணிநிறந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
மணிமலை நாடன் வருவன்கொல் தோழி ( திணைமொழி . 6 )

**7.17.4.12 நொந்து தெளிவு ஒழித்தல்:** - தலைவன் தெளிவித்த தெளிவை நொந்து, அதனை ஒழித்தல்.

"மன்றத் துறுகற் கருங்கண் மூசுஉகளுங்
குன்றக நாடன் தெளித்த தெளிவினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் தலையளி
ஒன்றுமற் றொன்றும் அனைத்து" ( ஐந்திணையெழு - 9 )

**7.17.4.13 அச்சம் நீடல்:** - தலைவன் வருவது இடையீடாக அச்சம் மிகுதல்

மென்தினை மேய்ந்த தறுகட் பன்றி
வன்கல் இடுக்கத்துத் துஞ்சு நாடன்
எந்தை யறிதல் அஞ்சிக்கொல்
அதுவே மன்ற வாரா மையே ". (ஐந்குறு - 621 )

**7.17.4.14 பிரிந்தவழிக் கலங்கல்** - தலைவன் பிரிந்தவழிக் கலக்கமுறல்

வருவது கொல்லோ தானே வாராது
அவணுறை மேவலின் அமைவது கொல்லோ
-----------------------------------------------------------------
குன்றுகெழு நாடனொடு சென்ற என்நெஞ்சே . "( ஐங்குறு - 295)

**7.17.4.15 பெற்றவழி மலிதல்**: - தலைவனோடு கூட்டம் பெற்றவழி மகிழ்தல்

முனைவளர் முதல என்னும் அகப்பாட்டினுள்,
"... ... ---- ------ ---------- --------------
வண்டிடைப் படாஅ முயக்கமுந்
தண்டாக் காதலும் தலைநாள் போன்மே". ( அகம் . 322)

**7.17.4.16 வருந்தொழிற்கு அருமை வாயில் கூறல்:** - தலைவன் வருதற்கு இடையீடாகக் காவலர் கடுகுதலான் ஈண்டு வருதல் அரிதெனத் தோழி தலைவிக்குச் சொல்லும்போது கூற்று நிகழும்.

"அருங்கடி அன்னை காவல் நீவிப்
-------------------------------------------------
வான்தோய் மாமலை கிழவனைச்
சான்றோய் அல்லை என்றனம் வரற்கே"( நற்றிணை . 365)

**7.17.4.18 கூறிய வாயில் கொள்ளாக் காலத்துக் கூறுதல்**: - தோழி இவ்வாறு கூறியதனை மனங் கொள்ளாத காலத்தில் கூறுதல்.

"கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை." (கைந்நிலை. 7)

**7.17.4.19 மனைப்பட்டு அருமறை யுயிர்த்தல்**: - புறத்து விளையாடாமல் மனையகப்பட்டு கலங்கிச் சிதைந்தவழியே சூழ்தல் அமைந்த அருமறைப்பொருள் எனப்படும். வேட்கையினைத் தோழியிடம் உரைத்தல். எனவே சிதையாதவழித் தோழிக்குச் சொல்லமாட்டாள் என்பது வெளிப்பட்டது வேட்கை மறைக்கப்படுதலின் மறையாயிற்று. ,இங்கு சொல்லப்பட்ட பதிமூன்று கூற்றும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின் நிகழும் கூற்றுகள் ஆகும் இவ்வாறு கூறாக் காலத்து உயிர் செல்லுமாறு சொல்லும் தலைவி. இதனைத தொல்காப்பியர் உயிராக் காலத்து உயிர்செல உயிர்த்தல் எனக் குறிப்பார்.உயிர்த்தல் என்பது சுவாதம்

எனினும் அமையும். இந்நிகழ்ச்சியைத் தோழிக்கு நாணத்தால் உரையாளாயின், நோய் மிக வருந்துவள்

**7.17.4.20 வேற்று வரைவு வரின் அது மாற்றுதல்** - தன்னை மணந்து கொள்ள பிறனொருவன் வரின் அதனை மாற்றுதல்

"அன்னை வாழிவேண் டன்னை புன்னை
பொன்நிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை என்றும் யாமே இவ்வூர்
பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே" .( ஐங்குறு . 110 )

**7.17.4.21 நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தவை மாற்றுதல் -** தலைவனோடு கூட்டம் உண்மை நாடுகின்ற காலத்து கண்சிவப்பு, மெய் வேறுபாடு நிகழ்ந்தவழி, தோழி அறியாமலும் செவிலி அறியாமலும் தலைவி மறைத்தல்

"துறைவன் துறந்தெனத் துறையிருந் தழுதஎன்
மம்மர் வாண்முக நோக்கி அன்னை நின்
அவலம் உரையென் றனளே கடலேன்
பஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை சிதைத்ததென் றேனே"

**7.17.4.22 பொறியின் யாத்த புணர்ச்சிக் நோக்கி ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோன் அருமை சான்ற நாலிரண்டு வகையிற் பெருமை சான்ற இயல்பின் நிற்றல்:** பொறி யென்பது ஊழ். ஊழாற் கட்டப்பட்ட புணர்ச்சியைக் குறித்து ஒற்றுமைப்பட்ட நண்பினானே தலைவன் வரைதற்குக் குறையுறுகின்றதனைத் தெளிந்த தலைவி செய்தற்கு அருமையமைந்த எண்வகையினாற் பெருமை இயைந்த இயல்பினளாகி நிற்றல்.

ஈண்டு சுட்டப்பெறும் எண்வகையாவது: மெய்ப்பாட்டியலுள் மனன் அழிவில்லாத கூட்டம் முதலாக சுட்டப்பெற்றவை ஆகும். அவை முறையே, முட்டுவயிற் கழறல், முனிவு மெய்ந் நிறுத்தல்,அச்சத்தின் அகறல், அவன்புணர்வு மறுத்தல் தூதுமுனிவின்மை, துஞ்சிச்சேர்தல், காதல் கைம்மிகல், கட்டுரையின்மை என்பன ஆகும்.

**7.17.4.23 முட்டுவயிற் கழறல்** -களவொழுக்கம் நிகழும்போது நிலவு வெளிப்பாடு, காவலர் கடுகுதல் தாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, தலைவன் குறிவருதற்கு இடையீடுபடுதல், இவ்வழிக் களவொழுக்கத்தினாற் பயனின்மை கூறி இனி இவ்வொழுக்கம் அமையுமென வரைந்தெய்துதல்காறும் புணர்ச்சியை விரும்பாது கலக்கமின்றித் தெளிவுடையவளாம்.

"இரும்பிழி மாரி அழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்" ( அகம்.122)

**7.17.4.24 முனிவு மெய்ந்நிறுத்தல் -** இந்த ஒழுக்கத்தினால் வந்த துன்பத்தைப் பிறர்க்குப் புலனாகாமை மெய்யின் கண்ணே நிறுத்தல்.

அவ்வழியும் வரைந்தெய்தல் சான்றமையும் புணர்ச்சியெனக் குறி வழிச் சொல்லாளாம்.

"நோமே நெஞ்சே நோமே நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோமே நெஞ்சே" (குறுந் . 4)

**7.17.4.25 அச்சத்தின் அகறல்** - இதனைப் பிறர் அறிவர் என்னும் அச்சத்தினாலும் குறிவழிச் செல்லாளாம் .

"பேணுப பேணார் பெரியோர் என்பது
நாணுத்தக் கன்றது காணுங் காலை
அஞ்சுவல் தோழிஎன் னெஞ்சத் தானே" (நற்றிணை . 72 )

**7.17.4.26 அவன் புணர்வு மறுத்தல்** - தலைவன் புணர்ச்சி இல்வழியும் குறிவழிச் செல்லாள்.

"யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்குங்
குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே" ( குறுந் . 25 )

**7.17.4.27 தூது முனிவின்மை** - தலைவன்மாட்டுத் தூதாகி வருஞ்சொற்கேட்டலை முனியாமை

"புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெவ்வேர்
-------------------------------------------------------
தாம்வரைந் தனையமென விடுகம் தூதே" ( குறுந் . 109)

**7.17.4.28 துஞ்சிச்சேர்தல்** - உறங்காமையின்றி உறக்கம் நிகழ்தல் .
காதல் கைம்மிகல் - இவ்வாறு செய்யுங் காதல் அன்பின்மையன்றி அன்பு மிகுதல் .

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கு மாகா தென்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டுந்
திதலை அல்குல் என் மாமைக் கவினே" ( குறுந் . 27 )

**7.17.4.29 கட்டுரையின்மை** - கூற்று நிகழ்தலின்மை . ஈண்டு குறிக்கப் பெற்ற எட்டும் கலக்கமில்லாத நிலைமையாதலின் பெருமை சான்ற இயல்பாயின எனப்பட்டன.

**7.17.4.30 பொய்தலையடுத்த மடவின் கண் -** பொய்ம்மையால் மடலேறுவன் எனத் தலைவன் கூறியவழியும் வெறுத்த உள்ளத்தளாய்க் குறிவழிச் செல்லாள்

**7.17.4.31 கையறு தோழி கண்ணீர் துடைத்தல்** - தோழி கையினால் தலைவி கண்ணீர் துடைத்தவழியுங் குறிவழிச் செல்லாள்.

யாம்எம் காமந் தாங்கவுந் தாம்தம்

"கெழுதகை மையின் அழுதன தோழி

-------------------------------------------------------

குன்ற நாடற் கண்டஎங் கண்ணே" (குறுந் . 241)

**7.17.4.32 வெறியாட்டிடத்து வெருவுதல்:** - தலைவி வேறுபாடு எதனால் ஏற்பட்டது எனச் செவிலி வெறியாட்டுவிக்க வரும் அச்சத்தினாலும் தலைவி குறிவழிச் செல்லாள்.

"நம்முறு துயரம் நோக்கி அன்னை

வேலவற் றந்தனள் ஆயினவ் வேலன்

வெறி கமழ் நாடன் கேண்மை

அறியுமோ தில்ல செறியெயிற் றேயே" ( ஐங்குறு ,241)

**7.17.4.33 குறியின் ஒப்புமை மருடல் -** தலைவன் செய்த குறியை ஒப்புமை பற்றிச் சென்று அஃது அவ்வழி மருளும் போதும் குறிவழிச் செல்லாள். அதாவது புள்ளெழுப்புதல் போன்றன. புள்ளரவம் கேட்டு மருளுதல்.

"அணிகடல் தண்சேர்ப்பன் தர்ப்பரிமா பூண்ட

மணியரவம் என்றெழுந்து போந்தேன் - கனிவிரும்பும்

புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தேன் ஒளியிழாய்

உள்ளுருகு நெஞ்சினேன் யான்" ( ஐந்திணையைம் . 50 )

**7.17.4.34 வரைவு தலைவரல்: -** தலைவன் வரைய வருகின்ற நாள் அருகில் "வரினும் குறிவழிச் செல்லாள்.

நாடன் நயமுடையன் என்பதனால் நீப்பினும்

வாடல் மறந்தன தோள்" . (ஐந்திணையெழு . 2)

**7.17.4.35 களவு அறிவுறுதல்**: - களவினைப் பிறர் அறியினும் குறிவழிச் செல்லாள்

"யாங்கா குவமோ அணிநுதற் குறுமகள்

தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்

செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்று

எவ்வாய்ச் சென்றனை அவணெனக் கூறி

அன்னை யானாள் கழறமுன் னின்று" (நற்றிணை . 147)

**7.17.4.36 தமர்தற்காத்த காரண மருங்கில் கூறல்:** - தன்னை ஐயமுற்றுத் தமர் காத்த காரணத்தால் கூறல் .

"பெருநீர் அழுவத் தெந்தை தந்த என்னுங் களிற்றியானை நிரையுள்

கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை

கடிகொண்டனளே தோழி பெருந்துறை" (அகம் 20 )

**7.17.4.37 தன்குறி தள்ளிய தெருளாக் காலை வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன் பிழைப்பாகத் தழீஇத் தேறல்**: -தன் குறி தப்பி

தலைவன் எதிர்படுதல் இல்லாக் காலத்து வந்து அவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கி தன் குறையாக உடன்பட்டுத் தேறுவாள் தலைவி "இருள் கிழிப்பது போல்" என்னும் களிற்றியானை நிரையுள்,

"வந்தோன் கொடியனும் அல்லன் தந்த
நீதவ றுடையையும் அல்லை நின்வயின்
ஆனா அரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே" ( அகம் . 72 )

வழுவின்று நிலைஇய இயற்படு பொருள் முதல் ஏமம் சான்ற..உவகை ஈறாக் சொல்லப்பட்ட ஐந்து இடங்களில் தன்னிடத்து உரிமையும் அவனிடத்துப் பரத்தமையும் அவை போல்வனவும் நிகழப்பெறும் என்பார் தொல்காப்பியர், அவையாவன:.

**7.17.4.38 வழுவின்று நிலையே இயற்படு பொருள்**: தோழி தலைவனை இயற்பழித்தவழி அவன் குற்றமிலன் என இயற்பட மொழிவாள் தலைவி. அப்போது தலைவன் உரிமை தோன்றவும் அவன்வயின் பரத்தமை தோன்றவும் கூறுவாள். இரண்டினுள் ஒன்றுதோன்றவோ அல்லது இரண்டுந் தோன்றவோ வருவனவும் உளவாம் .

"அடும்பம லங்கொடி உள்பதைந் தொழிப்ப
வெண்மலர் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடியன் ஆயினும் ஆக
அவனே தோழிஎன் னுயிர்கா வலனே" ( ஐங்குறு . தனி . 6)

**7.17.4.39 பொழுதும் ஆறும் புரைவதன்மையின் அழிவு தலைவந்த சிந்தை:** தலைவன் வருங்காலமும் இடனும் குற்றமுடையன ஆதலான், ஆண்டு அழிவு வந்த சிந்தைக்கண்ணும் தலைமகள் தன்வயின் உரிமையும் அவன் வயிற் பரத்தைமையும் தோன்றக் கூறுாள்.

அவற்றுள் வழுவின்று நிலைஇய இயற்படு பொருட்கண் கூறியதற்குச் செய்யுள் : -

"கொடுவரி வேங்கை பிழைத்துக் கோட்பட்டு
அஞ்சி யொதுங்கும் அதர் உள்ளி ஆரிருள்" ( ஐந்திணையம் . 16 )

**7.17.4.40 காமஞ் சிறத்தல்:** - தலைமகன்மாட்டு வேட்கை மிகினும் தன்வயின் உரிமையும் அவன் வயிற் பரத்தைமையும் தோன்ற உரைப்பாள்.

"அம்ம வாழி தோழி நலனே
இன்ன தாகுதல் கொடிதே பன்னை
அணிமலர் துறைதொறு விரிக்கும்
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா தோர்க்கே".( ஐங்குறு . 117 ) - காமம் சிறத்தலில் தன்வயின் உரிமை

"ஒடுங்கா ஒலிகடற் சேர்ப்பன் - நெடுந்தேர்
கடந்த வழியைஎங் கண்ணாரக் காண

நடந்து சிதையாதி நீ".( ஐந்திணையைம் . 42 ) - அவன்வயிற் பரத்தைமை

**7.17.4.41 அவன் அளி சிறத்தல் -** தலைவன் தலையளி மிகுதல்.அவ் வழி தன்வயின் உரிமையும். அவன் வயிற் பரத்தைமையும் தோன்றக் கூறுவாள்

"சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்த்துபுலர் அகலம்
உள்ளின் உள்நோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொல் அன்னாய்"( குறுந் . 150 )

**7.17.4.42 ஏமஞ்சான்ற உவகைக்கண்: -** இவன் வரைந் தல்லது நீங்கான் என்னும் உவகையால். தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் தோன்றக் கூறுவாள்

"ஓங்கல் இருவரைமேற் காந்தள் கடிகவினப்
பாம்பென ஓடி உருமிடிப்பக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தவந் நாள்போலா
ஈங்கு நெகிழ்ந்த வளை" ( திணைமொழி . 3 ) - தன் வயின் உரிமை
"மணங்கமழ் ஐம்பாலார் ஊடலை ஆங்கே
வணங்கி உணர்ப்பான் துறை" - அவன் வயின் பரத்தமை

## 7.18 தலைவி தானே கூறும் காலம்:

தலைவி தானே கூறுதல் என்னும் வகையின்கண் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களைத் தருவார்இ அவற்றுள் ஒன்று கீழ்கண்ட நூற்பா ஆகும்.இந்நூற்பாவின்வழி தலைவி தானே கூறுமிடங்கள் மூன்று எனத் தொல்காப்பியர் உணர்த்துவார்.

வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமும் உளவே

**7.18.1 வரைவிடை வைத்த காலத்து வருந்துதல்**:தலைவன் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குகின்றான். இந்த நாள் வரைந்து கொள்வல் எனக் கூறித் தோழியிற் கூட்டத்திற்கு முயலாது நாட்களை நீடிக்கிறான். அதனைத் தோழி ஐயப்படுவாளே என்று அதனை மறைத்து ஒழுகும் தலைவி அவன் வருந்துணையும் ஆற்றாது வருத்தமுறுவாள்.

புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
"கடியுண் கடவுட் கிட்ட சில்குரல்
அறியா துண்டனம் மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வேர்த்துற்று நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே" ( குறுந் .105)

**7.18.2 வரையாத நாளின்கண் வந்தோன முட்டுதல்**: வரையாது ஒழுகும் காலத்து மறைந்தொழுகும் தலைவன் செவிலி முதலாயினோரை எதிர்ப்படுவான்.

“தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை
மாழைமான் நோக்கின் மடமொழி - நூழை
நுழையு மடமகன் யார்கொலென் றன்னை
புழையும் அடைத்தாள் கதவு”( கைந்நிலை . 59 )

**7.18.3 உரை எனத் தோழிக்கு உரைத்தல்:** இந்த ஒழுக்கத்தினை நின் தோழிக்கு உரையெனத் தலைவன் கூறுதல். இதனையே தலைவனுக்கு உரையெனத் தலைவி தோழிக்கு உரைத்ததாகவும் கொள்ளலாம்.

பொன்இணர் வேங்கை கவினிய பூம்பொழிலுள்
“நன்மலை நாடன் நலம்புனைய - மென்முலையாய்
போயின திந்நாள் புனத்து மறையினால்
ஏயினார் இன்றும் இனிது”.( ஐந்திணையைம் . 11 )

தலைவி தானே உரைப்பதாய்த் தொல்காப்பியர் உணர்த்தும் பிறிதோர் நூற்றாப கீழ்க்கண்டதாகும்.

**7.18.4** உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே.

இதுவும் தலைவி தானே கூறும் வகையுள் அடங்கும்.

உயிரினும் நாண் சிறந்தது.அதினினும் குற்றந் தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது என முன்னோர் கூற்றை மனத்தினுள் கொண்டு தலைவனுள்ள இடத்துச் தலைவி தானே சென்றாலும் வருத்தம் இல்லாச் சொல்லைத் தலைவி சொல்லுதம் இவை போன்ற பிறவற்றைச் சொல்லுதலும் ஆகிய இவையெல்லாம் அகப்பொருளாய் உயர்ந்து தோன்றும் என்பதே இந்நூற்பாவின் பொருள் ஆகும்.

“நொது மலர் வரைவு நோக்கிக் கூறுவது:-
அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனியே
வான்பூங் காம்பின் ஓங்கு மணற் சிறு சிறை
தீம்புனல் நெரிதர வீழ்ந்துக் காஅங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே.” (குறுந். 149)

இது காமக்கிழவன் உள்வழிப்படுதல்.

“கோடீ ரிலங்குவளை நெகிழ நாடொறும்

-------------------------------------------------------

மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே." (குறுந். 11)
தாவில் நன்மொழி கூறியதற்குச் செய்யுள்:-
"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதுங்
கொடியர் அல்லர்எம் குன்றகெழு நாடர்
பசைஇய பசந் தன்று நுதலே
ஞெகிழிய ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே". (குறுந். 87)

**7.19 களவில் தோழிக்கு கூற்று நிகழிடங்கள்:**

தலைவன், தலைவி இடையிலான களவு வாழ்ககையில் இன்றியமையாத இடத்தனைப் பெறுபவள் தோழி ஆவாள். தலைவிக்குத் தோழியர் பலர் இருப்பினும் செவிலியின் மகளாய் அமையும் தோழியே சிறப்பிடம் பெறுபவள் ஆவாள்.இவள் சூழ்தலும் உசாத்துணையாகவும் வல்லவள் என்பது தொல்காப்பியத்தால் விளங்கி நிற்கும். இத்தகைய தோழியின் கூற்றுகள் நிகழிடங்களை தொல்காப்பியம் பின்வருமாறு விரித்துரைக்கும்.

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பா டுள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை,
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது,
பல்வேறு கவர் பொருள் நாட்டத் தானும்
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகுரைத் தொழிப்பினும்
அருமையின் அகற்சியும் அவளறி வுறுத்துப்
பின்வா வென்றலும் பேதைமை யூட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சியச் சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமொடு
எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறுத்த காரணங் குறித்த காலையும்;
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணுங்
குறைந்தவட் படரினும் மறைந்தவ ளருகத்,
தன்னொடும் அவளொடும் முன்னமுன் தளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுளி நயம் புரி இடத்தினும்
எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்

ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்
செங்கடு மொழியான் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்;
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையற வரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்புஞ் சிறப்பும் இறப்ப நோக்கி,
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அனைநில வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறன்னெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையினும்
தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன.

தோழியின் கூற்றுகள் முப்பத்திரண்டு எனக் குறிப்பார் இளம்பூரணர். தோழி மதியுடம்படுத்தலால் அவள் அறிவினால் செய்யும் ஆராய்ச்சி நாட்டம் என்னும் பெயரால் அழைக்கப்படும். அவை முறையே நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு என்பன ஆகும்.

**7.19.1 நாற்றம்** - தலைவி மாட்டு உளதாகிய இயற்கை மணம் மாறி பூவினானும் சாந்தினானும் தலைவன் உடனாய கலவியால் தலைவியிடத்து நாறுதல்.

**7.19.2 தோற்றம்** - புணர்ச்சியான் வரும் பொற்பு. அதாவது நீண்டும் பிறழ்ந்தும் பிள்ளைப் பருவத்து வெள்ளை நோக்கன்றி உள்ளொன்று கொள்ள நோக்கும் நோக்கும், தந்நிலை திரிந்து துணைத்து மெல்கிப் பணைத்துக் காட்டும் தோளும் முலையும் போல்வன. அவற்றின் பொலிவே தோற்றம் எனப்படும்.

**7.19.3 ஒழுக்கம்** - ஆயத்தாரொடு வேண்டியவாறு ஒழுகுதலன்றித் தன்னைப் பேணியொழுகுதல்.

**7.19.4 உண்டி** - உண்ணும் அளவிற் குறைதல்.

**7.19.5 செய்வினை மறைப்பு** - பூக்கொய்தலும் புனலாடலும் போலும் வினைகளைத் தோழியை மறைத்துத் தனித்து நிகழ்த்துதல், அல்லது

தலைவன் செய்த புணர்ச்சியாகிய கருமத்தினைப் புலப்படவிடாது தோழியை மறைத்தல்.

**7.19.6 செலவு** - எத்திசையினும் சென்று விளையாடுவாள் ஒரு திசையை நோக்கிச் செல்லல்.

**7.19.7 பயில்வு** - ஓரிடத்துப் பயிலுதல்.

**7.19.8 புணர்ச்சி எதிர்ப்பாடு -** புணர்வதற்கு முந்துற்ற காலம்.

**7.19.9 உள்ளுறுத்தல்** - உட்கோடல்.

**7.19.10 உணர்ச்சி ஏழ்** - நாற்றம் முதலாகச் சொல்லப்பட்டவற்றால் வரும் மன நிகழ்ச்சி ஏழும்.

**7.19.11பல்வேறு கவர்பொருள் நாட்டம்** - ஒன்றொடொன்று ஒவ்வாது வேறுபட்டனவாகி இருபொருள் பயக்கும் சொற்களாலே ஆராய்தல்.

**7.19.11.1 நாணநாட்டம்:**

தோழி தலைவியுடன் ஆராயுங்காலத்து தன் மனத்து நிகழ்ந்தவற்றை மறைத்துக் கூறல் வேண்டுதலின், உண்மைப்பொருளானும் விரவிவரும். அவளுக்கு குற்றேவல் செய்யும் தன்மையில் தப்பாதவற்றான் வேறுபல் கவர்பொருள் பொருள் படக் கூறி ஆராய்வாள்.அதாவது தோழி தலைவியைப் பார்த்து பிறைதொழுவம் எனவும் அம்புபட்ட யானை ஒன்றைக் கண்டேன் எனவும் ஒருவன் தன் பெருமைக்குத் தகாத சிறுசொற் கூறி வேண்டி நின்றான், அவனை நீயும் காணவேண்டும் எனவும் அவன் என்னைக் குறையிரந்தான், நான் மறுத்து விட்டேன் என்பதாயும் கூறுவாள். தோழி இவ்வாறு கூறுங்கால் தலைவி தன் காதலனை அன்றிக் கருதாள் ஆதலின், பிறை தொழ உடன்படாள். அம்புபட்ட யானை ஒன்றைக் கண்டேன் என்ற வழி தலைவன்தான் எய்திருப்பான் என எண்ணி நாணம் கொள்வாள்.கண் சிவந்தது எனில் சுனையாடிச் சிவந்தது என்பாள். இவை நாண நாட்டம் எனப்படும். அதாவது தலைவி நாணும் படிக் கூறல் என்பதாம்.

“கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலும்
நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோள் மடந்தை
யாங்கா யினள்கொல் என்னும்என் நெஞ்சே”. (சிற்றெட்டகம்) - தலைவி தோற்றங்கண்டு பாங்கி கூறியது.

**7.19.11.2 நடுங்கநாட்டம்:**

மேற்சொன்ன தன்மைத்தாய் அன்றி குருதி தோய்ந்த கொம்புடைய யானை ஒன்றனைக் கண்டேன் எனல். அது தலைவனுக்குத் துன்பம் செய்யும் என எண்ணித் தலைவி நடுங்குவாள்.இது நடுங்க நாட்டம் என்று அழைக்கப்படும்.

**7.19.12 பெருமையிற் பெயர்த்தல்:** – தன்னிடம் குறை நயந்து நிற்கும் தலைவனிடத்துத் தோழி அவனது பெருமை கூறி நீக்கல்

“இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி ------
எம்ம னோரிற் செம்மலும் உடைத்தே”. (நற்றிணை. 45)

**7.19.13 உலகு உரைத்து ஒழித்தல்** -தலைவியின் களவொழுக்கம் அறியாதாள் போன்று மறைத்த தோழி தலைவியிடம் உலகத்தார் மகட்கொள்ளுமாறு கொள்ளெனக் கூறுதல்.

"கோடீர் எல்வளைக் கொழுமடற் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ." (ஐங்குறு.199)

**7.19.14 அருமையின் அகற்சி** - தலைவனிடத்துத் தலைவி கிடைத்தற்கு அரியவள் எனக் கூறிய அகற்றுதல்.

"நெருநலும் முன்னா ளெல்லையும் ஒருசிறைப்
எம்பதத் தெளியன் அல்லள் எமக்கோர்
கட்காண் கடவுள் அல்லளோ பெரும
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே".

**7.19.15 அவள் அறிவுறுத்துப் பின்வா என்றல்** - நின்னால் காதலிக்கப்பட்ட தலைவிக்குச் சென்று அறிவித்துப் பின்னர் என்னிடத்து வா எனல்.

"தன்னையுந் தான்நாணுஞ் சாயலாட் கீதுரைப்பின்
என்னையும் நாணப் படுங்கண்டாய் - என்னைய
வேயோர் மென் தோளிக்கு வேறாய் இனியொருநாள்
நீயே யுரைத்து விடு'' - நீயே சென்று அறிவி என்றது

"நாள்வேங்கை பொன் விளையும் நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடியர் என்னையன்மார் - கோள் வேங்கை
அன்னையால் நீயும்! அருந்தழையாம் ஏலாமைக்கு
என்னையோ நாளை எளிது" (திணைமாலை. 2) - பின்வா என்றது

**7.19.16 பேதைமை ஊட்டல்** - தேரினும் அவள் அறிவாள் ஒருத்தியல்லள் எனத் தலைவியின் பேதைமை குறித்துத் தலைவற்குக் கூறல்.

"நறுந்தண் ------------ பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு." (திணைமாலை.24)

**7.19.17 முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்துரைத்தல்** - முன்னுறு புணர்ச்சி முறையே நீங்கவிடாது உடன்பட்டுக் கூறல். முன்பு கூடினாற் போலக் கூட அமையுமெனல்..

**7.19.18 அஞ்சி அச்சுறுத்தல்**: - தோழி தான் அச்சமுற்று அஞ்சின தன்மையைத் தலைவற்கு அறிவித்தல். அதாவது யாய் வருவள் என்றானும் தமையன்மார் வருவர் என்றானும் காவலர் வருவர் என்றானும் கூறுதல்.

"ஏனலுள் ஐய வரவுமற் றென்னை கொல்
காணினும் காய்வர் எமர்". (திணைமொழி.6)

**7.19.19 உரைத்துழிக் கூட்டம்** - நின்னால் காதலிக்கப்பட்டாள் யாவள் என கேட்டபோது இத்தன்மையாள் எனச் சொல்லக்கேட்ட தோழி அவளும் நின் தன்மையாள் என இவனோடு கூட்டியுரைத்தல்

"நெறிநீர் இருங்கழி நீலமுஞ் சூடாள்

குறிப்பு

பொறிமாண் வரியலவன் ஆட்டலும் ஆட்டாள்
திருநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றாள்
செறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் சேர்கேன்".

இங்கு குறிக்கப்பட்ட இவ் எட்டும் எஞ்ாது கிளந்த இரு நான்கு கிளவி என்ற நூற்பாவில் குறிக்கப்படும்.இவை எட்டினையும் குறையுறுதலின் பகுதியாகச் சுட்டுவார் இளம்பூரணர்.

**7.19.20 வந்த கிழவனை மாயஞ் செப்பிப் பொறுத்த காரணங் குறித்த காலை:** - யானை போனதோ மான் போனதோ என மாயம் சொல்லிவந்த கிழவனைத் தலைவி பொறுத்த காரணம் குறித்த காலையும் தோழி கூற்று நிகழும். தலைவன் கேட்டதற்கு மாற்றம் கூறுதலும் உண்டாம்.

"ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
நரந்தங் கண்ணி இவனோ டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் நாணினர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுபகண் ணினானே". - குறிப்புணர்ந்து இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்.

**7.19.21 புணர்ந்தபின் அவன்வயின் வணங்கல்** - மேற்சொல்லப்பட்ட தலைவன் குறிப்பு, தலைவி குறிப்பு, இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என்னும் மூவகையானும் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்னும் மூவகையானும் புணர்ச்சி உண்மை பொருந்தியபின் தலைவனிடம் பணிந்து நிற்றலின் போதும் தோழி கூற்று நிகழும். அது நீ கருதியது முடிக்கவல்லவன் எனவும் நீ இவளைப் பாதுகாத்தல் வேண்டுமெனவும் கூறுதல்.

"... ... ... ... ... இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும் இவனே
இழையணி அல்குல் என் தோழியது கவினே" (கலித்.50)

**7.19.22 குறைத்து அவட்படரதல்** - மேல் தலைவன் புணர்ச்சியுண்மை அறிந்து பணிந்து நின்ற தோழி தானுங் குறையுற்றுத் தலைவி மாட்டுச் செல்லுதற் கண்ணுங் கூற்று நிகழும். இக்கிளவி இரந்து பின்னின்ற தலைவன் உள்ளப்புணர்ச்சியுள் வழியும் குறையுற்று மெய்யுறுபுணர்ச்சி வேண்டித் தலைவி மாட்டுச் செல்லுங் காலத்தும் ஒக்கும்.

"வளைஅணி முன்கை வால்எயிற் றின்னகை
இளையர் ஆடுந் தழையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தேர் அண்ணலைக் கண்டிகும் யாமே". ( ஐங்குறு . 198 )

**7.19.23 மறைந்து அவள் அருகத் தன்னொடும் அவளொடும் முன்னம் முன்தளைஇப் பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கு:** - தலைவன் மாட்டுத் தோழி குறைநயப்பிக்கச் சென்ற வழித் தோழி சொல்லும் குறிப்பு மொழிக்கு அவள் மறைந்து அரியளாகத் தன்னொடும் அவளொடும் குறிப்பினை முன்னர்த் தடுத்துக்கொண்டு வழிபட்டு முயலும் பல்வேறு பக்கத்தின் கண்ணும் தோழி கூற்று நிகழும்.

மறைத்தலாவது - தன் மனத்து நிகழ்ச்சியை ஒளித்தல் அருகுதலாவது - இசைவிலாதாரைப்போல நிற்றல். முன்ன முன்தளைதலாவது கூற்றினானன்றிக் குறிப்பினானுணர்தல். முதன் முன்றளைஇ என்று பாடமாயின், மனத்தினானும் மொழியினானும் உடம்பினானும் ஒருங்கே அளவி என்றுமாம். பின்னிலை நிகழும் பல்வேறு மருங்காவது வழிபாடு கொடுவருங் கூற்றுவேறுபாடு. எனவே தலைவிக்குத் தழையும் கண்ணியும் கொண்டு ஒருவன் நம்புனத்தயல் வாராநின்றான் எனவும், அவன் என்மாட்டு ஒரு குறையுடையன்போலும் எனவும், அருளுவார்க்கு இ∴து இடமெனவும், அவன் குறைமறுப்பின் மடலேறுவல் எனக் கூறிப் போந்தான். பின்பு வரக்கண்டிலேன் எனவும், இந் நிகரன கூறுதல்.

‘‘மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவல் உற்றதொன் றுண்டு". ( ஐந்திணையைம் . 14 )

‘‘ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி'' (குறுந்தொகை . 176

**7.19.24 நன்னயம் பெற்றுழி நயம்புரி இடம், நயந்தமை கூறல்:** - தலைவி குறை நயந்தமை பெற்றவழி அத் தலைவி நயம்பொருந்தும் இடத்திலும் கூற்று நிகழும்.

‘‘நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க'' ( குறுந் . 114)

இன்னும் நயம்புரி யிடத்தும் என்றதனால் களவொழுக்கம் நிகழா நின்றுழிக் கூறுங் கூற்றும் ஈண்டே கொள்க. அது தலைவன் வரும் எனவும் வந்தான் எனவுங் கூறுதலும் தலைமகன் பகற்குறிக்கண் நீங்கிய வழிக் கூறுதலும் எனப் பலவாம் .

**7.19.25 எண்ணரும் பன்னகை கண்ணிய வகை அல்லது அலராகும் என்று கூறல்**: - எண்ணுதற்கு அரிய பல நகையாட்டுக்களைத் தலைவனிடம் குறித்த வகையுங் கூற்று நிகழும். இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயினால் அவர் அலர் தூற்றி நகைப்பராகலின் நகையாயிற்று என்னும் வகையானும் கூற்று நிகழும்.

‘‘நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்". ( குறள் . 1138)

அன்னையும் அறிந்தனள் அலரு மாயின்று
நும்மூர்ச் செல்கம் எழுகமோ தெய்யோ'' ( ஐங்குறு 238 )

**7.19.26 புணர்ச்சி வேண்டல்:** - மேற்சொல்லப்பட்ட பல்லாற்றானும் தலைவனுக்கு அறிவுறுத்தவழிப் பின்னும் புணர்ச்சி வேண்டினும் தோழி கூற்று நிகழும்.

"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றாற் கௌவையாற்
காமம் நுதுப்பேம் எனல்" (குறள் 1148)

"இவளே, நின்சொற் கொண்ட என்சொல் தேறிப்
மடல்தாழ் பெண்ணையஞ் சிறுநல் லூரே."(குறுந் . 81 )

இது பின்னும் புணர்ச்சி வேண்டிய தலைவற்கு இடமுணர்த்தியது. இரவு வருவானைப் பகல் வா என்றலும் பகல் வருவானை இரவு வா என்றலுங் குறிபெயர்த்தலும் எல்லாம் இங்கு அமையும்.

"ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்று சிறுகான் யாறே
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்
துன்னல் போகின்றாற் பொழிலே யாம்எம்
கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே." ( குறுந் . 113) - இது பகற்குறி நோந்தது .

**7.19.27 வேண்டாப் பிரிவு:** - புணர்ச்சி வேண்டாது பிரிவு வேண்டிய வழிக் கூறுதல். அவ்வழித் தலைவிக்கு உரைத்தனவும் தலைவற்கு உரைத்தனவும் எனவும் வரும்.

"இறவுப்புறத் தன்ன பீணர்படு தடவுமுதற்
-----------------------------------------------------------------
இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்
செலீஇய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தினை சென்மே" ( நற்றிணை 19)

இது, தலைவன் பிரிவு வேண்டியவழிக் கூறியது

**7.19.28 வேளாண் பெருநெறி வேண்டுதல்:** - வேளாண்மையாவது உபகாரம் . பெருநெறியாவது உபகாரமாகிய பெருநெறி. அதனைத் தோழி தலைவனை "வேண்டுதல் கண்ணும் கூற்று நிகழும்.

பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாணலஞ் சிதைய ஏங்கி ஆனாது
அழல்தொடங் கினளே பெரும அதனாற்
கழச்சுறா வெறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ" (அகம் . 120 )

**7.19.29 புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பு, அல்ல குறிப்படுதல்** - தலைவனொடு தலைவி புணர்ந்தவழி ஆண்டுப் பொருந்திய அறிவு மடம்பட்ட "சிறப்பின் கண் அதாவது அல்லகுறிப்பட்ட கண் கூற்று நிகழும்.

கொடுமுள் மடல்தாழைக் கூம்பவிழ்ந்த ஒண்பூ
செய்தான் தெளியாக் குறி". (ஐந்திணையைம்பது -49)

**7.19.30 ஓம்படைக் கிளவி** – தலைவனிடம் தலைவியைப் பாதுகாத்துக்கொள் என்று தோழி கூறும் கூற்று. அ.ஃதாவது ஒருவழித் "தணக்கும்வழி ஓம்படை கூறுதல்.

பெருநன் றொன்றிற் பேணாரும் உளரே
நன்மலை நாட நின்னல திலளே" .(குறுந்.115)

**7.19.31 அன்புதலை அடுத்த வன்புறை** - செவ்விய கடிய சொல்லினானே, தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்பு உருகுமாறு பிரியப்பட்டவளிடத்துச் சென்று தலைவன் அன்புடைமையின் அளிப்பன் என ஆற்றுவித்த வற்புறுத்தற்கண்ணும் தோழி கூற்று நிகழும். செங்கடுமொழி என்பது கொடிய கடுமொழியேயன்றி மனத்தினாள் இனியளாகிக் கூறும் கடுமொழி. அதாவது இயற்பழித்தல். அவ்வாறு இயற்பழித்தவழித் தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்றவாறு. அன்புதலையடுத்த வன்புறை ஆவது தலைவன் இன்றியமையான் என ஆற்றுவித்தல்.

மாறக் கழீஇய யானை போலப்
"நோய்தந் தனனே தோழி
பசலை ஆர்ந்தன குவளையங் கண்ணே" ( குறுந் . 13 ) - இயற்பழித்தமை
"மகிழ்நன் மார்பே வெய்யைஎன நீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே".(குறுந் . 73 )

**7.19.32 ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும் ஆறின்னாமை கூறல்**: - தலைவன் வருநெறியினது தீமையைத் தாங்கள் அறிவுற்றதனால் எய்திய கலக்கத்தால் தோழி கூற்று நிகழும்.

"நாட
ஆரிருள் பெருகின வாரல்
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே". ( ஐங்குறு . 282)

**7.19.33 காவற் கடுமை கையற வருதல்:** காத்தல் தொழிலால் வரும் கடுஞ்சொற்கள் களவொழுக்கத்தே எல்லையற வரும்பொழுது தோழி கூற்று நிகழும்.

"பல்லோர் துஞ்சு நன்என் யாமத்து
உரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ முயறல்
கேளேம் அல்லேங் கேட்டனம் பெறாம்

ஓரி முருங்கப் பீலீ சாய
நன்மயில் வலைப்பட் டாங்குயாம்
முயங்குதொறு முயங்கும் அறனில் யாயே". ( குறுந்.244 )

**7.19.34 களனும் பொழுதும் வரைநிலை விளக்கிக் காதல் மிகுதி கூறல்:** குறியிடமும் காலமுமாகத் தாங்கள் வரைந்த நிலைமையை விலக்கித் தலைவி காதல் மிகுதல் கூறுமிடத்து தோழி கூற்று நிகழும்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார∴ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே''. ( குறுந்தொகை – 18 )

தலைவனது நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் மிகுதியும் நோக்கித் தலைவன்மாட்டுக் கிளக்குங் கிளவியோடே கூட அத்தன்மைத்தாகிய நிலவகயினானே வரைதல் வேண்டல்: தோழி தலைவனைப் நீ இத்தன்மையாகிய நாட்டையுடையை, இத்தன்மையாகிய நகரையுடையை, இத்தன்மைத்தாகிய இல்லையுடையை, இத்தன்மைத்தாகிய குடிப்பிறப்பையுடையை, இத்தன்மைத்தாகிய சிறப்புடையை பார்த்து அத்தன்மையாகிய நிலவகையால் வரைதல் வேண்டுதல்.

''கோழிலை வாழை'' என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,
''குறியா வின்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்து நாட
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய'' - நாடு சுட்டி வந்தது.

''காமங் கடப்ப உள்ளம் இனைப்ப
யாம் வந்து காண்பதோ பருவ மாயின்
ஓங்கித் தோன்றும் உயர்வரைக்கு
யாங்கெனப் படுவது நும்மூர் தொய்யோ'' (ஐங்குறு . 237 ) - இ∴து ஊர்பற்றி வந்தது.

''தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயால் மற்றுநின்
குடிமைக்கட் பெரியதோர்
குற்றமாய்க் கிடவாதோ''.

**7.19.35 ஐயச் செய்கைதாய்க்கு எதிர்மறுத்துப் பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுத்தல்**: தலைவிக்குப் பிறரோடு கூட்டமுண்டெனச் சொல்லி ஐயுற்றவழி அதனை மறுத்துத் தலைவி செய்த செய்கையைப் பொய்யென நாட்டற்கண் கூற்று நிகழும்.

**7.19.36 அவள் விலங்குறினும் களம்பெறக் காட்டினும் பிறன் வரைவு ஆயினும் அவன் வரைவு மறுப்பினும் முன்னிலை அறனெனப்படுதல் என்றிவை வகைப் புரைதீர் கிளவி தாயிடைப்புகுதல்**: தலைவி காப்பு

மிகுதியானும் காதன் மிகுதியானும் நொதுமலர் வரைவினானும் தமர் வரைவு மறுத்தினானும் வேறுபட்ட வழி இ∴து எதனால் ஆயிற்று எனச் செவிலி அறிவரை வினாவிக் குறிபார்ப்பாள். அவ்வாறு குறி பார்க்கும் இடத்தினும், வெறியாட்டிடத்தினும், பிறர் வரைவு வந்துழியும் அவர் வரைவு மறுத்தவழியும், முன்னிலை வகையான் ஆதல் அறத்தொடுநிலை வகையானாதல் இவ்விருவகையானும் தலைவனுகும் தலைவிக்கும் தனக்குங் குலத்திற்கும் குற்றந் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுப் நிரம்பச் ரொல்லாது தோற்றுவாய் செய்தல்.

“பொய்படு பறியாக் கழங்கே மெய்யே

------------------------------------------------------------

ஆண்டகை விறல்வேள் அல்லன் இவள்
பூண்தாங் கிளமுலை அணங்கி யோனே.”( ஐங்குறு . 250) - இது குறிபார்த்தவழிக் கூறியது.

“வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே”. ( நற்றிணை . 34 ) - இது வேலனை முன்னிலையாகக் கூறியது

## 7.20 தோழி அற்தொடு நிற்றல்:

தலைமக்களிடையேயான களவு ஒழுக்கத்தினைத் தோழி தன் அறிவாற்றலால் அறிவதுடன் அதனைக் கற்பொழுக்கமாக மாற்றுவதற்குச் செய்யும் முயற்சியே அறத்தொடு நிற்றல் எனப்படும். அறத்தொடுநிலைப் பகுதி எழுவகைப்படும், அவை யாமாறு :

எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாவுதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர். (பொருளியல் 102 )

**7.20.1 எளித்தல்** - தலைவன் நம்மாட்டு எளியனென்று கூறுதல். அதனது பயம் மகளுடைத்தாயர் தம்வழி ஒழுகுவார்க்கு மகட்கொடை வேண்டுவராதலான், எளியனென்பது கூறி அறத்தொடு நிற்கப் பெறும்.

அன்னை அறியினும் அறிக அலர்வாய்
“அம்மென் சேரி கேட்பினுங் கேட்க

--------------------------------------------------------

நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும்என் கட்கே”. ( அகம் . 110 )

**7.20.2 ஏத்தல்** - தலைவனை உயர்த்துக் கூறுதல், அது, மகளுடைத் தாயர் தலைவன் உயர்ந்தான் என்பதில் மனமகிழ்வர் ஆகலின், அவ்வாறு கூறுதல்

“அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்

------------------------------------------------------------------

மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்

பொய்யும் உளவோ என்றனன்'' ( அகம் . 48 )

இதனுள் கழுநீர் மாலையன், வெட்சிக்கண்ணியன் எனக் கூறினமையால், அவன் நாட்டிற்கும் மலைக்குந் தலைவன் என்பதும் ஒருகணை தெரிந்துகொண்டு புலி யாதென்ற அவனது வீரியமும் கூறி உயர்த்தவாறும் அமைந்தது.

**7.20.3 வேட்கையுரைத்தல்:** - தலைவன்மாட்டுத் தலைவி வேட்கையும் தலைவிமாட்டுத் தலைவன் வேட்கையும் கூறுதல். வேட்கைகூறி அறத்தொடு நிற்றல்.

''நின்மகளுண்கண் பன்மா ணோக்கிச் சென்றோன் என்பது தலைவன் வேட்கை கூறியவாறாம் .

ஒலிவெள்ளருவி யோங்குமலை நாடன்

மலர்ந்த மார்பிற் பாயல்

தவநனி வெய்ய நோகோ யானே"( ஐங்குறு . 215 ) - தலைவி வேட்கை கூறியது .

**7.20.4 கூறுதல்** - தலைவியைத் தலைவற்குக் கொடுக்கவேண்டும் என்பதுபடக் கூறுதல்

''வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்

கோடாது நீர்கொடுப்பின் அல்லது - வாடா

எழிலும் முலையும் இரண்டிற்று முந்நீர்ப்

பொழிலும் விலையாமோ போந்து". ( திணைமாலை . 15 )

**7.20.5 உசாவுதல் -** வெறியாட்டுங் கழங்கும் இட்டுரைத்தபோது வேலனோடோ பிறரோடோ தோழி உசாவுதல் .

''முருகயர்ந்து வந்தமுதுவாய் வேல

விண்டேர் மாமலைச் சிலம்பன்

தண்டா ரகலமும் உண்ணுமோ பலியே".( குறுந் . 362) - இது வேலனொடு உசாவுதல் .

**7.20.6 ஏதீடு தலைப்பாடு** - யாதானுமோர் ஏதுவை இடையிட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல். புனலிடை உதவினான், களிற்றிடை உதவினான், தழையும் கண்ணியும் தந்தான் எனறாற்போல்வன.

''காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள் ---

அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே".(கலித். 39)

''அன்னாய் வாழிவேண் டன்னை என்னை

தானு மலைந்தான் எமக்குந்தழை யாயின'' (ஐங்குறு. 201) - தழையும் கண்ணியுந் தந்தானென்பதுபடக் கூறியது.

**7.20.7 உண்மை செப்பும் கிளவி** - பட்டாங்கு கூறுதல்.

''அல்கண் மழை பொழிந்த அகன்கண் அருவி ----

குறிப்பு

முயங்காது கழிந்த நாளிவள்
மயங்கிதழ் மழைக்கண் கலிழும் அன்னாய்." (ஐங்குறு. 220).

**7.20.8 வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டல்:** - தமர் வரைவுடன் பட்டமையைத் தலைவற்கு உரைத்தல்.

**7.20.9 வன்புறை** -அவ்வாறு வரைவுடம்பட்ட தன்மையினால் தலைவியை வற்புறுத்தற் கண்ணும் தோழி கூற்று நிகழும்.

"யானுங் காதலென் யாயும் நனி வெய்யன்
எந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே". (குறுந். 51)

இவ்வாறுடி பகுதிப்பட வந்த முப்பத்திரண்டு வகைப்பட்ட தலைவிக்கு இன்றியமையா தோழி கூற்றிற்கு உரியவைகளாகும். அவையாவன:

மேற் சொல்லப்பட்ட முன்னுற உணர்தல் வகை, குறையுற வுணர்தற்கண் பெருமையிற் பெயர்த்தல், உலகுரைத் தொழித்தல், அருமையினகற்றல், பின் வாவென்றல், பேதைமை யூட்டல், முன்னுறு புணர்ச்சி, முறைதிறுத்துரைத்தல். அஞ்சியச்சுறுத்தல். உரைத்துழிக் கூட்டம் எனச் சொல்லப் பட்ட எண்வகை மாயஞ் செப்பி வந்த கிழவனைப் பொறுத்த காரணம் குறித்தலாகிய இருவருமுள்வழி அவன்வர வுணர்தல், புணர்ந்தபின் அவன்வயின் வணங்கல் குறைநயப்பச் சேறல். குறைநயப்புவகை, நயந்தமை கூறல், அலராமென்றல், புணர்ச்சி வேண்டியவழிக் கூறல், பிரிவு வேண்டியவழிக் கூறல், வேளாண் பெருநெறி வேண்டிக்கூறல், அல்ல குறிப்பட்டவழிக் கூறல், ஓம்படைகூறல், இயற்பழித்து வற்புறுத்தல், ஆறின்னாமை கூறல், காப்பு மிகுதி கூறல், காதல் மிகுதி கூறல், அவன் வயிற் றோன்றிய கிளவி, ஐயச்செய்கை தாய்க்கெதிர் மறுத்தல், குறி பார்த்தல், விலக்கல், வெறிவிலக்கல், பிறன் வரைவு மறுப்பித்தல் அவன் வரைவுடம்படுத்தல், வரைவுடம்பட்டமை தலைவற்குக் கூறல், உடம்பட்டமை தலைவிக்குக் கூறி வற்புறுத்தல் என இவை இவை முப்பத்திரண்டும் தலைவிக்கு இன்றியமையாத தோழி மேலனவாய் வரும்.

## 7.21 களவில் செவிலுக்குரிய கூற்றுகள்:

களவில் இன்றியமையாத இடத்தினைப் பெறும் பாத்திரங்களுள் குறிப்படத்தக்கவள் செவிலி ஆவாள்.இச் செவிலியின் சிறப்புக்களை

ஆயப்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப்படுபவள் செவிலி யாகும்

எனக் குறிப்பார் தொல்காப்பியர். அத்தகைய செவிலி கூற்று நிகழும் இடங்களைக் கீழ்க்கண்ட நூற்பா சுட்டியுரைக்கின்றது.

**7.22** களவல ராயினுங் காமமேற் படுப்பினும்
அளவுமிகத் தோன்றினுந் தலைப்பெய்து காணினுங்
கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்

குறிப்பு

காதல் கைம்மிகக் கனவின் அரற்றலுந்
தோழியை வினாதலுந் தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்து மகள்நெஞ்சு வலிப்பினும்
இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு
அன்னவை பிறவுஞ் செவிலி மேன.

களவலராதல் முதலாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று கிளவியும் அத்தன்மைய பிற கிளவியும் களவுகாலத்துச் செவிலிக்குரிய கிளவிகள் ஆகும். இவற்றுள் தோழியை வினாதல் என வேறொரு கிளவியாக கூறினாரெனினும் அதன் முன்பு நிகழும் கிளவியெல்லாம் அவளை வினாதற்குக் காரணமாதலின் அவை ஈண்டுப் பதின்மூன்று என எண்ணப் பட்டன.

**7.22.1 களவு அலராதல்** - தலைவன் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப்பட்ட விடத்துத் தோழியை வினாவும் கூற்று செவிலிக்கு உரியதாம்.

“பாவடி உரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவ தெவன்கொல்இப் பேதை ஊர்க்கே”

**7.22.2 காம மேற் படுத்தல்:** - தலைவி மாட்டுளதாகிய காமவேட்கை அளவிறப்பினும் தோழியை வினாவும் கூற்று செவிலிக்கு உரியதாம்.

“மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு.” (குறள். 1273)

**7.22.3 அளவு மிகத் தோன்றல்**: - பெதும்பைப் பருவத்தளாகிய தலைவி புணர்ச்சியாற் கதிர்த்து வீங்குகின்ற முலையும் புதிதுற்ற கவினுங் கண்டவிடத்துந் தோழியை வினாவும் கூற்று செவிலிக்கு உரியதாம்.

“கண்நிறைந்த காரிகைக் காம்பேர் தோட்பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது”. (குறள். 1272)

**7.22.4 தலைப்பெய்து காணல் -** தலைவனோடு தலைவியை ஒன்றாகக் “காணினும் வினாவும் கூற்று செவிலிக்கு உரியதாம்.
மிடையூர் பிழியக் கண்ட னென” . (அகம். 158)

கட்டு வைப்பித்தல் - கட்டுவைப்பித்த வழியும் அக்கட்டுவிச்சியர் சொற் கேட்டுத் தோழியை வினாவல்

**7.22.5 கழங்கு வைத்தல் -** கழங்கு வைத்த பொழுதும் அவர்சொற் கேட்டுத் தோழியை வினாவல் செவிலிக்குரித்து

**7.22.6 வெறியென இருவரும் ஒட்டிய திறத்தாற் செய்தி:** செவிலியும் நற்றாயும் பொருந்திய பக்கத்துக் கண்டு வெறியாடுவாம் என்றவழித்

தலைவி எய்திக்கண்ணுந் தோழியை வினாவல். ஈண்டு கட்டுவிச்சி, வேலன் இருவரையே தொல்காப்பியர் இருவர் எனக் குறிப்பதாய்க் குறிப்படுவார் நச்சினார்க்கனியர்.

**7.22.7 ஆடிய சென்றுழி அழிவு தலைவருதல்**: - வெறியாடச் சென்றவழி அதற்குத் தலைவி வருந்துமிடத்துச் செவிலி கூற்று நிகழும்.

கடவுட் கற்சுனை எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில்

"வேலன் வேண்ட வெறிமனை வந்தோய" (நற்றிணை 34) - தோழி கூறுதல்.

**7.22.8 காதல் கைம்மிகக் கனவின் அரற்றல்:** - காதன் மிகுதியால் தலைவனை எண்ணிக் கனவின்கண் தலைவி அரற்றுகின்ற போதும் செவிலி கூற்று நிகழும்.

மேற்கூறியவை நிமித்தமாகத் தோழியை வினாவுவாள் செவிலி. எனவே களவலராதல் முதற் கனவினரற்றல் ஈறாக ஓதிய ஒன்பது கிளவியும் தோழியை வினாதற்பகுதியாகும். அவை நிகழாதவழி வினாதலில்லை. அதனால் தோழியை வினாதல் என ஒரு கூற்றாகக் கொள்ளலாகாது என்பார் இளம்பூரணர்.

**7.22.9 தெய்வம் வாழ்த்தல்** - இவ்வாறு நிகழ்ந்தது எனத் தோழி உரைத்தவழி இதனை நற்றாய்க்கும் தந்தைக்கும் கூற ஆற்றாளாதாய்த் தெய்வத்தை வேண்டிக்கோடல்.

**7.22.10 போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக் கற்பின் ஆக்கத்து நிற்றல்:** தலைவி தலைவனுடன் போயினாள் என்று அறிந்தபோது தானும் தோழியோடு பொருந்தி இல்லத்தின்கண் நிறுத்தற்கண்ணும் செவிலி கூற்று நிகழும்.

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
---------------------------------------------------------
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே." (குறுந். 15)

**7.22.11 பிரிவின் எச்சத்து மகள் நெஞ்சு வலித்தல்:** - தலைவன் வரையாது பிரிந்தவழி தனியான தலைமகள் அலராகுதலும் இன்றி வேறுபாடுமின்றி ஒரு மனைப்பட்டிருந்தபோது அவளது உள்ளக்கருத்தை அறிந்த வழியும் செவிலி கூற்று நிகழும்.

**7.22.12 இருபாற் குடிப்பொருள் இயல்பு** - தலைவன் குடிமை தன் குடிமையோடு ஒக்குமென ஆராய்தற்கண்ணும் செவிலி கூற்று நிகழும்.

அன்னவை பிறவும் என்றதனான். நாற்றம் பெற்று நிலைப்புக் காண்டல், உண்டியிற் குறைதல், உடம்புநனி சுருங்கல், கண் துயில் மறுத்தல் கோலஞ்செய் யாமை முதலாயின வழியும் செவிலி கூற்று நிகழும் என்பார் இளம்பூரணர்.

## 7.23 நற்றாய்க்கு உரியதோர் இலக்கணம்

தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே.

செவிலி உணர்வோடு உடம்பட்ட உள்ளத்தளாயின் நற்றாய்க்கும் மேற்சொல்லப்பட்டவை எல்லாம் வரையப் படா.

உணர்வு உடம்படுதலாவது தலைவியை உற்று நோக்கும் நிகழ்ந்தவழி அன்றித் தானும் செவிலியைப்போல உற்று நோக்காள். இப்பொருள்மேற் கிளவி வருவன உளவேனும் செவிலியைப்போல ஒருப்பட்ட உள்ளத்தாளாயின் அவள்கண்ணும் இக் கிளவியெல்லாம் நிகழும். உடம்படாதவாறு என்னை யெனின், யாரிடத்தும் மக்களை வளர்ப்பார் செவிலியராகலானும் தமக்குத் தம் இல்லற நிலைக்குக் கடவ பகுதியான அறனும் பொருளும் இன்பமும் வேண்டுதலானும் கூற்றொடு வேறுபாடு தோன்றாது என விளக்குவார் இளம்பூரணர்.

## 7.24 நற்றாயும் செவிலியும் துணியுமாறு கூறல்:

கிழவோன் அறியா அறிவினள் இருளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே.

தலைமகன் அறியா அறிவினையுடைவள் என்பதனால் ஒரு பக்கம் எதிர்காலம் நோக்கிக் கூறினார் போலத் தோன்றும்; ஒரு பக்கம் இறந்தகாலம் தோன்றும். அவன் அறியாத அறிவுரிமை பூண்டு மயங்குதல், அவள் எத்துணையும் மயக்கமிலள் எனவும் அவன் பொருட்டு மயங்கினாள் எனவும்படக் கூறுதல், தலைவன் அறியாத அறிவினையுடையவள் எனக் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோர்மாட்டு உளதாகிய ஐயக்கிளவியால் புணர்ப்பறிதலும் செவிலிக்கும் நற்றாய்க்கும் உரியதாம்.

## 7.25 தலைவி தன் வேட்கை தலைவன்முன் கிளத்தல் இல்லை:

தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப.

தலைவி தனது வேட்கையைக் கிழவன் முன்பு சொல்லுதல் நினைக்குங் காலத்துக் கிழத்திக்கு இல்லை. அங்ஙனம் சொல்லாதவிடத்தும் புதுக்கலத்தின்கட் பெய்த நீர்போலப் புறம்பொசிந்து காட்டும் உணர்வினை உடையது அவ்வேட்கை ஆகும்.

காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவ ராகலும் உரித்தே.

களவிற்புணர்ச்சிக் குரியதொரு வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

மேற் சொன்னவாற்றால் பாங்கனும் தோழியும் நிமித்தமாகக் கூடுதலேயன்றித் தாமே தூதுவராகிய கூட்டங்கள் நிகழப்பெறும்.

## 7.26 தலைமகள் குறியிடம் கூறல்:

அவன்வரம் பிறத்த லறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
தான்செலற் குரியவழி யாக லான.

குறிப்பு

தலைவன் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்பு, தலைவனெல்லையை மறத்தல் தலைவிக்கு அறமாக அன்மையானே குறியிடம் கூறுதல் தலைமகள்தாம்; அது அவள் எளிதில் தான் சேறற் குரிய இடமாதல் வேண்டும் என்பதனால் ஆகும்.

**7.26.1** தோழியின் முடியும் இடனுமார் உண்டே.

இது, தோழியிற் கூட்டத்திற் காயதொரு சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

மேல் காமக்கூட்டந் தனிமையிற் பொலிதல் ஆற்றாமே தூதுவராகலும் உரித்து எனக் கூறினார் தொல்காப்பியர். அவ்வாறன்றி மேற் சொல்லப்பட்ட இயற்கைப் புணர்ச்சியானது தோழியின் முடியுமிடத்து ஓரிடத்து உண்டு. "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" (இறையனார் களவியல்-1) என்றதனால் யாண்டும் உள்ளப் புணர்ச்சியான் வேட்கை மீதூர்ந்த வழியே தோழியின் முடியப் பெறுவது என்று கொள்க. இல்லையாயின் பெருந்திணைப்பாற்படும்.

## 7.27 பாங்கற் கூட்டம் நிகழுமிடம்

முந்நா ளல்லது துணையின்று கழியாது
அந்நா ளகத்தும் அதுவரை வின்றே.

மேல் தோழியிற் கூட்டத்தின் விகற்பங் கூறினாராகலின், இங்கு துணை என்றது பாங்கனைக் குறித்தது. மூன்று நாளல்லது துணையின்றிக் களவிற் புணர்ச்சி செல்லாது; அந் நாளகத்தும் துணையை நீக்கவும் படாது. எனவே, எதிரப்பட்ட தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும்.

## 7.28 தலைவிக்கு உரியதோர் இயல்பு:

பன்னூறு வகையினுந் தன்வயின் வருஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலில்
துணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
துணையோர் கரும மாத லான.

பன்னூறு வகையின் என்பது - பலவகையானும் என்றவாறு. நூறு, பத்து, ஆயிரம் என்பன பல் பொருட்பெயர். தன்னிடத்து வரும் நல்ல நயப்பாட்டு பக்கத்தினை ஆராய்தல் தலைவன் மாட்டு வேண்டுமாதலால், துணையைச் சுட்டிக் கூறலுறும் சொல் தலைமகளதாகும்; தான் கூறும் கருமம் துணையோராற் செய்யப்படும் கருமம் ஆதலான் என்றவாறாம். எனவே, தலைமகன் களவுகாலத்துப் பாங்கற்கு உற்றதுரைத்த பின்பு பாங்கனைச் சுட்டி யாது செய்வாமெனக் கூறப் பெறும் என்றவாறு ஆயிற்று.

## 7.29 செவிலிக்கு உரியதோர் சிறப்பு:

ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள் செவிலி யாகும்.

நல்ல பெரிய சிறப்பினையுடைய அறிதற்கரிய மறைப் பொருள் யாவற்றையுங் கூறும் கடப்பாடுடையளாதலின் தாய் எனப்படுவாள் செவிலியாவாள்.

நற்றாய் இத்துணைச் சிறப்பினை உடையவள் இல்லை. இதனாற் பயன் களவுக் காலத்தையச் சொல் செவிலித்தாய்க்குங் கைத்தாய்க்கும் பொதுவாயினும் ஈண்டு தாயென்று வேண்டப்படுவாள் செவிலி ஆவாள்.



## 7.30 தோழிக்கு உரியதோர் சிறப்பு:

தோழி தானே செவிலி மகளே.

களவுக் காலத்தும் இன்றியமையாளாகத் தலைவியால் வேண்டப்பட்ட தோழி செவிலிமகள் ஆவாள்.

எனவே, பயின்றார் எல்லாருந் தோழியராகார். அருமறை கிளக்கப் படுதலான் உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழி எனப்படுவாள்.

சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே.

மேற்சொல்லப்பட்ட தோழி தான் சூழ்தற்கும் தலைவி சூழ்ச்சிக்கு உசாத்துணையாகியும் வரும் நிலைமையாற் பொலிவு பெறுவாள்.

எனவே, செவிலிமகள் என்னுந் துணையாற் பொலிவு பெறாள் ; என்றும் தோழியாவாள் செவிலி மகளாதலேயன்றிச் சூழவும் உசாத்துணையாவும் வல்லள் ஆதல்வேண்டும் என்பதும் பெறப்படும்.

## 7.31 தோழி மதியுடம்பாடு:

பாங்கற் கூட்டம் நிகழ்ந்த பின் தலைவன் தானே இடர்பட்டுத் தலைவியைக் கூட முடியாத போது தோழியைக் குறையிரந்து அவள் வழித் தலைவியைக் கூட முயல்வான்.தோழியிற் கூட்டம் விரும்புபவன் அத்தோழியை மதியுடம்படுத்த பின்னரே தன் குறை முடிக்கவேண்டும் என்று அவளிடம் தன் கருத்தினைக் கூறுவான்.மதியுடம்படுத்தல் என்பது தோழியின் அறிவினை உடன்படச் செய்தல் என்னும் பொருளதாகும்.தலைவன் தன் குறையைக் கரந்த மொழியான் அறிவிக்க அதனைக் கேட்ட தோழி இருவர் கருத்தினையும் தன் மதியோடு ஒன்றுபடுத்தி உணர்வாள்.இவ்வாறு மூவர் மதியினையும் ஒன்றுபடுத்தி உணர்தலின் இது மதியுடம்படுத்தல் எனப்பெற்றது,தலைவன் குறையுற உணர்தலும் அவன் குறையுறாவழித் தலைவி குறிப்புக்கண்டு உணர்தலும் தானும் தலைவியுங் கூடியிருந்துழித் தலைவன் வந்தமைகண்டு உணர்தலும் எனத் தோழி அறிவுடம்படுத்தல் மூன்று வகைப்படும்.இதனை விளக்கும் நூற்பா,

குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்  
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென  
மதியுடம் படுதல் ஒருமூ வகைத்தே. என்பதாகும்.

மதியுடம்படுதல் எனினும் புணர்ச்சியுணர்தல் எனினும் ஒக்கும், இம்மூன்றினும் ஒன்று கண்டுழி அவரவர் குறிப்பினாற் புணர்ச்சியுணரும். குறையுணர்தல் நன்கு புலப்படுதலின் முன்வைத்தார். முன்னுறவுணர்தல் அதன்பின் வைத்தார், தலைவி வேறுபாடு கண்டு பண்டையிற்போலாள் என்னும் நிகழ்ச்சியான் முற்றத் துணிவின்மையின், இருவரு முன்வழி யவன் வரவுணர்தல் அதன்பின் வைத்தார். ஆண்டுப்புதுவோன் போலத் தலைவன் தருதலானும் தலைவி கரந்த உள்ளத்தளாய் நிற்குமாதலானும் அத்துணைப்

புலப்பாடின்மையின், அக்கருத்தினானே மேற்சொல்லப்பட்ட தோழி கூற்று மூவகையாகப் பொருள் உரைத்ததென்று கொள்க என முறை வைப்பிற்கு உரை விளக்கம் தருவார் இளம்பூரணர்.

**7.31.1** அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாள் என மொழிப.

இதுவும் தோழிக்கு உரியதொரு திறன் உணர்த்துதல் நுதலிற்று . மேற்சொல்லப்பட்ட கூறுபாட்டான் இருவர் மாட்டும் அன்புடைமை உணர்ந்தபின் அல்லது வழிபாட்டு நிலைமையாற் கூட்டத்திற்கு முயலப்பெறாள் தோழி.

**7.31.2** முயற்சிக் காலத் ததற்பட நாடிப்
புணர்த்த லாற்றலும் அவள்வயினான.

இதுவும் மேற்குறித்ததாம்.

## 7.32.குறியிடம்:

குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிடந்த ஆற்ற தென்ப.

குறி என்பது இரவிற்குறி, பகற்குறி என இருவகைப்படும்.

**7.32.1 இரவுக்குறி**

இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான.

இரவுக்குறியின் இடம் இல்லகத்துள் மனையகம் புகாவிடத்துக்கண் மனையோர் சொல் கேட்கும் அருகில் அமைவதாம்.

**7.32.2 பகற்குறி:**

பகற்புணர் களனே புறனென மொழிப
அவளறி வுணர வருவழி யான.

பகற்குறியாகிப் புணருமிடம் எயிற்புறன் என்று சொல்லுவர். ஆண்டுந் தலைமகள் அறிவிற்றுவரும் இடனாகல் வேண்டும்.

## 7.33 அல்லகுறி

அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே.

அல்லகுறிப்படுதலுந் தலைமகட்கு உரித்து ; தலைவன் செய்த குறிமயங்கிய பொருத்தத்தொடு வரின் அல்லகுறிப்படுதலுந் தலைமகட்கு உரித்து.

## 7.34 தலைவிக்கு உரிய இயல்பு

ஆங்காங் கொழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒருசிறை யான.

அவ்வவ்விடத் ஒழுகும் ஒழுக்கமுந் தலைவியிடம் உண்டு, ஓங்கிய சிறப்பினையுடைய ஒருபக்கத்து என்றவாறு.ஒரு சிறையென்றது மனத்தானும் மொழியானும் மெய்யானும் கற்புடை மகளிர் ஒழுகும் ஒழுக்கம்.

## 7.35 தலைவற்கு உரிய இயல்பு

துறந்த ஒழுக்கங் கிழவற் கில்லை.

களவொழுக்கத்து முகார்த்தமும் நாளும் துறந்தொழுகும் ஒழுக்கம் தலைவற்கு இல்லை. ஆண்டு அறத்தின் வழுவினானல்லன் தலைவிமாட்டுத் தலையளி குறைதலான் என்பதாம்..

ஆறின தருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உளப்பட அதனோ ரற்றே.

நெறியினது அருமையும் அஞ்சுதலும் இடையூறும் தலைவன்மாட்டு நிகழாது..

## 7.36 தந்தைக்கும், தன்னையருக்கும் உள்ள மரபு:

தந்தையுந் தன்னையும் முன்னத்தின் உணர்ப

தந்தையும், தன்னையரும் களவு உணருமாறு உணர்த்திற்று. தந்தையரும் தன்னையரும் குறிப்பின் உணர்வர். எனவே , கூற்றினான் உரைக்கப் பெறார்.

## 7.37 நற்றாய்க்கு உரிய மரபு:

தாய் அறிவுறுதல் செவிலியோ டொக்கும்.

நற்றாய் களவொழுக்கம் அறிவுறுத்தல் செவிலியோடு ஒக்கும்.. செவிலி கவலுந்துணைக் கவலுதல் அல்லது தந்தையையும் தன்னையன்மாரையும்போல வெகுளுதல் நற்றாய்க்கு இல்லை. காமர் கடும்புனல் எனத்தொடங்கும் கலித்தொகைப் பாட்டினுள்,

"அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்". (கலித்.39) - எனத் தாய் வெகுளாமை காணப்பட்டது.

## 7.38 அம்பலும் அலரும்:

அம்பலும் அலருங் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவ னாகும்.

அம்பல் என்பது முகிழ்த்தல், அ∴து ஒருவரொருவர் முகக்குறிப்பினால் தோற்றுவித்தல்.அலராவது சொல்லுதல். அதனானே இவை இரண்டும் களவினை வெளிப்படுத்தலின் அதற்குக் காரணமாவான் தலைவனே ஆவான்.

## 7.39 வரைதல்:

வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே.

களவு வெளிப்பட்டபின் வரைதலும் களவு வெளிப்படும் முன் வரைதல் என வரைதல் இரண்டு வகைப்படும். இதனால் இருவகையானும் அறன் இழுக்காது.

## 7.40 தலைவற்கு உரியதோர் இயல்பு

வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக
வரையாது பிரிதல் கிழவோற் கில்லை.

களவு வெளிப்படுதல் கற்பினோடு ஒப்பினும் மேற்சொல்லப்பட்ட மூன்று பொருளாக வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை. அவையாவன ஓதற்பிரிவும், பகைவயிற்பிரிவும் தூதிற் பிரிவும் ஆம். எனவே பொருள்வயிற் பிரிதலும் வேந்தர்க்கு உற்றுழிப் பிரிதலும் காவற்பிரிதலும் நிகழப்பெறும்.

**பயிற்சி வினாக்கள்:**

**1.**சிறப்புடை மரபினவை களவினை விளக்குக.
பாடப்பகுதி 7.9 இன் பகுதியில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.
2.தோழி மதியுடம்பாடு பற்றிக் குறிப்பிடுக.
பாடப்பகுதி 7.31 இன் பகுதியில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.
3.களவின்கண் தலைவிக்கு கூற்று நிகழும் இடங்களை விவரி.
பாடப்பகுதி 7.17 இன் பகுதியில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.
4.களவில் தோழிக்கு கூற்று நிகழிடங்களை விளக்குக.
பாடப்பகுதி 7.19 இன் பகுதியில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.
5.குறியிடம் பற்றி விவரி.
பாடப்பகுதி 7.32, 7.32.1, 7.32.2 இன் பகுதிகளில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

# கூறு 8 : கற்பியல்

**நோக்கம்: அகமரபில் கற்பு பெறும் இடத்தினையும் கற்பில் அகத்திணை மாந்தர் கூற்று மரபுகளையும் அறிதல்.**

**கற்பியல்**

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் நான்காவது இயல் கற்பியல் ஆகும். இவ்வியல் கற்பு, கற்பு சார்ந்த ஒழுக்கங்களைப் பற்றி விளக்குதலால் கற்பியல் என்று அழைக்கப்பெற்றது.தொல்காப்பியர் இவ்வியலில் அமைந்துள்ள நூற்பாக்களின் வழி கரணம், அகமாந்தர் கூற்றுகள், பிரிவுகள், ஊடல், ஊடல் தணிக்கும் வாயில்கள் போன்றவற்றை விளக்கி உரைக்கிறார்.

## 8.1 கற்பு:

கற்பென்று சொல்லப்படுவது கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினை யுடையார் கொடுப்பக் கொள்வது ஆகும்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.

களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற்கூடி ஒழுகிய வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின் அ∴தாகாது என்றற்குக் கரணமொடு புணர என்றார். கரணம் என்பது - வதுவைச் சடங்கு. கொளற்குரி மரபிற் கிழவோன். என்றதனால் ஒத்த குலத்தானும் உயர்ந்த குலத்தானும் என்று கொள்க. கொளற்குரி மரபிற் கிழத்தி என்றதனால், ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளும் என்று கொள்க. கொடைக்குரி மரபினோர் என்றதனால், தந்தையும் தாயும் தன்னையரும் மாதுலனும் இவரில்லாதவழிச் சான்றோரும் தெய்வமும் என்று கொள்க. கொடுப்பக் கொள்வது கற்பு என்றமையால், அது கொடுக்குங்கால், களவு வெளிப்பட்ட வழியும், களவு வெளிப்படாத வழியும், மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப் புணர்ச்சியான் உரிமைபூண்ட வழியும் கொள்ளப் பெறும் எனக் கொள்க . களவியற் சூத்திரத்துள்,

“இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த”. (களவியல்-1)

என்பதனைத் தந்துரைத்து, ஐந்திணை மருங்கிற் கற்பெனப்படுவது எனக் கூட்டுக.

அ∴தேல், கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண் வகையும் கொள்க. கொடுப்போ ரின்றியும் கரண முண்டே-புணர்ந்துடன் போகி
காலை யான“ என்னும் இது கற்பாகுமோ எனின், அவையும் கற்பாதல் ஒக்குமேனும் கந்திருவம்போல ஒத்த அன்புடையார் ஆகல்

ஒருதலையன்மையின் கைக்கிளை பெருந்திணைப்பாற் படும் . ஈண்டு ஐந்திணை தழுவிய அகத்திணையே களவு கற்பு எனப் பகுத்தார் என்க என்பது இளம்பூரணர் தரும் உரைவிளக்கம் ஆகும்.

**8.1.1 கொடுப்போர் இன்றிக் கரணம்:**

கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான.

புணர்ந்துடன் போகிய காலத்து கொடுப்போரின்றியும், கரண நிகழ்ச்சி உண்டு.

எனவே கற்பிற்குக் கரணநிகழ்ச்சி ஒருதலையாயிற்று. இதனானே கொடுப்போர் இல்வழியும் நிகழும் கரணநிகழ்ச்சி உண்மையும் ஒழுக்கக் குறைபாடு இன்மையும் கொள்க என்பர் இளம்பூரணர்,

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே" ( குறுந் . 15)

இதனுள் விடலையொடு மடந்தைநட்பு பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழிபோல வாயாயிற்று எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும் விடலை எனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறினமையானும் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்ந்தது வெளிப்பட்டு நிற்கும்.

**8.1.2** மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமும் உண்டே.

மேற் குலத்தாராகிய அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று வருணத்தார்க்கும் புணர்த்த கரணம் கீழோராகிய வேளாண் மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு.

இதனாற் சொல்லியது, முற்காலத்துக் கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லாருக்கும் ஆம் என்பதும் பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்ததெனவுங் கூறியவாறு போலும். அ∴தாமாறு தருமசாத்திரம் வல்லாரைக் கொண்டுணர்க என்பார் இளம்பூரணர்.

**8.1.3** பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.

பொய்கூறலும் வழூஉப்பட ஒழுகலும் தோன்றிய பின்னர் ஐயர் கரணத்தைக் யாத்தனர் என்று சொல்வர்.

## 8.2 கற்பில் தலைவன் கூற்று:

கற்பில் தலைவன் கூற்று நிகழும் இடங்களை பினவரும் நூற்பா விளக்கி உரைக்கிறது.

கரணத்தின் அமைந்து முடிந்த காலை

குறிப்பு

நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பொருமையின் நிலைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமோ டளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணுஞ் சொல்லென
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவுந் தொடுத்தற்கண்ணும்
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமர லுள்ளமொ டளவிய இடத்தும்
அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல்அஞ்சலென் றாயிறு பொருளினுந்
தானவட் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்தபுனிறுதீர்பொழுதின்.
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது
உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லன் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடன்மிகுத் தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளுஞ்
சென்றுகை இகந்துபெயர்த் துள்ளிய வழியுங்
காமத்தின் வலியுங் கைவிடின் அச்சமுந்

தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறற் செய்கையொ டன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழிக் கண்ணும்
வேற்றுநாட்டகல்வயின் விழுமத்தானும்
மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்
பேரிசை யூர்திப்பாகர் பாங்கினுங்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிருஞ்
சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி
இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்
அருந்தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தோடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை யேந்திய பெண்டிரும் மக்களுங்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇப்
பண்ணமைபகுதிமுப் பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.

கரணத்தினமைந்து முடிந்த பின்பு, நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி முதலாக ஏனைய வாயிலோர் எதிரொடு கூடிப் பண்ணுதலமைந்த பகுதியினையுடைய முப்பத்தின் மூன்றிடத்தினும் கூறல் சிறப்பினையுடைய கிழவோன் மேலன ஆகும்.

கரணத்தி னமைந்து முடிந்த காலை - ஆசான் புணர்ந்த கரணத்தினால் வதுவை முடிந்தபின் என்பதாம்.

**8.2.1 நெஞ்சு தளையவிழ்தல்** - தலைவியைத் தலைவன் கண்ணுற்ற காலத்து தலைவன்மாட்டு உளதாகிய பெருமையும் உரனும் தலைவிமாட்டு உளதாகிய அச்சமும் நாணும் மடனும் ஏதுவாக இயற்கைப்புணர்ச்சி இடையீடு பட்டுழி வேட்கை தணியாது வரைந்து எய்துங்காறும் இருவர்மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டு விடப்படுதல். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் அலர் அறிவுறுக்கப்பட்டு நீங்கி வரைந்து எய்துங்காலும் புணர்ச்சி வேட்கையாற் செல்கின்ற நெஞ்சினை இருவரும் வேட்கை தோற்றாமல் தளைக்கப்பட்டதனைத் தளை என்றலும் ஒன்று ஆகும்.

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
----------------------------------------------------------
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின் -------
அகமலி உவகையள் ஆகிமுகன் இகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே மாவின" (அகம் 89)

இதனுள் முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப அஞ்சினள் உயிர்த்தகாலை என்பதனால் இயற்கைப் புணர்ச்சி இன்மையும், அகமலி யுவகையாகி முகன் இகுத்து ஒய்யென விறைஞ்சி என்பதனால் உள்ளப் புணர்ச்சி உண்மையும் அறிக.

**8.2.2 எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவம்** -ஒழியாத மகிழ்ச்சி மிக்கு வருங்காலத்துத் தலைவன்கண் கூற்று நிகழும்.

“குனிகாயெருக்கின் குவிமுகிழ் விண்டலோடு

------------------------------------------------------------

பலபா ராட்டவும் படுவ மாதேர்
கடைந்து கவித்தன்ன கால்வீங்கு கருங்கட்
புடைதிரள் வனமுலை புலம்பல் அஞ்சிக்
காமர் நுழை நுண் நுசுப்பின்
தாமரை முகத்தியைத் தந்த பாலே”.

**8.2.3 அஞ்சவந்த உரிமைக்கண்** - தலைவன் தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவிமாட்டு உளதாகிய கற்பாகிய உரிமைக்கண்ணும் கூற்று நிகழும்.

**8.2.4 நன்னெறிப்படரும் தொன்னலப் பொருள்:** நன்னெறிக்கண் செல்லும் தொன்னலப் பொருண்மைக் கண்ணும் கூற்று நிகழும். நன்னெறியாவது அறம் பொருளின்பம் வழுவாத நெறி. தலைமகன் சிறப்புத் தொன்றுதொட்டு வருதலினால் குடிநலத்தைத் தொன்னலம் என்றார். இதனாற் சொல்லியது அறம் பொருள் இன்பங்களை வழாமல் தன் குலத்திற்கேற்ற மனைவாழ்க்கையைத் தலைமகள் நடத்துதற்கண்ணும் தலைவன் கண் கூற்று நிகழும்.

“தடமருப் பெருமை மடநடைக் குழவி ----
அட்டி லோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே.” (நற்றிணை. 120)

இதனுள் ஊடற்குறிப்பினளாகிய தலைவி மனைவாழ்க்கைத் தருமமாகிய விருந்து புறந்தருதல் விருப்பினளாதலின் நன்னெறிப் படர்தல் ஆயிற்று.

**8.2.5 பெற்றதே எத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்துரைத்தல்:** தலைவியை வரைந்து பெற்ற நிலையில் அவளை இல்லறத் தலைமையாகிய பெருமையின்கண்ணே நிறுத்திக் களவுக் காலத்துக் குற்றஞ்சான்ற பொருளை எடுத்துக் கூறுதல்.

“நுந்தை நன்னாட்டு வெந்திறல் முருகென
நின்னோய்க் கியற்றிய வெறிநின் தோழி
திருந்திழைப் பணைத்தோள் புணர்ந்துவந் ததுவே.” ( புறம் )

நாமக் காலத்து உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கு: - அச்சக்காலத்து நமக்குத்துணையாயிற்றெனத் தோழி ஏமுறு கடவுளை ஏத்துதற்கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்..

**8.2.6 அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருள்**: - தலைவி தன் துன்பந்தீர ஆர்வத்தொடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மைக்கண்ணும் தலைவன் கூற்று நிகழும். அதாவது களவுக்காலத்து வருந்திய வருத்தந்தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற் பொருளின்கண்ணும் தலைவன் கூற்று நிகழும்.

“யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதுஞ்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே” (குறுந்.40 )

**8.2.7 சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந்தொடுதல்:** - யாதானும் ஒன்றை நுகரினும் நீ கையால் தொட்டது வானோர் அமிழ்தம் புரையும், இதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் தொடுத்தற்கண்ணும் பூத்தொடுத்தற்கண்ணும் கூற்று நிகழும்.

**8.2.8 அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கம் காட்டிய குறிப்பு:** - பார்ப்பார் கண்ணும் சான்றோர் கண்ணும் மிக்க சிறப்பினையுடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைக் குறிப்பினால் காட்டிய இடத்தினும் கூற்று நிகழும்.

**8.2.9 ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமரல் உள்ளமோடு அளவிய இடம்: -** ஒழுக்கத்தினுங் களவுக்காலத்து நிகழ்ந்த அருமையைத் தனித்துச் சுழன்ற உள்ளத்தோடே உசாவிய விடத்தும் தலைவன் கூற்று நிகழும்.

**8.2.10 அந்தரத்து எழுதிய எழுத்தின் மான வந்த குற்றம் வழி கெட ஒழுகல்**: - களவுக்காலத்து ஒழுகிய ஒழுக்கக் குறைபாட்டான் நிகழ்ந்த குற்றத்தை ஆகாயத்து எழுத்துப் போல வழிகெட ஒழுகுதல் கண்ணும் கூற்று நிகழும்.

**8.2.11அழியல் அஞ்சலென்று ஆயிரு பொருளினும் தானவன்பிழைத்த பருவம்:** - அழியல், அஞ்சல் என இயற்கைப்புணர்ச்சிக்கட் கூறிய அவ் இருபொருளைப் பிழைத்த காலத்தினும் தலைவன்கண் கூற்று நிகழும். அதாவது, புறப்பெண்டிர் மாட்டுப் பிரிதல்.

“நகுகம் வாராய் பாண பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காம நெஞ்சந் துரப்ப யாந்தம்

முயங்கல் விருப்பொடு குறுகினேம் ஆகப்
பிறவனப் புற்ற மாசறு திருநுதல்
நாறிருங்கதுப்பினெங் காதலி வேறுணர்ந்து
வெரூஉ மான் பிணையின் ஒரீஇ
யாரை யோவென்றுஇகந்துநின் றதுவே" (நற்றிணை - 250)

**8.2.12 நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிப் பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னின் ஆகிய தகுதி: -** பொறுமை பெருமையும் மெய்யெனக் கொள்ளுமாறு அருளி ஆராய்தல் அமைந்த வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னான் ஆகிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும். அதாவது பொறுத்தல் வேண்டும் எனவும் சிறுமை செய்தல் குற்றம் எனவும் கூறுதலும், தலைமகள் தன்னால் வந்ததனை என்னால் வந்தது நீ என் செய்தனை? இவள் வெகுள்தற்குக் காரணம் என்னை? என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்பதாம்.

"யாரினுங்காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று." (குறள் . 1314)

**8.2.13 புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ் செய் பெருஞ் சிறப்பு**: - புதல்வனைப் பயந்த ஈன்றணிமை நீங்கின பொழுதின்கண் நெய்யணி மயக்கம் புரிந்தவளைக் குறித்து முனிவர் மாட்டும் அமரரைக் குறித்தும் செய்யப்பெறும் பெரிய சிறப்பொடு சேர்தற்கண்ணும் கூற்று நிகழும்.

நெய்யணி மயக்கமாவது வாலாமை நீங்கி நெய்யணிதல் நோக்கிச் சேர்தல்.

"வாராய் பாண நகுகம் நேரிழை
நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்
புதல்வனை யீன்றெனப் பெயர்பெயர்த்து அவ்வரித்" ( நற்றிணை . 370)

**8.2.14 பயங்கெழு துணைமணைப் புல்லிப் புல்லாது உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகிய அல்கல் முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி புல்லிய இரவு:** - தலைவன் பரத்தையிற் பிரிந்துழி ஊடற் கொண்ட தலைவி பயங்கெழுதுணை அணையைப் புல்லிப் புல்லாது வருந்திக் கிடந்த தலைவியைக் கிட்டித் தங்குதலைக் குறித்த நிறையழி பொழுதில் தலைவியது மெல்லென்ற சீறடியைப் புல்லிய இரத்தற் பொழுதில் தலைவன் கூற்று நிகழும்.

"ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று." ( குறள் . 1307 )

**8.2.15 உறலருங் குரைமையின் ஊடன் மிகுத்தோளைப் பிறபிற பெண்டிரில் பெயர்த்தல்**: - ஊடல் மிகுத்தவளை உறுதற்கருமையாற் பிறபிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்தற் கண்ணும் தலைவன் கூற்று நிகழும்.

"புனவளர் பூங்கொடி யுன்னாய்

----------------------------------------------

குறிப்பு

ஒருத்தி புலவியாற் புல்லா திருந்தாள் அலவுற்று
வண்டினம் ஆர்ப்ப இடைவிட்டுக் காதல்
தண்தார் அகலம் புகும்'' (கலி - 92 ) - பிறபிற பெண்டிரைக் காட்டித் தலைவன் ஊடலுணர்த்தியது.

**8.2.16 பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் பரிவு நீக்கிய பகுதி:** - பிரிவு நிமித்தமாக வருந்திய மனையாளையும் காமக் கிழத்தியையும் அவ் வருத்தத்து நின்று நீக்கிய பகுதிக்கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும். அ∴தாவது பிரிவேன் எனல்.

“பொன்னும்மணியும் போலும் யாழநின்
யாதனிற் பிரிவாம் மடந்தை
காதல் தானுங் கடலினும் பெரிதே.” (நற்றிணை . 166)

**8.2.17 நின்றுநனி பிரிவின் அஞ்சியு பையுள்**: - நிலைநிற்க மிகப் பிரியும் பிரிவின்கண் அஞ்சிய நோயின்கண்ணும் தலவனுக்குக் கூற்று நிகழும்.

“ஆள்வழக்கற்ற சுரத்திடைக் கதிர்தெற
-----------------------------------------------------------
நீயுழந் தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
பிரியிற் புணர்வ தாயிற் பிரியாது
நினைமாண் நெஞ்சம் நீங்குதல் மறந்தே.” (அகம் 51)

**8.2.18 சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழி**: - மேற் கூறியவாறினைக் கையிகந்து முன்னொருகாற் சென்று மீட்டும் அந்நெறியினைப்போக நினைந்தவழியும் கூற்று நிகழும்.

“இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன
-------------------------------------------------------------
கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும்
புல்லிலை மராஅத்த அகன்சேண் அத்தங்
கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்
பின்நின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
நெடுஞ்சேண் ஆரிடை விலங்கு ஞான்றே.” (அகம் . 3)

**8.2.19 காமத்தின் வலி:** - பொருளினுங் காமம் வலியுடைத்து என உட்கொண்ட வழியும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

“விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிது பெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குற் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே.” (குறுந் . 101)

**8.2.20 கைவிடின் அச்சம்**: - தலைவியைக் கைவிட்டவழி அவளது உயிர்ப்பொருட்டு அஞ்சுதற்கண்ணும் கூற்று நிகழும்.

"இறப்ப எண்ணுதி ராயின் அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக வென்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பிழையலள் மாதோ பிரிதுநாம் எனினே." (அகம் . 5)

**8.2.21தானவட் பிழைத்த நிலை** - தலைவன் தலைவியை நின்னிற் பிரியேன் என்ற சொல்லிற் பிழைத்த நிலையின்கண்ணும் கூற்று நிகழும். பிழைத்தலாவது பிரிதல்:

"பொருந்தாக் கண்ணேம் புலம்புவந் துறுதரச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்து
போர்முடி நல்லிறைப் பொதியி லானே." (அகம் . 167)

**8.2.22 உடன் சேறற் செய்கை** : உடன் போக வேண்டுமெனச் சொல்லிய வழியும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

"செருமிகு சினவேந்தன்" என்னும் பாலைக் கலிப்பாட்டினுள்,
எல்வளை எம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ." (கலித் 13)

**8.2.23 அன்னவை பிறவும் மடம்பட வந்த தோழி**: - மேற்சொல்லப் பட்டவையிற்றினும் மடமைபட வந்த தோழி மாட்டும் கூற்று நிகழும்.

இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ" (கலித் . 2)

**8.2.24 வேற்று நாட்டகல்வயின் விழுமம்**: வேற்று நாட்டுக்கு அகலும்வழி நோயின்கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**8.2.25 மீட்டுவர வாய்ந்த வகை:** - பிரிந்த தலைவன் மீட்டு வரவு வாய்ந்த வகையின்கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

"செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே" (குறுந். 270) - இது வந்து புகுந்த தலைவன் கூற்று.

**8.2.26 அவ்வழிப் பெருகிய சிறப்பு:** - தலைவன் பிரிந்த வழிப் பெருகிய "சிறப்பினும் கூற்று நிகழும்.

கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாயது முயங்குகம் இனியே'' (குறுந். 62)

**8.2.27 பேரிசை ஊர்திப் பாகர் பாங்கு:** தான் உற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறுதற்கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

குறிப்பு

மறத்தற் கரிதால் பாக பன்னாள்

"வறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய

------------------------------------------------------------------------

மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே". (நற்றிணை.42)

**8.2.28 காமக் கிழத்திமனையோள் என்றிவர் ஏமுறு கிளவி சொல்லிய எதிர்:** -காமக் கிழத்தியும் மனையாளும் என்று சொல்லும் இருவரும் பாதுகாவலாகக் கூறிய கூற்றின் எதிரும் தலைவன் கூற்று நிகழும். இவ்விருவரும் இல்லுறை மகளிராதலின், தலைவன்மாட்டு நிகழுமவை "இருவருக்கும் பொருந்தும்.

எரிகவர்ந் துண்ண என்றூழ் நீளிடை

கடுமான் திண்டேர் கடைஇ

நெடுமா னோக்கிநின் உள்ளியாம் வரவே." (ஐங்குறு.360)

**8.2.29 சென்ற தேஎத்து உழப்பு நனிவிளக்கி இன்றிச் சென்ற தன்னிலை கிளத்தல்:** -தான் சென்ற தேயத்து வருத்தத்தை மிகவும் விளக்கித் தலைவியை ஒழித்துச் சென்ற தன்னிலை கிளப்பினும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

"ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்து

உள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்

முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க

நோய்முந் துறுத்து நொதுமல் மொழியல்நின்

ஆய்நலம் மறப்பேனோ -------------

போற்றா யாகலின் புலத்தியால் எம்மே". (அகம் . 39)

**8.2.30 அருந்தொழின் முடித்த செம்மற் காலை விருந்தொடு நல்லவை வேண்டல்:**-அரிய வினையை முடித்து வந்த தலைமைக் காலத்து விருந்தினரோடு கூட நல்லவற்றைக் உரைத்தற்கு விருப்பமுறும் பொழுதும் தலைவனுக்குக் கூற்று நிகழும.

**8.2.31 மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் கேளிர் ஒழுக்கத்துப் புகற்சி: -** தலைவனை எதிர்கொண்டு மங்கலமாக மாலையேந்தி நின்ற பெண்டிரும் மக்களும் கேளிரும் ஒழுகும் ஒழுக்கத்து விருப்பத்தின்கண்ணும் கூற்று நிகழும்.

"உள்ளினென் அல்லனோ யானே உள்ளி

மனைப்பெருங் காமம் மீண்டுகடைக் கொளவே" (குறுந்.99 )

**8.2.32 ஏனைய வாயிலோர் எதிரோடு தொகை**: -பெண்டிரும் அல்லாத வாயில்களாயினார் எதிர் கூறும் கூற்றும் தலைவன் மாட்டு நிகழும்.

இவ்வாறு உரைக்கப்பட்ட முப்பத்து மூன்றிடத்தினும் நிகழும் கூற்று மிக்க சிறப்பினையுடைய தலைவன் மேலன ஆகும்.

## 8.3 கற்பில் தலைவி கூற்று:

கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்களை கீழ்க்கண்ட நூற்பா விரித்துப் உரைக்கின்றது.

அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையில் திரியா வன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்துங்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியி னீக்கிய விளிவரு நிலையும்
புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு
அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி
எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினுந்
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணுஞ்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட் டிறுதிக் கண்ணுஞ்
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு தன்வர வறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானுந்
தந்தையர் ஒப்பர் மக்களென் பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினுங்
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லோடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணுங்
கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணுந்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியுந்
தன்வயின் சிறப்பினு
மவன்வயின் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணுங்
காமக் கிழத்தி நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை யொழுக்கத்துத் தோழிக் குரியவை
வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமைக்

குறிப்பு

காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையோடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவ தென்ப.

ஏற்றல் முதலாக வாயிலின் வரூஉம் வகையோடு கூடத் தலைவி கூறல் உரியதாகும்.

**8.3.1 அவனறிவு ஆற்ற அறியும் ஆகலின் ஏற்றல்:** - தலைவனது அறிவைத் தலைவி மிக அறிவாள் ஆதலின் தலைவனை உயர்த்திக் கூறுமிடத்து தலைவி கூற்று நிகழும்.

“நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே ------
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே.” (நற்றிணை. 1)

**8.3.2 நிறுத்தல்**: - தலைவனது பண்பினைத் தோழி கூறியவாற்றால் தான் நிறுத்துக் கூறுமிடத்து தலைவி கூற்று நிகழும்.

“முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
இன்துணைப் பையிருங் குன்ற நாடன்
குடியன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே.” (அகம். 352)

**8.3.3 உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா அன்பு:** தலைவிக்கு உரிமையைக் கொடுத்த தலைவனிடத்து பெருமையில் திரியா அன்பின் கண்ணும் கூற்று நிகழும்.

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே”. (குறுந். 3)

**8.3.4 கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதி**: தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல் பெருகிய காமத்தின் மிகுதியின்கண்ணும் கூற்று நிகழும்.

“நீர்நீ டாடிற் கண்ணும் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனி ராயின் எம் இல்லுய்த்துக் கொடுமோ
அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவில்

நடுங்களுர் எவ்வங் களைந்த எம்மே". (குறுந். 354)

**8.3.5 இன்பமும் இடும்பையும் ஆகிய இடம்:** தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழியும் கூற்று நிகழும்.

"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு." (குறள்- 1152)

**8.3.6 கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய இளிவரு நிலை:** புதல்வன் தோன்றிய நெய்யணி காண விரும்பிய கிழவனைத் தன் நெஞ்சு புண்ணுறுமாறு செய்து பிரிந்தான் என இகழுதல்:

"கரும்புநடு பாத்திக் கதிர்த்த ஆம்பல்
சுரம்புபசி களையும் பெரும்புனல் ஊர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கல்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே." (ஐங்குறு. 65)

**8.3. 7 புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கு:** விருப்பமுடைய உள்ளத்தோடே புதிதாய்க் கொண்ட பரத்தையர் நலத்தின் பொருட்டு பிரிந்த தலைவனைத் தனது தனிமை மிகவுங் காட்டி அவனிடத்துச் செல்கின்ற நெஞ்சத்தை மீட்டு அருகப்பண்ணி அவன் காதலித்தாளை எதிர்பெய்துகொண்டு புணர்ச்சியை மறுத்துப் பின்னர் ஊடல் தணிந்த இடத்தும் கூற்று நிகழும்.

"கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்
உடன்றனள் போலுநின் காதலி எம்போல்
புல்உளைக் குடுமிப் புதல்வற்பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறைய
என்ன கடத்தளோ'' (அகம். 176)

**8.3.8 தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தல்:** பிறள்மாட்டுத் தங்கிய ஒழுக்கத்துக் கிழவனைத் தாழ்ந்து எங்கையர்க்கு உரையென வேண்டிக் கோடற்கண்ணுங் கூற்று நிகழும்

"அகன்றுறை'' - என்னுங் கலித்தொகைப் பாட்டினுள்,

"மண்டுநீர் ஆரா மலிகடல் போதுநின்
தண்டாப் பரத்தை தலைக்கொள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமெனில்
தோலாமோ நின் பொய் மருண்டு." (கலித். 73) எனக் கூறுதலால் தான் தாழ்ந்தவாறும், எங்கையர்க்கு உரை இற்றெனக் கூறியது.

**8.3.9 செல்லாக் காலைச் செல்கென விடுத்தல்**: தலைவன் போகாத காலத்துப் போவெனக் கூறுல்.

"பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி

ஆங்கே அவர்வயிற் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து." (கலித். 79)

**8.3. 10 காமக் கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட்டு இறுதி: காமக் கிழத்தி தலைவி மகவைத் தழீஇ ஏமுற்ற விளையாட்டின் இறுதிக்கண்ணும் கூற்று நிகழும்**. தலைவியின் மகன் தெருவில் விளையாடும் காலத்து காமக் கிழத்தி அவனை தூக்கிச் சென்று அவள் அவனுடன் விளையாடல் கண்டு தலைவிக்குக் கூற்று நிகழும்.

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத் எனும் பாட்டினுள்,
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
அணங்கருங் கடவுள் அன்னோன் நின்
மகன்தா யாதல் புரைவதாங் கெனவே". (அகம். 16)

**8.3.11 சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி யறம்புரி நெஞ்சமொடு தன் வரவறியாமை புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடம்:** சிறந்த செய்கையினையுடைய அவ்விடத்துத் தலைவன் தோன்றி அறம்புரி நெஞ்சத்தோடே தனது வரவைத் தலைவி அறியாளாக நின்று தலைவியைப் புறஞ்செய்து அவள் மாட்டுளதாகிய ஊடலைப் பெயர்த்தல் வேண்டின இடத்தும் தலைவிமாட்டுக் கூற்று நிகழும்.

அவ்வழி - தலைவியுங் காமக் கிழத்தியைப் போலத் தன் மகனைக்கொண்டு விளையாடிய வழி உள்ளி உழையே ஒருங்கு படைவிடக்

"கள்வர் படர்தந் ததுபோலத் தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே ஈங்கு." (கலித். 81)

**8.3.12 தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால், அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்குதல்:** தந்தையரை மக்கள் ஒப்பர் என்பதனால் அந்தமில்லாத சிறப்பினையுடைய மக்களைப் பழித்தற் கண்ணும் கூற்று நிகழும்.

"மைபடு சென்னி மழகளிற் றோடை" என்னும் மருதக்கலியுள்,
வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதன்43 மாட்டொத்தி பெருமற் றொவ்வாதி
மாதர்மெல் நோக்கின்44 மகளிரை நுந்தைபோல்
நோய்கூர நோக்காய் விடல்." (கலித். 86).

**8.3.13 கொடியோர் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதி:** தூதாய் வந்த பாணன் முதலியோரிடத்து கொடியாரது கொடுமை சுடாநின்றதெனப் புணர்ச்சியை ஒடியாது புகழை விரும்பினோர் சொல்லோடே ஒருப்பட்டு வேறுபடுதலின் நீங்கிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும். அ·.தாவது, அக்காலத்துத் தக்கறிதல், புகழை விரும்பினோர் சொல்லும் சொல்லாவது, காமம் விரும்பும் பரத்தையரைப் போலாது அறத்தை விரும்புதல்.

''யாரிவனெங் கூந்தல்'' என்னும் மருதக் கலியுள்,

மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மென நெருங்கில் தப்பினேன்
என்றடிசேர்தலு முண்டு'' கலித். 89)

**8.3.14 கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காத லெங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகை:** தலைவனது கொடுமை யொழுக்கத்தினைத் தலைவியே பொறுக்கவேண்டி அவளடிமேல் வீழ்ந்தவனை நெருங்கி நின்மாட்டுக் காதலையுடைய எங்கையர் காணின் இப்பணிதல் நன்றாமெனக் காதலமைந்த வகையின் கண்ணும் கூற்று நிகழும்.

''நில்லாங்கு நில்லா'' என்னும் மருதக் கலியுள்,

''நல்லாய் பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து'' என்பதாகும்.

**8.3.15 தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளியவழி: தாயரைக் கிட்டிய நல்ல அணியையுடைய புதல்வனை மாயப் பரத்தை குறித்த வழியுங் கூற்று நிகழும். புதல்வனைப் பரத்தைமை குறித்தலாவது,** தலைவன் புறப் பெண்டிர் மாட்டுப் போகியவழி வெகுளுமாறு போலப் புதல்வனையும் அவரிடைச் சென்றவழி வெகுளும் வழி கூற்று நிகழும்..

''உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்
சிறுபட்டி, ஏதிலார் கைஎம்மை எள்ளுபு நீ தொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு;
தந்தை இறைத்தொடி மற்றவன் தன்கைக்கண்
தந்தாரியார் எல்லா இது'' (கலித். 84)

**8.3.16 தன்வயிற் சிறப்பினும் அவன் வயிற் பிரிப்பினும் இன்னாத் தொல்சூள் எடுத்தல்:** தன்மாட்டு நின்ற மிகுதியானும் அவன்மாட்டு நின்ற வேறுபாட்டானும் இன்னாத பழைய சூளுறவைத் தலைவி எடுத்தவழியும் கூற்று நிகழும்.

''தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறாஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.'' (கலித். 89)

**8.3.17 காமக் கிழத்தி நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருள்:** காமக் கிழத்தி நிலத்தினைப் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின்கண்ணும் கூற்று நிகழும்.

''கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே.'' (ஐங்குறு. 122)

**8.3.18 கொடுமை ஒழுக்கத்துத் தோழிக்குரியவை வருவது சிறப்பின் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல்வேறு நிலை**: தலைவி கொடுமையொழுக்கத்துத் தோழிக்குக் கூறுதற் குரியவை குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பின்கண் திரியாது தலைவனைக் காய்தலும் உவத்தலும் நீக்கி நிறுத்தலும் பேணிக்கோடலும் அவ்விடத்து வரும் பலவாய் வேறுபட்டு வரு நிலையினும் தலைவி கூற்று நிகழும்.

"நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்
கன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புல்லிய தெவனோ அன்பிலங் கடையே." (குறுந். 93) - காய்தல் பற்றி வந்தது.

**8.3.19 வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக் கிழவோன் செப்பல் கிழவதென்ப:** வாயில்கள் மாட்டு வரூஉங் கூற்றுவகை உளப்படத் தலைவி கூற்று நிகழும்.

வாயில்களாவார்:- பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் ஆவர்.

"அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியோடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே." (குறுந். 33)

இது பாணன் வாயிலாக வந்த வழிக் கூறியது.

வாயிலின் வரூஉம் வகை என்றமையான், தன் ஆற்றாமையும் வாயில்களாக் கொள்ளப்படும் என்பது பெறப்படும்.

"புள்ளிமி ழகல்வயின்" என்ற மருதக் கலிப் பாட்டினுள்,

"பூங்கட் புதல்வனைப் பொய்பா ராட்டி
நீங்காய் இகுவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர் வயின் சென்றீ அணிசி தைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து." (கலித். 79) - புதல்வன் வாயிலாகக் கூறியது காண்க.

**8.3.20 வாயிலாக வருவோர் மாட்டு தலைவிக்குரிய கூற்றுகள்:**

புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து
இடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்ச மாகும்.

களவில் புணர்ந்து உடன்போகிய தலைமகள் கற்புக் கடன்பூண்டு ஒழுகுங்காலத்து தன் மனைக்கண் இருந்து தான் முன்னர் இடைச்சுரத்தில் தலைவனுடன் கண்ட கருப்பொருள் விலங்கு, புள் முதலியவற்றையும் அவற்றின் தொழிலையும் குறித்துக் தலைவன் அன்புறுதற்குக் தக்கவற்றைக் கூறுதலே தலைமகன் இயற்றுந் தொழிற்கு அஞ்சும் அச்சமாகும் என்பதனை மேற்கண்ட நூற்பாவின் பொருளாகும்.

“கான யானை தோல்நயந் துண்ட -----
ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லா தகறல் வல்லு வோரே”.(குறுந். 79)

தோழியுள் உறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்மனார் புலவர்.

தோழி உள்ளிட்ட வாயில்களைத் தலைவன்பால் போகவிட்ட காலத்தும் முற்கூறிய கூற்று நிகழும் என்பதனை மேற்கண்ட நூற்பா உணர்த்தும்.

குறிப்பு

## 8.4 கற்புக் காலத்து தோழி கூற்று நிகழுமிடங்கள்:

கற்பின்கண் தோழி கூற்று நிகழும் இடங்களை கீழ்ண்ட நூற்பா தொகுத்து உணர்த்திற்று.

பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த
தெற்றகரு மரபிற் சிறப்பின் கண்ணும்
அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்
கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினுஞ்
சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்
அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியுஞ்
சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்
மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்
பேணா ஒழுக்கம் நாணிய பொருளினுஞ்
சூள்வயின் திறத்தால் சோர்வுகண் டழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை யில்லாப் பிழைப்பினும் அவ்வழி
உறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய
கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும்
உணர்ப்புவயின் வாரா ஊடலுற் றோள்வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத் திரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலத் தெதிர் நின்று சாற்றிய

மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி யெல்லாந்
தோழிக் குரிய என்மனார் புலவர்.

**8.4.1 பெறற்கரும் பெரும்பொருண் முடிந்தபின் வந்த தெறற்கரு மரபிற் சிறப்பு :** பெறுதற்கு அரிய பெரும் பொருளை முடித்த பின்னர்த் தோன்றிய தெறுதற்கரிய மரபு காரணத்தால் தலைவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்து தோழிகூற்று நிகழும்.

"அயிரை பரந்த அந்தண் பழனத்து ------
தொழுதுகாண் பிறையில் தோன்றி யான் உமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே." (குறுந் . 178)

**8.4.2 அற்றமழிவு உரைத்தல்:** களவுக் காலத்துப்பட்ட வருத்ததம் நீங்கினமை கூறல்.

"எரிமருள் வேங்கை இருந்த தோகை -----
இழையணி மடந்தையில் தோன்று நாட
இனிதுசெய் தனையால் நுந்தை வாழியர்
நன்மனை வதுவை அயர இவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே." (ஐங்குறு. 294)

**8.4.3 அற்றம் இல்லாக் கிழவோற் சுட்டிய தெய்வக் கடம்:** குற்றமில்லாத தலைமகனைச் சுட்டிய தெய்வக்கடன் கொடுத்தற்கண்ணும் தோழிகூற்று நிகழும்.

"சிறந்த தெய்வத்து மறையுறை குன்ற
மறைந்துநின் றிறைஞ்சினம் பலவே
பெற்றனம் யாமே மற்றதன் பயனே." (ஐங்குறு. 6)

**8.4.4 சீருடைப்பெரும்பொருள் வைத்தவழி மறத்தல்:** சீருடைய பெரும்பொருளானது இற்கிழமை; அதனைத் தலைமகன்மாட்டு வைத்தவிடத்து அவளை மறந்து ஒழுகினவழியும் தோழிகூற்று நிகழும். அதாவது அறத்தின் காரணமாகவோ பொருளின் பொருளின் காரணமாகவோ தலைவன் தனக்குரிய இசையுங் கூத்தும் முதலியவற்றானோ தலைவியை மறந்து ஒழுகல். அது கண்டு தலைவி வருந்துவாள். அதனைக் கண்ட வழி தோழி கூற்று தலைவனிடத்து நிகழும்.

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
--------------------------------------------------------------------------
துறைகெழு மாந்தை அன்ன இவள்நலம்
பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய ----
காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே".

**8.4.5 அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை மடங்கக் காட்டுதற் பொருள்:** அடங்கா ஒழுக்கமாகிய புற ஒழுக்கத் தலைவன்மாட்டு மனம்

அழிந்த தலைவியைத் தலைவன் அத்தகையன் அல்லன் எனக் காட்டுதற்கு ஏதுவான பொருட்பக்கத்தினும் தோழி கூற்றுநிகழும்.

“பாற்செய் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே.” (குறுந். 181)

**8.4.6 பிழைத்துவந்து இருந்த கிழவனை நெருங்கி இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தல்**: புறத்தொழுக்கம் புரிந்து வந்திருந்த தலைமகனை நெருங்கித் தலையளிக்குமாறு கூறித் தலைமகள் மாட்டு ஆக்கிக் கொடுத்தல்கண்ணுங் கூற்று நிகழும்.

“பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆய்பலஞ் செறுவில் தேன்ஊர் அன்ன
இவள் நலம் புலம்பப் பிரிய
அனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே.” (ஐங்குறு. 57)

**8.4.7 வணங்கிய மொழியான் வணங்கல்:** தலைவன் தாழ்ந்த இயல்பினையுடைய மொழியினான் வணங்குதற்கண்ணும் கூற்று நிகழும்.

உண்துறைப் பொய்கை வராஅல் இனம்இரியுந்
தண்துறை யூர தகுவதோ - ஒண்தொடியைப்
பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை
ஊராண்மை யாக்கிக் கொளல்.”(ஐந்திணை யெழுபது. 52)

**8.4.8 புறம்படுவிளையாட்டுப் புல்லிய புகர்ச்சி:** புறப்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய குற்றத்தின் கண்ணும் கூற்று நிகழும்.

“காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர் மரீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.” (குறுந். 45)

**8.4.9 சிறந்த புதல்வனைத் தேராது புலம்பல்:** தலைவன், தலைவி ஆகிய இருவர்க்கும் சிறந்த புதல்வனை நினையாமையால் தலைமகன் “தனிமையுறுதற் கண்ணும் கூற்று நிகழும்.

வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச
நள்ளென் கங்குற் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே.”(நற்றிணை. 40)

**8.4.10 மாணலந் தாவென வகுத்தல்**: நீ கொண்ட நலத்தினைத் தந்து போஎனக் கூறும் பொருட்டும் கூற்று நிகழும்

“விட்டென விடுக்கு நாள் தருக அது நீ
நொந்தனை யாயின் தந்தனை சென்மோ

தண்கடற் சேர்ப்பநீ உண்டவென் நலனே." (குறுந். 236)

**8.4.11 பேணா வொழுக்கம் நாணிய பொருள்**: தலைமகனின் பேணாத ஒழுக்கத்தினால் தலைமகள் நாணும் பொருண்மையினும் கூற்று நிகழும்..

"யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய்சா யினளே
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே." (குறுந். 9)

**8.4.12 சூள்வயிற் றிறத்தாற் சோர்வுகண்டு அழிதல்**: தலைமகள் சூளுற்ற சூளுறவிற் சோர்வுகண்டு அழிந்து கூறினும் கூற்று நிகழும்.

"எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
------------------------------------------------------
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொ டுற்ற சூளே." (குறுந். 53)

**8.4.13 பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து பெறுதகையில்லாப் பிழைப்பு:** பெரியோர் ஒழுக்கம் பெரிதாகும் எனச் சொல்லித் தலைமகளைப் பெறுந்தகைமையில்லாத பிழையின் கண்ணும் கூற்று நிகழும். அதாவது பெரியோர் பிழை கூறார். நீ பிழை கூறினை எனக் கூறுமிடத்துக் கூற்று நிகழும்.

"வெள்ளி விழுத்தொடி மென்கரும் புலக்கை எனும் பாட்டினுள்,
அறனும் பொருளும் வழாமை நாடித்
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோஇவ் உலகத் தானே." (அகம். 286)

**8.4.14 அவ்வழி அறுதகை இல்லாப் புலவியின் மூழ்கிய கிழவோள் பால்நின்று கெடுத்தல்:** மேற் சொல்லிய காரணத்தால் தலைவன் பிழைத்தவழி அவனால் தலைவியை அடைய முடியாது, எனவே புலவியின் மூழ்கிய தலைவியிடத்துச் சென்று அப் புலவியைத் தீர்க்கும் இடத்தும் தோழி கூற்று நிகழும்.

"மானோக்கி நீயழ நீத்தவன் ஆனாது
நாணில னாயின் நலிதந் தவன்வயின்
ஊடுவ தென்னோ வினி." (கலித்.87)

**8.4. 15 உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின் உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கிய தகுதி**: தலைவன் ஊடல் தீர்க்கவும் அதன் வழி உணராது நின்ற தலைவியிடத்து அவ்வூடலைத் தீர்த்தல் வேண்டிய தலைவன் நிற்பான். தலைவி பக்கத்தாளாகி நின்று தலைவனை வெகுண்டு உரைக்கும் பொழுது தோழி ஊடல் தீர்க்க முயலும் காலத்து கூற்று நிகழும்.

"உப்பமைந் தற்றால் புலவி அது சிறிது
மிக்கற்றால் நீள விடல்''.(குறள்.1302)

**8.4.15 அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எளிமைக் காலத்து இரக்கம்**: தலைவி அரியளாகிய களவுக் காலத்து பெருமையைக் காத்து, அவள் எளியளாகிய கற்புக் காலத்து பெருமையைக் காவாத இரக்கம்.

இதனாற் சொல்லியது, இரங்குதல் அன்றிப் களவுக் காலத்து இவ்வாறு செய்தனை! இப்பொழுது இவ்வாறு செய்யாநின்றனை எனத் தமது உயர்வும் தலைமகனது நிலைஇன்மையும் தோற்ற இரங்குதலாயிற்று. இதுவும் புலவிமாத்திரமன்றித் தலைவன் நீங்கி ஒழுகும் ஒழுக்கம் மிக்கவழிக் கூறுவதெனக் கொள்க.

“வேம்பின் பைங்காயென் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கு மென்றனிர்
ஐய வற்றால் அன்பின் பாலே.” (குறுந். 196)

பாணர், கூத்தர், விறலியர் என்றிவர் பேணிச் சொல்லிய குறைவினை எதிரல்: பாணர், கூத்தர்,விறலியர் இத்தன்மையர் விரும்பிச் சொல்லிய வாயிலை மறுத்தல். மறுத்தல் போலும் வாயில் நேர்ந்தவிடத்துக் கூற்று நிகழும்..

“புலைமகன் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினிப் பரியல்
பகல்எஞ் சேரிக் காணின்
அகல்வய லூரன் நாணவும் பெறுமே.” - வாயில் மறுத்தல்.

**8.4.16 நீத்தகிழவனை நிகழுமாறு படீஇயர் காத்த தன்வயிற் கண்நின்று பெயர்த்தல்**: தலைவியை நீத்த தலைவனை அவளுடன் இல்லறத்தே நிகழுமாறு படுத்தல் வேண்டி அவனைப் புறத்தே போகவிடாது பாதுகாத்தமையால் தன்னிடத்துற்ற தலைமகனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற்கண்ணும் கூற்று நிகழும்.

“மனையுறு கோழிக் குறுங்காற் பேடை
-----------------------------------------------------
இன்னா திசைக்கும் அம்பலொடு
வாரல் வாழியர் ஐயஎம் தெருவே.” (குறுந் . 139 )

**8.4.17 பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிர்:** தலைவன் நெடுந்தொலைவு பிரியுங் காலத்து முன்னின்று சொல்லிய மரபுடை மாறுபாடு. அதாவது கற்பினுள் பிரிவு மரபு கெடாமல் கிளத்தல் வேண்டும் என்பதாகும்.

“அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிறிதாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்” ( குறள் - 1160 )

மேற்சொல்லப்பட்ட கிளவியன்றிப் பிற வாய்பாட்டாற் பாகுபட வந்த கிளவி எல்லாம் தோழிக்குரிய என்றுரைப்பர் புலவர்.

வகைபடவந்த கிளவியாவன :- பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறுதலும், பருவங்கண்டு கூறுதலும், வற்புறுத்தலும், நிமித்தங்கண்டு கூறுதலும், வந்தான் எனக் கூறுதலும், இந்நிகரனவும், மேற்சொல்லப்பட்ட இடங்களிற் கூற்று வேறுபாடாகி வருவனவுங் கொள்க, அவற்றிற் களவுக்குங் கற்பிற்கும் பொதுவாகி வருவன அகத்திணையியலுட்கொள்க. கற்பிற்கே உரித்தாகி வருவன ஈண்டுக் கொள்க என்பர் இளம்பூரணர்.

"ஆமா சிலைக்கும் அணிவரை ஆரிடை
ஏமாண் சிலையார்க் கினமா இரிந்தோடும்
தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் வரக்கண்டு
வாய்மாண்ட பல்லி படும்." (கைந்நிலை . 18 ) - இது நிமித்தங் கண்டு கூறியது .

## 8.5 காமக்கிழத்தியர் கூற்று நிகழுமிடம்:

களவியலில் இடம்பெறாது கற்பியலில் மட்டும். இடம்பெறும் மாந்தர் காமக்கிழத்தியர் ஆவர்ஏ காமக்கிழத்தியர் ஆவார். ககமக்கிழத்மியர் பின்முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர்; ஒத்த கிழத்தியரும் இழிந்த கிழத்தியரும் வரையப் பட்டாரும் என்பவர் ஆவர். ஒத்த கிழத்தியர் எனப்படுவோர் முந்துற்ற மனையாள் அன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள். ஒருத்தியை வரைதல். இழிந்தாராவார் அந்தணர்க்கு அரச குலத்தினும் வணிககுலத்தினும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஏனையிரண்டு குலத்தினுங் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண்குலத்திற் கொடுக்கப்பட்டாரும் ஆவர். வரையப்பட்டார் செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல். அவர் கன்னியில் வரையப்பட்டாரும் அதன் பின்பு வரையப்பட்டாரும் என இருவகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக் கிழத்தியர்பாற் பட்டனர். பரத்தையராவார் என்பார், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகு மிளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெ.ஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார். இவருள்ளும் ஒருவரைப்பற்றி மறுதலைப் பெண்டிரைச் சார்த்திக் கூறுவனவும் காமக் கிழத்தியர் கூற்றின் பாற்படும். இவற்றின் வேறுபாடு அவரவர் கூற்றானறிதல் வேண்டும். இச்சூத்திரத்திற் காமக்கிழத்தியென ஓதாது கிழத்தியர் என ஓதுதலான் பலவகையார் என்பது பெறப்படும் காமக்கிழத்தியரின் கூற்றினைக் கீழ்க்கண்ட நூற்பா குறித்துரைக்கும்.

புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்
பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்
காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையில்
தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்

இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து
பின்னை வந்த வாயிற் கண்ணும்
மனையோ ளொத்தலின் தன்னோர் அன்னோர்
மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும்
எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன.

காமக் கிழத்தியர் கூற்று நிகழும் இடம் உணர்த்திற்று.

புல்லுதன் மயக்கும் புலவி முதலாகச் சொல்லப்பட்ட இடத்தினும் அந்நிகரன பிறிவிடத்தினும் குறிக்கப்பட்ட கூற்றுக் காமக்கிழத்தியர் மேலன ஆகும்.

காமக்கிழத்தியர் ஆவார் பின்முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர்; ஒத்த கிழத்தியரும் இழிந்த கிழத்தியரும் வரையப் பட்டாரும் என்பவர் ஆவர். ஒத்த கிழத்தியர் முந்துற்ற மனையாள் அன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள். ஒருத்தியை வரைதல் இழிந்தாராவார் - அந்தணர்க்கு அரச குலத்தினும் வணிககுலத்தினும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஏனையிரண்டு குலத்தினுங் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண்குலத்திற் கொடுக்கப்பட்டாரும், வரையப்பட்டார் - செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல். அவர் கன்னியில் வரையப்பட்டாரும் அதன் பின்பு வரையப்பட்டாரும் என இருவகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக் கிழத்தியர்பாற் பட்டனர். பரத்தையராவார் என்பார், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகு மிளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெ∴கி ஒருவர் மாட்டுந் தங்காதார். இவருள்ளும் ஒருவரைப்பற்றி மறுதலைப் பெண்டிரைச் சார்த்திக் கூறுவனவும் காமக் கிழத்தியர் கூற்றின் பாற்படும். இவற்றின் வேறுபாடு அவரவர் கூற்றானறிக, இச்சூத்திரத்திற் காமக்கிழத்தியென ஓதாது கிழத்தியர் என ஓதுதலான் பலவகையார் என்பது கொள்க.

**8.5.1 புல்லுதன் மயக்கும் புலவி:** புல்லுதலைக் கலக்கும் புலவிமாட்டுங் காமக்கிழத்தியர் கூற்று நிகழும்.அதாவது முதிராத புலவி மாத்திரமாகிய புணர்ச்சியை உடன் பட்ட நெஞ்சத்தளாதல்.

"நனவினான் வேறாகு வேளா முயக்கம்
மனைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
இனைய ரென உணர்ந்தா ரென்றேக்கற் றாங்குக்
கனவினா னெய்திய செல்வத் தனையதே
ஐய எமக்குநின் மார்பு" (கலித். 68) - மூவகையார்க்கும் பொது.

**8.5.2 இல்லோர் செய்வினை இகழ்ச்சி:** மனையகத்தோர் செய்த வினையை இகழ்ந்து கூறுதல்கண்ணும் கூற்று நிகழும். இல்லோர் எனப் பன்மையால் குறித்தமையால் தலைமகனை இகழ்தலும் தலைமகளை இகழ்தலும் அமையும்.

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடியிற் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே." (குறுந். 8) - தலைவனை இகழ்ந்தது.

"அளியர் தாமே மகிழ்நநின் பெண்டிர்
எம்பழி அறையுநர் போலத்
தம்பழி தூற்றும் பெரும்பே தையரே". - தலைவியை இகழ்ந்தது.

**8.5.3 பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவத்தல்**: பலவகைப் புதல்வரைக் கண்டு மிகவும் உவந்து கூறியவழியும்
கூற்று நிகழும்.

"கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச்சாஅய்ச் செல்லுந்
தளர்நடை காண்டல் இனிது ---------
ஐய , காமுரு நோக்கினை அத்தத்தா என்னுநின்
தேமொழி கேட்டல் இனிது --------
ஐய, திங்கட் குழவி வருகென யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது" (கலித். 80)

**8.5.4 மறையின் வந்த மனையோள் செய்வினை பொறையின்று பெருகிய பருவரல்**: களவால் வரைந்து கொண்ட தலைவியோடு தலைவன் காவும், குளனும் ஆடிய கண்டு பொறையின்றி எய்திய துன்பத்தின் கண்ணும் கூற்று நிகழும்.

**8.5.5 காதற் சோர்விற் கடப்பாட்டு ஆண்மையில் தாய்போற்கழறித் தழீஇய மனைவியைக் காய்வின்றி அவன்வயிற் பொருத்தல்:** காதற் சோர்வினாலும் ஒப்புரவுடைமையானும் தாய்போற் கழறித் தலைவியை உடன்படுத்திக் கொண்டு தலைவனைக் கழறிப் தலைவியன் சினம் தணிவித்து தலைமகன்மாட்டுப் பொருத்தற்கண்ணும் கூற்று நிகழும். காதல் சோர்வு என்பது தன்மாட்டுக் காதல் சோர்தல். இது தலைமகன் மாட்டுத் துனியுளவழி நிகழும் நிகழ்ச்சி.

"வயல்வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக
-----------------------------------------------------------
கொள்ளல் மாதோ முள்ளெயிற் றோயே
நீயே பெருநலத் தகையே அவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகனென் னாரே." (நற்றிணை.290)

**8.5.6 இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து பின்னை வந்த வாயில்**: ஏனைய வாயில்களை மறுத்த வழி இனிய நகையையுடைய

புதல்வனைத் தழீஇ இழையணிந்து தலைமகன் வாயிலாகக் கொண்டு புகுதல்.

"தகைபெறு கழனியந் தண்துறை யூரகேள்;
பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே யவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து." (கலித். 79)

**8.5.7 மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர் மிகையெனக் குறித்த கொள்கை**: தான் மனையாளை ஒத்தலால் தன் போல்வார் தலைவற்கு மிகையெனக் குறித்த கோளின்கண்ணும் கூற்று நிகழும்.

"அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை ஊரன் பெண்டினை யாயின்
பலவா குகநின் நெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட்டியானை நெடுந்தேர் அஞ்சி
கொன்முனை இரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே." (குறுந்.91)

**8.5.8 எண்ணிய பண்ணை**: ஆறுங் குளனுங் காவும் ஆகியவற்றில் தலைவனோடு சேர்ந்து ஆடும் எண்ணப் பட்ட விளையாட்டு.

"பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாம்.'. தயர்கம் சேறுந் தான் (குறுந்.80)

பிறவும் என்றதனால் தலைமகட்குரித்தாகச் சொல்லப்பட்டவற்றுள் ஒப்பன கொள்ளப்படும்.அவற்றுட் சில வருமாறு :-

"ஞாலம் வறந்தீர" என்னும் மருதக் கலிப்பாட்டினுள்,

"அடக்கமில் போழ்தின்கண் தந்தைகா முற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்கான" - என வருவதனைக் கொள்க.

கூறுதலிற் புதல்வனை ஈன்றாள் மூன்றாங் காமக்கிழத்தி ஆயினவாறும் இவன்மாட்டுத் தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளிக் கூற்று நிகழ்ந்தவாறுங் கண்டு கொள்க. பிறவும் அன்ன. தோழி கூற்றும் இவட்கு ஒக்கும் என்பர்ா இளம்பூரணர்.

## 8.6 தலைவியின் உயர்வும் வாயில்கள் மரபும்:

தலைவியின் உயர்வினையும் வாயில்கள் மரபினையும் கீழ்கண்ட நூற்பா விளக்கி உரைக்கும்.

கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்

அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய.

கற்பும் காமமும் ஒழுக்கமும் பொறையும் நிறையும் விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும் இவை போன்ற பிறவும் தலைவியின் மாண்புகள் ஆகும். இதனைத் தலைவனுக்கு எடுத்துரைத்தல் வாயில்களுக்குரிய மரபாகும். செய்யுளியலுள் வாயி லுசாவே தம்முளுரிய (சூ.161) என்பதனால், தலைமகற் குரைத்தலே யன்றித் தம்முள்தாம் கூறுதலும் வாயில்களுக்கு உரியதாம்.

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.” (குறுந்.167)

## 8.7 செவிலிக்குரிய கூற்று

கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப.

இறந்த காலத்தினும் நிகழ்காலத்தினும் எதிர்காலத்தினும் தன்குலத்திலுள்ளார் வழிகொள்ளுமாறு நல்லவை கூறுதலும் அல்லவை கடிதலும் செவிலிக்கு உரியதாகும்.

இறந்தகால முதலியவற்றால் கூறுதலாவது முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றார் இவ்வாறு செய்து தீமை பெற்றார் எனவும், இப்பொழுது இன்னோர் இவ்வாறு செய்து பயன்பெறா நின்றாரெனவும், இவ்வாறு செய்தார் பின்பு நன்மை தீமை பெறுவர் எனவும் கூறுதல்.

அவை, அறனும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும்; அவையாவன ; தலைமகன்மாட்டும் உலகத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறுதல்.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”. (குறள். 56)
”தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை”. (குறள். 55)

## 8.8 அறிவர்க்குரியதோர் மரபு

சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய.
அறிவர் கூற்று நிகழுமா றுணர்த்திற்று.

செவிலிக்குரித்தாகச் சொல்லப்பட்ட கிளவி அறிவர்க்கும் உரியதாம்.

இடித்துவரை நிறுத்தலும் அவர தாகுங்
கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்.

கழறிய எல்லையின் கண்ணே நிறுத்தலும் அறிவர்க்குரிய ஆகும்.தலைவனும் தலைவியும் அவர் ஏவல்வழி நிற்றல் என்பதாம்.

“உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்

தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே இ.்.தோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும்இவ்'' (குறுந். 295) - தலைமகற்குக் கூறியது.

## 8.9 தலைமகன் புலக்குமிடம்

உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய.

தலைமகன் புலக்குமிடம் கூறுதல் நுதலிற்று. புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின் மிக்கதாம்.

"எவ்வி இழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்த லாரே நினக்கே" (குறுந். 19)

## 8.10 தோழிக்குரிய மரபு:

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்
சொலத்தகு கிளவி தோழிக்குரிய.

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும் சொலத்தகும் கிளவி தோழிக்குரிய.தாகும்

"அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்". (குறள். 1303) - இது கற்பு.

"கலந்த நோய் கைம்மிகக் கண்படா என்வயின்
புலந்தாயு நீயாயின் பொய்யானே வெல்குவை
இலங்கு தாழ் அருவியோ டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறும்
இலங்கேர் எல்வளை இவளுடை நோயே". (கலித். 46) - இது களவு.

பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிளவி
மடத்தகு கிழமை உடைமை யானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள்.

இதுவும் தோழிக்கு உரியதோர் இயல்பு ஆகும்.

## 8.11தலைவிக்கு உரியதொரு மரபு:

அவன்குறிப் பறிதல் வேண்டியுங் கிழவி
அகமலி யூடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.

தலைவன் குறிப்பறிதல் வேண்டியும் தலைவி தனது அகமலிந்த ஊடல் நீங்கும் இடத்தினும் வேற்றுமைக்கிளவி தோற்றவும் பெறும்.

யாரிவன் என்கூந்தல் கொள்வான்" (கலித்.89)

"யாரையோ எம்மில் புகுதருவாய்" (கலித். 98)

## 8.12 வழிபடு கிழமை:

காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான.

இது, தலைமகற்குரியதொரு மரபு ஆகும்.

“ஒரூஉ கொடியியல் நல்லார் குரல்நாற்றத் துற்ற” என்னும் மருதக் கலிப்பாடலுள்.

”பெரியார்க் கடியரோ ஆற்றா தவர்”

எனத் தலைவி கூறியவழி,

“கடியர் தமக் கியார்சொலத் தக்கார் மற்று” (கலித்.88) - என வரல்.

## 8.13 அருண்முந் துறுத்த அன்புபொதி கிளவி:

அருண்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே

இது தலைமகட்குரியதோர் இயல்புணர்த்திற்று. பொருள்பட மொழிதலாவது பொய்யாக் கூறாது மெய்யே கூறல்.

## 8.14 அலர்:

களவுங் கற்பும் அலர்வரை வின்றே.

அலர் ஆமாறு உணர்த்திற்று. களவினுங் கற்பினும் அலராகு மென்று கூறுதல் வரைவின்று என்பதாம்.

“கண்டது மன்னும் ஒருநாள் அவர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று”. (குறள்.1146) - இது களவு.

“ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்”. (குறள்.1147)

## 8.15 கிழவோன் விளையாட்டு:

கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே.

கிழவோன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டும்.

“அகலநீ துறத்தலின் அழுதோவா உண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால்
நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
தமர்பாடுந் துணங்கையுள் அரவம்வந் தெடுப்புமே”. (கலித்.70)

## 8.16 வாயில்கள்:

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.

தோழி முதலாகச் சொல்லப்பட்ட பன்னிருவரும் வாயில்களாவார்.

### 8.16.1 வாயில்கட் குரியதொரு மரபு:

மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை.

மனைவிமாட்டுக் கிழவோன் கொடுமையைத் தாங்கார் கூறல் வாயில்கட்கில்லை.

**8.16.2 மனைவி முன்னர்க் கையறு கிளவி:**

மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி உள்வழி உண்டே.

மனைவி முன்னர்ச் செயலற்றுக் கூறும் சொல் மனைவிக்கு உறுதியுள் வழி வாயில்கட்கு உண்டு.

"இனியவர் வரினும் நோய்மருந் தல்லாய் வாரா
தவணர் ஆகுக காதலர் இவண்நம்
காமம் படர்பட வருத்திய
நோய்மலி வருத்தங் காணன்மா ரவரே"

## 8.17 முன்னிலைப் புறமொழி

முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்.

முன்னிலைப் புறமொழியாகக் கூறும் சொல் எல்லா வாயில்கட்கும் உரியதாம். அது பின்னிலை முயலுங்கால் தோன்றும். முன்னிலைப் புறமொழியாவது முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப் பிறனைக் கூறுமாறுபோலக் கூறுதல்.

"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை". (கலித். 22)

## 8.18 கூத்தர்க்குரிய கூற்று:

கூத்தர்க்குரிய கூற்று எட்டு என்பதனை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்
பல்லாற் றானும் ஊடலில் தகைத்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன..

**8.18.1 தொல்லவை யுரைத்தல்:** - முன்புள்ளார் இவ்வாறு செய்வரெனக் கூறுதல்.

**8.18.2 நுகர்ச்சி ஏத்தல்:-** நுகர்ச்சி இவ்வாறு இனிய ஒன்றெனப் புகழ்தல்.

**8.18.3 ஊடலில் தகைத்தல்** - பலநெறியானும் ஊடலினின்றுந் தலைவியை மீட்டல். அதாவது இவ்வாறு செய்தல் குற்றம் என்றானும் அன்புடையார் செய்யார் என்றானும் மனைக்கிழத்தியர் செயலன்று என்றானும் கூறுதல்.

**8.18.4உறுதிகாட்டல்:** - இவ்வூடல் தணிந்ததனாற் பயனிது எனவும் நன்மை பயக்கும் எனவும் கூறுதல்.

**8.18.5 அறிவு மெய்ந்நிறுத்தல்**: - தலைமகள் மெய்யின்கண் மிக்க துணிவினாற் கெட்டவறிவை இது தக்கதன்றென அறிவு கொளுத்துதல்.

**8.18.6 ஏதுவினுரைத்தல்:** - இவ்வாறு செய்யின் இவ்வாறு குற்றம் பயக்கும் என ஏதுவினாற் கூறுதல்.

**8.18.7 துணியக்காட்டல்:** - அவள் துணியும் வகையில் காரணங் காட்டுதல்.

**8.18.8 அணிநிலை யுரைத்தல்**: நீ அணிந்துள்ள அணி யாதொரு பயனும் இல்லாமல் புலரவிடுகின்றதனால் என்ன பயன் எனக் கூறுதல். இவை யெல்லாம் கூத்தர் மேலன ஆகும்..

## 8.19 கூத்தர்க்கும் பாணர்க்கும் உரிய கூற்று:

நிலம் பெயர்ந் துரைத்தல் அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.

இது, கூத்தர்க்குஞ் சொல்லாத பாணர்க்கும் உரிய கிளவி ஆகும்.

**8.19.1 நிலம் பெயர்ந்துரைத்தல்**: - தலைவன் பிரிந்தவிடத்துச் சென்று கூறுதல்.

**8.19.2 அவள் நிலையுரைத்தல்**: - அவள் நின்ற நிலையைத் தலைவற்குக் கூறுதல்.

"அருந்தவ மாற்றியா னுகர்ச்சிபோல" என்னும் பாலைக் கலியுள்,

"தணியா நோய் உகந்தானாத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே" (கலித்.30) பாசறைக்கண் தலைவற்குத் தலைவி வருத்தங் கூறியது.

## 8.20 இளையோர் கூற்று:

இளையோர்க்கு உரிய கூற்று பின்வருமாறு:

ஆற்றது பண்பும் கருமத்து வினையும்
ஏவன் முடிபும் வினாவுஞ் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியுந்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி யென்ப.

**8.20.1 ஆற்றது பண்பு:** தலைவனானவன் தன் தலைவியுடனோ தனியோ போகத்துணியின் இக்காலம் தண்ணியது,இக்காலம் வெய்யது, போகும் இடம் அண்மையது, சேய்மையது என்று கூறல்.

**8.20.2 கருமத்து வினை**: செய்யும் தொழிலாகய வினையை உரைத்தல். அதாவது பொருள் செயல்வகை முடிக்கும் திறத்தை அறிந்து கூறல்

**8.20.3 ஏவல் முடிவு**: இவ்விடத்து சென்று இன்ன வினையைச் செய்க எனத் தலைவன் ஏவியபோது அதனை முடித்து வந்தமை கூறல்.

**8.20.4 வினாவல்:** தலைவன் ஏவலைத் தாம் கேட்டல் அல்லது செய்கை யாவை? எனத் தலைவன் கேட்டலுமாம்.

**8.20.5செப்பல்**: தலைவன் வினவாதபோதும் தலைவிக்கு வேண்டியவற்றைத் தலைவன்பால் சொல்லுதல்

**8.20.6 ஆற்றிடைக் கண்ட பொருள்**: செல்லும் சுரத்திடைக் கண்ட நிமித்தம் முதலாய பொருள்களை தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதி பயக்குமாறு கூறல்

**8.20.7 இறைச்சி**: சுரத்திடைத் தாய் கண்ட மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை தலைவன் தலைவி ஆகிய இருவருக்கோ அல்லது தலைவனுக்கோ மட்டும் சுட்டிக் கூறல்.

"விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி அரிவை
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியுள்
-----------------------------------------------------------
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே" (அகம். 324)

உழைக்குறுந் தொழிலுங் காப்பும் உயர்ந்தோர்
நடக்கையெல்லா மவர்கட் படுமே.

இதுவும் இளையோர்க்குரிய திறன் உணர்த்திற்று. இடத்தினின்று குற்றேவல் செய்தலும் மெய்காத்தலும் பிறவும் உயர்ந்தோர்க்குளதாகிய நடையெல்லாம் இளையோர்கட்படும்.

## 8.21 தலைமகற்கு உரியதோர் மரபு:

பின்முறை ஆகிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
மின்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்த துணைய கிழவோன் ஆங்கட்
கலங்கலு முரியன் என்மனார் புலவர்.

"இம்மை உலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
சேறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி" (அகம்.69)

## 8.22 தலைமகட்கு உரியதொரு கிளவி:

தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான.

காமக்கிழத்திமாட்டுத் தாய்போற் கழறித் தழீஇக் கோடல் மனைக்கிழத்திக்கும் உரித்து. கவவால் வருத்த முற்ற காலத் தென்றவாறு; அஃதாவது புலவாவழி என்றவாறு.

"வயல்வெள் ளாம்பல் சூடுதரு புதுப்பூக் ---------
தண்கமழ் புதுமலர் ஊதும்

வண்டென மொழிப மகனென் னாரே." (நற்றிணை. 260)

8.22.1 அவன் சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்
மகன்தா யுயர்புந் தன்னுயர் பாகுஞ்
செல்வன் பணிமொழி இயல்பாக லான.

இதுவும் தலைமகட்குரிய கிளவி யுணர்த்திற்று. மேலதற்கொரு புறனடை: தலைமகனது சோர்வு காத்தல் தலைமகட்குக் கடனாதலால் தன் மகனுக்குத் தாயாகிய காமக்கிழத்தி உயர்பும் தன்னுயர்பாகும்; இருவருந் தலைமகன் பணித்த மொழிகோடல் இயல்பாதலால் ஆகும்.

சோர்வாவது ஒழுக்கத்திற் சோர்வு. அது பரத்தையிற் பிரிவு. அதனை மறையாது காமக்கிழத்தி ஆற்றில் தலைமகற்குக் குறைபாடு வரும் என்பதனால் அவளை உயர்த்தி அவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகாமை ஏற்றுக் கோடல் வேண்டுமெனக் கூறுதலுந் தனக்கு இழிபு ஆகாது உயர்ச்சியாம்.

## 8.23. தலைமகளோடு பாசறை புணரா இயல்பு:

எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்.

இது தலைமகட் குரியதொரு மரபு உணர்த்திற்று.

நினைத்தற்கரிய பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்பதாம்.

நினைத்தற்கருமை - மாற்றாரை வெல்லுங் கருத்து மேற்கோடலிற்றலை மகளிரை நினைக்கலாகாதாயிற்று. பாசறை என விசேடித்தவனால் ஏனைப் பிரிவுக்குமாமென்று கொள்க.

## 8.24 பார்ப்பார்க்கு உரிய கூற்று:

காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலுங்
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய.

இது, பார்ப்பார்க் குரிய கிளவி யுணர்த்திற்று.

**8.24.1 காமநிலை யுரைத்தல்** - நீ பிரியின் இவள் காமமிகும் என்று கூறுதல்.

"அறனின்றி அயல்தூற்றும் அம்பலை என்பதனுள்,
உடையிவ ளுயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன" (கலித். 3)

**8.24.2 தேர்நிலை யுரைத்தல்** - ஆராய்ச்சி நிலையாற் கூறுதல்.

"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிற் ----
சென்னவை யரவத்து மினையவள் நீநீப்பின்
தன்னலங் கடை கொளப் படுதலின் மற்றிவள்

இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே''. (கலித். 7)

**8.24.3 கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறல்** - தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறல்.

**8.24.4ஆவொடு பட்ட நிமித்தங் கூறல்** - ஆவொடு பட்ட நிமித்தங் கூறுதலும் என்றவாறு பட்ட நிமித்தம் என்றதனால் எல்லா நிமித்தமுங் கொள்க.

**8.24.5 செலவுறு கிளவி** - செலவுற்ற சொல்லும் என்றவாறு. அ.்.தாவது தலைமகன் போயினான் என்று கூறுதல்.

**8.24.6செலவழுங்கு கிளவி** - செலவழுங்கல் வேண்டுமெனக் கூறுதல்.

-----------------------------------------------------------------

''விறன்மலை வெம்பிய போக்கறு வெஞ்சுரஞ்
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறழ் வியன்மார்ப அதுமனும் பொருளே". (கலித் 8)

இவை பார்ப்பார்க்குரிய தென்றவாறு. ஓருபாற் கிளவியேனைப் பாற்கண்ணும்" (பொருளியல்-27) வரும் என்பதனால் தோழிமாட்டும் பாங்கன்மாட்டும் கொள்க என்பார் இளம்பூரணர்.

## 8.25 வாயில்கட்குள்ளதோர் மரபு

எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப.

வாயில்கள் எல்லாம் இருவர் மாட்டும் பொருந்திய மகிழ்ச்சிப் பொருண்மையுடையன.

இருவராவார் தலைவனுந் தலைவியும். எனவே வெகுட்சிப் பொருண்மை கூறப்பெறார் என்பதனைக் குறித்தது.

அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்
சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்..

வாயில்கண் மகிழ்ச்சிப் பொருண்மை கூறுதலன்றி அன்பு நீங்கிய கிளவி கூறினாராயிற் தலைவன் சிறைப்புறத்தானாகப் பெறுவர் எனச் சொல்லுவர்.

## 8.26 தலைவிக்குரியதோர் மரபு.

தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே.

தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டிடமும் அல்லாதவழி தலைவன் முன்னர்த் தன்னைப் புகழுங் கூற்று எவ்வழியானுங் கிழத்திக்கு இல்லை

''ஒரூஉ நீ எம்கூந்தல் கொள்ளல் யாம்நின்னை
வெரூஉதுங் காணுங் கடை" (கலித். 87) தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம்:

குறிப்பு

“நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு”. (கலித்.88)

என்றவழியும் பெண்டிர் பலர் உளராயினும் அவர் எல்லார் மாட்டுஞ் செல்லாது தன்மேல் வருமெனக் குறித்தாளாதலின், தன்னைப் புகழ்ந்தாளாம்.

**8.26.1 தலைவற்கு உரிய மரபு:**

கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப.

தலைவி முன்னர்த் தலைவன் தன்னைப் புகழுங் கூற்று வினைவயிற் பிரியும் வழி உரியது ஆகும்.

”இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவு” (கலித். 2)
”இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையால் புகழ்”

என்றும் இவ்வாறு கூறுதல். இவ்வாறு கூறவே ”யான் செய்யேன்” எனத் தன்னைப் புகழ்ந்தவாறாம்.

## 8.27 பாங்கற் குரியதொரு மரபு:

மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குரித்தே.

தலைவன் கூறிய பொழுது எதிர்கூறுதல் பாங்கற்கு உரித்து. எதிர் கூறுதலாவது மாறுபடக் கூறுதல். அவை களவுக் காலத்துக் கழறலுங் கற்புக்காலத்துப் பரத்தையிற் பிரிவிற்கு உடம்படாது கூறலும் இவை போல்வனவும் ஆம்.

“காமங் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணித்தலும் இன்றே யானை
குளகு மென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே”.(குறிந். 136)

“பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்”. (குறள். 914)

## 8.28 எதிர் கூறல்:

குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும்.

மேற் குறித்ததற்கு எதிர் கூறுதல் அருகித் தோன்றும்.

## 8.29 தலைவற் குரியதொரு மரபு:

துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை

இது, தலைவற் குரியதொரு மரபுணர்த்திற்று.

துன்புறு பொழுதினும் எல்லாப் பிரிவினும் தலைவன் தலைவியை வற்புறுத்தியல்லது சேறலில்லை.

துன்புறுபொழுதாவது களவுகாலம். களவினும் கற்பினும் பொது.

## 8.30 செலவிடை அழுங்கல்:

செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்.

தலைவன் போகக் கருதித் தவிர்தல் போகாமையன்று; தலைவியை வற்புறுத்துதலைக் குறித்துத் தவிர்ந்த தவிர்ச்சியாம். எனவே வினைமேற் செல்லுங்காலத்துத் தலைவி பிரிவினைப் பொறாள் எனப் போகாமை இல்லை; வற்புறுத்திப்போவான் என்பதாகும்.

## 8.31 பிரிவில் தலைவன் தலைவியர் நிலை:

தலைவன் வினை மேற்கொள்ளும் காலத்து தலைவியை நினைத்துப் புலம்புவதாய் பாடும் மரபு இல்லை. ஆனால் வினை முடித்தவிடத்து தலைவியை நினைந்து புலம்புவதாய்ப் பாடுதல் உண்டு,

கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.

உரையாமை யாவது உருவு வெளிப்பாடு. அதனை வினைநிகழும் இடத்து உரைக்கப் பெறார்; தலைமக்கள் தமது வினை முடிந்த காலத்து விளங்கித் தோன்றும்.

எனவே, வினையிடத்துள் நினைப்பாராயினும் அமையும்; உரைக்கப் பெறார் என்பதும், வென்றிக்காலத்துக் குற்றமறத் தோன்றும் என்பதும் கொள்ளப்படும்.

“ஓங்கிய ஒள்ளொளி யோலைய தாய்த்தட மாமதின்மேல்
பொங்கிய வேந்தர் எரிமுகந் தோன்றின்று போதுகண்மேற்
பைங்கயல் பாய்புனற் பாழிப்பற் றாரைப் பணித்ததென்னன்
செங்கய லோடு சிலையுங் கிடந்த திருமுகமே”. (பாண்டிக்கோவை)

## 8.32 தலைவன் தலைவியைப் பிரியலாகாத காலம்:

பூப்பின் புறம்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான.

பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் தலைவன் தலைவியை விட்டு அகன்று உறைவாரல்லர். தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தும் என்பதாம். பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று.இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றுங் காலம் என்பதாம் என்பது இளம்பூரணர் உரையாம்.

ஆறுகளிலும் குளங்களிலும் சோலைகளிலும் விளையாடி இன்பம் நுகர்தல் தலைவன் தலைவிக்கு உரிய மரபு ஆகும் என்பதனை பின்வரும் நூற்பா உணர்த்து.

## 8.33 தலைமக்கள் மரபு:

யாறுங் குளனுங் காவும் ஆடிப்
பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப.

யாறுங் குளனும் காவும் ஆடி என்பது - விளையாட்டு ஆகும்.

”அருந்தவ மாற்றியா னுகர்ச்சிபோ லணிகொள என்னும் பாலைக்கலியுள்,
துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ1”. (கலித். 30)

தொல்காப்பியம்
:பொருளதிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

என்று தலைவன் பதியிகந்து நுகர்ந்தமையைத் தலைவி குறித்தாள்.

வினைமுற்றி மீண்ட தலைவன் இடைச்சுர மருங்கில் தங்காது இரவும் பகலுமாக வருவான், அவ்வாறு வாராது தங்குவானாயின் மனையாள்மாட்டு விருப்பில்லை என்பதாகும்.இதனை கீழ்கண்ட நூற்பா உணர்த்தும்.

## 8.34 சிறப்பு மரபு:

வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமையான.

இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப் --
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும் ------
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே". (அகம்.384)

## 8.35 பிரிவு - ஓதல்:

வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது.

கல்விக்கண் பிரியும் காலம் மூன்றியாண்டின் மிகாது. எனவே, ஓர் ஆண்டாயினும் ஈர் ஆண்டாயினும் கொள்ளப்படும்.

### 8.35.1 தூது மற்றும் காவல் பிரிவு:

வேந்துறு தொழிலே யாண்டின தகமே.

வேந்துறு தொழிலாவது பகைதணி வினை. வேந்தற்குற்றவழி, தூது காவல் என அவ்வழிப் பிரிவிற்கும் ஓர் ஆண்டினது அகமே காலம் என்பதாம். எனவே அறுதிங்கள் முத்திங்கள் எல்லாங் கொள்ளப்படும்.

### 8.35.2 பொருள்வயிற் பிரிவு

ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும்.

பொருள்வயிற் பிரிவிற்குங் காலம் ஆண்டினது அகம் ஆகும்.

கற்பியலின் இறுதியில் தலைவனுக்கும் தலைவிக்கும் உரியதோர் மரபுணர்த்தும் நூற்பா ஆகும். தலைவனும் தலைவியும் இல்லறம் புரியத் துணையான தோழி முதலான உரிமைச் சுற்றத்தோடு காப்பு அமைந்த மக்களோடு கூடியிருந்து இல்லறம் நடத்தி காமம் தீர்ந்த காலத்து சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனாகும். சிறந்தது பயிற்றல் என்பது அறத்தின்மேல் மன நிகழ்ச்சி ஆகும்.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

**பயிற்சி வினாக்கள்:**

1.கற்பில் தலைவன் கூற்று நிகழும் இடங்களைச் சுட்டியுரைக்க.
பாடப்பகுதி 8.2 முதல் 8.2.32 வரையிலான பகுதிகளைத் தொகுத்துரைக்க.
2.கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்களை விவரி.
பாடப்பகுதி 8.3 முதல் 8.3.20 வரையிலான பகுதிகளைத் தொகுத்துரைக்க.
2.கற்பில் தோழி கூற்று நிகழும் இடங்களை விவரி.
பாடப்பகுதி 8.4 முதல் 8.4.17 வரையிலான பகுதிகளைத் தொகுத்துரைக்க.

# பிரிவு – III – பொருளியல் - மெய்ப்பாடு - உவமை

குறிப்பு

## கூறு – 9: பொருளியல

தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தின் ஐந்தாவது இயலாய் அமைந்தது பொருளியல் ஆகும்.இது பொருள் இயல்பு உணர்த்தியமையால் பெற்ற பெயர். பொருள் இயல்பு என்னையெனின் மேற்சொல்லப்பட்ட இயல்களினும் இனிச் சொல்லும் இயல்களினும் வரும் பொருளினது தன்மை உணர்த்தலிற் பொருளியல் உணர்த்திற்றாம்.அதனை ஒழிபியல் எனினும் இழுக்காது,அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றமை கூறினமையின் என்று விளக்குவார் இளம்பூரணர்.

## 9.1 தொடர் மொழிக்கண் பொருள் இயைதல்:

இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் திசையா என்மனார் புலவர்.

இசைதிரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும்; அவ்வழி அச்சொற்கு அங்கமாகிய அசை திரிந்தொலியாது. சொல்லொடுசொல் தொடர்வு படும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர் வாய்பாட்டால் தொடுப்பினும் பொருள் தொடர்பு உண்டாயின் பொருள் இயையும்வழி அசைச்சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமாடு ஆயிற்று.

“ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.” (குறள். 662)

இதில் இரண்டு என்னுந் தொகைக்கு ஊறொராமை எனப் பொருள் உரைக்க வேண்டும்.

## 9.2 தலைவன் தலைவிக்கு உரிய ஒருபாற் கூற்று:

காமப்பொருண்மை வெளிப்படுக்கும் காலத்து தலைவன் தலைவி இருவருக்கும் பொதுவான கூற்று யாவை என்பதனை பின்வரும் நூற்பா உரைக்கிறது,

நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி.

**9.2.1 நோயும் இன்பமும் இருவகை நிலையிற் காமங் கண்ணிய மரபிடை தெரிய எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல் மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தல்**: - துன்பமும் இன்பமும் ஆகிய இருவகை நிலையினையுடைய காமத்தைக் குறித்த மரபு இடையீடுபடுதலால் மெய்ப்பரிவு எட்டாகிய எட்டன் பகுதியும் விளங்கப் பொருந்திய உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு புணர்த்துக் கூறல்.

''காமங்கண்ணிய'' என்றதனால் அகப்பொருளாகிய காமமும் புறப்பொருளாகிய காமமும் கொள்ளப்படும். இடைதெரிய என்பதனை,

''............ இன்பம்
இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையாறு
அடைவொழிந்தார் ஆன்றமைந் தார்" (நாலடி. 54)

என்றாற் போல்வன மெய்ப்பாடு எட்டாவது; - நகை, அழுகை, உவகை, இளிவரல், அச்சம், பெருமிதம், மருட்கை, வெகுளி என்பதாகும்.

''குறுநிலைக் குரவின்சிறுநனை நறுவீ
சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய்
ஏதி லாட்டி இவளெனப்
போயின்று கொல்லோ நோதலை மணந்தே." (நற்றிணை 56) - உணர்வுடையது போல் இளிவரல் பற்றி வந்த தலைமகன் கூற்று.

''நின்மொழி கொண்டியானோ விடுவனென் மொழிகொண்
டென்னெஞ்சம் ஏவல் செயின்." (கலித்.113) - மறுத்துரைப்பது போல் தலைமகன் கூற்று; உவகைபற்றி வந்தது.

''அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீயெமக் காகா தது." (குறள்.1261) - மறுத்துரைப்பதுபோல் தலைவி கூற்று: இளிவரல் பற்றி வந்தது.

''இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே." (அகம்.128) - அச்சம்பற்றி வந்தது.

**9.2.2 சொல்லா மரபின் அவற்றெடு கெழீஇச் செய்யா மரபிற்றொழிற்படுத் தடக்கல்:** - சொல்லாத மரபினையுடையவற்றேடு கெழுமி அவை செய்யாத மரபை யாண்டுப் படுத்தியவற்றையும் நெஞ்சினைப் போல அடக்கல். சொல்லாமரபின ஆவன - புள்ளும், மாவும், மரனும், கடலும், கானலும் முதலாயின. செய்யா மரபாவன - தூதாச் சேறலும் வருதலும் உளபோலக் கூறும் அவைபோல்வனவும் பிறவும்.

''கானலுங் கழறாது கழியுங் கூறாது ------
பறைஇய தளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால்..."(அகம் 170)

**9.2.3 அவரவருறுபிணி தம்போற் போற்றல்:** - யாவர் சிலர் யாதொரு பிணியுற்றார் அவருற்ற பிணியைத் தாமுற்ற பிணிபோலச் சேர்த்தி

குறிப்பு

உரைத்தல். அவரவர் என்பது உயர்திணையாய்க் கூறினும் இருதிணையுங் கொள்ளப்படும்.

“பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்றிறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போலக்
காதல்செய் தகன்றாரை உடையை யோநீ.” (கலித்.129)

ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப

**9.2.4 அறிவும் புலனும் வேறுபட நிறீஇ இருபெயர் மூன்றும் உரியவாக உவமவாயிற் படுத்தலும் உவமம் ஒன்றித்தல்:** அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி இருவகைப்பட்ட பெயரும் மூவகைப்பட்ட பொருட்கும் உரித்தாக உவமம் பொருந்துமிடத்து உவமவாயிற் படுத்தல்.

“ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லும்
காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளும்
மாந்தளிர்க் கையில் தடவரு மாமயில்
பூம்பொழில் நோக்கிப் புகுவன பின்செல்லும்
தோளெனச் சென்ற துளங்கொளி வேய்தொடும்
நீள்கதுப் பி∴தென நீரற் றறல்புகும்
வாளொளி முல்லை முகையை முறுவலென்று
ஆள்வலி மிக்கான் அ∴தறி கல்லான்.”

**9.2.5 வேறுபட நிறுத்தல்**: - தத்தம் நிலைமை யொழிய வென்றவாறு. இருபெயராவது - உவமைப்பெயரும் உவமிக்கும் பெயரும், மூன்றும் உரியவாகும் என்பது - தொழிலும் பண்பும் பயனும். உவமம் ஒன்றிடத்து“ என்றதனை மொழி மாற்றுக.

இவை, இடையுங் கையும் முதலாகிய உறுப்புக்களைப் பற்றிய உவம வாயிற்படுத்தறியும் அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி உவமம் பொருந்தியவழிக் கூறியவாறு காண்க. வேயைத் தோள் போலுமென்னாது தோளென்று தொட்டமையால் அறியப்படும் பொருள் வேறுபட்டது. அதனைத் திரியக் காண்டலால் அறிவு வேறுபட்டது. பித்துங்களியும் போல் முலையெனச் சென்று வேயைத்தொடும் என்னாது தோளெனச் சென்று வேயைத் தொட்டமையால் உவமம் ஒன்றியவழி உவமவாயிற் படுத்தது.

இருவர்க்கும் உரியபாற் கிளவி: - தலைமகற்குந் தலைமகட்கும் உரியவொரு கூற்றுக் கிளவி.

## 9.3 கனவு:

கனவும் உரித்தால் அவ்விடத் தான்.

காமம் இடையீடுபட்டுழிக் கனாக் காண்டலும் உரித்து. இது தலைமகற்குந் தலைமகட்கும் உரித்து.

“இன்னகை இனைய மாகவும் எம்வயின் ----

வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியன் யானே.” (குறுந். 30) - தலைவி கனாக்கண்டு கூறியது.

## 9.4 தாய்க்கு உரிய கிளவி:

தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்.

நற்றாய்க் குரியதோர் மரபு உணர்த்திற்று. மேற்சொல்லப்பட்ட கனவு உடன்போக்குக் கிளக்கப்பட்டவிடத்து தாய்க்கும் உரித்து
கண்படை பெறேன் கனவ (அகம். 55)

## 9.5 நால்வர்க்கும் உரிய மரபுகள்

தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்னும் நால்வர்க்கும் உரிய மரபுகளை பின்வரும் நூற்பாக்கள் குறிப்பிடுகின்றன.

பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே
நட்பின் நடக்கை யாங்கலங் கடையே.

பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்து - பான்மை கெழுமப்பட்ட கிளவி பெண்பாலாராகிய நால்வர்க்கும் உரித்தாம். நால்வராவார் - தலைவி, தோழி, நற்றாய், செவிலி. அ∴தேல் தலைமகளை யொழிய மூவர் என்று அமையாதோ எனின் மேல் தலைமகட்கும் உரித்தென்றார் அவரொடு கூட நால்வர் என வகையறுத்தல் என்பது. அ∴தாவது, தலைவியொடு தோழி ஒழுகும் ஒழுக்கம் அவ்வழியல்லாத விடத்தென்றவாறு. அவன்மாட்டு நிகழ்வது தலைவன் தோழிக் குணர்த்தாது பிரிந்தவழி என்று கொள்ளப் படும். பாற்கிளவி என்பது பயிலாது வரும் ஒரு கூற்றுச்சொல் எனப்பட்டது. அதனைக் கெழுமிய சொல் பால்கெழு கிளவியாயிற்று.

நற்றாய் கூறியதற்குச் செய்யுள்:

“கருமணற் கிடந்த பாவை என்
அருமகளே என முயங்கினள் அழுமே”. (அகம். 165)

செவிலி கூறியதற்குச் செய்யுள் :-

“தான்தாயாக் கோங்கம் தளர்ந்து முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை இருங்குரவே - ஈன்றாய்
மொழிகாட்டா யாயினும் முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டாய் ஈதென்று வந்து”. (திணைமாலை.நூற்.65)

## 9.6 நால்வர்க்கும் உரிய மரபு:

உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.

உயிரும் நாணும் மடப்பமும் என்று சொல்லப் பட்டவை குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய தலைமகட்கும் தோழிக்கும் நற்றாய்க்கும் செவிலிக்கும் உரியது.. செயிர்தீர் சிறப்பின் என்றமையான் ஏனையோர் போலாது இவர் நால்வரும் ஒரு நீர்மையர் என்று கொள்க. இதனாற் சொல்லியது என்னை யெனின். இந் நால்வரும் ஆக்கமுங் கேடும் ஒருவர், மாட்டு வந்துழித் தமக்குற்றதுபோல் நினைப்பராதலான் ஒருவரையொருவர் இன்றிமையாது

ஓருயிர் போல்வர் எனவும், நாணமும் மடனும் நால்வர்க்கும் ஒக்குமாகலான் அவலமாகிய வழியும் வருத்தமும் ஒக்கும் எனவும் கூறியவாறு அதற்குச் செய்யுள் என உரைவிளக்கம் தருவார் இளம்பூரணர்.

"இவளே நின்னல திலளே யாயுங்
குவளை உண்கண் இவளல திலளே
யானும் ஆயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே".

## 9.7 கிழத்தியின்கண் அமையாத மரபு:

உடம்பும் உயிரும் வாடிய கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

இ∴து உடம்பும் உயிரும் மெலிந்த இடத்தும் இவை என்னுற்றன எனக் கூறுவாள் அல்லது கிழவோனைச் சேர்தல் கிழத்திக்கு இல்லை.

"கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து". (குறள். 1173)

"ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட்டது". (குறள். 1176)

ஒருசிறை நெஞ்சோடு உசாவுங் காலை
உரிய தாகலும் உண்டென மொழிப.

தனித்து நெஞ்சோடு உசாவுங்காலத்துக் கிழவோற் சேர்தல் உரியதாகலும் உண்டு.. உம்மை எச்சவும்மை யாகலால் தோழியோடு உசாதலும் கொள்க

"கோடீர் இலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுவினி வாழிய நெஞ்சே". (குறுந்.11) எனவரும்.

"பகலே பலருங் காண வாய்விட்
டகல்வயற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி". (நற்றிணை. 365) - என்றது தோழியொடு உசாவியது.

## 9.8 தலைவி மடனொடு நிற்றல்:

தலைமகன் தனது புறத்தொழுக்கந் தலைமகள் மாட்டுக் மறைத்து உணர்த்தும் வழியும் தலைமகள் மாட்டுப் புணர்ச்சி வேட்கை தோன்றிய வழியுமாகிய அத்தன்மைப்பட்ட இடங்கள் அல்லாதவழி எல்லாம் தலைமகள் மடனொடு நிற்றல் கடன் என்று சொல்லுவார்.எனவே தன்வயிற் காத்தல்,அவன்வயின் வேட்டல் ஆகிய ஈரிடத்தும் தலைவி மடனழிந்து கூறுவாள். இதனை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

தன்வயிற் கரத்தலும் அவள்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்.
மடனொடு நிற்றல் கடனென மொழிப.

தன்வயிற் கரந்தவழி மடனழிய நின்றதற்குச் செய்யுள்:-

முத்தோ் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்

புத்தியானை வந்தது ; காண்பான் யான் றங்கினேன்". - என்றவழி, அதற்குடம்படாது.

"அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்". (கலித். 97)

என்றவழி, பொய்கூறினான் என்னுங் கருத்தினளாகிக் கூறுதலின் மடனழிதலாயிற்று.

## 9.9 தலைவி அறத்தொடு நிற்றல்:

தலைமக்களின் களவொழுக்கம் கற்பொழுக்கமாய் மாறுவதற்குக் காரணமாய் இருப்பது அறத்தொடு நிற்றல் என்பது ஆகும்.தலைவியின் களவொழுக்கத்தினைத் தலைவி தோழியிடம் கூற தோழி செவிலியிடம் கூற, செவிலி நற்றாயிடம் கூற, நற்றாய் தந்தைக்கும் தனையனுக்கும் வெளிப்படுத்துவாள்.தலைவி அறத்தொடு நிற்கும் காலத்தில்தான் தோழி அறத்தோடு நிற்பாள்.தலைவி கூறாமல் தலைவியின் களவொழுக்கத்தினை தோழி வெளிப்படுத்தமாட்டாள்.

அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப.

விழுந்த மாரிப் பெருத்தண் சாரற் ---

"கூதிர்க் கூதளத் தலரி நாறும்
செயலை அந்தளிர் அன்னஎன்
மதனின் மாமெய்ப் பசலையுங் கண்டே". (நற்றிணை.244)

### 9.9.1 தோழி அறத்தொடு நிற்றல்:

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் ஏழு வகைப்படும். அவையாவன:

எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியோடு தொகைஇய.
எழு வகைய என்மனார் புலவர்.

இது தோழி அறத்தொடு நிற்குமாறு உணர்த்திற்று. இதற்குப் பொருள் களவியலுள் தோழி கூற்று உரைக்கின்றுழி உரைக்கப்பட்டது என்பார் இளம்பூரணர். களவியலில் தோழிக்குரிய கிளவியெல்லாம் தொகுத்துரைக்கும் நாற்றமும் தோற்றமும் என்னும் நூற்பாவில் முன்னிலை அறனெனப்படுதல் என்று இருவகை என்பதனை விளக்குமிடத்து அறத்தொடு நிலையின்கண் தோழிக்கு கூற்று நிகழும். அவ் அறத்தொடு நிலை எளித்தல் முதலா உண்மை செப்பும் கிளவி ஈறாக எழுவகைப்படும் என்று விளக்கம் செய்வார்.

## 9.10 செவிலி மரபு:

தோழி அறத்தொடு நிற்பதன் முன்னம் செவிலி குறிப்பினால் தலைவியின் களவொழுக்கத்தை உணர்வாள்

உற்றுழி யல்லது சொல்ல லின்மையின்

அப்பொருள் வேட்கைக் கிளவியி னுணர்ப.

இது செவிலிக்குரியதோர் மரபுணர்த்திற்று. காமம் மிக்கவழி அல்லது சொல்நிகழ்ச்சி இன்மையின் தலைமகள் தான் கருதிய பொருண்மேல் வேட்கையைத் தன்னாலே அறிவள். பன்மையாற் கூறினமையால் அவ்வுணர்ச்சி செவிலிக்கும், நற்றாய்க்கும் ஒக்கும். .

“அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி”.(அகம். 48)

என்றவழிச் செவிலி குறிப்பினான் உணர்ந்தவாறு காண்க.

## 9.11 பெண் இயல்பு:

செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான.

என்பன பெண்டிர்க் குரியதோர் இயல்பாகும்.

**செறிவு** - அடக்கம்

**நிறைவு** - அமைதி

**செம்மை** - மனங்கோடாமை

**செப்பு** - சொல்லுதல்.

**அறிவு** - நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல்.

**அருமை** - உள்ளக் கருத்தறிதல் அருமை. இவை எல்லாம் பெண்பக்கத்தின என்றவாறு.

இதனாற் சொல்லியது மேற்சொல்லிய அறத்தொடுநிலைவகை. இனிக் கூறுகின்ற வரைவுகடாதற்குப் பகுதியும் உண்மை வகையானும் புனைந்துரைவகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண்டிர்க்கு இயையுமோ என ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது.

## 9.12 வரைவு கடாதல்:

தலைமக்களின் களவொழுக்கம் கற்பொழுக்கமாய் மாறுதலே சிறப்புடைத்தாம். இவ்வாறு மாற்றுகின்ற வேலையினை தோழி செய்தல் வேண்டும். இச்செயலுக்கு வரைவு கடாதல் என்று பெயர்,

பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்
வழுவி னாகிய குற்றங் காட்டலும்
தன்னை யழிதலும் அவணூ றஞ்சலும்
இரவினும் பகலினும் நீவா என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப.

தலைமகன் வருகின்ற பொழுதும் நெறியும் ஊரின்கண்காவலும் என்று சொல்லப்பட்டவற்றின்கண் வரும் தப்பினால் உளதாகுங் குற்றங் காட்டலும். தான் மனனழிந்து கூறலும், தலைமகட்கு வரும் இடையூறு கூறலும்,

தலைமகளைப் பகற்குறிவிலக்கி இரவுக்குறி நீ வா என்றலும், இரவுக்குறி விலக்கிப்பகற்குறி நீ வா என்றலும், தலைமகனை வாராதொழி எனக்கூறலும், இத்தன்மையவாகிக் குற்றம் பிற பொருளை எடுத்துக் கூறலும், இத் தன்மையவாகிக் குற்றம் பயப்ப வந்த அத்தன்மைய பிறவும் வரைதல் வேண்டும் என்னும் பொருளையுடையன ஆகும்.

வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇ மருங்கின் உரித்தென மொழிப.

இதுவும் தலைமகட்குந் தோழிக்கும் உரியதோர் இயல்புணர்த்திற்று.

கமாவது களவொழுக்கம் நீட்டித்த இடத்து வரைதல் வேட்கைப் பொருளாற் கூறுதலை மறுத்துப் பட்டாங்கு கூறிச்சொல்லுதல் உரித்தாம்.

"கொடிச்சி யின்குரல் கிளைசெத் தடுக்கத்துப்
பைங்குரல் ஏனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மாமலை நாட வரைந்தனை கொண்மே"(ஐங்குறு.289)

## 9.13 தலைமகனுக்குரிய மரபு:

தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.

தலைமகன் களவுக்காலத்துத் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து வந்து தலைவியைச் சேறலும் உரியன்.

"நெடுந்தேர் கடாஅய்த் தமியராய் வந்தோர்
கடுங்களிறு காணீரோ என்றீர் - கொடுங்குழையார்
யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்து
ஏனல் கிளிகடிகு வார்."

## 9.14 உண்ணாத பொருளை உண்டன போலக் கூறல்:

உண்டற் குரிய அல்லாப்பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே.

இ.்.து ஒருசார் வழுவமைத்தலை நுதலிற்று. உண்ணல் தொழிலுக்கு உரியவல்லாத பொருளை உண்டனவாகக் கூறலும் மரபாகும்.

"பசலையால் உணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்" (கலித். 15) எனவும்,

"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று" (குறள். 1244) எனவும் வரும்.

## 9.15 களவில் தலைமகள் இயல்பும் திறனும்:

களவில் தலைமகள் இயல்பும் திறனும் குறித:து சில நூற்பாக்கள் குறிப்பிடும்.

பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக்கைம் மிகுதல் உண்மை யான
அன்பே யறனே யின்ப நாணொடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்

ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே.

பொருள்வயிற் பிரிதல்வேண்டும் எனக் கூறுதலும் கடியப்படாது, தலைமகளைத் தமர் காக்குங்காவல் மிகுதியுள்ள வழி அன்பு, அறன்,இன்பம்.நாண் என்பன நீங்கப்பெறும். தலைவி வெளியே செல்லமுடியாதவாறு காப்பு மிகுதல் உண்மையான போது பொருள்வயிற் பிரிதல் என்று கூறுதல் நீக்கப்படாது.

சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே.

தலைமகன் பொருள்வயிற் பிரியும்வழி உடன் போக்குக் கருதிய தலைமகட்கு யான் போகின்ற நெறி கல்லுங் கரடுமாகிய சுரம் எனக் கூறுதலும் நீக்கப்படாது.இதனாற் சொல்லியது காப்புமிகுதிக்கண் வருத்தமுறுந் தலைமகளை உடன்கொண்டு போதல் தக்கது என்பார்க்கு நெறியருமை கூறி விலக்கவும் பெறும் என்பதாகும்.

## 9.16 புலனெறி வழக்குகள்:

உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே.

. உயர்ந்தோர் கூற்று வழக்குவழிப்படுதலின் வழக்குப்படுதல் செய்யுட்குக் கடன் என்பதாகும். எனவே, வழக்கழியவருவன செய்யுட்கண் வரப்பெறாது. இதனானே மேலதிகாரத்திற் கூறிய சொல்லும் இவ் அதிகாரத்திற் கூறுதற்கு இயன்ற பொருளும் வழக்கொடு புணர்ந்தனவே, புணராதன செய்யுட்கண் வரப்பெறாது. இன்னும் இந் நூலகத்து அகப்பொருளாகவும் புறப்பொருளாகவும் எடுத்தோதப்பட்டதன்றி உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவன எல்லாம் செய்யுட்குப் பொருளாகப் புணர்க்க என எஞ்சியது உணர்த்திய வாறுமாம். உயர்ந்தோர் வழக்கென்றமையானும் பொருளும் இன்பமும் கெடாமல் முன்றினுளொன்று பயப்பக் கூறுதல் கொள்க என்பது இளம்பூரணம்.

## 9.17 அறக்கழிவுடையன:வழக்கெனல் ஆகாதன:

அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப.

அகப்பொருளும் அறத்திற் கழிவுடையன புறப்பொருளும் வழக்கு எனல் ஆகாது. பொருளாவது அகப்பொருளும் புறப்பொருளும். அறத்திற் கழிவு வரும் அகப்பொருளாவது பிறன்மனைக் கூட்டம்.

பொருட்பயன் வருதலாவது அவராலே பொருள் பெறுதல். அவ்விடத்து இன்பமும் பொருளும் பயப்பினும் அதனை வழங்குதலும் பழிக்கப்பட்டதன்று என்பதாம். எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். (குறள். 144)

புறப்பொருட்கண் அறக்கழி வுடையன பகைவர் தேஎத்து நிரைகோடலும் அழித்தலும் போலப் பொருட்பயன் காரணத்தான் நட்டோர் தேஎத்துஞ் செயல். இவையும் பொருள் பயப்பினும் வழக்கென வழங்குத லாகாது.

“பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்

கழிநல் குரவே தலை". (குறள். 657)

மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே.

மேற்கூறப்பட்ட அகப்பொருள் அப்பொருட்கண்ணும் நாண் நீங்காத நல்வழிக்கட் படுத்துப் பொருள்வகை புணர்க்க. என்பது நூற்பாவின் பொருளாம்.அறம் முதலியன வழுவின்று ஆயினும் நாண் அழியும் வரும் பொருண்மை புணர்த்தற்க என்பார் உரையாசிரியர்.

"பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறன் நாணத் தக்க துடைத்து". (குறள். 1018)

## 9.18 சொல் வழுவும் மரபு வழுவும்:

முறைப்பெயர் மருங்கினற் கெழுதகைப் பொதுச்சொல்
நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே.

முறைப்பெயராவது இயற்பெயர் முதலிய பெயரான் அன்றி முறைமைப்பற்றி வருவது. அது தந்தை மகனைக் கூறும்பொழுது தம்முன், தம்பி என்பனவும் கிழவன், தோழன் என்பனவும் போல வருவன.

"எல்லா, இ∴தொத்த னென்பெறான் கேட்டைக்காண்"(கலித். 61)
என்றவழிப் பெண்பால்மேல் வந்தது.

"எல்லா, தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று." (கலித். 62)- தலைமகன்மேல் வந்தது.

தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்
அல்ல வாயினும் புல்லுவ உளவே.

இதுவும் ஒருசார் மரபு வழுவமைத்தலை நுதலிற்று.

**தாயத்தான் எய்துதல்**: தந்தைபொருள் மகற்குறுதல்.

**ஈயச் சேறல்**: ஒருவன் கொடுப்ப ஒருவன் கோடல்.

**வினைவயில் தங்கல்:** உழவு முதலியனவற்றான் வருதல்.

**வீற்றுக்கொளப்படுதல்**: வேறுபடுத்திக் கோடல். அ∴தாவது பகையினால் வந்தது கோடல்.

இந் நான்கினும் வரும் பொருளினது உரிமைத்தோற்றம் அல்லவாயினும் பொருந்துவ உள என்பதாம்.

"விரும்பிநீ, என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கும் நினைத்துக்காண்". (கலித்.18) ˙ தலைமகள் தோளைத் தோழி தன்னையும் உளப்படுத்தி எனதெனக் கூறியது

## 9.19 பொருள் கொள்ளும் மரபு.:

ஒருபாற்கிளவி ஏனைப்பாற் கண்ணும்
வருவகை தாமே வழக்கென மொழிப.

ஒருபக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த பக்கத்துக் கண்ணும் வருவகைதாம் வழக்கு நெறி. அதாவது மனையோள்மாட்டும் காமக்கிழத்தி மாட்டும் நிகழும் புணர்ச்சியும் பிரிவும் ஊடலும் பரத்தையர்மாட்டு நிகழும். அன்னை கடுஞ்சொல் அறியாதாள்" (கலித். 97) என்னுங் கலியுள்,

"சிறுகாலை யிற்கடை வந்து குறியெய்த

அவ்வழி என்றும்யான் காணேண்" - என்பது புணர்வு குறித்து வந்தது.

## 9.20 இன்பத்தின் பொதுமை:

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.

எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தான் மனம் பொருந்திவரு விருப்பத்தையுடைத்து என்பதாம். எனவே மனம் பொருந்தியவழிப் பரத்தையர் மாட்டும் இன்பம் உளதாகும் எனவும், பொருந்தாதவழி மனைவியர்மாட்டும் இன்பமின்றாம் என்பதும் கொள்க.

## 9.21 பரத்தையர் பிரிவிற்குரியோர்:

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே

நிலத்திரி பின்ற∴. தென்மனார் புலவர்.

பரத்தையர்மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத்தார்க்கும் உரித்து; அவ்வழிப் பிரியும் பிரிவு நிலம் பெயர்ந்து செல்லுதல் இல்லை என்பார் தொல்காப்பியர்.

எனவே, தன்னுரகத்துஞ் சார்ந்தவிடமுங் கொள்க. நால்வர்க்கும் உரித்து என்றமையான் நான்கு வருணத்துப் பெண்பாலாரும், அவளொடு ஊடப்பெறும் என்பதாம்.

"யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்

ஊராண்மைக் கொத்த படிறுடைத்து". (கலித். 89) - என்பது பார்ப்பனி கூற்று.

"பெரியார்க், கடியரோ ஆற்றா தவர்". (கலித். 88) - என்பது அரசி கூற்று

## 9.22 களவில் தலைவன் மரபுகள்.

களவின்போது தலைவிக்குத் தலைவனுடன் உடன்போதல் குறிப்பும் வரைவுகடாதல் குறிப்பும் தோன்றும் இடங்களை கீழ்கண்ட நூற்பா விளக்கும்.

ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்

பிரித லச்சம் உண்மை யானும்

அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று

அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்

நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்

போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்.

**ஒருதலையுரிமை வேண்டல்**: - ஒரு தலையாகத் தலைமகள் உரிமை பூண்டலை வேண்டியவிடத்து மென்றவாறாம்.

**மகடூஉப் பிரிதல் எச்சமுண்மை**: - பிரிதற்கண் வரும் அச்சம் பெண்பாற்கு இயல்பாகும்..

**அம்பலும் அலரும் களவுவெளிப்படுக்கு மென்று அஞ்ச வந்த வாங்கிரு வகை:** - களவொழுக்கத்தை வெளிப்படுக்குமென்று அஞ்சும்படியாக வந்த அம்பலும் அலருமாகிய இருவகையின்கண்ணும் என்றவாறு.

**நோக்கொடு வந்த இடையூறு பொருள்:** - தலைமகன் வரவு பார்த்திருந்தவழி வந்த இடையூறாகிய பொருளின்கண்ணும் என்றவாறு. அவையாவன:- தாய் துஞ்சாமை, நிலவு வெளிப்படுதல் முதலியன.

மேற்கண்ட நிகழ்வுகளில் தலைமகனுடன் போதற் குறிப்பும் வரைவுகடாதற் குறிப்பும் மனைவிமாட்டுத் தோன்றும்.

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகஇவ் அழுங்க லூரே." (நற்றிணை.149)

இது போக்குக்குறித்தது இரும்பிழி மகாஅர்" என்னும் பாட்டு வரைவு குறித்தது.

## 9.23 தலைமகட்குந் தோழிக்கு உரியதோர் திறன்

வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.

வருத்தமிகுதியைக் குறித்தவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்று சொல்லுவர். எனவே, வருத்த மிகுதியைச் சுட்டாதவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை". (குறள். 1151)

## 9.24 கற்பில் தலைவன் மரபு:

மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய.

தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் ஆராயுங் காலத்துப் புலவிக்காலத்து உரியதாம். எனவே ஒழிந்த ஊடல், துனி என்பனவற்றிற்கு உரியவாம்.

"ஒரூஉக் கொடி யியல் நல்லார் குரனாற்றத் துற்ற --------
ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு" (கலித் . 88 )

## 9.25 தலைவியை நலம் பாராட்டல்:

நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்

புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே.

களவுக்காலத்து தலைவியின் நலம் பாராட்டிய தலைமகன் கற்புக் காலத்தும் எழில் நலம் பாராட்டுவான் என்பதாம்.

"அணைமருள் இன்றுயில் அம்பணைத் தடமென்றோள் -------
அலர்முலை யாகத் தகன்ற அல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி". (கலித். 14)

## 9.26 இறைச்சி:

இறைச்சி தானே உரிப்புறத் ததுவே.

இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருளாகும். அ∴தாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்குந் துறைக்கும் அடையாகி வருவது.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே". (குறுந். 3)

என்பதில் நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருள் ஆகும்..

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே.

இறைச்சிப் பொருள்வயிற் றோன்றும் பொருளும் உள. பொருள் திறத்து இயலும் பக்கத்து ஆராய்வார்க்கு இறைச்சிப் பொருள்வயில் தோன்றும் பொருளும் உள. இறைச்சிப் பொருள் பிறிதுமோர் பொருள்கொளக் கிளப்பனவுங் கிளவாதனவும் என இருவகைப்படும்.

அவற்றிற் பிறிதோர் பொருள்பட வருமாறு : -

"ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய்ய மலரு நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே". (குறுந். 208)

என்பது வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலைமகனோடு ஒன்றுமாறு என்னெனக் கவன்ற தோழிக்கு உடன் போதற் குறிப்பினளாய்த் தலைமகள் கூறியதாகலின், இதனுட் பொருகளி றென்றமையால் தலைமகள் தமர் தலைமகன் வரைவிற் குடன்படுவோரும் மறுப்பாருமாகி மாறுபட்ட தென்பது தோற்றுகின்றது. 'பொருகளிறு மிதித்த வேங்கை' யென்றதனாற் பொருகின்ற விரண்டு களிற்றினும் மிதிப்ப தொன்றாகலின் வரைவுடன்படாதார் தலைமகனை யவமதித்தவாறு காட்டிற்று. 'வேங்கை நின்று கொய்ய மலரும்' என்றதனான் முன்பு ஏறிப்பறித்தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள்பட்டது. இதனானே

குறிப்பு

பண்டு நமக்கரியனாகிய தலைமகன் தன்னை யவமதிக்கவும் நமக்கெளியனாகி யருள் செய்கின்றானெனப் பொருள் கொளக்கிடந்தது.

## 9.27 அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டல்:

அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.

.பிரிவாற்றாத காலத்து இறைச்சிப் பொருட்கண் தலைவன் அன்புறுதற்குத் தகுவன இறைச்சிப் பொருட்கண் சுட்டுதலும் வற்புறுத்தலாகும்.

"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே." (கலித்.11) - என்றது வற்புறுத்தற் குறிப்பு.

## 9.28 தலைவிக்குரிய இயல்புகள்:

செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்
மெய்பெற உணர்த்துங் கிழவிபா ராட்டே.

தலைமகன் பொருள்வயிற் பிரியும் காலத்து தலைவியைப் பாராட்டும் பாராட்டு தலைமகன் பொருள்வயிற் பிரியும் இடத்து உளதாகிய அச்சத்தையும் வினைவயிற் பிரிவையும் தலைவிக்கு உணர்த்தும்.

"நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னுஞ்சொல்
இன்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுவொன் றுடைத்தென எண்ணி " (கலித்.24) பாராட்டினால் தலைமகள் பிரிவு உணர்ந்திற்று.

## 9.29 தலைவியின் ஊடல்:

கற்பு வழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்
உள்ளத் தூடல் உண்டென மொழிப

கற்புக் காரணமாகத் தலைவி தலைமகனது பரத்தைமைக்கு உடன்பட்டாளே ஆயினும், உள்ளத்தின்கண் ஊடல் நிகழும்.

## 9.30 தலைவிக்கு உரிய மரபு:

கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.

தலைவி மற்றொருத்தி குணம் இத்தன்மையள் எனச் சொல்லித் தலைமகன் குறிப்பினை அறிதற்கும் உரியள்.

"கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே." (ஐங்குறு.122)

## 9.31 சிறப்பு மரபு:

தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்

மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்தும்
தலைத்தாட் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே.

பரத்தையர் தாம் உற்ற துன்பத்தினைத் தலைமகட்குக் கூறியவழியும் அவரிடத்துத் துன்பத்தை மெய்ம்மையாக உணர்ந்து வைத்து மகிழ்ச்சியும் புலவியும் அல்லாத காலத்து தலைமகன்மாட்டுக் கழறுதல் தலைவன் எதிர்ப்பட்டபொழுது இல்லை.

“நின்னணங் குற்றவர் நீ செய்யும் கொடுமைகள்
என்னுழை வந்துநொந் துரையாமற் பெறுகற்பின்” (கலித். 77) - புலவியிற் கூறியது.

## 9.32 தலைமகள் வழுக்காத்தல்:

பொழுது தலைவைத்த கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு
அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப.

இது பருவம் வந்துழித் தலைமகட்கு உரியதோர் வழுக்காத்தலை உணர்த்திற்று.

**பொழுது தலைவைத்தல்:** - யாதானுமொரு பருவத்தைக் குறித்தவழி அப்பருவம் இருதிங்களை எல்லையாக உடைத்தாயினும் அது தோற்றியவழி என்றவாறாம்.

**கையறு காலை** - இது கண்டு செயலற்றகாலை ஆகும்.

இறந்தபோலக் கிளத்தல்: - அக்காலந் தோன்றிய பொழுது கழிந்தது போலக் கூறுதல்.

**மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு அவை நாற் பொருட்கண் நிகழ்தல்:** - அவ்வாறு கூறுதல் அறியாமையானாதல் வருத்தத்தானாதல் மயக்கத்தானாதல் அக் காலத்திற்குரிய பொருள் மிகத் தோன்றுதலானாதல் என இந்நான்கு பொருளானும் நிகழும் என்பதாம். சிறுபொழுதாயின் யாமங் கழிவதன் முன்னர்க் கூறுதல்.

“பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம் பெயல் தாழ
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானம்
கருவிருந்து ஆலிக்கும் போழ்து.” (கார்நாற். 1) - இது பருவங்கண்டவழி வாரார்கொல் என்றமையால் இறந்த போலக் கிளந்தவாறாயிற்று. இதுவும் ஓர் மரபு வழுவமைத்தல்.

## 9.33 களவுக்காலத்துத் தோழிக்குரியதோர் திறன்:

இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நல்வகை யுடைய நயத்திற் கூறியும்

குறிப்பு

பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.

தனது கருத்தனை நிறைவேற்றத் தருமாறு இரந்து குறையுற்ற தலைமகனைத் தோழி தொலைவில் நீக்கி நிறுத்தலன்றி மெய்ம்மை கூறுதலும் பொய்ம்மை கூறுதலும் நல்வகையுடைய நயத்தினாற் கூறியும் பல்வகையானும் படைத்து மொழிந்து சொல்லவும் பெறும்.

நல்வகையுடைய நயத்திற்குச் செய்யுள்:-

“வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே.”

இது மடலேறுவல் என்ற தலைவனைப் பழித்து அருளுடையீராதலான் மடலேறுவது அரிது என நயத்திற் கூறியது. இதுவுமோர் மரபுவழுவமைத்தவாறு.

## 9.34 தலைவன் ஐயுறல்:

உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே.

உயர்த்துச் சொல்லுதற்குரிய கிளவி தலைமகற்குந் தலைமகட்கும் ஒத்தகிளவியாகும், ஐயக்கிளவி தலைமகற்கே உரியதாம்.

தலைவிமாட்டு ஐயக்கிளவி இல்லை என்பதாம். அதனாற் குற்றமென்னையெனின், தெய்வமென்று ஐயுறுங்கால் அதனை முன்பு கண்டறிவாளாதல் வேண்டும். காணாமையின் ஐயமிலள் என்க. இனி உயர்த்துச் சொல்லுதல் உளவாம்.

“அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்”. (அகம்.48) - உயர்த்துச் சொல்லியது.

தலைவன் உயர்த்துச் சொல்லியதற்குச் செய்யுள்:-

“மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.” (குறள்.1118) - தலைவன் உயர்த்துச் சொல்லியது.

## 9.35 தோழிக்குரியதோர் மரபுவழுக் காத்தல்:

உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரிய தாகும் தோழிகண் உரனே.

தலைமகனுக்கு உற்ற துன்பத்தைப் நீக்குதல் தோழி இயல்பாகலின் தோழி அவட்குரியதாகும் அறிவு உடையள் எனக் கூறுதல் அவட்குரியதாகும்.

“பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி” என்னும் பாலைக் கலிப் பாடலுள்,

“கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்” (கலித். 21) எனக் கூறினாள் என்று கொள்க.

## 9.36 உயர்மொழிக் கிளவி:

உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.

.உயர்த்துச் சொல்லுங் கூற்றும் தோழிக்கு உரித்து.

“தாமரைக் கண்ணியை தண்நறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே” (கலித்.52) - உயர்த்துச் சொல்லியவாறு.

## 9.37 வாயில்கள் மரபு:

வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தங் கூற்றே.

வாயில்கட்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. அவரவர் சொல்லத்தகுங் கூறுபாடு வாயில்கள் கூறுங் கிளவி வெளிப்படக் கிளத்தல் கேடின்றி யுரிய என்பது இதன் பொருளாகும். எனவே, வாயில்களல்லாத தலைமகளும் நற்றாயும் மறைத்துச் சொல்லப்பெறுவர் என்பது பெறப்படும்.

## 9.38 உள்ளுறை உவமம்:

உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.

உடனுறையும் உவமமும் சுட்டும் நகையும் சிறப்பும் எனக் கெடலரு மரபினை உடைய உளளுறை ஐந்து வகைப்படும்.

உள்ளுறையாவது பிறிதொரு பொருள் புலப்படுமாறு நிற்பதொன்று. அது கருப்பொருள் பற்றி வருமென்பது அகத்திணையியலுள் (அகத்திணை.50) கூறப்பட்டது.

**உடனுறை:** உடனுறையாவது உடனுறைவ தொன்றைச் சொல்ல, அதனாலே பிறிதொரு பொருள் விளங்குவது.

“விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழற் பிறவுமா ருளவே.” (நற்றிணை.172)

இதனுள் புன்னைக்கு நாணுதும் எனவே, அவ்வழித் தான் வளர்த்த புன்னையென்றும், பல்காலும் அன்னை வருவள் என்றும் உடனுறை கூறி விளக்கி நின்றது.

**உவமம்:** உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது.

குறிப்பு

"வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுந்தேன் வேட்டும் குறுகும் - நிறைமதுச் சேர்ந்து
உண்டாடும் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்டா மரைப்பிரிந்த வண்டு." (தண்டி. 53 உரை

இது வண்டைக் கூறுவாள் போலத் தலைமகன் பரத்தையிற் பிரிவு கூறுதலின் உள்ளுறையுவமம் ஆயிற்று.

**சுட்டு** - ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருட்படுதல்.

"தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்ட வள்செய் தது." (குறள். 1279)

இதனுள் இப் பூப்பறிப்பேமாயின் வளைகழன்று தோள் மெலிய நடத்தல் வல்லையாக வேண்டும் என ஒரு பொருள் சுட்டி நின்றது.

**நகை** - நகையினாற் பிறிதொரு பொருளுணர நிற்றல்.

"அசையியற் குண்டாண்டோ ரேஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்." (குறள்.1098)

இதனுள் நகையினாற் பிறிதோர் குறிப்புத் தோற்றி நின்றது.

**சிறப்பு** - இதற்குச் சிறந்தது இஃது எனக் கூறுவதுனானே பிறிதோர் பொருள் கொளக் கிடப்பது.

## 9.39 அந்தமில் சிறப்பு:

அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.

இதுவும் உள்ளுறைப் பாற்படுவதோர் பொருள் உணர்த்திற்று. இதற்குச் சிறந்தது இது என்று கூறுவதினாலே பிறிதோர் பொருள் கொள்ளக் கிடப்பது.

**அந்தமில் சிறப்பு** - மேன்மேலுஞ் சிறப்புச் செய்தல்.

"நுண்எழில் மாமைச் சுணங்கணி ஆகம்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார்என்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொ லறியேன் என்னும்". (கலித். 4)

இன்பத்தின்கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோற்றுகின்றது.

## 9.40 மங்கல மொழி அவையல் மொழி:

மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியுங்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப.

இதுவும் உள்ளுறைப் பாற்படுவதோர் சொல் உணர்த்திற்று.

மங்கலமொழி முதலாகச் சொல்லப்பட்டனவும் உள்ளுறைப் பாற்படும்..

**மங்கலமொழி**: - மங்கலத்தாற் கூறுஞ்சொல். அது செத்தாரைத் துஞ்சினர் என்றல்.

**அவையல் மொழி**: இடக்கரடக்கிக் கூறுதல். அது கண் கழீஇ வருதும் என்றல்.

**மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழி**: ஒருவனைச் சிங்கம் வந்தது என்றாற்போல் கூறுவது.

அவையெல்லாஞ் சொல்லாற் பொருள்படாமையின் உள்ளுறைப் பாற்படும்.

## 9.41 சிறப்பொடு வரல்:

சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு
அனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே.

மெய்ப்பாட்டியலுள் நடுவண் ஐந்திணைக்குரிய தலைமக்கட் காகாதன எடுத்தோதுகின்றா ராகலின், அவற்றுள் ஒருசாரன ஒரோவிடத்து வருமென்பது உணர்த்திற்று.

சினமும் பேதைமையும் நிம்பிரியும் நல்குரவும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு வகையும் யாதானும் ஒரு பொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும்.

"கொடியியல் நல்லார் குரல் நாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்கு
அடியரோ ஆற்றா தவர்." (கலித். 88)

இதனுள் தொடிய எமக்கு நீ யாரை" என்பது சினம்பற்றி வரினும் காமக் குறிப்பினாற் புணர்ந்த தலைமகள் கூறுதலின் அவள் காதலைச் சிறப்பிக்க வந்தது.

"அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்
மகனல்லை மன்ற இனி" (கலித். 19)

தலைவி மகனல்லை" எனல் நிம்பிரியாகிய வெதுப்புப்பற்றி வந்தது.

இதுவும் பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது,

"உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழைவொடு வருதி நீயே இ∴தோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும் இவ்வூரே" (குறுந். 295)

இதனுள் ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை" எனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறிப் பெருநலக் குறுமகள் வந்தென விழவாயிற் றென்னுமவ்வூர்" என்றமையான் நல்குரவு பற்றித்தலைமகனைச் சிறப்பிக்க வந்தது. இச் சூத்திரத்தினுள் வரைந்து கூறாமையின் தலைவியுந் தலைவனுந் தோழியுஞ் செவிலியுங் கூறப்பெறுவர் என்று கொள்க.

## 9.42 அன்னை எனல்:

அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்
தோன்றா மரபின என்மனார் புலவர்.

அன்னை என்னை என்று சொல்லுதலும் உள; அவை முன்புள்ளார் சொல்லிப்போந்த முறைமையாகும். அவை தாம் சொல்லினானும் சொல்லிற்கு அங்கமாகிய எழுத்தினானும் பொருள் தோன்றாத மரபினையுடைய என்பர் புலவர்,

"ஒரீஇ ஒழுகு மென்னைக்குப்
பிரியலென் மன்யான் பண்டொரு காலே". (குறுந். 203) - தலைமகள் தலைமகனைக் கூறியது.

"அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்" (குறுந். 33) - தோழிக்குக் கூறியது.

"என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்". (குறள். 771)

"என்னை புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே." (புறம். 84) - இவை புறப்பொருள் பற்றி வந்தன.

## 9.43 காட்டலாகாப் பொருள்:

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்
நாட்டியல் மரபின நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப.

ஒப்புமுதலாக நுகர்ச்சி யீறாக அவ்வழி வருஞ் சொல்லெல்லாம் நாட்டின் வழங்குகின்ற மரபினானே பொருளை மனத்தினான் உணரினல்லது மாணாக்கர்க்கு இது பொருள் என வேறுபடுத்தி ஆசிரியன் காட்டலாகாத பொருளையுடைய என்பதாம்.

**ஒப்பு:** ஒப்பாவது தந்தையையொக்கும் மகன் என்பது. அவ்விருவர்க்கும் பிறப்பு வேறானவழி ஒப்பாகிய பொருள் யாதென்றார்க்கு இதுவெனக் காட்டலாகாமையின், அவ்விருவரையுங் கண்டான். அவ்வொருவ ரொருவரை ஒக்குமது பிறனொருவன் மாட்டுக் காணாமையிற்றானே யப்பொருண்மையை உணரும் என்பது.

**உரு** - உட்கு. அது பயிலாத பொருளைக் கண்டுழி வருவதோர் மன நிகழ்ச்சி. இவருட்கினார் என்றவழி மனத்தினான் உணரக் கிடந்தது.

**வெறுப்பு** - செறிவு. அது அடக்கங்குறித்து நின்றது; அவரடக்கமுடையர் என்றவழி அதுவும் மனத்தினான் உணரக் கிடந்தது.

**கற்பு** - மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது.

**ஏர்** - தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல எல்லா வுறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க் கின்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு. அது எல்லா வண்ணத்திற்கும் பொதுவாகலின் வண்ணம் அன்றாயிற்று. இது

வண்ணம் பற்றி வரும். இவன் ஏருடையன்" என்றால் அதுவும் மனங்கொளக் கிடந்தது.

**எழில்** - அழகு. அது மிக்குங் குறைந்தும் நீடியும் குறுகியும் நேர்தி உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவிற் குறையாமல் அமைந்தவழி வருவதோர் அழகு. இதுவும், அழகியன்" என்றவழி அழகினைப் பிரித்துக் காட்டல் ஆகாமையின் ஈண்டோதப்பட்டது.

**சாயல்** - மென்மை. அது நாயும் பன்றியும் போலாது மயிலுங் குயிலும் போல்வதோர் தன்மை. அதுவும் காட்டலா காமையின் ஈண்டோதப்பட்டது.

**நாண்** - பெரியோர் ஒழுக்கத்து மாறாயின செய்யாமைக்கு நிகழ்வதோர் நிகழ்ச்சி. அதுவும் காட்டலாகாது.

**மடம்** - பெண்டிர்க் குள்ளதோர் இயல்பு. அது உய்த்துணர்ந்து நோக்காது கேட்டவாற்றாலுணரும் உணர்ச்சி. அதுவும் காட்டலாகாது.

**நோய்** - துன்பம். இவன் துன்பமுற்றான் என்றவழி அ.்.தெத்தன்மையது என்றார்க்குக் காட்டலாகாமையின் அதுவும் ஈண்டோதப்பட்டது.

**வேட்கை** - யாதானும் ஒன்றைப் பெறல்வேண்டுமெனச் செல்லும் மன நிகழ்ச்சி. இவன் வேட்கையுடையான் என்றவழி அ.்.து எத்தன்மை என்றார்க்குக் காட்டலாகாமையின் ஈண்டோதப்பட்டது.

ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம் என்றதனான் அன்பு அழுக்காறு பொறை அறிவு என்பனவும் இவைபோல்வனவுங் கொள்க. இவையெல்லாம் அகத்திணை புறத்திணை இரண்டிற்கும் பொது. இவை காட்டலாகாப் பொருள்வாயின் இல்பொருண்மேற் சொன்னிகழ்ந்த வென்றாலோ எனின். இது மேற்கூறப்பட்ட பொருள் பொருளென்பது அறிவித்தல். அவை உள்பொருள் என்பது வருகின்ற சூத்திரத்தான் உரைப்ப.

## 9.44 அவையில் காலம்:

இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மை யான.

தேவருலகத்தினும் கடல்சூழ்ந்த உலகத்தினும், மேற்சொல்லப்பட்ட பொருளில்லாத காலம் இன்மையான் உள் பொருளென்றே கொள்ளப்படும்.

**பயிற்சி வினாக்கள்:**

1.உள்ளுறை உவமம் குறித்துக் கட்டுரைக்க
பாடப்பகுதி 9.38 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

2. காட்டலாகாப் பொருளகள் குறித்து எழுதுக.
பாடப்பகுதி 9.43 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

3.தலைவன் தலைவிக்கு உரிய ஒருபாற் கூற்று குறித்து எழுதுக.
பாடப்பகுதி 9.2 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

4.தலைவி, தோழி அறத்தொடு நிற்றல் குறித்து விவரி.
பாடப்பகுதி 9.9, 9.9.1 இன் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

5.அன்னை எனல் என்னும் மரபினைச் சுட்டுக.
பாடப்பகுதி 9.42 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

குறிப்பு

# கூறு 10 – மெய்ப்பாட்டியல்

**மெய்ப்பாட்டியல்**

மெய்ப்பாட்டியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஆறாவது இயலாக அமைந்துள்ளது. இவ் இயலில் இருபத்து ஏழு நூற்பாக்கள் அமைந்துள்ளன. மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடு ஆயிற்று என்பார் இளம்பூரணர். உள்ளத்தின்கண் தோன்றும் உள்ளக்கிளர்ச்சிகள் மெய்யின்கண் வெளிப்படுமாற்றையே மெய்ப்பாடு என்கின்றனர்.மெய்ப்பாட்டின் இலக்கணமும் அதன் வகைகளும் அது செய்யுளில் இடம்பெறும் பாங்கும் இவ்வியலில் பேசப்படுகின்றது.

## 10.மெய்ப்பாடு:

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப .

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பிறர் வேண்டுமாற்றால் சுவையுஞ் சுவைக்குறிப்பும் உணர்த்துதல் நுதலிற்று.

பண்ணைத் தோன்றிய என்பது விளையாட்டாயத்தின்கண் தோன்றிய என்றாறு அமைந்தது.பண்ணையுடையது பண்ணை என்றாயிற்று. எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான்கென்ப என்பது முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று சொல்லுவர்.

முப்பத்திரண்டாவன :- நகை முதலானவற்றிற்கு ஏதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டு ஈறாக முன்னெடுத்து ஓதப்படுகின்றன அவற்றைக் குறித்த புறனாவன சுவையும் குறிப்பும் வீரம், அச்சம் இழிப்பு வியப்பு, காமம், அவலம், உருத்திரம். நகை, நடுவுநிலைமை என்றும், வீரக்குறிப்பு, அச்சக் குறிப்பு இழிப்புக் குறிப்பு, வியப்புக்குறிப்பு, காமக் குறிப்பு, அவலக் குறிப்பு, உருத்திரக் குறிப்பு, நகைக் குறிப்பு, நடுவு நிலைமைக் குறிப்பு என்றும் சொல்லப்பட்ட பதினெட்டினும், நடுவுநிலைமையும் அதன் குறிப்பும் ஒழித்து ஏனைய பதினாறுமாம்.

வியப்பெனினும் அற்புதமெனினும் ஒக்கும், காமமெனினுஞ் சிங்காரமெனினும் ஒக்கும். அவலம் எனினும் கருணையெனினும் ஒக்கும், உருத்திரம் எனினும் வெகுளியெனினும் ஒக்கும், நடுவு நிலைமை எனினும் மத்திமம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கும். வீரம் என்பது மாற்றாரைக்குறித்து நிகழ்வது, அச்சம் என்பது அஞ்சத்தகுவன கண்டவழி நிகழ்வது. இழிப்பென்பது இழிக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது.வியப்பென்பது வியக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது, காமம் என்பது இன்ப நிகழ்ச்சியான் நிகழ்வது அவலம் என்பது இழவுபற்றிப் பிறப்பது, உருத்திரம் என்பது அவமதிப்பாற் பிறப்பது.

குறிப்பு

நகையென்பது இகழ்ச்சி முதலாயினவற்றாற் பிறப்பது, நடுவுநிலைமை என்பது யாதொன்றானும் விகாரப்படாமை.

பேயானும் புலியானும் கண்டானொருவன் அஞ்சியவழி மயக்கமுங் கரத்தலும் நடுக்கமும் வியர்ப்பு முளவாகின்றே.அவற்றுள் அச்சத்திற்கு ஏதுவாகிய புலியும் பேயும் சுவைப்படுபொருள். அவற்றைக்கண்டகாலந்தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை அதன்கண் மயக்கமும் கரத்தலும் குறிப்பு. நடுக்கமும் வெயர்ப்புஞ் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்கும் புலனாவது என்று கொள்க ; ஏனைய மனநிகழ்ச்சி பிறவு மன்ன. இவற்றின் பிரிவை நாடகநூலிற் காண்க என்பது உரையாசிரியர் குறிப்பாகும்.

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே

மேற்சொல்லப்பட்ட பதினாறு பொருளும் எட்டென வரும் பக்கம் உண்டு. அவையாவன குறிப்புப் பதினெட்டனையுஞ் சுவையுள் அடக்கிச் சுவை எட்டுமாக்கி நிகழ்தல்

## 10.1 மெய்ப்பாட்டின் வகைகள்:

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப.

நகைமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு என்று சொல்லுவர்.

மெய்ப்பாடென்பது யாதோவென்னின்

உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே'' எனக் குறிக்கும் செயிற்றியம்.

அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந் தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும் மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று அ∴தேல், இவ் விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காற் சுவைபடச் செய்யவேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டு மென்க .

உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பது முடிவது மெய்ப்பாடாகும்"(செய்யுளியல் . (196)

என இவ்வாசிரியர் மெய்ப்பாடுஞ் செய்யுளுறுப்பென ஓதினமை உணர்க .

நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பது. அழுகை என்பது அவலத்திற் பிறப்பது. இளிவரல் இழிப்பிற் பிறப்பது. மருட்கை வியப்பிற் பிறப்பது, அச்சம் அஞ்சத் தகுவனவற்றாற் பிறப்பது. பெருமிதம் வீரத்திற் பிறப்பது. வெகுளி வெறுக்கத்தக்கனவற்றாற் பிறப்பது உவகை சிங்காரத்திற் பிறப்பது.

### 10.1.2 நகை பிறக்கும் நிலைக்களன்கள்:

எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப.

எள்ளுதற்பொருண்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப் பொருளாம். எனவே காரணம் பற்றி நகையும் நான்காயின.

எள்ளல் என்பது எள்ளி நகுதல் ஆகும்.இளமை குழவி கூறும் மழலை இளமைப் பொருளாயிற்று. பொருண்மை அறியாது திரியக் கோடல்

பேதைமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்

நகையாகின்றே தோழி - என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின்றதுவே (அகம் . 56 )

எனக்கூறி நகையாகின்றே தோழி என்றமையின் எள்ளல்பற்றி நகை தோன்றிது

**10.1.3 அழுகை பிறக்கும் நிலைக்களன்கள்:**

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே.

இழிவு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் அழுக்கைப் பொருளாம்.

**இழிவு** - பிறர் தன்னை எளியன் ஆக்குதலாற் பிறப்பது.

**இழவு** - உயிரானும் பொருளானும் இழத்தல்

**அசை** - தளர்ச்சி, அது தன்னிலையில் தாழ்தல்.

**வறுமை** - நல்குரவு.

இவை ஏதுவாக அழுகைபிறக்கும்.

இதுவும் தன்மாட்டு உற்றதனானும் பிறர்மாட்டு உற்றதனானும் பிறக்கும்.

“ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பெடுக்க வல்லேன்
என்போற் பெருவிதுப் புறுக நின்னை
இன்னாதுற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிகழ் சேர்க நடத்திசிற் சிறிதே” -. இது இழிவுபற்றி வந்த அழுகை.

**10.1.4 இளிவரல் பிறக்கும் நிலைக்களன்கள்:**

மூப்பே பிணியே வருத்த மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே.

மூப்பு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் இளிவரலுக்குப் பொருளாம்.. இவை நான்குந் தன் மாட்டுத் தோன்றினும் பிறர்மாட்டுத் தோன்றினும் நிகழும்.

**மூப்பு** – முதுமை - **பிணி** - பிணியுறவு கண்டு இழித்தல், **வருத்தம்:** - தன்மாட்டும் பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தானும் இழிப்புப் பிறக்கும், **மென்மை** - நல்குரவு

“தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டுன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்

அம்மனைக்கோல் ஆகிய ஞான்று" (நாலடி - 14) - பிறர்மாட்டு மூப்புப்பற்றி இழிப்புப் பிறந்தது.

"மாக்கேழ் மடநல்லாய் என்றாற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை - யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல" (நாலடி - 41 இது உடம்பினை அருவருத்துக் கூறுதல்.

"செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று" (குறள் - 1255 இது பிறன் வருத்தங் கண்டு இழிப்புப் பிறந்தது .

"தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணுமளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே" (புறம் - 74 ) இது தன்மாட்டு வருத்தத்தான் இழிப்புப் பிறந்தது .

"அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்" (குறள் - 1047)
இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்" (குறள் - 1044)

இன்னும் யாப்புற என்பதனான் இழிக்கத்தக்கன பிறவுங் கொள்க. அவை நாற்றத்தானுந் தோற்றத்தானும் புல்லியன.

**10.1.5 மருட்கை பிறக்கும் நிலைக்களன்கள்:**

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே .

புதுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினானும் மருட்கைபிறக்கும்.
மதிமை சாலா மருட்கை என்றமையால் அறவுடையார் இப்பொருட் கண் வியவார் என்று கொள்க.

**புதுமை** - யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்தினுந் தோன்றாததோர் பொருள்தோன்றியவழி வியத்தல், அது கந்திருவர் அந்தரம் போவதுகண்டு வியத்தல் போல்வன.

**பெருமை** - பண்டு கண்ட பொருள்கள் போலாத பொருள்கள் அவ்வளவிற் பெருத்தன கண்டு வியத்தல் . அவை மலையும் யானையும் செல்வமும் முன்கண்ட அளவின் மிக்கன கண்டவழி வியப்பு வரும்.

**சிறுமை** - பிறவும் நுண்ணியன கண்டு வியத்தல். அது கடுகின்கட் பல துளை போல்வன .

**ஆக்கம்** - ஒன்றன் பரிணாமங்கண்டு வியத்தல். அது தன்னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்று மரமுதலாயின . ஆகியவழி வியத்தலும்,

நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் ஆக்கமுற்றானாயின், அதற்குக் காரண முணராதான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங் கண்டு வியத்தலுமாம். பிறவும் உலகத்து வியக்கத்தகுவன எல்லாம் இவற்றின்பாற் படுத்திக் கொள்க.

“பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல் --
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி அவளொடெம்
கட் புலங் காண விட்புலம் போயது
இரும்பூது போலும் அஃதறிந்தருள் நீயென (சிலம்பு - பதிகம்) - புதுமை

**10.1.6 அச்சம் பிறக்கும் நிலைக்களன்கள்:**

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே .

அணங்குமுதலாகச் சொல்லப்பட்ட நான்கினும் பிறக்கும் மாறுபடுதல் அமையாத அச்சம் நால்வகைப்படும். பிணங்கல் சாலுமாயின் நடுக்கம் முதலாயின உளவாகா, அவை பிணங்கல் சாலாத வழியே உளதாவ தென்று கொள்க.

கொலை, களவு, கட்காமம், பொய் என்பனவற்றை நிகழ்த்தினவர்க்கு அரசனால் அச்சம் வருதலின் அவனும் அஞ்சப்படும் பொருளாயினான்.

“மையல் வேழ மடங்கலின் நெரிதர
உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெளிர்ப்ப நாண்மறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்கி” (குறிஞ்சிப் . 165 -1 ) எனவரும்.

**10.1.7 பெருமிதம் தோன்றும் நிலைக்களன்கள்:**

கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே .

கல்வியானுந் தறுகண்மையானும் புகழ்மை யானும் கொடையானும் பெருமிதம் நால்வகைப்படும்.

இவை நான்கும் பிறனொருவனின் மிகுத்தவழிப் பிறக்கு மகிழ்ச்சி பெருமிதம் என்று கொள்க.

**பெருமிதம்** - தன்னைப் பெரியனாக நினைத்தல்.

**தறுகண்** - வீரம்

**புகழ்மை**- புகழ்

**கொடை**- வள்ளண்மை

“உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய்- எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்த நின்னொடு

பாங்கலா வீரர் படை." (புறப்.வெ.7,8) இது வீரம்பற்றி வந்தது.

**10.1.8 வெகுளி பிறக்கும் நிலைக்களன்கள்:**

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

உறுப்பறை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினாலும் வெகுளி பிறக்கும். இப்பொருள் நான்குந் தான் பிறரைச் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும்; தன்னைப் பிறர் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும்.

**உறுப்பறை**: -அங்கமாயினவற்றை அறுத்தல்.

**குடிகோள்:** -கீழ்வாழ்வாரை நலிதல்.

**அலை:** - வைதலும் புடைத்தலும்.

**கொலை:** -கொல்லுதற்கு ஒருப்படுதல்.

ஊடற்கண்ணும் வெகுளி தோற்றுமால் எனின், அது இன்பத்திற்குக் காரணமாதலால் தலைமகள் புருவநெரிவும் வாய்த்துடிப்புங் கண்ட தலைமகற்கு வெகுட்சி பிறவாது உவகை பிறக்கும். தலைமகன் வெகுளுவனாயின் அதன்பாற்படும்.

"உறுதுப் பஞ்சாதுடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயின்." (புறம்.72) - வெகுளிபற்றி வந்தது

**10.1.9 உவகை பிறக்கும் நிலைக்களன்கள்:**

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே.

செல்வ நுகர்ச்சியானும். கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலன்களான் நுகர்தலானும். மகளிரொடு புணர்தலானுஞ் சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டினானும் உவகை பிறக்கும்.

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு." (குறள். 1107)- தம்மிலிருந்து தமது பாத்துண்ட செல்வ நுகர்ச்சி, முயக்கம்-புணர்பு.

வையை வருபுனல் ஆடல் இனிதுகொல் -----
வழிமயக் குற்று மருடல் நெடியான்
நெடுமாடக் கூடற் கியல்பு." (பரிபாடல்)

## 10.2 அவையும் உளவே அவையலங் கடையே.:

ஆங்கவை,ஒருபால் ஆக வொருபா லாக
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணல் துஞ்ச லரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்

கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே.

இந்நூற்பா மேற்சொல்லப்பட்ட எண்வகைமெய்ப்பாடும் ஒழிய வேறுபட்டுவருவன சில மெய்ப்பாடு உணர்த்திற்று..

மேற்சொல்லப்பட்டன ஒருபக்கமாக ஒருபக்கமுடைமை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் உள, அவையல்லாத விடத்து என்றவாறு. எனவே, ஆமிடத்து இவை அங்கம் ஆகும்.

**10.2.1 உடைமை**:-யாதானு மொருபொருளை உடையனாயினால் வருதலாகும் மனநிகழ்ச்சி.

"நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சாது."(புறம்.72)

**10.2.2 இன்புறல்-** நட்டாராகிப் பிரிந்துவந்தோரைக் கண்ட வழி வருவதோர் மன நிகழ்ச்சி போல்வது.

"விட்டகன் றுறைந்த நட்டோர்க் கண்ட
நாளினும் இனிய நல்லாள".- காம நுகர்ச்சியின்றி வரும் இன்புறுதல்.

**10.2.3 நடுவுநிலைமை: -** ஒருமருங்கு ஓடாது நிகழும் மனநிகழ்ச்சி.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி." (குறள்.118)

**10.2.4 அருள்** -எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல்.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்." (கலித்.11)

**10.2.5 தன்மை**: -சாதியியல்பு.

பார்ப்பார், அரசர், இடையர், குறவர் என்றின்னோர்மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கு மியல்பு.அது மெய்க்கடமையின்கண் வேறுபட்டுவருதலின் மெய்ப்பாடாயிற்று.

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல"

**10.2.6 அடக்கம்** -மனமொழிமெய்யன் அடங்குதல். அது பணிந்த மொழியும் தானைமடக்கலும் வாய்புதைத்தலும் போல்வன.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்." (குறள்.126)

**10.2.7 வரைவு** -செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவும் வரைந்து ஒழுகும் ஒழுக்கம், அது.

பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை
கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை." (திரிகடுகம்.29)

**10.2.8 அன்பு**: -பயின்றார் மாட்டுச் செல்லுங் காதல்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு." (குறள்.79)

**10.2.9 கைம்மிகல்**: -குற்றமாயினுங் குணமாயினும் அளவின் மிகுதல். அது நிலையின் வேறுபடுதலின் மெய்ப்பாடாயிற்று. கையென்பது அளவுகுறித்த தோர் இடைச் சொல்.

குணனிலனாய்க் குற்றம் பலவாயின்.” (குறள்.868)

**10.2.10 நலிதல்**: -பிறரை நெருக்குதல்.

அதன்கண் நிகழும் மனநிகழ்ச்சி நலிதலாயிற்று. இதுவும் மேற் சொல்லப்பட்ட எட்டும் இன்மையின் ஈண்டு ஓதப்பட்டது.

“பகைநலியப் பாசறைவு ளான்.” ( நெடுநல், இறுதிவெண்பா)

**10.2.11 சூழ்ச்சி** -எண்ணம்.

“சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.” (குறள்.445 )

**10.2.12 வாழ்த்தல்**-பிறனை வாழ்த்துதல்.

வாழியாதன் வாழி (ஐங்குறு.6) என்றும் .எங்கோ வாழிய குடுமி (புறம்.9) என்றும் இவ்வாறு வருவழி. ஆண்டு வரும் மனநிகழ்ச்சி மெய்ப்பாடாம். அ.ேதல் வைதலும் மெய்ப்பாடாதல் வேண்டும் எனின் அது வெகுட்சியின் முதிர்வு. இது அன்பின் முதிர்வாகாதோஎனின். அன்பின்றியும் அரசன் முதலாயினாரைச் சான்றோர் வாழ்த்துதலின் அடங்காதென்க.

**10.2.13 நாணல்**-தமக்குப் பழிவருவன செய்யாமை.

“பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னு முலகு.” (குறள்.1015)

**10.2.14 துஞ்சல்**-உறக்கம். அதுவும் உறங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

“...........முனிவின்றி.
நனந்தலை யுலகமுந்துஞ்சும்.” (குறுந்.6)

**10.2.15 அரற்று** -உறக்கத்தின்கண் வரும் வாய்ச்சோர்வு.

அதுவும் ஏனைச்சொல்லின் வேறுபடுதலின் அரற்றென ஒரு மெய்ப்பாடாயிற்று முன் உறக்கம் வைத்தலானும் பின் கனவு வைத்தலானும் இப்பொருள் உரைக்கப்பட்டது.

“பாயல்கொண் டென்தோட் கனவுவா ராய்கோல் -----
செய்பொருள் முற்று மளவு.” (கலித்.24)

இது களவியலின் பாற்படுமெனின் அரற்றென்பது ஒருபொருளைப் பலகாற்கூறுதல்; அ.்.து அப்பொருண்மேற் காதலாற் கூறுதலின் அதுவுமோர் மெய்ப்பாடாயிற்றெனவுமாம்.

“பொன்னார மார்பிற் புனைகழற்சாற் கிள்ளிபோ்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்.” (முத்தொள்.104) - கனவுநிலை நனவுபோலாமையின் மெய்ப்பாடாயிற்று.

**10.2.16 முனிதல்:** வெறுத்தல்.

“காலையெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தரீஇச் சென்ற
மல்லல் ஊரன் மெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் சாயே
தெறுக அம்மஇத் திணைப்பிறத் தல்லே.” (குறுந்.45) - குடிப்பிறத்தலை வெறுத்தல்

**10.2.17 நினைத்தல்** -கழிந்ததனை நினைத்தல். அது மறந்தாங்கு மறவாது பின்புந்தோற்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

“நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்பல்
சினைப்பது போன்று கெடும்.” (குறள்.1203)

**10.2.18 வெரூஉதல்** - அச்சம் போல நீடுநில்லாது கதுமெனத்தோன்றி “மாய்வதோர் குறிப்பு. அதனைத் துணுக்கு என்றாள்.
ஒருஉநீ எங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை.” (கலித்.87)

**10.2.19 மடி** - சோம்புதல்.

“மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.” (குறள்.608)

**10.2.20 கருதல்**: - குறிப்பு.

“குறிக்கொண்டு நோக்காமை அல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.” (குறள்.1095)

**10.2.21.ஆராய்ச்சி**: -ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தெனவாராய்தல்.

**10.2.22 ஆராய்தல்:** தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்

“நன்மையும் தீமையும் நாடி நலம்புரி.” (குறள்.511)
ஆயும் அறிவினர் (குறள்.918)

**10.2.23 விரைவு: -** ஒருபொருளைச் செய்ய நினைத்தான் அது தாழ்க்கில் அப்பயன் எய்தான் கடிதின் முடித்தல் வேண்டுமெனக் குறித்த மனநிகழ்ச்சி.

**10.2.24 உயிர்ப்பு :-**முன்புவிடும் அளவினன்றிச் சுவாதம் நீள விடுதல்.

“.....பானாட்
பள்ளி யானையி னுயிர்த்தென்
உள்ள மின்னுந் தன்னுழை யதுவே.” (குறுந்.142)

**10.2.25 கையாறு:** -காதலர் பிரிந்தால் வருந் துன்பமும் அந்நிகரனவும் வருவது.

“தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ.” (கலித்.24)
என்றவழிக் கையாறென்பதும் ஓர் மெய்ப்பாடாயிற்று.

**10.2.26 இடுக்கண்** - துன்பமுறுதல்.

மேலதனோடு இதனிடை வேறுபாடு என்னையெனின். கையாறு என்பது இன்பம் பெறாமையான் வருந்துன்பம்; இடுக்கணாவது துன்பமாயின வந்துறுதல்.

"அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்கண் இடுக்கட் படும்." (குறள்.625)

**10.2.27 பொச்சாப்பு:** - மறத்தல்.

"பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்." (குறள்.199) என்பதனாற் பொச்சாப்பு மறத்தலாயிற்று.

**10.2.28 பொறாமை**: - பிறர்க்கு ஆக்க முதலாயின கண்ட வழியதனைப் பொறாது நடக்கும் மனநிகழ்ச்சி அதனை அழுக்காறு என்ப.

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்." (குறள்.168) - அழுக்காறு என ஒருமெய்ப்பாடு உளதாகியவாறு கண்டு கொள்க.

**10.2.29 வியர்த்தல்**: - தன்மனத்தின் வெகுட்சி தோன்றிய வழிப் பிறப்பதோர் புழுக்கம்.

"பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்." (குறள்.487) இதன் கண் உள்வேர்ப்பர் என்றதனான் மனநிகழ்ச்சி

**10.2.30 ஐயம்:** - ஒருபொருளைக் கண்டவழி யிதுவெனத் துணியாத நிலைமை.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு." குறள்.108 ஐயம் மனத்தின்கண் நிகழ்ந்தது.

**10.2.31 மிகை** - ஒருவனை நன்குமதியாமை.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்." (குறள்.158) மிகுதி யென்பது நன்குமதியாமையாம்.

**10.2.32 நடுக்கம்** - யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோமென வருமனநிகழ்ச்சி.

"கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே." (கலித்.13)

இத்துணையும் கூறப்பட்டன அகத்திற்கும் புறத்திற்கும் பொது.

## 10.3 அகத்திற்கும் உரிய மெய்ப்பாடு:

அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகிய மெய்ப்பாடு உணர்த்திய தொல்காப்பியர் இனி அகத்திற்கே உரியன உணர்த்துகின்றார்.இதில் களவு, கற்பிற்குரிய மெய்ப்பாடுகளைப் பிரித்து உரைக்கின்றார். அகத்திற்குரிய அவத்தைகள் பத்து அவையாவன: காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல்,மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரை

இறத்தல்,நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பனவாகும்.இவற்றுள் முதலாவது அவத்தையாகிய காட்சி என்பதற்குரிய மெய்ப்பாடுகளைப் பின்வரும் நூற்பாவில் உரைக்கின்றார்.

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.

**10.3.1 புகுமுகம் புரிதல்**: -தலைமகன் புணர்ச்சிக் குறிப்பினனாய்ப் புகுது முகத்தினை மாறுபடாது பொருந்துதல்.

“கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.” (குறள்.1085)

என்றாற்போலக் கூறியவழி ஒருவாதுநிற்றல்.

**10.3.2 பொறிநுதல் வியர்த்தல்** - அவ்வழி முகம்புக்கு அவனைப் பொருந்திய தலைமகள் உட்கும் நாணும் வந்துழி வரும் நுதல் வியர்ப்பு.

**10.3.3 நகுநய மறைத்தல்** - அதன்பின்னர்த் தலைமகன் கூறுவன கேட்டு நகைவந்துழி நயத்தலாகிய விருப்பத்தினைப் புலனாகாமை மறைத்தல்.

**10.3.4 சிதைவு பிறர்க்கின்மை** - தன் மனனழிவு பிறர்க்குப் புலனாகாமை நிற்றல்.ஒடு எண்ணின்கண் வந்தது.

இவ்வாறு தகுதியுடைத்தாய் முறைப்படவருவன நான்கும் முதல் அவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு.

## 10.4 வேட்கைக்குரிய மெய்ப்பாடு

கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப.

கூழைவிரித்தல் முதலாகச் சொல்லப்பட்ட முறைமையுடைய நான்கும் இரண்டாம் அவத்தைமெய்ப்பாடு ஆகும்.

**10.4.1 கூழைவிரித்தல்**: - மேல் நகுநயமறைத்தாள் காதன் மேல் வேட்கை செல்லுமாயின் வாளாது நிற்றல் ஆற்றாது மயிரினைக் குலைத்தல்.

**10.4.2 காதொன்று களைதல்** - காதிலணிந்த தொன்றை விழப்பண்ணி யதனைத் தேடுகின்றார் போல நிற்றல்.

**10.4.3 ஊழணி தைவரல்** - முறைமுறையாக அணிந்த வணியைத் தைவருதல் என்றவாறு.

**10.4.4 உடைபெயர்த்து உடுத்தல்** - ஆடையைக் குலைத்துடுத்தல்.

## 10.5 மூன்றாம் அவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

அல்குல் தைவரல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் மூன்றாம் அவத்தை மெய்பாடு.

**10.5.1 அல்குல் தைவரல்** - மேல் உடை பெயர்த்துடுத்தவள் அதனைப் பேணும் மதிப்பு உள்வழி தம்மைப்பேணுதல் பெண்டிர்க்கு அழகு.

**10.5.2 அணிந்தவை திருத்தல் -** அவ்வாறே கொள்க.

**10.5.3 இல்வலி யுறுத்தல்**: - தமது இல்லதோர் வலியுறுத்தல். அது சாரநினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லி இசைவில்லாரைப்போல மறுத்துக்கூறுதல்.

**10.5.4 இருகையும் எடுத்தல்:** -அவ்வழி மறுத்த வாய் பாட்டாற் கூறினும் இரண்டிகையினையும் பிறிதோர் காரணம் பற்றிக் கிளர்த்தல். தலைமக்கள் முன்னர்ப் பெண்டிர் கை கிளர்த்தாராதலாற் புணர்ச்சிக் கொருப்பட்ட வுள்ளத்தாள் கிளர்த்துமென்க. இதனாற் பயன் நாண்நீங்கல்.

## 10.6 நான்காம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு

பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப..

பாராட்டெடுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நான்காமவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு.

**10.6.1 பாராட்டெடுத்தல்** - தலைமகன் நின்றநிலையுங் கூறிய கூற்றையும் தனித்த வழியும் எடுத்து மொழிதல்.

**10.6.2 மடந்தப உரைத்தல்**: - பெண்டிரது இயல்பாகிய மடப்பங் கெடச் சில கூறுதல். அது தலைமகன் கூற்று நிகழும் வழி யதற்கு மாற்றங் கொடுத்தலன்றித் தன் வேட்கை தோன்றக் கூறுஞ் சொல்.

**10.6.3 ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல்**: - ஊராருஞ் சேரி யாருங் கூறும் அருளில்லாத கூற்றைக் கேட்டு அலர் ஆயிற்றேன நாணுதல்.

**10.6.4 கொடுப்பவை கோடல்**: - கண்ணியாயினுந் தழை யாயினும் பிறவாயினும் தலைமகன் கொடுத்தவற்றைக் கோடல். மனத்தினான் உரிமை பூண்டானல்லது பிறன் பொருள் வாங்காமையின் இதுவுமோர் மெய்ப்பாடாக ஓதப்பட்டது.

## 10.7 ஐந்தாம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு

தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.

தெரிந்துடம்படுதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஐந்தாம் அவத்தைக்கு மெய்ப்பாடாம் என்றவாறு.

**10.7.1 தெரிந்துடம் படுதல்**-தலைமகன் கொடுப்பவை கொண்ட தலைமகள் ஆராய்ந்து உடம்படுதல் என்றவாறு. ஆற்றாமை பெருகுகின்ற காதலின் இத்துணையும் மறத்தவள் உடம்படுதல் என்றார். அவ்வழியுந் தெரிந்துடம்படுதல் என்றமையால் ஆராய்ந்தல்லது புணர்ச்சிக்கு உடம்படாமை கொள்க.

**10.7.2 திளைப்புவினை மறுத்தல்**: - விளையாட் டாயமொடு திரிவாள் வேட்கை நலிதலான் அவ்விளையாட்டு வினையை மறுத்தல் என்றவாறு.

**10.7.3 கரந்திடத்தொழிதல்**: - தலைமகனைக் காண்டல் வேட்கையால் ஒளித்துப் படத்தினின்று மொழிதல் என்றவாறு.

**10.7.4 கண்டவழி உவத்தல்**: - தலைமகனைக்கண்டவழி மகிழ்தல்

## 10.8. ஆறாம் அவத்தைக்கண்வரும் மெய்ப்பாடு

புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தல்
விளம்பிய நான்கே ஆறென மொழிப.

புறஞ்செயச் சிதைதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஆறாம் அவத்தைக்கண் மெய்ப்பாடாம்.

**10.8.1 புறஞ்செயச் சிதைதல்**: - தலைமகன் கோலஞ் செய்யும்வழி யதற்கு மகிழ்ச்சியின்றிச் சிதைவுடையளாதல்.

**10.8.2 புலம்பித் தோன்றல்**: - பொலிவழிந்து தோன்றல்.

**10.8.3 கலங்கி மொழிதல்**: - கூறுங்கூற்றுக் கலக்கமுற்றுக் கூறுதல்.

**10.8.4 கையறவுரைத்தல்:** - செயலறவு தோன்றக் கூறல்.

இச் சொல்லப்பட்ட ஆறு அவத்தையும் பெண்பாலார் எல்லார்க்கும் பொது. இவை புணராதவழித் தோன்றுதல் பெரும்பான்மை.

## 10.9 புறனடை

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்த மென்ப

மேற் சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவும் நிலைபெற்ற வினையுடைய நிமித்தமாம்.

வினை என்பது கற்பிற்குரிய காரணமாம்.

அன்னவை பிறவுமாவன; நோக்கானை நோக்கி இன்புறுதல் தனி யிடைநகுதல். நோக்குங் காலைச் செற்றார்போல் நோக்குதல். மறைந்துகாண்டல் தற்காட்டுறுத்தல்.

இந்நிகரன அவத்தை பற்றி நிகழ்ந்தனவாயின் ஏழாவது முதலாகப் பத்தாவது ஈறாகக் கூறவெனின் ஏழாமவத்தை நாண் நீங்கிய காதலிற் றேறுத லொழிந்த காமத்து மிகுதியாகிய பெருந்திணைப்பாற்படும்; ஒத்த காமத்து நிகழாது; எட்டாவது உன்மத்தம். ஒன்பதாவது மயக்கம்; பத்தாவது சாக்காடு; ஆதலான் நடுவணைந்திணைக்கண் வருவன ஆறு எனக் கூறினார் என்று கொள்க.

வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே

கரணநிகழ்ச்சி உயிர்மெலிந்தவிடத்து இன்மையும் உரித்து..

எனவே இயற்கையும் நிகழும் என்றவாறாம். உம்மை எதிர்மறை யாகலால். கரணநிகழ்தல் பெரும்பான்மை. உயிர் மெலிவிடம் என்றமையால் ஐந்தாவது முதலாக இயற்கை நிகழும்.

## 10.10 கைக்கிளைக் குரியதோர் மரபு

அவையும் உளவே அவையலங் கடையே.

மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலாயின உள; நடுவணைந்திணை அல்லாத கைக்கிளைப் பொருண்மைக்கண் என்றவாறாம்.

அவையலங்கடை என்றமையாற் பாடாண்பாட்டிற் கைக்கிளையும் கொள்ளப்படும். அ.்.தேல் ஆண்டுப் புகுமுகம் உளதோ வெனின். தலைமகள் காட்சிமாத்திரத்தைத் தனது வேட்கைமிகுதியாற் புகுமுகமாய்க் கொள்ளும் என்க. பிற்கூறிய அவை என்பன களவும், கற்பும்; முற்கூறிய அலை என்பன புகுமுகம் புரிதல் முதலாயின. அவையலங்கடை யவையுமுளவே என மாறிக் கூட்டுக என்பார் இளம்பூரணர்,

## 10.11 பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்:

இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யை என்றல்
ஐயஞ் செய்தல் அவன்தம ருவத்தல்
அறனழித் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி யுறுத்தல் உறுபெயர் கேட்டல்
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.

மேல் நடுவன் ஐணந்திினைப் பகுதியாகிய களவிற்கும் கற்பிற்கு முரிய மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் கைக்கிளைக்குரியவாமாறு உணர்த்தினார். இனி இச்சூத்திரத்தாற் பெருந்திணைக் குரிய மெய்ப்பாடு உணர்த்துகின்றார் தொல்காப்பியர்,

இன்பத்தை வெறுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட இருபதும் ஆராயின் நடுவணைந்திினை அல்வழி வரும் என்றவாறு.

அது என்பது - அவையுமுளவே யவையலங்கடையே என்பதைச் சுட்டி நின்றது. கலக்கமும் நாடின் என மாறுக. ஏற்புழிக்கோடல் என்பதனாற் பெருந்திணைப்பாற் கொள்ளப்படும். இது களவிற்கும் கற்பிற்கும் ஒக்கும். இவை தேறுதலொழிந்த காமத்தின்பாற்படுவனவும் மிக்க காமத்தின் மிடலின்பாற் படுவனவுமாம்.

**10.11.1 இன்பத்தை வெறுத்தல்**:-கோலஞ்செய்தல் முதயினவற்றை வெறுத்தலும் தென்றலும் நிலவுமுதலாயினவற்றை வெறுத்தலும் தென்றலும் இவ்வாறு களவின்கண் வரிற் பிறர்க்கும் புலனாம். கற்பின்கண் வரிற் பிறர் இயல்வழி மயங்கல மின்றாம்.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து." (குறள். 1127)

**10.11.2துன்பத்துப் புலம்பல்**: -துன்பத்தின் கண்ணே புலம்புறுதல்.

"இன்பங் கடல்மற்றுக் காமம் அ∴தடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது." (குறள். 1166)

**10.11..3 எதிர்பெய்து பரிதல்**: - தலைமகன் முன்னின்றி அவனின்றாகப் பெய்துகொண்டு வருந்துதல்.

"கண்ணுள்ளிற் போகார் இமைபபிற் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்" (குறள். 1126)

**10.11.4 ஏதமாய்தல்:** - குற்றமாராய்தல்.

"துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்" (குறள். 1165)

**10.11.5 பசியட நிற்றல்**: - உண்ணாமை.

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து." (குறள். 1128)

**10.11.6 பசலை பாய்தல்:** - பசலை பரத்தல்

"பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்" (குறள். 1188)

**10.11.7 உண்டியிற் குறைதல்**: உணவு சுருங்குதல்.

"பாலும் உண்ணான் பழங்கண் கொண்டு" (அகம். 48)

**10.11.8 உடம்பு நனிசுருங்கல்:** - உண்ணாமை காரணமாகத் தன்னுடம்பு மிகச் சுருக்கமுறுதல்.

"பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்."(குறள். 1234)

**10.11.9 கண்துயின் மறுத்தல்**: - உறங்காமை.

"மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை." (குறள். 1168)

**10.11.10 களவொடு மயங்கல்:** - கனவை நனவென மயங்குதல்.

"நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது." (குறள். 1217)

**10.11.11. பொய்யாக் கோடல்**: - தலைவன் கூற்றுத்தன்னைப் பொய்யாகக் கோடல்.

"வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்
மாய மருள்வா ரகத்து." (கலித். 88)

**10.11.12 மெய்யே யென்றல்** - உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறுதல்.

அவன்தமர் உவத்தல் - தலைவன் தமரைக் கண்ட வழி உவத்தல்.

"செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா
எம்மொடு சேர்ந்துசென் றீவாயாய் செம்மால்
நலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவேம் மன்." (கலித். 83)

**10.11.13 அறன் அழித்துரைத்தல்** - அறத்தினை அழித்துக் கூறுதல்.

“விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்3
அளியின்மை யாற்ற நினைந்து.”(குறள். 1209)

**10.11.14 ஆங்கு நெஞ்சழிதல்** - அறனழிந்துரைக்கு மிடத்து நெஞ்சழிந்து கூறுதல்.

“பெறாஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறாஅ விடும்பைத்தென் நெஞ்சு” (குறள்.1295)

**10.11.15 எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்** - யாதானு மோர் உடம்பாயினுந் தன்னோடு ஒப்புமை கோடல் என்றவாறு.

“புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை” (குறள். 1222)

அளியின்மை யறினின்மை கூறினாளுமாம்.

**10.11.16 ஒப்புவழி உவத்தல்**: - தலைமகனோடு ஒக்குமெனப் பிறிதொன்று கண்டவழி யுவத்தல்.

“யாவருங் காணுநர் இன்மையிற் செத்தனள் பேணி.”

**10.11. 17 உறுபெயர் கேட்டல்: -** தலைவன் பெயர்கேட்டு மகிழ்தல்.

“நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு.” (குறள். 1199)

**10.11.18 கலக்கம்** - மனங்கலங்குதல். மேற் கலங்கி மொழிதல் என்பது ஒருகாற் சொல்லின்கண் வந்து பெயர்வது. இது மனங்கலங்கி நிற்கும் நிலை.

“கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டெனன் சிற்றிலுட் கண்டாங்கே
ஆடையான்மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்.” (கலித். 142)

இச் சூத்திரத்துள் நலத்தக நாடி எனக் கலக்கத்தைப் பிரித்து வைத்தமையாற் சொல்லப்பட்ட பத்தொன்பதினும் முதிர்ந்துவந்த நிலை என்று கொள்ளப்படும். இச் சூத்திரம் பொதுப்படக் கூறினமையாற் தலைமகற்கு ஏற்ப வருவன கொள்க.

**கற்பிற்குரிய மெய்ப்பாடுகள்:**

கற்பிற்குரிய மெய்ப்பாடுகளை வரைவு வற்புறுத்தும் மெய்ப்பாடுகள் என்றும் அதன் பின்னர் வரைந்து உடன்வாழும் திரிந்திய கற்பிற்குரிய மெய்ப்பாடுகள் என்றும் இரண்டாகப் பகுத்துக் கொண்டு இரண்டு நூற்பாக்களில் கூறுகின்றார் தொல்காப்பியர்.

## 10.12. வரைவு வேட்கைக்குரிய மெய்ப்பாடுகள்

வரைந்து எய்தும் கூட்டத்திற்குரிய மெய்ப்பாடுகள் எவை என்பதனை பின்வரும் நூற்பாவினுள் உரைப்பார் தொல்காப்பியர்.

முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றாயிரு நான்கே அழிவில் கூட்டம்.

மேற் கூறப்பட்டன எல்லாம் மனனழிவு நிகழ்ந்தவழி நிகழ்வனவாதலின். இவை மனன் அழியாதவழி நிகழ்வன என உணர்த்துதல் நுதலிற்று என்பார் இளம்பூரணர்,

**10.12.1 முட்டுவயிற் கழறல்**: - களவு இடையீடுபட்டுழியதற்கு வருந்தாது இவ்வாறாகி நின்றதென அவனைக் கழறியுரைத்தல்

**10.12.2 முனிவு மெய்ந்நிறுத்தல்:** - வெறுப்பினைப் பிறர்க்குப் புலனாகாமல் மெய்யின் கண்ணே நிறுத்தல்.

**10.12.3 அச்சத்தின் அகறல்:** - இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாம் எனக் கூட்டத்தின் அகன்றொழுகல்.

**10.12.4 அவன்புணர்வு மறுத்தல்**: - இது தலைமகன் புணர்ச்சிக்கண் வாராக்காலத்துத்தானும் மனனழியாது நிற்கும் நிலை.

**10.12.5 தூதுமுனிவு இன்மை** : - தூதுவிட்ட வழி வெறாமை.

**10.12.6 துஞ்சிச் சேர்தல்:** - கவற்சியான் உறங்காமையன்றி யுரிமைபூண்டமையான் உறக்கம் நிகழ்தல்.

**10.12.7 காதல் கைம்மிகல்:** - அவ்வழியும் அன்பின்மையின்றிக் காதல் கைமிக்கு வருதல்.

**10.12.8 கட்டுரை இன்மை:** - கூற்று நிகழ்த்துதலன்றியுள்ளக் கருத்தினை மறைத்தமர்ந்திருத்தல்.

இவை நடுவணைந்திணைக் குரிய.

## 10.13 வரைந்தபின் நிகழும் மெய்ப்பாடுகள்:

வரைந்து உடன் வாழும் கற்புக் காலத்திற்குரிய மெய்ப்பாடுகள் பின்வருமாறு:

தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாதல்
அருண்மிக உடைமை அன்புமிக நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே.

இஃது அழிவில் கூட்டத்திற்குரிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

**10.13.1 தெய்வம் அஞ்சல்:** - தெய்வத்தினை யஞ்சுதல்.

“மன்ற மராத்த பேமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப.” (குறுந்.87)

**10.13.2 புரையறந் தெளிதல்:** - "கடன்மிக்கனவே" என்ற வழிப் பரத்தைமை கண்டு புலவாது ''இதனைப்போற்றல்'' இல்லுறைமகளிர்க் கியல்பென்னும் அறத்தினானே எனக்கூறியவாறு கண்டுகொள்க.

**10.13.3 இல்லது காய்தல்**: - தலைமகன்கணில்லாத குறிப்பினை யவன்மாட்டு உளதாகக் கொண்டு காய்தல்.

''யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று." (குறள். 1314)

இதனுள் சொன்னமாற்றத்தை வேறாகப் பொருள்கொண்டு இல்லாததனைச் சொல்லிக் காய்ந்தவாறு காண்க.

**10.13.4 உள்ளதுவர்த்தல்** - உள்ளதனை யுவர்த்துக் கூறுதல். அது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்.

''வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்
முகையலர்ந் தன்ன முயக்கின் தொகையின்றே
தண் பனி வைகல் எமக்கு." (கலித்.78)

**10.13.5 புணர்ந்துழி உண்மை:** - புணர்ந்தவழி யூடலுள் வழி மறைத்துக்கூறாது அவ்வழி மனநிகழ்ச்சியுண்மை கூறுதல்.

குளிரும் பருவத்தே ஆயினுந் தென்றல்
''வளியெறியின் மெய்யிற் கினிதாம் - ஒளியிழாய்
ஊடி யிருப்பினும் ஊரனறுமேனி
கூடல் இனிதா மெமக்கு" (ஐந்திணையைம் . 30)

**10.13.6 பொழுதுமறுப்பாதல்:** - தலைவன் வரும்பொழுது நியமமின்றி மறுப்பு வந்துழிப் பொழுதினைப் பற்றி நிகழும் மனநிகழ்ச்சி .

''புல்லிய கேளிர் புணரும் பொழுதறியேன்
அல்லியா கெல்லையென் றாங்கே பகல்முனிவேன்
எல்லிய காலை யிராமுனிவேன் யானுற்ற
அல்லல் களைவார் இலேன்." (கலித் . 144)

**10.13.7 அருண்மிக உடைமை** - தலைமகன்மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை .

முதைச்சுவற்கலித்த என்னும் அகப்பாட்டினுள்,
''நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோதானே
................
வடுவாழ் புற்றின வழக்கறு நெறியே" (அகம் . 86)

**10.13.8 அன்புமிக நிற்றல்**: - அன்பு புலப்பட நிற்றல் .

கொடிய னாயினும் ஆக
''அவனே தோழி என்னுயிர்க்கா வலனே'' (சிற்றெட்டகம் .) அன்புதோன்ற நின்றவாறு காண்க.

**10.13.9 பிரிவாற்றாமை** - பிரிவின்கண் ஆற்றாமை .

“செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை”(குறள் . 1151).

**10.13.10 மறைந்தவை உரைத்த கிளவி**: - மறைத்த ஒழுக்கத்தைக் கூறிய புறஞ் சொல்லாகிய அலர் மாட்சிமைப் படாத கிளவியொடுகூட என்றவாறு.

**10.13.11 மறைந்தவை உரைத்த புறஞ் சொல்**: - அலர் . மாணாமை யாவது - அவ்வலர் மாட்சிமைப்படாமற் கற்புக்கடம் பூண்டல் அல்லது மிகாமை.

“மாண மறந்துள்ளா நாணிலி”(கலித் . 89 )

என்றாற் போல மாணாமை என்பது மிகாமை என வுரைப்பினும் அமையும் . அலர் மிகாமைக் கூறுங் கூற்றினும் கற்புக்கடம் பூண்டு கூறுதல் .

“களிறுகவர் கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே” ( அகம் . 66 )

மேற் சொல்லப்பட்ட பத்தும் அழிவில் கூட்டப் பொருள் நடுவணைந்திணைக்குரிய பொருள் ஆகும்.

## 10.14 தலைவன் தலைவி ஒப்பு

இது களவியலுட் கூறுப்பட்ட தலைவற்குந் தலைவிக்கும் உளதாகும் ஒப்புப்பாகுபாடு உணர்த்திற்று.

பிறப்பேகுடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே .

**10.14.1 பிறப்பு:** அந்தணர், அரசர், வணிகர், ஆயர் , வேட்டுவர் போல் வரும் குலம்

**10.14.2 குடிமை:** அக்குலத்தில் ஒழுக்கம்பற்றி குடிவரவாகும்

**10.14.3 ஆண்மை: ஆண்**மைத்தன்மை அதாவது ஆள்வினையுடைமை.வலிபெயராமை பெண்மகளுக்கு இயல்பாகிய நாணம் முதலிய பெண்ணீர்மை

**10.14.4 ஆண்டு:** ஒத்த பருவத்தர் ஆதல். தலைமகன் 16 வயதும் தலைமகள் 12 வயதும் ஆதல்

**10.14.5 உருவு:** உருவ வனப்பு

**10.14.6 நிறுத்த காம வாயில்**,: நிலை நிறுதடதப்பட்ட புணர்ச்சிக்கு வாயில்.அதாவது ஒருவர் மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு

**10.14.7 நிறை**: அடக்கம்

**10.14.8 அருள்:**பிறர் வருத்தத்திற்குப் புரியும் கருணை

**10.14.9 உணர்வு** :அறிவு

**10.14.10திரு**: செல்வம்

## 10.15 தலைமக்களிடம் அமையலாகா குணங்கள்

இது தலைமக்கட்காகாத குணங்களை வரையறுத்து உணர்த்துதல் .

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை

இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை யின்மை என்மனார் புலவர் .

**10.15.1 நிம்பிரி** -அழுக்காறு அவ்வியம் என்பதும் அது.

**10.15.2 கொடுமை** -அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி

**10.15.3 வியப்பு**-தம்மைப் பெரியராக நினைத்தல்.

**10.15.4 புறமொழி** -புறங்கூறுதல்.

**10.15.5 வன்சொல்** -கடுஞ்சொற் கூறல்.

**10.15.6 பொச்சாப்பு** -தம்மைக்கடைப்பிடியாமை.அது சோர்வு.

**10.15.7 மடிமை** -முயற்சி யின்மை.

**10.15.8 குடிமையின்புறல்**: -தன்குலத்தினானுந் தன்குடிப் பிறப்பினானுந் தம்மை மதித்து இன்புறுதல்.

**10.15.9 ஏழைமை** -பேதைமை.

**10.15.10 மறப்பு** : - யாதொன்றாயினுங் கற்றதனையுங் கேட்டதனையும் பயின்றதனையும் மறுத்தல் ஒடு எண்ணின்கண் வந்தது.

**10.15.11 ஒப்புமை :-** ஆண்பாலாயினும் பெண்பாலாயினுந் தான் காதலிக்கப் பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வர் என ஆண்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி. அது உலகின்கட் கீழ்மக்கள் மாட்டுங் கண்ணிலோர்மாட்டும் நிகழ்தலின் அது தலைமக்கட்காகாதென விலக்கப்பட்டது.

இச் சொல்லப்பட்டன தலைமக்களிடத்து இல்லையாதலும் வேண்டும்.

**10.16. புறனடை**:

ஈண்டுச் சொல்லப்பட்ட நல்ல நயத்தினையுடைய மெய்ப்பாடெல்லாம் ஆராயுங்காற் கண்ணானும் செவியானும் விளங்க உணரும் அறிவுடைமாந்தர்க்கு அல்லது கருதல் அரிது.

கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.

**பயிற்சி வினாக்கள்:**

1.மெய்ப்பாட்டின் வகைகள் யாவை?

பாடப்பகுதியில் 10.1 இன் பகுதியைத் தேர்ந்து எழுதுக.

2.அகத்திற்கும் உரிய மெய்ப்பாடுகளை விளக்கி வரைக.

பாடப்பகுதியில் 10.3 அதன் தொடர் பகுதிகளையும் தொகுத்து எழுதுக.

3.பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை விளக்கி வரைக.

பாடப்பகுதியில் 10.11 அதன் தொடர் பகுதிகளையும் தொகுத்து எழுதுக.

4.தலைமக்களிடம் அமையலாகா குணங்கள் யாவை**?**

பாடப்பகுதியில் 10.15 அதன் தொடர் பகுதிகளையும் தொகுத்து எழுதுக.

5.தலைவன் தலைவி ஒப்பு குறித்து எழுதுக.

பாடப்பகுதியில் 10.14 அதன் தொடர் பகுதிகளையும் தொகுத்து எழுதுக.

குறிப்பு

# கூறு : 11 – உவமையியல்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஏழாவது இயலாக அமைந்திருப்பது உவமையியல் ஆகும்.இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின். உவமையியல் என்னும் பெயர்த்து. ஒருபுடை ஒப்புமைபற்றி உவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர். மெய்ப்பாடு பற்றித் தோன்றி வழங்குவது.

இதனாற் பயன் என்னைமதிப்பதோவெனின், புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும், ஆப்போலும் ஆமா என வுணர்த்திய வழி,அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைப்பற்றி இ∴து ஆமாவென்ற அறியும், “தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்” என்றவழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு துன்பம் பயக்கும். அ∴தாவது மேற்சொல்லப்பட்ட எழுதிணையினும் யாதனுள் அடங்கும் எனின், அவையெல்லாவற்றிற்கும் பொதுவாகிப் பெரும்பான்மையும் அகப்பொருள் பற்றிவரும் என்பது உரைக்குறிப்பாம்.

மேற் குறிப்புப்பற்றி வரும் மெய்ப்பாடு கூறினார்: இது பண்புந் தொழிலும்பற்றி வருதலின் அதன்பின் கூறப்பட்டது.

## 11.1 உவம வகைகள்:

ஒரு பொருளை பிற பொருளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது அதன் பண்பு, காரணமாகவோ தொழில் காரணமாகவோ பயன் காரணமாகவோ வடிவு காரணமாகவோ நிறம் காரணமாகவோ தான் ஒப்பிட்டு நோக்குகிறோம். எனவே தான் தொல்காப்பியர் அத்தகைய செய்திகளைப் பின்வரும் நூற்பாவில் உணர்த்துகிறார்,

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்.

தொழிலும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே அப்பாகுபட வந்த உவமைக்கண் புலனாம்.

எனவே கட்புலமல்லாதனவும் உள என்றவாறாம். அவை செவியினானும் நாவினானும் மூக்கினானும்-மெய்யினானும் மனத்தினானும் அறியப்படுவன. இவ்விருவகையும் பாகுபடவந்த உவமையாம்.

அவற்றுள், கட்புலனாகியவற்றுள் வினையாவது நீட்டல் முடக்கல், விரித்தல் குவித்தல் முதலியன. பயனாவது நன்மையாகவும் தீமையாகவும் பயப்பன. வடிவாவது வட்டம் சதுரம் கோணம் முதலாயின. நிறமாவன வெண்மை பொன்மை முதலாயின. இனிச் செவிப்புலனாவது ஓசை, நாவினான் அறியப்படுவது கைப்பு காழ்ப்பு முதலிய சுவை. மெய்யினான்
அறியப்படுவன வெம்மை தண்மை முதலாயின. மூக்கால் அறியப்படுவன நன்னாற்றம் தீநாற்றம். மனத்தால் அறியப்படுவன இன்பதுன்ப முதலியன.

புலிபோலப் பாய்ந்தான் - **வினை.**

மாரி யன்ன வண்கை - **பயன்.**

துடி போலும் இடை - **வடிவு.**

தளிர் போலும் மேனி - **நிறம்.**

குயில்போன்ற மொழி - செவியாலறியப்பட்டது.

வேம்புபோலக் கைக்கும்- நாவினாலறியப்பட்டது.

தீப்போலச் சுடும்- மெய்யினாலறியப்பட்டது.

ஆம்பல் நாறுந் துவர்வாய்- மூக்காலறியப்பட்டது.

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. (குறள்.1107) - மனத்தானறியப்பட்டது.

விரவியும் வரூஉம் மரபின என்ப.

மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

மேற்சொல்லப்பட்ட உவமைகள் ஓரோவொரு பொருளான் வருதலின்றி இரண்டும் பலவும் விரவியும் வரும் மரபினுடையது.

"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று"

எனும் பொழுது வடிவும் நிறனும் விரவிவந்தது. பிறவும் அன்ன. இன்னும் விரவியும் வரூஉம் மரபின என்றதனாற் பலபொருள் விரவிவந்தது.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ" (கலித் . 84)

என்றவழித் தாமரையிலையும் பூவும் குடைக்கும புதல்வற்கும் உவமையாயினும் தோற்றத்திற் கிரண்டும் ஒருங்குவந்தமையான் வேறோதப்பட்டது

## 11.2 உவமை தோன்றும் நிலைக்களன்கள்:

உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை

உவமை ஆராயுங்காலத்து உயர்ந்ததன் மேலதாய் வரும் இங்கு உயர்ச்சியாவது வினைமுதலாகச் சொல்லப்பட்டன உயர்தல்.

"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்" (பட்டினப். 298)

என்பதில் துப்புடைய பலவற்றினும் அரிமா உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந் - கடவுள் வாழ்த்து )

என்பதில் சிவப்புடைய பலவற்றினும் தாமரை யுயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது

சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப.

உவமை தம்மின் உயர்ந்தவற்றோடு உவமிக்கப்பட்டதேனும் சிறப்பு, நலன், காதல்., வலி என்பதனை நிலைக்களனாகக் கொண்டு வரும் .

"முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழாஅல்"(பொருநராற்.54-6) - சிறப்புப் பற்றி வந்தது.

"ஓவத் தன்ன வியனுடை வரைப்பின்"(புறம்.251) - நலம்பற்றி வந்தது.

"கண்போல்வான் ஒருவ னுளன்" - காதல்பற்றி வந்தது.

“அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்” (பட்டினப்.218) - வலிபற்றி வந்தது.

பிறவு மிவ்வாறே படுத்துநோக்கிக் கண்டுகொள்க.

கிழக்கிடும்பொருளோ டைந்து மாகும்

மேற்சொல்லப்பட்ட சிறப்பு முதலிய நான்கும் ஒழியத் தாழ்ந்த பொருளொடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும். எனவே அதனோடுங்கூட ஐந்தாகும்.

“ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயித

ழூசி போகிய சூழ்செயன் மாலையன்’’ (அகம் . 48 )

மேற்சொல்லப்பட்ட நான்கும் உயர்வின் பகுதியாதலின் இதனொடுங்கூட்ட ஐந்தென்றார்.

## 11.3 உவமை மரபுகள்:

தொல்காப்பியர் உவமை பற்றி விளக்கி உவமை மரபுகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.உவமை கூறும் பொழுது முதலும் சினையும் என்று கூறப்பட்ட இரண்டனுள் முதலொடு முதலும் சினையொடு சினையும் முதலொடு சினையும் சினைக்கு முதலும் வேண்டியவற்றால் உவமம் செய்தற்குரிய மரபு பிறழாமல் உவமம் கூற வேண்டும்.

முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு

நுதலிய மரபி னுரியவை யுரிய .

‘ஒருகுழை யவன்போல் இணர்சேர்ந்த மரா அமும்” (கலித் . 26 ) - முதற்கு முதல் உவமமாயிற்று .

“அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட

குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ.” (கலித் . 84) - முதற்குச் சினை உவமமாயிற்று

“தாமரை புரையுங் காமர் சேவடி” (குறுந் கடவுள் வாழ்த்து ) - சினைக்குச் சினை யுவமமாயிற்று.

“நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி.” (அகம் . 84 ) - சினைக்கு முதல் உவமமாயிற்று.

## 11.4 உவமும் பொருளும்:

உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்.

இ∴து உவமைக்குரியதோர் மரபு உணர்த்திற்று..

இரட்டைக் கிளவியாயினும், நிரனிறுத்தமைத்த நிரனிறைச்சுண்ணமாய் வரினும், மிக்குங்குறைந்தும் வருதலன்றி உவமையடையடுத்து வரினும் தொழிற்பட்டு வரினும்,ஒன்றும் பலவுமாகி வரினும் வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும்.

## 11.5 குறிப்பின் வருவன:

பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பின் தீராக்

குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய.

"அவாப்போ லகன்றதன் அல்குன்மேற் சான்றோர்
உசாஅப்போல வுண்டே மருங்குல்" என்பதில் அல்குல் பெரிதென்பான் ஆசையோடு உமித்தலின் இது தக்கதாயிற்று! மருங்குல் நுண்ணிதென்பான் சான்றோர் உசாவொடு உவமித்தலின் அதுவும் தக்கதாயிற்று. அவை சிறப்புப் பற்றி வந்தன.

இனி நெறிப்பாடின்றி வருவன இறப்ப உயர்தல், இறப்ப இழிதல் என இருவகைப்படும்.

"இந்திரனே போலு மிளஞ்சாத்தன் ..... நாறுமிணர்" (யாப்....வி....ஒழி) இது இறப்பவுயர்ந்தது. வழக்கிறந்துவருதலின் இவ்வாறு வரும் உவமை கூறப்பட்டது.

"வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி யிரிவதுபோ லெங்கெங்கும் வள்ளற்கு
மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து" (யாப்.வி.ஒழி) இ∴து இறப்ப இழிதலின் இதுவுமாகாது.

## 11.6 சுட்டிக்கூறா உவமம்

சுட்டிக் கூறா உவமை அதாவது உவமிக்கப்படும் பொருட்கு உவமை இதுவெனச் சுட்டிக்கூறாமை ஆகும். ஆவ்வாறு வருமாயின் உவமச் சொல்லொடு பொருந்த உவமிக்கப்படும் பொருளொடு புணர்த்து உவமவாய்ப்பாடு கொள்ள வேண்டும்.அதாவது உவம வாய்பாடு தோன்றாத உவமம்,பொருட்குப் புணராத போதும் உவமை உண்டு என்பது பொருளாம்

சுட்டிக் கூறா உவம மாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து." (குறள்.90) இதன்கண் "அதுபோல" எனச் சுட்டிக்கூறா வுவமையாயிற்று.

## 11.7 பொருளே உவமம் செய்தல்:

உவமிக்கும் பொருள் தன்னை உவமமாக்கிக் கூறினும் மயக்கமற்ற சிறப்பு நிலைமையான் அதுவம் உவமை என்றே உரைக்கப்படும்.

பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அ∴துவம மாகும்.

இரும்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பிற்
கருங்கையானை கொண்மூ வாக (புறம் 369)

## 11.8 உவம உருபுகள்:

கீழ்க்கண்ட நூற்பா உவமையுணர்த்துஞ் சொற்களை வரையறுத்து உணர்த்திற்று.

அவைதாம்,
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை யெனாஅ

குறிப்பு

ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க
வென்ற வியப்ப வென்றவை யெனாஅ
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ளக் யெனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ வாங்கவை யெனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை யெனாஅ
ஆறா றுவமையும் அன்னவை பிறவுங்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே.

மேற்சொல்லப்பட்ட உவமைகள் தாம் அன்ன என்பது முதலாகப் புரைய என்பது ஈறாக வந்தனவும் அன்னவை பிறவுமாகிச் சொல்லுங்காலத்துப் பல குறிப்பினையுடையன ஆகும்.

அன்னபிறவாற் கொள்ளப்படுவன: நோக்க,நேர,அனை,அற்று,இன்,ஏந்து, ஏர் சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்னும் தொடக்கத்தன கொள்ளப்படல் வேண்டும்.

“பல்குறிப்பின’’ என்றதனான் இச்சொற்கள் பெயரெச்சநீர்மையவாய் வருவனவும் வினையெச்ச நீர்மையவாய் வருவனவும் முற்று நீர்மையவாய் வருவனவும் இடைஎன்பன பெயரெச்சம். ‘‘புலிபோன்று வந்தான்’’ புலிபோலப் பாய்ந்தான்“ என்பன வினையெச்சம். ‘‘புலிபோலும்’’ ‘‘புலிபோன்றனன’’ என்பன முற்று. அன்ன, இன்ன இடைச்சொல்.

ஈண்டு எடுத்தோதப்பட்ட முப்பத்தாறினும் ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட நடுங்க என்பனவொழித்து நின்றமுப்பதும் அன்னபிறவாற் கொள்ளப்பட்டவற்றுள் நோக்க என்பதும் நேர என்பதுஞ் சிறப்புவிதி யுடைத்தாதலின் அதற்கு உதாரணம் ஆண்டுக் காட்டுதும், ஏனைய ஈண்டுக் காட்டுதும்.

வேலொன்று கண், கயலென்ற கண்,மணிநிற மாற்றிய மாமேனி, மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம், வேயொடு நாடிய தோள், படங்கெழுநாகம் நடுங்கு மங்கு, குன்றினனையாருங் குன்றுவர், இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று, மருப்பிற் றிரிந்து மறிந்து வீழ் நாடி துணைமலரெழினீலத் தேந்தெழின்மலருண்கண் முத்தேர் முறுவலாய், எச்சிற் கிமையாது பார்த்திருக்கு மச்சீர், யாழ்கெழு மணிமிடற் றந்தணன், கிளை செத்து மொய்த்த தும்ப எனவரும்.

## 11.9 வினையுவமத்திற்குரிய உருபுகள்:

அன்ன வாங்கு மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்.

அன்னமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் வினையுவமத்திற்குரிய சொல்லாம்.

“கொன்றன்ன வின்னா செயினும் (குறள். 109) பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு (திருமுருகாற்.2 “புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மான செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்’’ (பெரும்பாணாற். 269,271)

புலியிறப்ப வொலிதோற்றலின் புலியென்னக் கலிசிறந் துராஅய் செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (திருமுருகாற். 5) எனவரும்.

அன்னஎன் கிளவி பிறவொடுஞ் சிவணும்.

அன்ன என்னுஞ் சொல் மேற்குறித பொருள்களோடும் மட்டும் அன்றிப் பிற பொருள்களோடும் வரும்.''

மாரி யன்ன வண்கை (புறம். 133) இதுபயன்.

''பரியரைக் கமுகின் பாளையம் பசுங்காய்

கருவிருந்தன்ன கண்கூடு சிறுதுளை (பெரும்பாணாற் 7 - 8) இதுமெய்.

''செவ்வானன்ன மேனி'' (அகம் கடவுள் வாழ்த்து ) இது உரு

## 11.10 பயன் உவமத்திற்குரிய உருபுகள்:

எள்ள விழையப் புல்லப் பொருவக்

கள்ள மதிப்ப வெல்ல வீழ

என்றாங் கெட்டே பயனிலை யுவமம்.

எள்ள என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் பயனிலையுவமைக்குச் சொல்லாம்..

''எழிலி வானம் எள்ளினன் தரூஉங்

கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்'' – **அன்ன**

மழைவிழை தடக்கை வாய்வா ளெவ்வி

''புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல'' – **புல்ல**

''விண்பொருபுகழ் விறல் வஞ்சி" – **பொருப**

''கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி'' – **கள்ள**

''இருநிதி மதிக்கும் பெருவள னீகை'' – **மதிப்ப**

''வீங்குசுரை நல்லான் வென்ற வீகை''- **வெல்ல**

''விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும'' - **வீழ**

## 11.11 மெய்யுவமத்திற்குரிய உருபுகள்:

கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய

ஓட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்பவென்

றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.

மெய் உவமத்திற் குரியசொல் உணர்த்துதல் நுதலிற்று.

கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்யுவமத்திற்குரிய சொல்லாம்..

''விண்ணதிர் இமிழிசை கடுப்ப'' (மலைபடு. 2)

''அகலிரு விசும்பிற் குறைவில் ஏய்ப்ப (அகம். 1)

''வேய்புரை மென்றோள்'' (கலித்.39)

''முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை வியப்பனதழீஇ"

''பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்''

''செந்தீ யோட்டிய வஞ்சுடர்ப் பருதி''

கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை''- என்பன போன்று வரும்.



குறிப்பு

## 11.12 மெய் உவமத்திற்குரிய உருபுகள்:

போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றொத்துவரு கிளவி உருவி னுவமம்.

உருவத்திற்குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.

போல என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் உருவவமத்திற் குரியசொல்லாம்.

''தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே''. (ஐங்குறு. 41)

''மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா''

ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்''

கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம்''

''கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்'' (அகம்,கடவுள் வாழ்த்து)

தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி''

தத்த மரபில் தோன்றுமன் பொருளே.

மேல் உணர்த்தப்பட்ட சொற்கள் கூறியவாறு அன்றித் தத்தமரபில் தோன்றும் பொருளும் உளவாகும்.

மன் ஆக்கங்குறித்துவந்தது. ஈண்டு மரபு உன்றது பயிற்சியை ஆகும். இதனானே நூல் செய்கின்ற காலத்து வினைமுதலாகிய பொருள்கள் ஓதிய வாய்பாட்டான் வருதல் பெருவழக்கிற்றென்று கொள்ளப்படும்.

''முழவுறழ் தடக்கையி னியல வேந்தி'' (திருமுருகாற். 215)

''மாவென்ற மடநோக்கின்'' (கலித். 57)

''வேய்வென்ற தோள்'' (கலித்.138)

''மாரிவீ ழிருங்கூந்தல்'' (கலித். 14)

''பொன்னுரை கடுக்குந் திதலையர்'' (திருமுருகாற் . 145)

''குறுந்தொடி ஏய்க்கு மெலிந்துவீங்கு திவவின்' (பெரும்பாண். 13)

''செயலையந் தளிரேய்க்கு எழினலம்'' (கலித். 15)

''பாஅன் மருண் மருப்பி னுரல்புரை பாவடி'' (கலித். 21)

''வலம்புரி புரையும் வால்நரை முடியினர்'' (திருமுருகாற். 127)

''ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல'' (அகம். 22)

''தாமரைபோல் வாள்முகம்'' (திணைமாலை. 1)

## 11.13 உவமை எட்டு வகையாதல்:

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

மேற்சொல்லப்பட்ட உவமை நான்குவகை ஆதலேயன்றி எட்டுவகை ஆதலும் உண்டு..

அவையாவன: வினையும் வினைக்குறிப்புமென இருவகையாம். பயன் என்பது நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இருவகையாம். மெய் என்பது வடிவும் அளவும் என இருவகையாம். உரு என்பது. நிறமும் குணமும் என இருவகையாம் இவ்வாறு எட்டாயின..

"பொன்னன்ன செல்வத்தன்' - இது வினைக்குறிப்பு.

ஞாயி றனையைநின் பகைவர்க்கு" (புறம்.59 - ) - இது தீப்பயன்).

"நெடுவரை மிசையிற் பாம்பென விழிதருங்'

கடுவரற் கலுழி - என்பது அளவு.

"பாலன்னமொழி" - இது குணம்.

## 11.14 உவமையும் மெய்ப்பாடும்.

பெருமையுஞ் சிறுமையுஞ் பற்றி ஒப்புமை பெறப்படும் உவமைகள் எண்வகை மெய்ப்பாடுகளின் வழியே புலப்படத் தோன்றும்.எனவே மெய்ப்பாடு தோன்றாத வழி இப் புணர்ப்பினால் பயன் இல்லை.

பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப.

"அவாப்போல் அகன்றதன் அல்குன்மேற் சான்றோர்
உசா அப்போல உண்டேமருங்குல்." - பெருமையுஞ் சிறுமையும்பற்றி உவகை நிகழ்ந்தது.

"கலங்கவிழ்த்த நாய்கன் போற் களைதுணைப் பிறிதின்றி". - துன்பப்பெருக்கம் சொல்லி அவலம் வந்தது.

"பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேரும்என் நெஞ்சு." (முத்தொள். 88) இது பெருக்கம்பற்றி இழிவரல் வந்தது.

## 11.15 உவமைக்குரிய வேறுபாடு:

உவமப் பொருளின் உற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான.

உவமப்பொருளாலே சொல்பவனால் குறிக்கப்பட்ட பொருளை கூறுபாட்டியலான் உணரும் தெளியும் பக்கமும் உண்டு.

தெளிமருங்காவது துணிவுபக்கம். எனவே துணியாமை உவமத்தின் கண்ணே வந்தது.அவ்வாறு வரினும் இதுவேயெனத் துணிதலின் துணிபக்கம் ஆகும்

"ஐதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று கனையு மன்று
மெல்ல வியலும் மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று." (கலித். 55)

என்பதில் துணியாது நின்றன நுதலும் முகனும் தோளுங் கண்ணும் சாயலும் மொழியும் எனத் துணிந்தது.

குறிப்பு

## 11.16 உவமையும் மரபும்

உவமையாகிய பொருளைக் கொண்ட உவமேயமாகிய பொருளுக்குப் பொருந்தியன இவை என ஈய்ந்து உணரும் இடத்து நெடுங்காலமாக மரபு வழிப்பட்டு வழங்கிய உலக வழக்கினை ஒட்டியே அவை அறியப்படும். என்பார் தொல்காப்பியர்.

உவமப் பொருளை உணருங் காலை
மருவிய மரபின் வழக்கொடு வருமே.

கயல் எழுதி வில் எழுதி என்பது மருவிய மரபில் உரைக்கப்படுவது.ஆனால் கயல் எழுதி சிலை எழுதி என்பது மரபாகாது.இது மரவிய மரபன்று.

உவமை இரண்டு சொல்லோடு வருமாயின் உவமிக்கப்படும் பொருளும் இரண்டு சொல்லொடு வருதல்வேண்டும். இதனைக் கீழ்கண்ட நூற்பா உணர்த்தும்.

இரட்டைக்கிளவியும் இரட்டை வழித்தே.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்". (குறள். 410)

## 11.17 உள்ளுறை உவமம்

உவம இயலில் 23 ஆம் நூற்பா முதல் 33 ஆம் நூற்பா வரை உள்ள நூற்பாக்கள் உவமையின் விகற்பங்கள் எனக் குறிப்பார் இளம்பூரணர். ஆனால் இவற்றை உள்ளுறை உவமம் பற்றியன என்பார் பேராசிரியர்.

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே.

பிறிது என்பது - உவமைப்பொருள் தான் அன்மையான் உவமைப்பொருளொடு படாது, பொருள் தோற்றிய இடத்தொடு நோக்கி முன்னமரபினால் சொல்லும் பொழுது துணிவுடையோர் கொள்வர் ஆயின் அவர் துணிந்த துணிவின்கண்ணே உவமை. வரும்.

"முன்னமாவது
இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்." (தொல் செய்யு.169)

இடத்தொடு பார்த்து ஏற்கும் பொருட்கட் கூறுவது.

"நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர" (கலித். 119)

என்ற காணப் பிறிதாகிய பொருளொடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று. மதியினது எழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடு நோக்கிற்று. அவ்விடத்திற் கேற்பக் கூறுதலின் முன்னமாயிற்று. அம்மதியினது தோற்றம் இத்தன்மைத்தெனத் துணிதலின் அதன்கண் உவமைச்சொல் வந்தது.

"வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழிப்
பள்ளியும் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப" (கலித்.121)

## 11.18 உவமப் போலி:

உவமப் போலி ஐந்தென மொழிப.

உவமையைப் போன்று வருவன ஐந்தென்று சொல்லுவர்.

அவையாவன: இதற்கு உவமையில்லை எனல் - இதற்கு இதுதானே உவமை எனல் - . பல பொருளினும் உளதாகிய உறுப்புக்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு சேர்த்தின் இதற்கு உவமையாம் எனல், பலபொருளினும் உளதாகிய கவின் ஓரிடத்து வரின் இதற்கு உவமையாம் எனல் - கூடாப்பொருளோடு உவமித்து வருவன என்பன ஆகும்.

“நின்னோர் அன்ன பிறர் இன்மையின்” நின்னைப் போன்ற பிறர் இன்மை என்றமையால் இ∴து இதற்கு உவமை இல்லை எனல்.

“மன்னுயிர் முதல்வனை யாதலின்
நின்னோர் அனையைநின் புகழொடு பொலிந்தே.” (பரிபா. 1) - இதற்கு இது உவமை எனல்

நல்லார்கள் நல்ல உறுப்பாயின தாங்கள் நாங்கள்
எல்லாம்உடனாது மென்றன்ன - இதனுள் கண். நல்ல உறுப்புகள்’ எல்லாம் உடன் நேர்ந்தமை போல என்பதால் பல பொருள் உள்ளதாகிய உறுப்புகளை தேர்ந்தெடுத்துக் கொண்ட உவமை

“நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
வந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை” (பதிற்றுப். 14) - இதில் நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல் ஆகிய பலபொருள்களில் உளதாகிய கவின் ஓரிடத்து வந்ததாக உரைக்கப்பட்டமையால் பலபொருளினும் உளதாகிய கவின் ஓரிடத்து வரின் இதற்கு உமையாம் எனல்

“வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவன் அல்லன் மலைநாடன்
ஈரத்து ளின்னவை தோன்றின் நிழற்கயத்து
நீருட் குவளைவெந் தற்று” (கலித். 41)

இப்பாடல் குளத்து நீரில் நின்ற குளளை வெந்தது போன்றது என்ற பொருள் வந்துள்ளது,இது கூடப்பொருளோடு உவமித்து வருதல் என்பதாம்.

தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப.

மேற்சொல்லப்பட்ட ஐந்தும் உரைத்த வாய் பாட்டாற் கூறும்வழி வினை,பயன்,மெய், உரு, பிறப்பு என்ற ஐந்தினும் ஏதுவாகச் சொல்லிப் பின்னர்க் கூறவேண்டும். நினக்கு உவமையில்லை என்னும்வழிச் செயலால், பயனால்,. உறுப்பால்,, உருவால், பிறப்பால் ஒப்பார் இல்லையெனல் வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்தாம்.

## 11.19 உவமை கூறும் அக மாந்தர்

கிழவி சொல்லின் அவளறி கிளவி

உவமைப்பொருளைத் தலைமகள்கூறில் அவளறிந்த பொருட்கண்ணே உவமை கூறப்படும். எனவே அவள் அறியாத பொருட்கண் கூறியதாகச் செய்யுட் செய்யப் பெறாது.

தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது

தோழி உவமை சொல்வாள் ஆயின் அந்நிலத்தினுள்ளன அன்றிப் பிறநிலத்துள்ளன கூறப் பெறாள்.

கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்.

தலைவன் உவமை கூறுவானாயின் அறிவொடு கூறுவான்.

கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே.

தலைமகள் உவமை கூறுங்கால் மேற்சொல்லப்பட்ட இரண்டிடத்தும் உரித்து. அவை முறையே மகிழ்ச்சி பயக்கும் இடம், புலவி பயக்கும் இடம் என்பதாகும். எனவே இவ் இரண்டும் அல்வழி உவமை கூறப்பெறாள்.

கிழவோற் காயின் இடம்வரை வின்றே.

தலைமகன் உவமை கூறுதல் எப்பொருட்கண்ணும் அமையும் என்பதாகும்.

ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே.

மேற்சொல்லப்பட்ட மூவருமல்லாத நற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமைகூறுமிடம் வரையறுக்கப்படாது.

தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான.

தோழியுஞ் செவிலியும் உவமை கூறுங்கால் பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியர்

“பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்
வேறுபட வந்த உவமைத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.”

## 11.20 இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்:

இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கில் தோன்றும் என்ப.

இது தலைவற்குந் தலைவிக்குந் தோழிக்கு முரியதோர் மரபு..

மகிழ்ச்சி பயக்குங் கூற்றும் புலவிபயக்குங் கூற்றும் உவமப்பக்கத்தால் தோன்றும்.

“மாரி யாம்பல் அன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇய ரண்டர்
கயிறிரி யெருத்திற் கதம்பூந் துறைவ”. (குறுந் 117)

என்றது தலைமகள் உவமை கூறியவழி நின்ற பெண்டிர் தடுப்பக் கயிறிரி யெருதுபோலப் போந்தனை யெனத் துனியுறு கிளவி வந்தது.

“.... ..... வானத்

தணங்கருங் கடவு ளன்னோள்நின்''

## 11.21 ஒரீஇக் கூறல்:

ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.

உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறலும் மருவிய இயல்பு.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்." (குறள். 1120)

## 11.22 உவமைத் தன்மை:

உவமைத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான.

பயனிலை பொருந்திய வழக்கின்கண் உவமிக்கப்படும் பொருளோடு உவமைதோன்ற வருதலேயன்றி யுவமையது தன்மை கூறலும் உவமையாதற்குரித்து.

''பாரி பாரி யென்றுபலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.'' (புறம்.107)

இதுமாரி போலும் பாரியது கொடை என்னாது இவ்வாறுகூறும் பொருண்மையும் உவமமாம்.

## 11.23 தடுமாறு உவமம்

தடுமாறு வரலும் கடிவரை வின்றே.

உவமைக்கண் தடுமாறு வருதல் நீக்கப்படாது.

தடுமாறுதல்: - ஐயமுறுதல்.

''கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து." (குறள். 1085)

## 11.24 உவமை பல அடுக்கி வருதல்:

அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரன்முறை வந்த மூன்றலங் கடையே.

அடுக்கிய தோற்றம் - உவமைபல அடுக்கித் தோற்றுதல். அவற்றுள், கடியப்பட்டது உவமைக் குவமையாக அடுக்கிவருவது.

**நிரனிறுத்தமைத்தல்:** - ஒரு பொருளொடு தோற்று தொடரையுடைத்தாகப் பலவுவமை வருதல்.

''நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே." (பதிற்றுப். 14)

**நிரனிறை** - உவமைபலவற்றையுஞ் சேர நிறுத்தியுவமிக்கப்படும் பொருளையுஞ் சேரநிறுத்தல்.

''கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்



குறிப்பு

வடிவினளே வஞ்சி மகள்."

சுண்ணம்: - உவமையையும் பொருளையுந் துணித்து ஒட்டுதல்.

"களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே."

வரன்முறை வந்த மூன்றலங் கடையே என்பது - அடுக்கியலுவமை கடியப்படும். ஆமென்று வரையப்பட்ட நிரனிறுத்தன் முதலிய மூன்றும் அல்லாதவழி என்றவாறு.

**பயிற்சி வினாக்கள்:**

1.உவமை தோன்றும் நிலைக்களன்கள் குறித்து எழுதுக.

பாடப்பகுதியின் 11.2 என்ற பகுதியைத் தேர்ந்து எழுதுக.

2.பயன் உவமத்திற்குரிய உருபுகள் யாவை?

பாடப்பகுதியின் 11.10 என்ற பகுதியைத் தேர்ந்து எழுதுக.

3.உள்ளுறை உவமம் குறித்து விவரி.

பாடப்பகுதியின் 11.17 என்ற பகுதியைத் தேர்ந்து எழுதுக.

4.உவமப் போலி விளக்கி வரைக.

பாடப்பகுதியின் 11.18 என்ற பகுதியைத் தேர்ந்து எழுதுக.

5.தடுமாறு உவமம் - விளக்குக.

பாடப்பகுதியின் 11.23 என்ற பகுதியைத் தேர்ந்து எழுதுக.

# பிரிவு IV : செய்யுளியல் - மரபியல்

## கூறு: 12 – மாத்திரை முதலா களன் வரை

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் எட்டாவது இயல் செய்யுளியல் ஆகும். செய்யுளிலக்கணம் உணர்த்தினமையாற் பெற்றபெயர். செய்யுளின் வடிவம் பற்றி இவ்வியல் விரிவாகப் பேசும்.இந்த இயலில் 235 நூற்பாக்கள் உள்ளன. மேல் உணர்த்தப்பட்ட பொருண்மை எல்லாவற்றிற்கும் இ∴.திடமாதலின் அவற்றின்பிற் கூறப்பட்டது.

### 12.1 செய்யுள் உறுப்புகள்:

இந் நூற்பா செய்யுளுறுப்புகள் எல்லாவற்றையும் தொகுத்து உணர்த்துகின்றது.

மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள் பொருள்வகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலை
விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

மாத்திரை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்து நான்கும் செய்யுட்கு உறுப்பாகும்

முற்கூறிய எழுவகை இயலும் வழக்கிற்கும் செய்யுட்கும் பொது என்பதும், இது செய்யுட்கே உரித்தென்பதும் அறியப்படும்.. மற்றிதனை யாப்பதிகாரம் என வேறோர் அதிகாரமாக்கி உரைப்பாரும் உளர். அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறுவேண்டுமெனமறுக்க.அல்லதும் எழுத்தும் சொல்லும் பொருளும் என மூன்றற்கு மூன்றதிகாரமாக்கி அதிகாரம் ஒன்றற்கு ஒன்பது ஒத்தாகத் தந்திரம் செய்ததனோடு மாறுகோளாம்.இதனை வேறு அதிகாரம் என்பார்க்கென்பது.(தொல்.பொருள்.313.பேரா) என்பது பேராசிரியர் உரையாம்.

### 12.2. அவற்றுள்,

மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தனவே யென்மனார் புலவர்.

மேற்சொல்லப்பட்டவற்றுள் மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும் மேல் எழுத்ததிகாரத்துச் சொல்லப்பட்டன என்று சொல்லுவர் புலவர்.

**மாத்திரை:**

மாத்திரை என்பது எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு ஆகும்.கைநொடிக்கும் நேரமும் கை நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரை எனப்படும்.

அவையாவன குற்றெழுத்து ஒருமாத்திரை - நெட்டெழுத்து இரண்டு மாத்திரை - உயிரளபெடை மூன்று மாத்திரை - குற்றிய லிகரமுங் குற்றியலுகரமும் ஆய்த மெய்யும் ஒவ்வொன்றும் அரைமாத்திரை- ஒற்றளபெடை ஒரு மாத்திரை - ஐகாரக் குறுக்கம் ஒருமாத்திரை - மகரக்குறுக்கங் கால்மாத்திரை -ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்களவாம்

**எழுத்தியல்**

உயிரெழுத்து. மெய்யெழுத்து, சார்பெழுத்து என மூவகைப்படும். உயிரெழுத்து குற்றெழுத்து, நெட்டெழுத்து அளபெடையென மூவகைப்படும். மெய்யெழுத்து வல்லினம், மெல்லினம் இடையினம் என மூவகைப்படும். சார்பெழுத்து குற்றியலிகரம். குற்றியலுகரம், ஆய்தமென மூவகைப்படும். மெய்யினுட் சிலவும் ஆய்தமும் அளபெடுக்கப்பெறும்.

குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ. நெட்டெழுத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - அளபெடை ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ. - வல்லினம் கசடதபற - .மெல்லினம் ஙஞணநமன - இடையினம் யரலவழள - குற்றியலுகர மாவது நெட்டெழுத்தின் பின்னரும் மூன்றெழுத்து முன்னான மொழியினும் வல்லெழுத்தை ஊர்ந்து வந்து உகரம். நாகு நாக்கு: காசு - காச்சு; காடு - காட்டு; காது - காத்து; காபு - காப்பு; காறு - காற்று என இந்நிகரன. - குற்றியலிகரமாவது இவ்வுகரந்திரிந்து மகரம் ஊர்ந்து மகரமோடியைந்து வரும். நாகியாது உகரந்திரிந்தது; கேண்மியா மகர மூர்ந்தது. - ஆய்தமாவது குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடைவரும் அ∴தாவது எ∴கு எனவரும். - ஒற்றளபெடையாவது மெல்லினமும் வயலளவும் ஆய்தமும் அளபெடுக்கும். அவை மங்கலம், மஞ்ஞ்சு எனவரும்.

இனி உயிர்மெய்யுங் கூடி உயிர்மெய்யெழுத்தாம். அவை ககர முதல் னகரவீறாகிய இருநூற்றொருபத்தாரும், இன்னும் ஐகாரக்குறுக்கமும் மகரக்குறுக்கமும் என்பவும் உள. ஐகாரக்குறுக்கம் அளபெடையும் தனியும் அல்லாதவழிக் குறுகும்.மகரக்குறுக்கம்ணகர,னகரஒற்றின் பின்வரும்.புணர்மொழிக்கண் வகரத்தின் மேனின்ற மகரங் குறுகும்.

## 12.3 அசை:

அசை நான்கு வகைப்படும்.முதலில் நேர் அசை நிரையசை என்பதனைக் கூறி பின் நேர்பு,நிரைபு இரண்டனையும் கூறுவார் தொல்காப்பியர்.

குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையு மென்றிசிற் பெயரே.

**நேர்:** குறிலும் நெடிலும் தனியேவரினும் ஒற்றொடுவரினும் நேரசை – ப, பண், கா, கான்

**நிரை:** குறில் இணையும் குறில் நெடிலும் தனியேவரினும் ஒற்றொடுவரினும் நிரையசை – பக, பகல், குரா, குரால்.

**நேர்பு – நிரைபு :** நேர், நிரை இவற்றோடு இருவகை உகரமும் இணையுமாயின் நேர்பு, நிரைபு அசைகள் தோன்றுகின்றன. குற்றெழுத்தொடு பொருந்தின உகரமல்லாத இடத்து ஆகும்.

**12.3.1 நேர்பு, நிரைபு:**

இருவகை உகரமோடு இயைந்தவை வரினே
நேர்பு நிரைபும் ஆகும் என்ப
குறிலிணை உகரம் அல்வழி யான.

தன்குறிலால் ஆன நேரசையுடன் உகரம் சேருமானால் அது நிரையசை ஆகுமே தவிர நேர்பு அசை ஆகாது. – தபு என்பதனை நிரையசையாகவே கொள்ளல் வேண்டும்.நேர்பு அசை எனக் கொள்ளல் கூடாது.

**12.3.2 இயலசை- உரியசை:**

இயலசை முதலிரண் டேனவை உரியசை.

நேரசையும் நிரையசையும் இயலசை எனக் குறிக்கப்பெறும். நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனக் குறிக்கப்பெறும்.

**12.3.3 தனிக்குறில்:**

தனிக்குறில் முதலிசை மொழிசிதைந் தாகாது.

தொடர்மொழியில் மொழி சிதைந்து தனிக் குறில் நேரசையாகாது..

**மொழிசிதைத்தல்:** ஒற்றுமைப்பட்டிருக்கின்றதனைப் பிரித்தல்.அ∴தாவது புளிமா என்றவழி நிரைநேராக அலகிடாது முதல் நின்றதனை நேரசையாக்கி இடை நின்றதையும் இறுதி நின்றதையும் நிரையசையாக்கல். அவ்வழிப் புளி என்னும் சொல்லைப் பிரிக்கவேண்டின் நிரையசையாகவே கொள்ளல்வேண்டும். இனி. மொழி சிதையாக்கால் நேரசையாம்.

**12.3.4 குற்றிலிகரம்:**

ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.

குற்றியலிகரம் ஒற்றெழுத்து இயல்பிற்று ஆகும்.அதாவது குற்றியலிகரம் அலகு பெறாது.

**12.3.5 முற்றியலுகரமும்:**

முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்.

முற்றியலுகரமும் மொழிசிதைந்து நேர்பசை நிரைபசை என்றுரைக்கப் படாது;அது ஈற்றடி மருங்கில் தனியசையாகி நிற்றலும் கிடையாது.

**12.3.6 குற்றியலுகரமும் முற்றிய லுகரமும்:**

குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் ஒற்றொடு தோன்றித் தனி அசையாகி நிற்கவும் பெறும்.

“படுகிளி யாவும் பசுங்குரல் ஏனல்
கடிதின் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும்.” (கலித். 50) - இதன்கட் குற்றியலுகரம் ஒற்றொடுவருதலான் நேரசையாயிற்று.

”கண்ணும் படுமோ என்றிசின் யானே.” (நற்றிணை.61) - இதன்கண் முற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசையாயிற்று.

## 12.4 வகையுளி:

அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே.

அசையையுஞ் சீரையும் ஓசையோடு சேர்த்திப் பாகுபாடுணர்த்தல் வல்லோர்கள் நெறி என்றாகும்.

அ:.தாவது பொருளொடு சொல்லை அறுத்தவழித் தளையும் சீரும்சிதையின் அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்து என்பதாம். அது வருமாறு;

“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.” (குறள். 3)

என்றவழி வாழ்வாரெனப் பொருள் நோக்கிச் சீராமாயின் ஓசைகெடும்.அதன்கண் “வாழ்“ என்பதனை முதனின்ற சீரோடொட்டக் கெடாதாம்.

## 12.5 சீர்.

இரண்டசைகொண்டும் மூன்றசை கொண்டும் இயைத்துச் சேர்ப்பது சீரெனப்படும்.ஓரோவிடத்து ஓரசையானும் சீர் அமையும்.

ஈரசை கொண்டு மூவசை புணர்த்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

“தாமரை புரையுங் காமர் சேவடி.” (குறுந்.கடவுள் வாழ்த்து) - நான்குசொல்லாகி ஓசை அற்றுநின்றது.

“எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு” (குறள். 110) - மூன்றசையினாற் சீராகியவாறும் அவ்வளவினான் ஓசையற்று நின்றது.

### 12.5.1 ஈரசைச்சீர்

ஈரசைச்சீர்களை இயற்சீர் என்றும் உரிச்சீர் ( ஆசிரிய உரிச்சீர் ) என்றும் வகைப்படுத்தவர்.இயலசைகள் இணைந்து வருவது இயற்சீர் ஆகும்.உரிச்சீர்கள் இயைந்து வருவது ஆசிரிய உரிச்சீர் ஆகும்.இதனைப் பின்வரும் நூற்பா உணர்த்தும்.

இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.

இயலசையாகிய நேரும் நிரையுந் தம்மின் உறழ நான்கு சீராம்.அவை இயற்சீர் எனப்படும்.

“தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்.” - எனவரும்.

இனி உரியசையாகிய நேர்பு நிரைபு என்றவற்றைத் தம்மின் உறழ நான்குசீராம். அவை ஆசிரிய உரிச்சீர் எனப்படும்.

“ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகு, தவிடு.”

**12.5.2 நிரை இறுதி:**

முன்நிரை இறினும் அன்ன வாகும்.

நேர்பசை நிரைபசைப் பின், நிரை இறுதியும் ஆசிரிய உரிச்சீராம்.

“யாற்றுமடை, குளத்துமடை.”

**12.5.3 நேரசை:**

நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால.

உரியசைப் பின்னர் நேரசை வரின் அது இயற்சீரென வரும்

“ஆற்றுக்கால், குளத்துக்கால்.” எனவரும்.

**12.5.4 இயலசை- உரியசை:**

இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல ஆகு மென்ப.

இயலசைப் பின்னர் உரியசைவரின், நிரையசை வந்தாற்போல அமையும். .எனவே இவையும் இயற்சீராம்.

“மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு,கடிகுரங்கு.”

இத்துணையுங் கூறப்பட்டது ஈரசைச் சீர் பதினாறினும் இயற்சீர் பத்தும் ஆசிரியவுரிச்சீர் ஆறுமாம் என்பதாகும்.

**12.5.5 அளபெடை:**

அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.

சீர்க்கண் உயிரளபெடைக்குரியதோர் மரபு உணர்த்திற்று.. உயிரெளபெடை அசையாக நிற்கவும் பெறும். உம்மை எதிர்மறையாகலான் பெரும்பான்மை ஆகாது என்பது பெறப்படும்.

“கடாஅ உருவொடு...வல்லதே ஒற்று.” (குறள்.585) இது அளபெடை அலகுபெற்றது.

“இடைநுடங்க வீர்ங்கோதை பின்தாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்த கடைகடையின்
உப்போஒ எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலிஉலகு.” - இதன் கண் அளபெடை அசைநிலையாகி அலகுபெறாதாயிற்று.

**12.5.6 ஒற்றளபு:**

ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப.

ஒற்றளபடைக்குரியதோர் மரபு.. ஒற்று அளபெடுத்துவரினும் அசை நிலையாகலும் உரித்து. மாட்டேற்று வகையான் பெரும்பான்மை ஆகாது.

“கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்.”

**12.5.7 மூவசைச்சீர்கள்**

ஈரசைச்சீர் பதினாறோடு நான்கசையுங் கூட்டியுறழ. மூவசைச் சீராம் அறுபத்துநான்கு ஆகும். அவற்றுள் இயற்சீர் நான்கின்பின் நேரசை வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீராம்.

இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.

"மாவாழ்கான் மாவருகான் புலிவாழ்கான் புலிவருகான்."

இந்நான்னும் தவிர்த்த ஏனை மூவசைச்சீர்கள் அறுபதும் வஞ்சிச் சீர் எனப்படும். இதனைப் பின்வரும் நூற்பா உணர்த்தும்.

**12.5.8 மூவசைச்சீர் வகை:**

வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை என்ப.

இதனால் மூவசைச்சீர்கள் இரண்டு வகைப்படும் என்பது பெறப்படும்.அவை முறையே வெண்பா உரிச்சீர், வஞ்சி உரிச்சீர் என்பதாம்.

1. நேர் நேர் நிரை - மா வாழ் நெறி
2. நேர் நேர் நேர்பு - மா வாழ் காடு
3. நேர் நேர் நிரைபு - மா வாழ் பொருப்பு
4. நேர் நிரை நிரை - மா வரு நெறி
5. நேர் நிரை நேர்பு - மா வரு காடு
6. நேர் நிரை நிரைபு - மா வரு பொருப்பு
7. நேர் நேர்பு நேர் - மா போகு கான்
8. நேர் நேர்பு நிரை - மா போகு நெறி
9. நேர் நேர்பு நேர்பு - மா போகு காடு
10. நேர் நேர்பு நிரைபு - மா போகு பொருப்பு
11. நேர் நிரைபு நேர் - மா வழங்கு கான்
12. நேர் நிரைபு நிரை - மா வழங்கு நெறி
13. நேர் நிரைபு நேர்பு - மா வழங்கு காடு
14. நேர் நிரைபு நிரைபு - மா வழங்கு பொருப்பு

(2)

15. நிரை நேர் நிரை - புலி வாழ் நெறி
16. நிரை நேர் நேர்பு - புலி வாழ் காடு
17. நிரை நேர் நிரைபு - புலி வாழ் பொருப்பு
18. நிரை நிரை நிரை - புலி வரு நெறி
19. நிரை நிரை நேர்பு - புலி வரு காடு
20. நிரை நிரை நிரைபு - புலி வரு பொருப்பு
21. நிரை நேர்பு நேர் - புலி போகு கான்
22. நிரை நேர்பு நிரை - புலி போகு நெறி
23. நிரை நேர்பு நேர்பு - புலி போகு காடு
24. நிரை நேர்பு நிரைபு - புலி போகு பொருப்பு

| | | | |
|---|---|---|---|
| 25. | நிரை நிரைபு நேர் | - | புலி வழங்கு கான் |
| 26. | நிரை நிரைபு நிரை | - | புலி வழங்கு நெறி |
| 27. | நிரை நிரைபு நேர்பு | - | புலி வழங்கு காடு |
| 28. | நிரை நிரைபு நிரைபு | - | புலி வழங்கு பொருப்பு |
| (3) | | | |
| 29. | நேர்பு நேர் நேர் | - | பாம்பு வாழ் கான் |
| 30. | நேர்பு நேர் நிரை | - | பாம்பு வாழ் நெறி |
| 31. | நேர்பு நேர் நேர்பு | - | பாம்பு வாழ் காடு |
| 32. | நேர்பு நேர் நிரைபு | - | பாம்பு வாழ்பொருப்பு |
| 33. | நேர்பு நிரை நேர் | - | பாம்பு வரு கான் |
| 34. | நேர்பு நிரை நிரை | - | பாம்பு வரு நெறி |
| 35. | நேர்பு நிரை நேர்பு | - | பாம்பு வரு காடு |
| 36. | நேர்பு நிரை நிரைபு | - | பாம்பு வரு பொருப்பு |
| 37. | நேர்பு நேர்பு நேர் | - | பாம்பு போகு கான் |
| 38. | நேர்பு நேர்பு நிரை | - | பாம்பு போகு நெறி |
| 39. | நேர்பு நேர்புநேர்பு | - | பாம்பு போகு காடு |
| 40. | நேர்பு நேர்பு நிரைபு | - | பாம்பு போகு பொருப்பு |
| 41. | நேர்பு நிரைபு நேர் | - | பாம்பு வழங்கு கான் |
| 42. | நேர்பு நிரைபு நிரை | - | பாம்பு வழங்கு நெறி |
| 43. | நேர்பு நிரைபு நேர்பு | - | பாம்பு வழங்கு காடு |
| 44. | நேர்பு நிரைபு நிரைபு | - | பாம்பு வழங்கு பொருப்பு |
| (4) | | | |
| 45. | நிரைபு நேர் நேர் | - | களிறு வாழ் கான் |
| 46. | நிரைபு நேர் நிரை | - | களிறு வாழ் நெறி |
| 47. | நிரைபு நேர் நேர்பு | - | களிறு வாழ் காடு |
| 48. | நிரைபு நேர் நிரைபு | - | களிறு வாழ்பொருப்பு |
| 49. | நிரைபு நிரை நேர் | - | களிறு வரு கான் |
| 50. | நிரைபு நிரை நிரை | - | களிறு வரு நெறி |
| 51. | நிரைபு நிரை நேர்பு | - | களிறு வரு காடு |
| 52. | நிரைபு நிரை நிரைபு | - | களிறு வருபொருப்பு |
| 53. | நிரைபு நேர்பு நேர் | - | களிறு போகு கான் |
| 54. | நிரைபு நேர்பு நிரை | - | களிறு போகு நெறி |
| 55. | நிரைபு நேர்புநேர்பு | - | களிறு போகு காடு |
| 56. | நிரைபு நேர்பு நிரைபு | - | களிறு போகு பொருப்பு |
| 57. | நிரைபு நிரைபு நேர் | - | களிறு வழங்கு கான் |
| 58. | நிரைபு நிரைபு நிரை | - | களிறு வழங்கு நெறி |
| 59. | நிரைபு நிரைபு நேர்பு | - | களிறு வழங்கு காடு |
| 60. | நிரைபு நிரைபு நிரைபு | - | களிறு வழங்கு பொருப்பு |

ஆக அறுபதும் சீர்கள் ஆகும்.

**12.5.9 வஞ்சிப்பாவிற்குரியதோர் மரபு:**

தன்பா அல்வழித் தான்நடை இன்றே.

வஞ்சியுரிச்சீர் வஞ்சிபாவினுள் அல்லது வாராது.

வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய.

வஞ்சிப் பாவினுள் ஒழிந்த சீர்கள் வரப்பெறும்.

**12.5.10 வெண்பாவிற்குரியதோர் மரபு:**

வெண்பா உரிச்சீர் ஆசிரியை உரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே

வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து வெண்பாவினது நேரடிக்கண் ஒருங்கு நில்லாது.

**12.5.11 கலித்தளை மரபு:**

கலித்தளை மருங்கிற் கடியவும் பெறாஅ

கலித்தளை வரும்வழி வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆகிய இரு வகைச்சீரும் ஒருங்கு நிற்கவும் பெறும்.

**12.5.12 கலித்தளை மரபு:**

கலித்தளை யடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே..

கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற்று இயற்சீர் நிற்றற்குரித்து அன்று.

**12.5.13 வஞ்சிப்பா மரபு:**

வஞ்சி மருங்கினும் இருதி நில்லாது
வஞ்சிக்குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

நேரீற்று இயற்சீர் வஞ்சிப்பாவினும் அடியினீற்றில் நில்லாது. அடிமுதற்கண் நிற்கப் பெறும்.

**12.5.14 அசையும் சீராம்:**

இசைநிலை நிறைய நிற்குவ தாயின
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.

.ஓரசைச்சீராமாறு உணர்த்திற்று. இசை நிற்கின்றநிலை நிரம்பாது நிற்குமாயின் அசையும் சீராந்தன்மைபோல வரையார் ஆசிரியர்.

“ நாள், மலர், காசு, பிறப்பு“ - எனவரும்.

**12.5.15 தளைவகை சிதையா மரபு:**

இயற்சீர் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான.

ஓரசைச்சீரைத் தளைவகை சிதையாததன்மை வேண்டுமிடத்து இயற்சீர் போலக் கொள்ளல் வேண்டும்.

**12.5.16 தளைவழங்கும் திறன்:**

வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.

இதுவுந் தளைவழங்குந் திறன் உணர்த்துதல் நுதலிற்று. வெண்சீ ரீற்றசை தளைவழங்குமிடத்து இயற்சீரசை நிரையீறு போல் அமையும். இயற்சீரென்பது அதிகாரத்தான் வந்தது.

**12.5.17 ஆசிரிய அடி மரபு:**

இன்சி ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.

இனிய ஓசை பொருந்தி வருகுவதாயின் ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீர் வரையார் ஆசிரியர்

**12.5.18 வஞ்சியுரிச்சீர் மரபு:**

அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுத லுடைய ஒரோவொரு வழியே.

.இன்சீர் இயைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீரும் ஒரோவழி ஆசிரிய அடிக்கண் வரும்.

ஓரசைச்சீர் நான்கு ஈரசைச்சீர் பதினாறு, மூவகைச்சீர் அறுபத்துநான்கு, ஆகச்சீர் எண்பத்துநான்கில் ஓர் அசைச்சீர் நான்கெனவும் அது தளைவழங்கும்வழி இயற்சீரொக்குமெனவும், ஈரசைச்சீர் பதினாறும் சிறப்புடைய இயற்சீர் நான்கும் சிறப்பிலியற்சீர் ஆறும் எனப் பத்தாம் எனவும், ஆசிரியவுரிச் சீர் ஆறு எனவும் மூவகைச்சீர் அறுபத்து நான்கில் வெண்பாவுரிச்சீர் நான்கெனவும் ஏனைய வஞ்சியுரிச்சீர் என்பது வெளிப்பட்டு நிற்கும்.

## 12.6 பாக்களின் அடிவரையறை

நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.

நான்குசீர் ஒருங்கு தொடுத்து வருவதனை அடியென்று சொல்லப்படும்.

**12.6.1 தளையும் தொடையும்:**

அடியுள் ளனவே தளையொடு தொடையே.

தளையுந் தொடையும் அடியின்கண் வரும்.

**12.6.2 அடி இறந்து வராமை:**

அடிஇறந்து வருதல் இல்லென மொழிப.

தளையுந் தொடையும் நான்குசீரடியின் வருதலன்றி அடியின் நீங்கிவருதலில்லை. அடிவரையறை யில்லாதனவற்றிற் கொள்ளப்படாது என்பதாம்.

**12.6.3 பாட்டின் வரையறை:**

அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப்படும். பாட்டென்னும் செய்யுட்கு அடி இன்றியமையாதென்று கொள்க.பாட்டாவன:-வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என்பன ஆகும்.

**12.6.4 குளடி:**

குறளடி என்பது நாலெழுத்து முதலாக ஆறெழுத்து ஈறாக ஏறிய மூன்று நிலத்தையுடைத்தாகும். எனவே, குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம்.

நாலெழுத்து ஆதி ஆக ஆறெழுத்
தேறிய நிலத்தே குறளடி என்ப

தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து – நான்கு உழுத்தால் அமைந்த குறளடி

குறிப்பு

**12.6.5 சிந்தடி**

ஏழும் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தினால் வருவது சிந்தடியாம்

ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அல்வழி யான.

ஏழும் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தினால் வருவது சிந்தடியாம்

சுழல் தொடிச் சேய்குன்றம் - எட்டு எழுத்தால் அமைந்த சிந்தடி

**12.6.6 அளவடி:**

அளவடி எனினும் நேரடி யெனினும் ஒக்கும். பத்தெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தளவும் அளவடியாம் எனவே பத்தும் பதினொன்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினாலுமென ஐந்து நிலம்பெறும்.

பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங்1 கடையே.

குருதிப் பூவின் குழைக்காந்தட்டே – பத்து எழுத்தால் அமைந்த அளவடி

**12.6.7 நெடிலடி:**

பதினைந்தெழுத்து முதலாகப் பதினேழெழுத்தளவு நெடிலடியாம். எனவே பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்று நிலம் பெறும்.

மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப

பிடியூட்டிப் பின் உண்ணும் .களிறு எனவும் உரைத்தனரே – பதினேழு அடியான் வந்த நெடிலடி

**12.6.8 கழிநெடிலடி:**

பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தளவுங் கழிநெடியலடியாம். எனவே பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்று நிலம் பெறும்.

மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

உரிவயிர் நுதியெறி படையெருத்து மலையிவர் நவையில் - இருபது எழுத்தால் வந்த கழிநெடிலடி

**12.6.9 எழுத்து எல்லை:**

சீர்நிலைதானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிறை வஞ்சிக் காறும் ஆகும்.

நேர் இறுதியாங் காலத்து சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது. நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும். எனவே வஞ்சிச்சீர் முச்சீரடியின்கண் வருதலின் இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி யில்லை என்பதனைக் மேற்கண்ட நூற்பா உணர்த்தும்.

**12.6.10 சீர்நிலை மரபு:**

எழுத்தள எஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப

இங்கு குறிக்கப்பட்ட அடிகள் பலதொடுக்கும் வழி ஓரடிக்கோரடி எழுத்தளவு குறைந்துவரினுஞ் சீர்நிலை நான்கின் இழிதலும் மிகுதலும் இல்லை என்பதனைக் கீழ்க்கண்ட நூற்பாவால் அறியலாம்.

**12.6.11 மெய்யெழுத்து எண்ணப்படாமை:**

உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ

உயிர்த்திறம் இல்லா மெய்யெழுத்திற்கு இயக்கம் இல்லை என்பதனால் அது எண்ணப்படாது.

உம்மை எச்சவும்மை ஆதலாற் குறுகிய உயிர்த்தாகிய குற்றியலிகரமும் முற்றியலுகரமும் எண்ணப்படா என்பதும் கொள்ளப்படும். எனவே எண்ணப்படுவன உயிரும் உயிர்மெய்யுமாகி ஒரு மாத்திரையிற் குறையாதன என்று கொள்ளப்படும்.

## 12.7 பாக்களின் சீர் வரையறை:

வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டுசீரை உடையது ஆகும்.

வஞ்சி அடியே இருசீர்த் தாகும்.

வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டுசீரை உடையது ஆகும்.

வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தென்று கொள்ளப்படும். எனவே, மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் வஞ்சியுரிச்சீர் எழுத்தென்றவறாம் என்பதனை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

**12.7.1 வஞ்சிப்பாவின் சிறுமை:**

தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே.

வஞ்சியடி இருசீரடியானு முச்சீரடியானும் வரும்.

**12.7.2 மேலும் சிறப்பு விதி:**

முச்சீ ரானும் வரும்இடன் உடைத்தே.

தூங்குகையான் ஒங்குநடைய
உறழ்மணியான் உயர்மருப்பின" (புறம்.22) இதனுள் மூன்றெழுத்து முதலாக ஆறெழுத்துக் காறுஞ் சீர் வந்த வாறும் இருசீரடியாயினது.

**12.7.3 அசை கூன் ஆதல்:**

அசைகூன் ஆகும் அவ்வயின் ஆன.

மேற்சொல்லப்பட்ட வஞ்சியடிக்குரியதோர் மரபு உணர்த்திற்று, மேற்சொல்லப்பட்ட இருவகையடியினும் அசைகூனாகி வரும்.

**12.7.4 சீர்கூன் ஆதல்:**

சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே.

இதுவுங் கூனாகுமிடன் உணர்த்திற்று, சீர்முழுதுங் கூனாகிவருதல் அளவடிக் குரியதாம். நேரடி என்றதனான் வெண்பாவினும் ஆசிரியத்தினுங் கலியினுங் கொள்ளப் படும்.

"அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே. (குறுந். 216) - இது ஆசிரியத்திற் கூன்.
"உதுக்காண் சுரந்தானா வண்மைச் சுவர்னமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழ் பாடி இரந்தான்மாட்

குறிப்பு

டின்மை அகல்வது போல இருள்நீங்க
மன்னும் அளிதேர் மழை." (யாப்.வி. பக். 356 ) - இது வெண்பாவிற் கூன்.
"நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் வரீஇய அம்பு தெரிதியே." (கலித். 7) - இது கலிப்பாவிற் கூன்.

**12.7.5 விரி அறுநூற்று இருபத்தைந்தாதல்:**

ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

நாற் சீரடியை எழுத்தளவுபற்றி வகுக்கப்பட்ட குறளடிமுதலாகிய ஐந்தடியினையும் விரித்துணர்த்துங் காலத்தில் நாலெழுத்து முதலாக இருபதெழுத்து ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழ் நிலத்தும் எழுபது வகைப்பட்ட உழற்சியின் வழுவுதலின்றி இரண்டுசீர் தம்முட் புணரும் புணர்ச்சி எழுபது வகையாகும்.

இயற்சீரான் வருவதனை இயற்சீரடி எனவும், ஆசிரியவுரிச்சீரான் வருவதனை ஆசிரியவுரிச்சீரடி எனவும்; இயற்சீர் விகற்பித்து வருவதனை இயற்சீர் வெள்ளடி எனவும், வெண்சீரான் வருவதனை வெண்சீரடி3 எனவும், நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும், உரியசையீற்றான் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும், ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும்.

அவற்றுள், இயற்சீரடி நேரீற் றியற்சீரடி எனவும் நிரையீற் றியற் சீரடி எனவும் இருவகைப்படும். நேரீற் றியற்சீரடியாவது நேரீறு நேர் முதலாகிய இயற்சீர் வருதலும் நேர்புமுத லாசிரிய வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வெண்பா வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர்முதல் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்துவகைப்படும்.நிரையீற்றியற்சீரும் இவ்வாறு நிரைமுதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்.

ஆசிரியவுரிச்சீரடியும் இருவகைப்படும் நேர்பு ஈறும் நிரைபு ஈறும் என. அவற்றுள், நேர்பீற்றுச் சீரை நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்துவகைப்படும். நிரைபீற்றுச்சீரும் அவ்வாறே நிரைபுநிரையு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்துவகைப்படும்.

இயற்சீர் வெள்ளடியும் நேரீறும் நிரையீறும் என இருவகைப்படும் . அவற்றுள், நேரீறு நிரைபுநிரையு முதலாகிய ஐந்துசீரொடும் உறழ வகையாம். நிரையீறும் அவ்வாறே நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம்.

வெண்சீர் நேர்முதலோடு உறழ்தலும் நிரை முதலோடு உறழ்தலுமென இருவகைப்படும். அவற்றுள், நேர்பு நேருமுதலாகிய சீர்களொடு உறழ்தல் ஐந்து வகைப்படும்.நிரைபு நிரையுமுதலாகிய சீர்களொடு உறழ்தலும் ஐந்து வகைப்படும்.

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முதலசையோ டொன்றுவனவும் ஒன்றாதனவும் என இருவகைப்படும். அவற்றுள், ஒன்றி வருவது நிரைபு நிரையு முதலாகிய சீரொடு உறழ ஐந்து வகைப்படும். ஒன்றாதது நேர்புநேரு முதலிய சீரொடு உறழ ஐவகைப்படும்.

உரியசையீற்று வஞ்சியடியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும். அசைச்சீரடியும் அவ்வாறே இருவகையாக்கி உறழப் பத்துவகைப்படும்.

இவ்வகையால் தளை ஏழு பாகுபட்டன; இவை நேரொன் றாசிரியத்தளை, நிரையொன் றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என ஏழுவகையாம், அவ்வழி ஓரசைச்சீர் இயற்சீர்ப்பாற்படும் ஆசிரியவுரிச்சீரு மதுவேயாம் மூவசைச்சீருள் வெண்பாவுரிச்சீ ரொழிந்தனவெல்லாம் வஞ்சியுரிச்சீராம், அவ்வழி இயற்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையொடு நேராய் ஒன்றுவது நேரொன்று ஆசிரியத்தளையாம்; நிரையாய் ஒன்றுவது நிரையொன்று ஆசிரியத்தளையாம்; மாறுபட்டு வருவது இயற்சீர் வெண்டளையாம்; வெண்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம்;நிரையா யொன்றிற் கலித்தளையாம் . வஞ்சியுரிச்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம் ; ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளையாம் இவ்வகையால் தளை ஏழாயின

இனி அடி அறுநூற்றிருபத்தைந்தாமாறு ;அசைச்சீர் இயற்சீர் ஆசிரியவுரிச்சீர். வெண்சீர் வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி இவ்வைந்துசீரும் வருஞ்சீராகவுறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம். அவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்துசீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாகும். அந்நூற்றிருபத்தைந்தின் கண்ணும் நான்காவது ஐந்துசீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம்.

### 12.7.6 மேலும் சிறப்பு விதி:

ஆங்ஙனம், விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை.

இங்கு உறழ்ந்த முறையானே அஞ்சடி முதலாக மேன்மேலும் உறழ வரம்பிலவாகும்.

அதாவது அறுநூற்றிருபத்தைந்தினோடும் ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத்தொருநூற்று இருபத்தைந்து விகற்பமாம். அதன் கண் ஆறாவது இவ்வகை யைந்துசீரையும் உறழப் பதினையாயிரத்து அறுநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஏழாவது வரும் சீரைந்தினையும் உறழ எழுபத்தெண்ணாயிரத்தொரு நூற்றிருபத்தைந்து விகற்பமாம். இவ்வகையினா னுறழ வரம்பிலவாய்விரியும். அன்றியும், இச் சொல்லப்பட்ட அடியினை அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பில

## 12.8 பாவும் பாவிற்குரிய அடியும்:

### 12.8.1 ஆசிரியப்பா:

ஐவகை அடியும் ஆசிரியக் குரிய.

குறிப்பு

நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப்பாவிற் குரியவாம். ஐவகை யடியு முரியவென, அவற்றிற்கு முதலாகிய நாற்சீரடியும் உரித்தாயிற்று.

விராஅய் வரினும் ஒரூஉ நிலை இலவே.

மேற் சொல்லப்பட்ட ஐந்தடியுந் தனித்தனி ஆசிரியப்பாவிற் குரித்தாகி வருதலே யன்றி விரவிவரினும் நீக்கப்படாது

**12.8.2 வெண்பா**

அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான.

அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் என்றவாறாம்.

இச்சூத்திரத்தால் வெண்பாவிற் குரியதோர் தளை உணர்த்தினாராம். சிந்தடியாவது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகிய அடி.அளவடி யாவது பத்தெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தீறாகிய அடி.தளைவகை ஒன்றாமையாவது நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயற்சீர் நேராயொன்றுவதும் நிரையாயொன்றுவதுமன்றி மாறுபடவருவது.அவ்வழி நிரையீற்றியற் சீர் நிற்ப நேர்வரினும் நேரீற்றியற்சீர் நிற்பநிரை வரினும் இயற்சீர் வெண்டளையாம்.இனி ஒன்றுந் தன்மையாவது வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்டளையாம். இவ்விரண்டும் வெண்பாவிற்குத் தளையாமென்று கொள்க.

“மட்டுதா னுண்டு மணஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்.” (யாப். வி. பக். 463 இஃது ஏழெழுத்தான் வந்த அடி.

**12.8.3 கலிப்பா:**

அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடில் அடியுங் கலியிற் குரிய.

அளவடியின் மிக்க பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியுங் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தின் காறும் வரும் அடி கலிப்பாவிற்கு அடியாம்.

“மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க.” (கலித். 13) இது பதின்மூன்றெழுத்தான் வந்தது.

**12.8.4 வஞ்சிப்பா:**

வஞ்சியடியே இருசீர்த்தாகும்
முச்சீராயினும் வருமிடன் உடைத்தே

என்னும் நூற்பாக்களின் வழி இரு சீரடியும் முச்சீரடியும் வஞ்சிப்பாவில் இடம்பெறும் என்பது தெரியவரும்.

## 12.9 தளைவகை:

தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினும்

இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய
தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.

இத்துணையும் அடியும் அடிக்குரிய எழுத்துக்களும் ஓதினார்; இனி அவ்வடிக்கண் ஓசை வேறுபாடுந் தளையிலக்கணமும் உணர்த்துவார் அத் தளைக்கண் வருவதோர் மரபு உணர்த்துவார் தொல்காப்பியர்

தத்தஞ் சீர்நிலை வகையானுந் தளைநிலை வகையானும் இனிய ஓசைவேறுபாட்டினையுடைய ஐந்தடிக்கு முரிய தன் சீருள்வழித் தளைவேறுபாடு கோடல் வேண்டா. எனவே சீர்தானே ஓசையைத் தரும் என்பதாம்.

உரிய தன்சீர் என்றது ஐந்தடியினும் ஏற்ற வழிநிலை பெறுந் தன் சீரென்று கொள்க. அஃதாவது குறளடியாகிய ஐந்தெழுத்தினும் ஆறெழுத்தினும் ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் வருதலன்றி மூவகைச்சீர் வாராமை. பிறவாசிரியர் கொண்ட நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றியவஞ் சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை என ஏழுவகையினும், வஞ்சித்தளை நிலைமொழி வஞ்சியுரிச்சீராக வருஞ்சீர்க்கு முதலசையோடு ஒன்றியது ஒன்றியவஞ்சித்தளை எனவும் ஒன்றாதது ஒன்றாவஞ்சித்தளை எனவும் வழங்குபவாதலின் அவ்விருவாற்றானும் தளையாற் பயனின்றி நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர் தானே ஓசையுணர்த்துதலின், வஞ்சித்தளை கோடல் வேண்டாராயினார். இனி வெண்சீர் வெண்டளையும் வெண்நீர் நிற்ப வருஞ்சீர் வெள்ளையும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை ”வெண்சீரீற்றசை நிரையசையியற்றே ” (செய்யு-28) என ஓதுதலின், அதனை நிரையீற்றியற்சீர் ஆக்கினால் வருஞ்சீர் நேர்முத லியற்சீராயின் அதுவும் இயற்சீர் வெண்டளையாம்.

அவ்வாறன்றி வருமொழியும் வெண்சீராயின் “தன் சீருள்வழித் தளைவகை வேண்டா“ என்பதனான் அடங்கும்.அதனான் இருவாற்றானும் வெண்சீர் வெண்டளை கொள்ளாராயினார்.இனி ஒழிந்த நான்குதளையும் கூறுகின்றாராயின் ஆசிரியத்தளையுங் கூறல் வேண்டா.அதுவும் இயற்சீரான் வருதலின் எனின், அதன்கண்ணே இயற்சீர்வெண்டளை கூறவேண்டுதலின் ஆசிரியத்தளையுங் கூறவேண்டுமென்க.

### 12.9.1 ஆசிரியத் தளை:

சீரியல் மருங்கின் ஓரசை யொப்பின்
ஆசிரியத் தளையென்று அறியல் வேண்டும்.

சீர்கள் தம்முள் பொருந்தும்வழி நிலைமொழியாகிய இயற்சீரினீறும் வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரியத் தளையாம்;நிரையாய் ஒன்றின் நிரையொன்றாசிரியத்தளையாம்

இரண்டசையும் ஆசிரியத்தளை எனவேண்டுதலின் பொதுப்படக் கூறினார்.அவ்வழி வருஞ்சீர் இயற்சீராயிற் சிறப்பின்று.

குறளடி முதலா அளவடி காறும்

உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

குறளடிமுதலாக அளவடியளவும் வஞ்சியுரிச் சீர் வந்து உறழும்நிலையில் இவ்வடிகள் இயற்சீரும் ஆசிரியவுரிச் சீருமாய் அமையும். எனவே பதினைந்தெழுத்து முதலாக நெடிலடியினுங் கழிநெடிலடியினு மெய்யுறழப்பெறுவது தென்றவாறாம்.

**12.9.2 வெண்பாவிற்கு உரிய தளை:**

அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான.

அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் என்றவாறாம்.

இச்சூத்திரத்தால் வெண்பாவிற்கு உரியதோர் தளை உணர்த்தினார் தொல்காப்பியர். சிந்தடி என்பது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்து ஈறாகிய அடி.அளவடி என்பது பத்தெழுத்து முதலாகப் பதினான்கு எழுத்து ஈறாகிய அடி.தளைவகை ஒன்றாமையாவது நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயற்சீர் நேராயொன்றுவதும் நிரையாயொன்றுவதுமன்றி மாறுபடவருவது.அவ்வழி நிரையீற்றியற் சீர் நிற்ப நேர்வரினும் நேரீற்றியற்சீர் நிற்பநிரை வரினும் இயற்சீர் வெண்டளையாம்.இனி ஒன்றுந் தன்மையாவது வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்டளையாம். இவ்விரண்டும் வெண்பாவிற்குத் தளையாகும். .

“மட்டுதா னுண்டு மணஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்.” (யாப். வி. பக். 463 இ.ஃது ஏழெழுத்தான் வந்த அடி.

**12.9.3 கலித்தளை**

நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்
வரைநிலை இன்றே அவ்வடிக் கென்ப.

மேற்சொல்லப்பட்ட அடி கலித்தளை தட்ட வழியே கொள்ளப்படுவது என உணர்த்தியவாறாம்.வெண்பா உரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து அதன்கண் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு வரைநிலையில்லை.. நிரைதட்டல் என்றதனால் பிறிதாகிவருஞ் சீர் முதலாகிய நிரையோடு தளைப்பினும் கலித்தளையாம் எனக்கொள்க.

விராஅய தளையு மொரூஉநிலை யிலவே.

அதாவது கலிப்பாவில் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வரும். .சிறுபான்மை வஞ்சித்தளையும் வரும்.

**12.9.4 ஆசிரியப்பா – சிறப்பு விதி:**

இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே.

இயற்சீர் வெண்டளையாள் ஆகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபினால் நிற்கவும் பெறும்..

ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப.

இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரித்தளை விரவியும் ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள.

அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே.

நேரடிக்கு முன்னாக ஆசிரியப்பாவின்கண் அறுசீரடி ஆசிரியத்தளையொடு பொருந்தி நடைபெற்று வரும்.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்படத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே." (புறம். 235)

முதலடி நாற்சீரான் வந்தது.இரண்டாமடி ஆசிரியத்தளையொடு பொருந்தி யறுசீரடியாகி வந்தது.

எழுசீ ரடியே முடுகியல் நடக்கும்.

எழுசீரான் வரும் முடுகியலடி என்பதாகும்.

முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும்.

மேற்சொல்லப்பட்ட ஐஞ் சீரடிக்கும் அறுசீரடிக்கும் முடுகியல் நீக்கப்படாது.

ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை யடியு முன்னுதல் இலவே.

முடுகியலாகி வரும் மூவகை அடியும் ஆசிரியப்பா வினும் நிற்றல் இல்லை. எனவே கலிப்பாவினுள் நிற்கப்பெறும். 'நாற்சீர் கொண்டதடி' என வோதிப் பின்னும் இருசீரடி வஞ்சிக் கண் உரித்தென ஓதி ஐஞ்சீரடியும் அறுசீரடியும் எழுசீரடியும் உள என ஓதினமையான். அடியாவது இரண்டு முதலாக வருமெனவும் அவற்றுள் இருசீரடி குறளடி எனவும் முச்சீரடி சிந்தடி எனவும் நாற்சீரடி அளவடி எனவும் ஐஞ்சீரடி நெடிலடி எனவும்4 அறுசீர் முதலாக வரும் அடியெல்லாங் கழிநெடிலடியா மெனவும் பிறநூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடம்பாடென்றுகொள்க. அறுசீர் முதலான அடிகளுள் எழுசீர் எண்சீர் சிறப்புடையன எனவும் எண்சீரின் மிக்கன சிறப்பில்லன எனவும் அவ்வாசிரியருரைப்ப.இவ்வாசிரியரும் அடிக்குச் சீர் வரையறையின்மை ஆங்கனம் விரிப்ப வளவிறந் தனவே .பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை (செய்யுளியல்-49) என்றதனான் உணர்த்தினார் என்று கொள்க. ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் அவ்வடியினால் வருதலின் என்று கொள்க.

ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்
தோற்ற முச்சீர்த் தாகு மென்ப.

ஆசிரிப்பாவின் ஈற்றயலடி தோன்றுமிடத்து முச்சீர்த்தாகவும் பெறும்.

"முதுக்குறைந்தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே." - இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே.

மேற்சொல்லப்பட்ட முச்சீரடி ஆசிரியப்பாவினுள் இடையும் வரப்பெறும்..

"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே."

இதனுள் மூன்றாமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தது. கண்டு கொள்க. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.

ஈற்றயலடி முச்சீரெனவோதப்பட்டது கலிப்பாவின் கண் நாற்சீர் ஆகியும் வரும் என்பதாகும்.

"அரிமான் இடித்தன்ன" என்னும் பாலைக்கலியுள் சுரிதகம்

"முளைநிரை முறுவல் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ இறந்த பின்னே." (கலித். 15)

என ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

**12.9.5 வஞ்சித் தூக்கு:**

வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.

வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இயல்பிற்று.

தூக்கெனினும் இறுதியெனினும் ஒக்கும். செந்தூக்கெனினும் ஆசிரிய வீறு எனினும் ஒக்கும். செந்தூக் கியற்று என்றமையால் ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலுங் கொள்க.

"தொடியுடைய தோள்மணந்தனன்" என்னும் பாட்டுள்.

"இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே." (புறம். 239)

இதனுள் ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்
அசைச்சீர்த் தாகும் அவ்வழி யான.

வெண்பாவிற்கு இறுதியடியும் இறுதிச்சீரும் உணர்த்துதல் நுதலிற்று.

வெண்பாவினீற்றடி மூன்றுசீரையுடைத்தாகும். அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும்.

நேரீற் றியற்சீர் நிரையும்
சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப.

வெண்பாவினிறுதிச்சீரின் அயற்சீர் நேரீற்றியற் சீராயின் நிரையசையும் நிரைபு அசையுஞ் சீராந்தன்மையும் பெற்று முடியும். இயற்கையையுடையதாகும்.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை." (குறள். 9)

நிரையவண் நிற்பின் நேரு நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

வெண்பாவின் ஈற்றயற்சீர் நிரையீற்று இயற்சீராயின் நேரசையும் நேர்பசையும் முடிபாம்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

ஈற்றயற்சீர் முதலசையான் வரினும் நேரும் நேர்பும் முடிபாகக் கொள்ளப்படும்.

எழுசீர் இறுதி யாசிரியங் கலியே.

கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான்வரும் ஆசிரியமுடிபாகும்.

## 12.10 யாப்பு

செய்யுளியலில் ஆறாவது உறுப்பாகச் சுமட்டப்பெறுவது யாப்பு என்பதாகும்.எழுத்து முதலாக அசை, சீர், அடி, என ஈண்டு ஓதப்பட்ட அடியினாறட்றான் குறிதடத பொருளை இறுதியடியளவு முற்றுப்பெற நிறுத்தல் யாப்பு என்று சொல்லுவர் புலவர்.

யாதானும் ஒபொருட்கண் பல சொற்றொடுத்து வழங்குங்கால் குறித்தபொருளை முடிக்கவேண்டும் சொல்லே சேர்த்துக் கூறல் வேண்டும் எனவும் அது மிகாமற் குறையாமற் கூறல் வேண்டும் எனவும் இலக்கணங் கூறல் வேண்டும் என்பதனைத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவால் விளக்குவார்.

எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

### 12.10.1 யாப்பு வகைகள்:

யாப்பு ஏழு வகைப்படும். அதனைப் பின்வரும் நூற்பா விளக்கி நிற்கும்.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்.
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.

பாட்டு முதலாக முதுசொல் ஈறாகச் சொல்லப்பட்ட எழுநிலத்தினும், வளவிய புகழையுடைய சேரன் பாண்டியன் சோழன் என்னும் மூவரது தமிழ்நாட்டகத்தவர் வழங்கும் தொடர்மொழிக்கண் வரும் மொழி யாப்பாவது. எனவே யாப்பாவது பாட்டுயாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, மொழியாப்பு,பிசியாப்பு அங்கத யாப்பு, பழமொழியாப்பு என ஏழுவகைப்படும்.

## 12.11 மரபு

மரபு என்பது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின் வழி பட்டது. இதனை

மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று.

என்ற நூற்பா விளக்கும்.

குறித்த ஒரு பொருளை முடியச் சொல் தொடுக்குங்கால் இயற்சொல்லாகிய பெயர்வினை இடை உரியானும் ஏனைத் திரிசொல் திசைச்சொல் வட சொல்லானும், எழுவகை வழுவும் படாமல் புணர்ப்பது மரபாம்.. திரிசொல்

மரபாவது தமிழ்நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு.

திசைசொல் மரபாவது செந்தமிழ்சூழ்ந்து பன்னிருநிலத்தினும் வழங்கும் மரபு.

வடசொல் மரபாவது திரிந்தவகையாகிய சொல்மரபு.

**12.12 பாக்களின் தூக்கு (ஓசை) :**

தூக்கு எனினும் ஓசை எனினும் ஒக்கும்.

**12.12.1 ஆசிரியப்பாவின் ஓசை:**

அகவ லென்ப தாசிரி யம்மே.

அகவல் என்னும் ஓசை ஆசிரியத்திற்கு உரியதாம்.. அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர் குறி.:

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட் டியானை
கழல்தொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே" (குறுந். 1) நின்ற ஓசையால் ஆசிரியம் வந்தது.

**12.12.2 வெண்பாவின் ஓசை:**

அ∴தன் றென்ப வெண்பா யாப்பே

வெண்பாவிற்கு அகவல் இல்லாத ஓசையாம். இதனைப் பிறநூலாசிரியர் செப்பலோசை என்பர்.

"பொன்னார மாற்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூமுலக்கை பற்றினேற் - கன்னோ
மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்" (முத்தொள். 104) செப்புதலாகிய ஓசைத்தாகி வந்தது

**12.12.3 கலிப்பாவின் ஓசை:**

துள்ளல் ஓசை கலியென மொழிப

துள்ளலோசை கலிப்பாவிற்காம். துள்ளுதலாவது ஒழுகுநடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல்.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" (கலித்.11) – துள்ளலோசை வந்தது.

**12.12.4 வஞ்சிப்பாவின் ஓசை:**

தூங்கல் ஓசை வஞ்சி யாகும்

தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகி வரும். இது வஞ்சிப்பாவிற்கு உரியதாம்.

"சுறமறிவன துறையெல்லாம்

இறவீன்பன இல்லெல்லாம்
மீன் திரிவன கிடங்கெல்லாந்
தேன்தாழ்வன பொழிலெல்லாம் எனத்
தண்பணை தழீஇய இருக்கை
மண்கெழு நெடுமதில் மன்னன் ஊரே.” (யாப்.வி.பக்.63) – தூங்கல் ஓசை வந்தது

**12.12.5 மருட்பா**

மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னுந் தன்மை யின்றே

மருட்பாவிற்கு ஓசை இதுவென்னுந் தன்மை இல்லை; அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக வருதலின் இவ்விரண்டின் ஓசையே அதற்கு ஓசை ஆகும்.

“திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலனுஞ் சேவடி யெய்தும் அரிபரந்த
போகிதழ் உண்கண் இமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே.” (பு.வெ. கைக்கிளை.3)

அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்.

மேற் சொல்லப்பட்ட ஓசை வகையா னல்லது பாட்டாங்குக் கூறார். பாட்டாங்குக் கூறுதலாவது ஓசை ஒழித்துச் சீருந்தளையும் அடியும்படக் கூறுதல். அவ்வாறு படக் கூறுதலால் பாட்டாங்கு ஆகாதென்பதும் அடியுந்தொடையும் பெறவந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின் பாற்படுதல் என்பதும் கூறியவாறாம்.

தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.

மேல் அதிகாரப்பட்ட தூக்கியலும் வகை சொல்லப்பட்ட நாலுமே ஆகும்..

**12.13 தொடை:**

மோனை, எதுகை, முரண், இயைபு நான்கு நெறிப்பட்ட மரபினையுடைய தொடையினது பாகுபாடு ஆகும். இதனை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடைவகை என்ப.

**12.13.1 மோனைத்தொடை**

அடிதோறும் தலையெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத்தொடை எனப்படும.

அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை.

“மாவும் புள்ளும் வதிவயின் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையும்
மாயோய் நின்வயின் புறத்திறுத் தற்றே”

**12.13.2 எதுகைத்தொடை:**

அ.்.தொழித் தொன்றின் எதுகை ஆகும்.

அடிதொறும் முதலெழுத்தொன்றாமல் இரண்டாமெழுத்து ஒன்றின் எதுகை யாகும்..

“அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழா அய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே.”

ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.

மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் எடுத்த எழுத்தே வருதலன்றி வருக்க வெழுத்தும் உரியதாகும்.

“பகலே, பல்பூங் கானற் கிள்ளை ஒப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய (யாப். வி. ப. 135
வருக்கமோனை.

“ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்” (கலி- கடவுள் வாழ்த்து)
என்பது வருக்கவெதுகை

**12.13.3 முரண்தொடை**

மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.

அடிதொறும் வந்த சொல்லினாலோ பொருளினானாலோ. முரண்படத்தொடுப்பது அடிமுரண்தொடையாம்.

சொல்முரணாவது சொல்லானன்றிப் பொருளான் மாறுபடாமை பொருள்முரணாவது மாறுபாடுடைய பொருளைச் சொல்வது.

“இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும்.” (யாப்.வி.ப.146) இரும்பும் பொன்னும் மாறுபாடுடைத்தாதலிற் பொருள்முரண் ஆயிற்று.

“சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே.” (யாப்.வி.ப.146)
என்றவழிக் குடியுங் கண்ணு மாகாது சிறுமைபெருமை என்னும் சொல்லே மாறுகோடலிற் சொன்முரணாயிற்று.

**12.13.4 இயைபுத்தொடை**

இறுவாய் ஒப்பின.ஃ. தியைபென மொழிப.

அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அ.ஃது இயைபுத்தொடை ஆகும்.

‘இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே
ஆடமைத் தோளி கூடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
தருநுதற் பொறித்த திலதமும் அணங்கே.” (யாப்.வி.ப.153)

அசை சீரென வரையாது கூறினமையான் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபாம்.

**12.13.5 அளபெடைத்தொடை**

அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்.

அளபெடைத் தொடையோடே கூட ஐந்தென்று சொல்லவும்பெறும்..

அளபெழின் அவையே அளபெடைத் தொடையே.

அடிதொறும் அளபெழுத் தொடுப்பின் அஃது அளபெடைத் தொடையாம்.

“ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட்டது.” (குறள்.1176)

## 12.14 தொடையின் பிறவகை:

பொழிப்பும் ஒரூஉஞ் செந்தொடை மரபும்
அமைந்தவை தெரியின் அவையுமா ருளவே.

பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை என்பவும் தொடைப்பாகுபாடாம்.

**12.14.1 பொழிப்பு:**

ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே.

ஒரு சீரிடை யிட்டு எதுகையிற் பொழிப்புத் தொடையாம்.

எதுகையென ஓதினார் ஆயினும். வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனான் மோனை இயைபு முரண் அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் என்று கொள்ளப்படும்.

“அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி” (யாப்.வி.ப.130) - பொழிப்பு மோனை.

“பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி.” (யாப்.வி.ப.134) - பொழிப்பெதுகை.

“சுருங்கிய நுசுப்பிற் 3பெருகுவடந் தாங்கி.” (யாப்.வி.ப.147) - பொழிப்பு முரண்.

“கடலே, கானலங் கழியே கைதையந் துறையே.’ - பொழிப்பியைபு.

“பூஉங்குவளைப் போஒ தருந்தி.“ (யாப்.வி.ப.158) - பொழிப்பளபெடை.

**12.14.2 ஒரூஉ:**

இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப.

இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉத் தொடை எனப்படும்.

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி.” (யாப்.வி.ப.130) ஒரூஉமோனை.

“மின்னிவர் ஒளிவடந் தாங்கி மன்னிய.” (யாப்.வி.ப.134) ஒருஉவெதுகை.

“குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து.” (யாப்.வி.ப.147) ஒரூஉமுரண்.

“நிழலே இனியதன் அயலது கடலே.’ (யாப்.வி.ப.153) ஒரூஉவியைபு

“காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்.” (யாப்.வி.ப.158) ஒரூஉஅளபெடை.

**12.14.3 செந்தொடை:**

சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்
சொல்லியற் புலவர்அது செந்தொடை என்ப.

தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடையாம்.

பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே." (யாப்.வி.ப.179)

**12.14.4 நிரல்நிறை:**

நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப.

நிரலே நிறுத்தியமைத்துக் கோடலும் இரட்டைத் தொடையும் மேற்சொன்னவற்றான் முடியவும் பெறும்.

நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேரநிறுத்திப் பயனையுஞ் சேரநிறுத்துதல்.

கொடி குவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி
"மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடை நோக்கு சாயல்
வடிவினளே வஞ்சி மகள்"

இப்பாடலின் முதலடியில் உள்ள கொடி, குவளை, கொட்டு, முதலானவற்றை முதலில் வரிசையாக நிறுத்தி இவ் உவமைக்குரிய உவமேயப் பொருள்களான நுசுப்பு, உண்கண்,மேனி முதலானவற்றை அடுத்து வரிசையாக நிறுத்தி கொடி போன்ற நுசுப்பு குவளை போன்ற உண்கண் கொட்டை போன்ற மேனி என்று பொருள் கொள்ளுமாறு நிரலே தொடுத்திருப்பது நிரல் நிறைத் தொடையாம்.

**12.14.5 இரட்டைத்தொடை:**

இரட்டைத்தொடையாவது ஓரடிமுழுவதும் ஒரு சொல்லேவருதல்.

"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்." (யாப்.வி.பக்.180) - இனி,இரட்டைத் தொடை

இணைமோனை,கூழைமோனை,மேற்கதுவாய்மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்றுமோனை முதலாயினவும் அந்தாதித் தொடையுங் கூறாதது என்னையெனின். "தெரிந்தனர் விரிப்பில் வரம்பில வாகும்" என வருகின்ற சூத்திரங் கூறுகின்றாராதலின், அச்சூத்திரத்தின்காறும் பாட்டிற் இன்றியமையாத தொடையுணர்த்தினாரென்று கொள்க என்பார் இளம்பூரணர்,

**12.14.6 தொடைவிரி:**

தொடை விரியினை கீழ்கண்ட நூற்பா விளக்கும்

மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைந் நூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்ப.ஃ. தென்ப உணர்ந்திசி னோரே.

தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்தறு நூற்றுத்தொண்ணூற்று ஒன்பது ஆகும்.

**அவையாவன:** மொழிமுதலாகிய எழுத்து உயிர் பன்னிரண்டு. இதன்கிளை யெழுத்து ஒரோவொன்றிற்குப் பதினொன்றுளவாகலின் அவற்றை உறழ. நூற்று முப்பத்திரண்டாம். "கதநபம" என்பவற்றை உயிர் பன்னிரண்டோடுறழ அறுபதாம்;அவ்வறுபதையும் முதற்றொடையாக்கிக் கிளையெழுத்தோடுறழ அறுநூற்றறுபதாம். சகரத்தின் முதலாகெழுத்து ஒன்பது; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ எழுபத்திரண்டாம். வகரத்தின் முதலாகெழுத்து எட்டு; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஐத்பத்தாறாம். யகரத்தின் முதலாகெழுத்து ஒன்று; கிளையெழுத்தில்லை. ஞகரத்தின் முதலாகெழுத்து மூன்று; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஆறாம். இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்றுமூன்றுங் கிளையெழுத்துத் தொளாயிரத்திருபத்தாறும் ஆக மோனைத்தொடை ஆயிரத்தொருபத் தொன்பதாம்.

**எதுகைத்தொடை:** உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர் மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் ஙவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இரு நூற்றுநாலினையுங் கிளையெழுத்தினோடு உறழ இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாம் இதனொடு ஒற்றுப் பத்தொன்பதூங் குற்றுகரம் ஆறுங் கூட்ட எதுகைத்தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்துமூன்று பாகுபாடாம்.

**முரண்தொடை:** இது சொல் முரண், பொருள் முரண் என இரண்டாகும்.

**இயைபுத்தொடை**: உயிரெழுத்து மொழியீற்றின்கண் உயிர் மெய்யாகி வருதலின் அவையாகா உயிர்மெய் இருநூற்றொருபத்தாறில் இறுதிக்கண் வாராத ஙகரவுயிர்மெய் பன்னிரண்டும் அகரம் பதினேழும் இகரம் பதினாலும் உகரம் இரண்டும் எகரம் ஒன்றும் ஒகரம் ஒன்றும் இவை ஒழிந்து நின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும் ஞணநமனயரலவழள என்னும் புள்ளியிறுதி பதினொன்றும் ; குற்றுகரவீறு ஆறும் ஆக இயைபுத் தொடை நூற்றெண்பத்திரண்டு பாகுபாடாம்.

**அளபெடைத்தொடை:** மொழிமுதலாகு முயிரளபெடை ஏழு. கதநபம என்னும் உயிர்மெய்யளபெடை முப்பத்தைந்து. சகர அளபெடை ஐந்து, வகர அளபெடைஐந்து, யகர அளபெடை இரண்டு, இவை ஐம்பத்துநான்கில் உயிரளபெடை தனிநிலையாம் , ஏனையவற்றை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனவுறழ நூற்றுநாற்பத்தொன்றாம் . ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும் மகரமும் ழுகரமும் ஒழித்து ஏனைய பதினொன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றாம் . இவ்வகையினான் அளபெடைத் தொடை நூற்றைம்பத்தொன்பது வகையாம்.

இவ்வகையினோடு இத்தொடை மூவாயிரத் தெண்ணூற்று முப்பத்தைந்து வகையாம்.

பொழிப்புத் தொடையிற் கிளையெழுத்து வாராது. மோனைப்பொழிப்புத் தொண்ணூற்றுமூன்று, எதுகைப்பொழிப்பு இருநூற்றிருபத் தொன்பது,

முரண்பொழிப்பு இரண்டு, இயைபுப்பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு; அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்று நாற்பத்தெட்டு, இவையெல்லாங் கூட்டப் பொழிப்புத்தொடை அறுநூற்றைம்பத்து நூலு வகையாம். ஒரூஉத்தொடையும் இவ்வகையினால் அறுநூற்றைம்பத்து நாலாம்.

இனிச் செந்தொடையாமாறு மொழிமுதலாகும் எழுத்துத் தொண்ணூற்று மூன்று. மற்றையடியினு மொத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றை ஒழித்து ஏனை யெழுத்துத் தொண்ணூற்றிரண்டோடும் உறழ எண்ணாயிரத்தைந் நூற்றைம்பத்தாறு வகையாம்.

இவ்வகையினால் தொடைவிகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம்.

தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்

மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும்.

அவையாவன: மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றின்கண் இணை, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப்புணரென வேறுபடுத் துறழ்ந்தும், எழுத்தந்தாதி அசையந்தாதி சீரந்தாதி, அடியந்தாதி எனவும், உயிர் மோனை உயிரெதுகை நெடில்மோனை நெடிலெதுகை வருக்கமோனை வருக்க எதுகை இனமோனை இனவெதுகை ஆசெதுகை எனவும், மூன்றாமெழுத்தொன்றெதுகை இடையிட்டெதுகை எனவும், இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினான் எழுத்து வேறுபாட்டினால் உறழவும், நிரனிறையாகிய பொருள்கோள் வகையானும் ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும், வரம்பிலவாகி விரியும்

## 12.15 நோக்கு.

மாத்திரை முதலாஅடிநிலை காறும்

நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே.

மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குதலாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும்.

காரணமெனினுங் கருவியெனினும் ஒக்கும்.

அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலக்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிதுநோக்காது அது தன்னையே நோக்கி நிற்கு நிலை. அடிநிலை காறும் என்றதனால் ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒருநோக்காக ஓடுதல், பல நோக்காக ஓடுதல், இடையிட்டு நோக்குதல் என மூன்றுவகைப்படும்.

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட

மறுசிகை நீக்கியுண் டாரும்-வறிஞராய்ச்

சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று." (நாலடி.1) இஃது ஒருநோக்காக ஓடிற்று.

## 12.16 பாவகை:

பா என்பது ஆசிரியப்பா,வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என நான்கு இயல்பினையுடைத்தாகும்.

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே.

மேற்சொல்லப்பட்ட நான்கு பாவும் ஆசிரியப்பா வெண்பா என இரண்டனுள் அடங்கும்.

பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
காயிரு பாவினுள் அடங்கும் என்ப.

ஆசிரியம் போன்ற நடையை உடையது வஞ்சி ஆகம். வெண்பாப் போன்ற நடையை உடையது கலிப்பா ஆகும். நடையென்றது அப் பாக்கள் இயலுந் திறம்.

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

## 12.17 பாவும் பாடுபொருளும்

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப.

அப் பாக்கள் நான்கும் பொதுப்பட நின்றவழி அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று முதற்பொருட்கும் உரியவாகும்.

## 12.18 வாழ்த்தியல் வகை:

வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே.

வாழ்த்தியலின்வகை நான்குபாவிற்கும் உரித்தாகும்.

வகையென்றது தேவரை வாழ்த்தலும் முனிவரை வாழ்த்தலும் ஏனையோரை வாழ்த்தலும் ஆகும்.

### 12.18.1 புறநிலை வாழ்த்து:

வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

வழிபடு தெய்வம் நின்னைப் புறங்காப்பக் குற்றந் தீர்ந்த செல்வத்தொடு வழிவழியாகச் சிறந்து பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்து, கலிப்பாவகையினும் வஞ்சிப்பா வகையினும் இது வராது.

எனவே, வெண்பாவினும் ஆசிரியப்பாவினும் இவையிரண்டும் புணர்ந்த மருட்பாவினும் வரப்பெறும் என்பதாகும்.

## 12.19 வாயுறை வாழ்த்து அவையடக் கியல் செவியறி வுறூ:

வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉ என அவையும் அன்ன

குறிப்பு

வாயுறைவாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறுத்தற்பொருளுங் கலியிலும் வஞ்சியினும் வராது.எனவே, வெண்பாவினும் ஆசிரியப்பாவினும் வரும்.

**12.19.1 வாயுறை வாழ்த்து:**

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

வாயுறை வாழ்த்தபாவது வேம்பினையுங் கடுவினையும் போல வெஞ்சொல் அடக்காது பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாவல் மொழியால் மெய்யறிவித்தல் ஆகும்.

“இருங்கடல் உடுத்த இப் பெருங்கண் மாநிலம் ----
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே.” (புறம்.363)

**12.19.2 அவையடக்கியல்:**

அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

அவையடக்கியல் என்பது அறியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல்வேண்டும் என எல்லா மாந்தர்க்குந் தாழ்ந்துகூறல் என்பதாகும்.

**12.19.3 செவியறிவுறூ :**

செவியுறை தானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே.

செவியுறையாவது பெரியோர் நடுவு வெருடலின்றித் தாழ்ந்தொழுகுதல் கடன் எனச் செவியறிவுறுத்துதல் ஆகும்.

“அறிமி னறநெறி...பெரியார்வாய்ச்சொல்.” (நாலடி,172)

மேற்கண்டன பாக்கட்குரிய பொருளுணர்த்தியது.

## 12.20 ஒத்தாழிசை – மண்டிலம் - அடிவரையறை:

ஒத்தா ழிசையும் மண்டில யாப்புங்
குட்டமும் நேரடிக் கொட்டின வென்ப.

ஒத்தாழிசைக் கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பாவின் கண் நிலைமண்டிலம் அடிமறி மண்டலம் என்பனவும், ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்குப் பொருந்தின ஆகும். மேல் ஆசிரியப்பாவின் ஈற்றயலினும் ,இடையினும், முச்சீரும் இருசீரும் ஐஞ்சீரும் அறுசீரும் வரும் என்றதனானே, எல்லாவடியும் ஒத்து வருவனவும் உளவென மண்டிலம் கூறவேண்டியதாயிற்று.

கலிப்பாவிற்குச் சுரிதகம் ஈற்றடி முச்சீரானும் ஈற்றயலடி முச்சீரானும் வரும் என்றமையால், தாழிசையுந் தரவும் நாற்சீரானல்லது பிறவாற்றான்

வாராவெனக் கூறல் வேண்டியதாயிற்று. குட்டமெனினும் தரவெனினும் ஒக்கும். இனிக்கலிக்குறுப்பாகிய சின்னங்கள் இருசீரானும் முச்சீரானும் வருதலானும் தனிச்சொல் ஒருசீரானும் வருதலானும் வேறு ஓதவேண்டிற்று.

**12.20.1 தரவு:**

குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்.

தரவு ஈற்றயலடி முச்சீரான் வரவும்பெறும்.

எருத்தடி உடைத்தென்றதனானே ஈற்றயலடி முச்சீர் எனப் பொருள் படுமோ எனின். ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீரான்வருதல் பெரு வழக்காதலானும் இனிவருகின்ற சூத்திரம் தூக்கியலென ஒதுகையானும் இவ்வாறு பொருள்படுமென்று கொள்க.இன்னும் குட்டம் என்பதனைத் தரவு கொச்சகமாகிய கொச்சக வொருபோகிற்குப் பெயராக வழங்கினும் அமையும். அவ்வழி ஒத்தாழிசை என்பதனை ஒத்தாழிசையெனத் தரவெனத் தரவையுங் கூட்டிப் பொருளுரைக்கப்படும்.

**12.20.2 மண்டிலம் குட்டம் ஓசை:**

மண்டிலங் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர்.

மண்டிலமாகக் கூறப்படும் பாவும் குட்டமெனக் கூறப்படும் பாவும் அகவலோசை உடையன ஆகும்.

இனி நான்குபாவினும் வெண்பாவுங் கலிப்பாவும் முன்னெடுத்தோதுகின்றாரார் ஆதலானும் ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் இத்துணையும் ஓதிய இலக்கணத்தான் முடித்தலானும், அவையிற்றிற்கு உதாரணம் ஈண்டேகாட்டுதும்

## 12.21 பாவின் இலக்கணமும் வகைகளும்.

ஆசிரியப்பாவாவது பெரும்பான்மை இயற்சீரானும் ஆசிரிய உரிச்சீரானும் வரும் நேரோன்றியஆசிரியத்தளையும் நிரையொன்றியஆசிரியத்தளையும் பயின்று வரும். அகவலோசை பெற்று வரும்.சிற்றெல்லை மூன்றடியாகவும் பேரேல்லை ஆயிரம் அடியாகவும் அமையும்.குறளடி முதல் கழிநெடிலடி வரையிலான ஐவகை அடியும் பயின்று வரும்.ஈற்றயலடி முச்சீராய் அமையும். இனி இவ் ஆசிரியப்பா அடிநிலையாற் பெயரிட்டு வழங்கப்படும்.

**12.21.1 நேரிசை ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசையாசிரியப்பா எனப்படும்.

‘‘கரும்புநடு பாத்தியிற் கதிர்த்த ஆம்பல்
சுரும்பு பசி களையும் பெரும்புனலூரன்
புதல்வனை ஈன்ற வெம்மேனி
முயங்கல்மோ தெய்யநின் மார்பு சிதைப்பவே’’

### 12.21.2 இணைகுறள் ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று முதலடியும் இறுதியடியும் நான்கு சீர்கள் கொண்ட அளவடியாய் இருக்க இடையிடை முச்சீர் வரின் இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.

"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே." (யாப்.வி.ப.257)

### 12.21.3 நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று எல்லா அடியும் ஒத்துவருவது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யார.ஃதறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே." (குறுந்.18)

### 12.21.4 அடிமறிமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் மாறுபடாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்..

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரா மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே." (யாப்.வி.ப.259)

இதனுள் யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் மாறுபடாது வருதலின் அடிமறியாயிற்று.

இனி முச்சீரடி முதலாக அறுசீரடி யீறாக மயங்கிய ஆசிரியத்தினை அடிமயங்காசிரியம் எனவும் வெண்பாவடி மயங்கிய ஆசிரியத்தினை வெள்ளடிமயங்காசிரியம் எனவும், வஞ்சியடி மயங்கிய ஆசிரியத்தினை வஞ்சி அடிமயங்காசிரியம் எனவும் வழங்குவர்.0

"சிறியகட் பெறினே யெமக்....தவப்பலவே." (புறம்.235)

இப்பதினேழடியாசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் முச்சீரான் வந்தன. மூன்றாமடி முதலாக ஆறாமடியீறாக நான்கடியும் பதினாலாமடியும் ஐஞ்சீராண் வந்தன. இரண்டாமடியும் பதினொன்றாமடியும் அறுசீரான் வந்தன. ஏனைய நாற்சீரான் வந்தன. இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியம் ஆயிற்று.

"எறும்பி அளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்

கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்ப அவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமலர்க் கலிழுமிவ் அழுங்க லூரே."(குறுந்.12)

இதனுள் முதலடி இயற்சீர் வெள்ளடியாதலின் வெள்ளடி விரவிய ஆசிரியம் எனப்படும்.

## 12.22 வஞ்சிப்பா

இனி வஞ்சிப்பா ஆவது வஞ்சியுரிச்சீரானும் ஏனைச்சீரானும் வரும். குறளடியானும் சிந்தடியானும் வரும்.வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்து. பேரேல்லை ஆறெழுத்து. தூங்கலோசையால் வரும். தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் வருவது.அசையே கூனாய் வரும்.

இப்பா இருசீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என இருவகைப்படும்.

### 12.22.1 இருசீரடி வஞ்சிப்பா:

"பூந்தாமரை போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசமும்
வயற்கம்பலைக் கயலார்ப்பவும் , நாளும்
மகிழின் மகிழ்தூங் கூரன்
புகழ்தல் ஆனாப் பெருவண் மையனே". (யாப்.வி.பக்.336)

இது குறளடியான் வந்து தனிச்சொல் பெற்று ஈற்றயலடி முச்சீரான் வந்தது. ஆசிரியச் சுரிதகத்தால் இயற்ற இருசீரடி வஞ்சிப்பா.

### 12.22.2 முச்சீரடி வஞ்சிப்பா:

"கொடிவாலன கருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழயலுளையன வள்ளுகிரன
பணையெருத்தின் இணையரிமான் அணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயில்நடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பியோன் , புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி எளிதே." (யாப்.வி.பக்.337) இது முச்சீரடி வஞ்சிப்பா.

## 12.23. வெண்பா

வெண்பாயாப்பாவது, வெண்சீரானும் இயற்சீரானும் வரும்.ஏனைய சீர்கள் வாராது.இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.அளவடியால் அமையும்.ஈற்றடி சிந்தடியாகவும் ஈற்றுச் சீர்ஓர் அசை சீராகவும் அமையும்.நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான்

அமையும்.சிற்றெல்லை இரண்டடி. பேரெல்லை பன்னிரெண்ட அடி. செப்பலோசை பெற்ற வரும்.

நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.

நெடுவெண்பாட்டு முதலாக அங்கதச்செய்யுள் ஈறாகச் சொல்லப்பட்டவையும். அளவொத்தவையும் எல்லாம் வெண்பாயாப்பினை யுடையன ஆகும். இவையெல்லாம் ஓசையான் ஒக்குமாயினும்அளவானுந் தொடையானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுத்திக் குறியிடுகின்றார் தொல்காப்பியர்.

**12.23.1 நெடுவெண்பாட்டு**

நெடுவெண்பாட்டாவது அளவடியில் நெடிய பாட்டு. பன்னிரெண்டு அடி பேரல்லை உடையது.

**12.23.2 குறுவெண்பாட்டு**

குறுவெண்பாட்டாவது அளவடியில் குறிய பாட்டு. குறுவெண்பாட்டாவது இரண்டடியானும் மூன்றடியானும் வரும்.

**12.23.3 கைக்கிளை - அங்கதம்**

கைக்கிளை என்பதும் அங்கதம் என்பதும் பொருளால் ஆகிய பெயர்.

**12.23.4 பரிபாட்டு**

பரிந்த பாட்டாம். அதாவது ஒருவெண்பாவாக வருதலின்றிப் பலவுறுப்புக்களோடு தொடர்ந்து ஒருபாட்டாகி முற்றுப்பெறுவது. "ஒத்தவை" என்பது அளவானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத சமநிலை வெண்பாக்களாம். அவையாவன நான்கடியான் வருவன. தொல்காப்பியர் நான்கினை அளவென்றும் ஏறினவற்றை நெடிலென்றும் குறைந்தவற்றைக் குறள் சிந்து என்றும் வழங்குவார். ஆதலின் இவற்றுள் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் சமநிலை வெண்பாட்டும் என மூவகையானும் வரும்.

**12.23.5 குறள் வெண்பா:**

இரண்டடியும் ஒரு தொடையான் வருவது. இது குறள் வெண்பா, விகற்பக் குறள் வெண்பா என இரு திறப்படும்

"அறத்தா றிதுவென வேண்டாசிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை," (குறள். 37)இரண்டடியும் ஒரு தொடையான் வருதலின் குறள்வெண்பா.

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து." (குறள். 667 )விகற்பத்தொடையான் வருதலின் விகற்பக்குறள் வெண்பா.

**12.23.6 சிந்தியல் வெண்பா**:

மூன்றடியான் வருவதனைச் சிந்தியல் வெண்பா எனவழங்கப்படும்.இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா,நேரிசைச் சிந்தியல் வெண்பா என இரு திறப்படும்.

குறிப்பு

“நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டப்
பிறர்நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டிர் அடி.”- ஒத்து ஒருதொடையான் வந்த, இன்னிசைச்சிந்தியல் வெண்பாவாம்.

“சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய.
யானைக்கு நீத்துமுயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை. - வேறுபட்ட தொடையான் வருதலின் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

**12.23.7 நேரிசை வெண்பா**

இனி நான்கடியான் வருவன சமநிலை வெண்பா எனப்படும். அவற்றுள் இரண்டாமடியின் இறுதிக்கண் ஒரூஉத்தொடை பெற்று வருவனவது நேரிசை வெண்பா எனப்படும்.

“அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று” (நாலடி. - இது நேரிசை வெண்பா)

**12.23.8 இன்னிசை வெண்பா**

இரண்டாமடியின் இறுதிக்கண் ஒருஉத்தொடை பெறாது வருவனவற்றை இன்னிசை வென்பா என வழங்கப்படும். ஒரூஉத்தொடை வருக்கவெதுகை ஆகியும் வரும்.

“கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தின் இனிய7 பழங்கைக்கொண்
டொல்லொலை யோடு மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை. (கைந்நிலை. - இன்னிசை வெண்பா)

“வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்
விளங்காய் திரட்டினார் இல்லை - களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்.”(நாலடி. 103)

நான்கடியாயும் மூன்றாமடிக்கண் தனிச்சொற் பெற்று வருதலின் நேரிசைப்பாற் படும்.

**12.23.9 ப∴றொடை வெண்பா**

ஐந்தடி முதற் பன்னிரண்டடிகாறும் வருவன ப∴றொடை வெண்பா எனப்படும்.

**12.23.10 நேரிசைப் ப∴றொடை**

ஒரூஉத்தொடை பெற்று வருவனவது நேரிசைப் ப∴றொடை எனப்படும். ஒரூஉத்தொடையின்றி வருவனவற்றை இன்னிசைப் ப∴றொடை எனவும் வழங்கப்படும்.

“பன்மாடக்கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்

கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை

யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்

திருத்தார்நன் றென்றேன் தியேன்." (யாப். வி.பக். 237) - ஆறடியான் வந்து ஒரூஉத்தொடை பெறுதலின் நேரிசைப் ப∴றொடை வெண்பா.

**12.23.11 இன்னிசைப் ப∴றொடை**

ஒரூஉத்தொடையின்றி வருவனவற்றை இன்னிசைப் ப∴றொடை எனவும் வழங்கப்படும்.

"சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேற்

கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்

தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்

வேற்றுமை இன்றியே யொத்தன மாவேடர்

ஆற்றுக்கா லாட்டியர் கண்" (யாப். வி. பக். 236 இ∴து இன்னிசைப் ப∴றொடை.

**12.23.12 கலிவெண்பா**

புணர்தல் முதலாகிய பொருள்களுள் யாதானும் ஒருபொருளைக் குறித்துத் திரிபின்றி முடியும் ப∴றொடை வெண்பா வினைக் கலிவெண்பா எனப்படும்.

குறள்வெண்பா முதலாகிய எல்லா வெண்பாக்களுங் கொச்சகக்கலிக்கு உறுப்பாய் வரிற் கொச்சகம் எனவும் பரிபாடற்கு உறுப்பாய்வரிற் பரிபாடல் எனவுங் கொள்ளப்படும்.

**12.23.13 கைக்கிளைவெண்பா**

கைக்கிளை என்பது கைக்கிளைப் பொருண்மை. மேற்சொல்லப்பட்ட வெண்பாக்கள் இப்பொருள்மேல் வரிற் கைக்கிளைவெண்பா எனப்படும்.

"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்

உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்- கன்னோ

மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்

புனல்நாடன் பேரேவரும". (யாப்.வி.பக்.62)

கைக்கிளை வெண்பாயாப்பினால் வரும் எனவே, ஆசிரியப் பாவினால் வரப்பெறா தென்பதும், வந்ததேயாயினும் பாடாண்பாட்டுக் கைக்கிளையாகும் எனவும் கொள்ளப்படும்.

## 12.24 கைக்கிளை:

கைக்கிளை தானே வெண்பா வாகி

ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே.

கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினால் வருதலின்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி இருபாவினாலும் வரும். இவ்வாறு வருவதனை மருட்பா என்பர்.

"மருட்பா ஏனை இருசார் அல்லது

தானிது என்னுந் தன்மை இன்றே". (தொல். செய். 81)

"உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன

கரவரு காமங் கனல இரவெதிர

முள்ளெயி றிலங்கு முகிணகை
வெள்வளை நல்காள் வீடுமென் உயிரே''. (பு. வெ. கைக்கிளை.-9)

## 12.25 பரிபாடல்:

பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயனெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

பரிபாடலாவது தொகைநிலைவகையால் பா இதுஎன்று சொல்லப்படும். இலக்கணம் இன்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரித்தென்று சொல்லுவர். பொதுவாய் நிற்றல் என்பது ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி மருட்பா (செய்யுளியல்.11) என்றோதப்பட்ட எல்லாப் பாவின் உறுப்பும் உடைத்தாதல்.

### 12.25.1 பரிபாடல் உறுப்புகள்:

கொச்சகம் அராகஞ் சுரிதகம் எருத்தொ
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

மேற்சொல்லப்பட்ட பரிபாடல் பாட்டுப் பொதுவாய் நிற்றலேயன்றிக் கொச்சகமும் அராகமும் சுரிதகமும் எருத்தும் என்று சொல்லப்பட்ட நான்குந் தனக்குறுப்பாகக் காமங் கண்ணிய நிலைமையை உடைத்தாய் வரும். எனவே, அறத்தினும் பொருளினும் வாராதாம்.

''வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே. (தொல்.செய்.105)

எனச் சிறப்புவிதி ஓதினமையால் நான்கு பாவினும் பரிபாடல் வெண்பாயாப்பிற்றாதலிற்கடவுள் வாழ்த்தாகியும் வரப்பெறும். கொச்சகமென்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும் ஆசிரியவடி. வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகை யடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக வுடைத்தாகி வியலாற் வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது. இதனுள்

"சொற்சீரடியும் முடுகியல் அடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்." (செய்யுளியல்.118) என வேறு ஓதுதலின், ஏனைநான்குங் கொச்சகப் பொருளாகக் கொள்ளப்படும்.

''தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்
ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்றறைந்தனரே. (செய்யுளியல்.148)

என்றாராகலின். இவ்விலக்கணத்தானே பரிபாடலுட் கொச்சகம் வரும்வழித் தரவுஞ் சுரிதகமும் இடையிடை வருதலுங்கொள்க ."வெண்பா வியலான் என்றதனால் தன்தளையானும் பிறதளையானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவெல்லாங் கொள்க.

அராகமென்பது ஈரடியானும் பலவடியானுங் குற்றெழுத்து நெருங்கி வரத் தொடுப்பது . பெருமைக்கெல்லை ஆறடி.

சுரிதகம் என்பது ஆசிரிய இயலானாதல் வெண்பா இயலானாதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்துநிற்பது.

எருத்தென்பது இரண்டடி இழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோ ருறுப்பு. பாட்டிற்று முகம் தரவாதலானுங் கால் சுரிதகமாதலானும் இடைநிலைப் பாட்டாகிய தாழிசையுங் கொச்சகமு மராகமுங் கொள்ளக் கிடத்தலின் எருத்தென்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராக வேண்டுமாதலான் அவ்வுறுப்புத் தரவைச் சார்ந்து கிடத்தல் வேண்டுமென்று கொள்க. பரிபாடலில் மலையும் ஆறும் ஊரும் வருணிக்கப்படும்.

“அதுதான், மலையே யாறே யூரென் றிவற்றின்
நிலைபெறு மரபி னீங்கா தாகும்.”

என்றாராகலின், இனிச் சுரிதகமின்றியும் பரிபாடல் முற்றுப்பெறும்.

**12.25.2 பரிபாடலுக்கு உரிய அடி:**

சொற்சீ ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.

சொற்சீரடியும் முடுகியலடியும் பரிபாடற்கு உரியவாகும்.

முடுகியலாவது ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானுங் குற்றெழுத்துப் பயிலத்தொடுப்பது.

## 12.26 கட்டுரை

கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து
முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்
ஒழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்.
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்பட்டு வருவது.

எண்ணென்பது ஈரடியாற் பலவாகியும் ஓரடியாற் பலவாகியும் வருதல். பலவருதலின் எண்ணென்றார்.

முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும் என்பது நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் வருதல்.

“ஒழியசையாகியும்“ என்றது ஒழிந்த அசையினை யுடைத்தாகியும் என்றவாறு.

எனவே இறுதிச்சீர் ஒன்றும் இரண்டும் அசை குறையப்பெறும் என்றவாறாம்.

வழியசை புணர்த்தலாவது ஒரு சீரின்கண்ணே பிறிதொருசீர் வரத் தொடாது ஓரசைவரத் தொடுப்பது.

சொற்சீர்த்திறுதல் என்பது சொற்றானே சீராந்தன்மையைப் பெற்று நிற்றல்.

சொற்சீர்க்கியல்பே என்றது இப்பெற்றியை யுடைத்துச் சொற் சீரின தியல்பு இவ்விலக்கணம் பரிபாடற் செய்யுட்கண் வருமாறு:-

”ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலைத் - எனத்தொடங்கும்பாடல் ஆகும்.

## 12.27 அங்கதத்தின் வகை:

அங்கதப்பாட்டு பன்னிரெண்டடி அடி பேரெல்லையாகக் கொண்டது,

அங்கதந் தானே அரில்தபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

அங்கதமாவது குற்றமற ஆராயிற் செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என்று இருவகைப்படும்.

### 12.27.1 செம்பொருள் அங்கதம்:

செம்பொரு ளாயின வசையெனப் படுமே.

செம்பொருளங்கதம் வசையெனப் பெயர்பெறும்

### 12.27.2பழிகரப்பு அங்கதம்:

மொழிகரந்து மொழியின் அது பழிகரப் பாகும்.

தான்மொழியும் மொழியை மறைத்து மொழியின் அது பழிகரப்பெனப் பெயர்பெறும்.

## 12.28 செய்யுள்

செய்யுள் இருவகைப்படும்.அவை செவியுறைச்செய்யுள்,அங்கதச் செய்யுள் என்பதாகும்.

செய்யுள் தாமே இரண்டென மொழிப.

### 12.28.1 செவியுறைச் செய்யுள்

புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்..

புகழொடும் பொருளொடும் புணரவரின் அதைச் செவியுறைச் செய்யுள் என்று சொல்லுவர்.

### 12.28.2 அங்கதச் செய்யுள்

வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் எண்மனார் புலவர்.

வசையொடும் நசையொடும் புணர்ந்த செய்யுள் அங்கதச் செய்யுள் எனப்பெயர் பெறும்.

## 12.29 கலிப்பாவின் வகைகள்:

ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே.

கலிப்பா ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாடடு, கொச்சகக்கலிப்பா, உறழ்கலியும் என நான்கு வகைப்படும்.

### 12.29.1 ஒத்தாழிசைக் கலிப்பாவின் வகை:

அவற்றுள்,
ஒத்தா ழிசைக்கலி இருவகைத் தாகும்.

ஒத்தாழிசைக்கலி இரண்டு வகைப்படும்.

இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென
நடைநவின் றொழுகும் ஒன்றென மொழிப.

தாழிசையும் தரவும் சுரிதகமும் அடைநிலைக் கிளவியும் என நான்கு உறுப்பினை யுடைத்து ஒத்தாழிசைக் கலி என்பதாம்..

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனக் கிடக்கை முறையாற் கூறாது தாழிசை முற்கூறிய வகையான் இப்பாவிற்கும் ஒத்தாழிசை கிறந்ததாதலின் முற்கூறினார்.முற்கூறுகின்றவழியும் இடை நிலைப்பாட்டு எனக் கூறுதலின் முந்துற்றது தரவு என்றவாறாகும். இடைநிலைப் பாட்டு எனினும் தாழிசை எனினும் ஒக்கும்.போக்கெனினும் சுரிதகம் எனினும் வாரம் எனினும் அடக்கியல் எனினும் ஒக்கும்.அடை எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும்.தனிச்சொல்லைப் பின் எண்ணிய அதனான் தாழிசை தோறும் தனிச்சொல் வரவும் பெறும்.

ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே.

தரவு நாலடி இழிபாகப் பன்னிரண்டடி உயர்பாக , இடைவரும் அடி எல்லாவற்றானும் வரப்பெறும்.

இடைநிலைப் பாட்டே,
தரவகப் பட்ட மரபின என்ப.

தாழிசைகள் தரவிற் சுருங்கிவரும்.

“தரவகப்பட்ட மரபின”என்றதனால் தரவிற்கு ஓதப்பட்ட நான்கடியின் மிகாதென்பதும், மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் என்பதும் கொள்ளப்படும்.. வருகின்ற சூத்திரத்துள் ஒத்து மூன்றாகும் ஒத்தா ழிசையே (செய்யு 137) எனக்கூறுதலானும் இப்பாவினை ஒத்தாழிசைக்கலி எனக் கூறுதலானும் தாழிசை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வரும் என்பது பெறப்படும்.

அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப.

இடைநிலைக் கிளவியாகிய தனிச்சொல் தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனச் சொல்லுவர்.

ஆங்கு அசை, தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனவே, தாழிசைக்கு முன்னர்வருதலும் சிறுபான்மை உள

**12.29.1.1 சுரிதகம்:.**

போக்கியல் வகையே வைப்பெனப் படுமே
தரவியல் ஒத்தும் அதனகப் படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.

சுரிதகம் என்பது வைப்பு எனவும் படும் . அது தரவோடு ஒத்த அளவிற்றாகியும் அதனிற்குறைந்த அளவிற்றாகியும் குற்றந் தீர்ந்த பாட்டினிறுதி நிலையை உரைத்தவாறு வரும்.

தரவியலொத்தலாவது சிறுமை நான்கடி யாகியும் பெருமை பன்னிரண்டடியாகியும் வருதல் . அதனகப்படுதலாவது சிறுமை மூன்றடியானும் இரண்டடியானும் வருதல். மேல்துள்ளலோசைத் தாகியும் . நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீர் மிக்கும் . சுரிதகம் ஆசிரியத்தானாதல் வெண்பாவானாதல் வரும்.

“பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க -----

நிறனோடிப் பசப்பூர்த லுண்டென
அறனோடி விலங்கின்றவர் ஆள்வினைத் திறத்தே''. (கலி. 19) இது சுரிதகம். இது நான்கடித்தரவும் நான்கடியான் மூன்று தாழிசையுந் தனிச் சொல்லும் ஐந்தடிச் சுரிதகமும் வந்த ஒத்தாழிசைக் கலிப்பா. இது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

''உள்ளில் உள்ளம் உள்ளுள் உவந்தே.'' (கலி. 118) - இது சுரிதகம்.

இது தாழிசைதோறுந் தனிச்சொற் பெற்றுவந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா .

''வயக்குறு மண்டிலம'' என்னும் (கலி. 25) கலிப்பாவில் தரவு பன்னிரண்டடியான் வந்தது.

''இலங்கொளி மருப்பிற் கைம்மா'' என்னுங் (கலி . 23) கலிப்பாவினுள் இரண்டடியால் தாழிசை வந்தன.

''உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனும்'' என்னுங் (கலி 22) கலிப்பாவில் தாழிசை மூன்றடியான் வந்தன.

ஆற்றியந்தணர் என்னும் கடவுட்பாட்டினுள் மூன்றடிச்சுரிதகம் வந்தது.

ஏனை யொன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

சொல்லாதொழிந்த ஒத்தாழிசைக்கலிப்பா ஒத்தாழிசைக்கலிப்பா முன்னிலையிடத்துத் தேவரைப்பராவும் பொருண்மை உடைத்தாம்.

### 12.29.2 தேவர் பராய ஒத்தாழிசைக் கலிப்பா

தேவர் பராஅய ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, ஒருபோகு ஒத்தாலிசைக்கலிப்பா என இரு வகைப்படும்.இதனை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

அதுவே,
வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே.

#### 12.29.2.1 வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

வண்ணகம் தானே,
தரவே தாழிசை எண்ணே வாரமென்
றந்நால் வகையில் தோன்று மென்ப.

வண்ணக ஒத்தாழிசையாவது தரவும் தாழிசையும் எண்ணும் சுரிதகமும் என்று சொல்லப்பட்ட நான்கு உறுப்பினையும் உடைத்து.

ஒத்தமூன் றாகும் ஒத்தா ழிசையே
தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

இச் சூத்திரம் தாழிசைக்கு அடிவரையறை உணர்த்திற்று.

தாழிசையுந் தம்முள் அளவும் ஒத்து மூன்றாகிவரும் ,அவை தரவிற் சுருங்கித் தோன்றும்.

அடக்கியல் வாரம் தரவோ டொக்கும்.

அடக்கியலாகிய சுரிதகம் தரவோடொத்த இலக்கணத்தை உடையதாகும்.

முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.

முதற்றொடுத்த உறுப்புப் பெருகிப் பின்றொடுக்கும் உறுப்புச் சுருங்கிவரும். அதனை இரண்டடியான் வருவன இரண்டும் ஓரடியான்வருவன நான்கும், சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிறநூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க்கு வரையறையிலவாம்.

எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் அல்லாக் காலை யான.

தனிச்சொல் இல்லாத வழி மேற் சொல்லப்பட்ட எண் ஒரோவொன்று இடையொழிந்து வருதல் குற்றமாகாது.
எனவே, சொல்லப்பட்ட உறுப்புக்கள் தனிச்சொல் வருவழி இடையொழியாமல் வருதல் வேண்டுமென்றவாறு .தனிச்சொல் உளப்பட ஐந்துறுப்புடைத்தாயிற்று.
இனித் தனிச்சொல்லின்றி எண்ணிடையிட்டவழி ஒருபோகெனப் பெயர்பெறும்.
“கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக் ------
தொன்று முதிர்கடல் உலகம் முழுதுடன்
ஒன்றுபு திகிரி உருட்டுவோ னெனவே”. - அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா

**12.29.2.2 ஒருபோகு ஒத்தாழிசைக் கலிப்பா**

இனித் தனிச்சொல்லின்றி எண்ணிடையிட்டவழி ஒருபோகெனப் பெயர்பெறும்.. ஒரு போகு என்னும் கலி இரண்டுவகைப்படும். அது முறையே கொச்சகவொருபோகு,அம்போதரங்கவொருபோகு என்பதாம்.

ஒருபோ கியற்கையும் இறுவகைத் தாகும்.
கொச்சக ஒருபோ கம்போ தரங்கமென்
றொப்ப நாடி உணர்தல் வேண்டும்.

**12.29.2.2.1 கொச்சக ஒருபோகு**

தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகும் என்ப.

தரவு முதலாயின உறுப்புக்களுள், தரவின்றித் தாழிசை முதலியவுறுப்புக்கள் பெற்றும், தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும், தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும் எண்ணின்கண் இடையெண் சிற்றெண் என்பன குறையினும் சுரிதகமின்றித் தரவுதானே நிமிர்ந்தொழுகி முடியினும் சுரிதகமின்றித் தரவுதானே நிமிர்ந்தொழுகி முடியினும் ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வரினும் சொல்லப்பட்டன கொச்சக வொருபோகெனக்

குறிக்கப்பெறும். எனவே ஒத்தாழிசைக்கு உறுப்பாகியவற்றுள் ஒன்றும் இரண்டும் குறைந்து வருவன கொச்சக வொருபோகெனப் பெயர் பெறும். அவற்றுள் தரவின்றாகித் தாழிசைபெற்று வந்ததற்குச் செய்யுள்:-

”நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக் - என்னும் பாடல்

ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே

மேற் சொல்லப்பட்ட கொச்சகவொருபோகு பத்தடிச் சிறுமையாகவும் இருபதடிப் பெருமையாகவும் வரும்.

### 12.29.2.2.2 அம்போதரங்கவொருபோகு

அம்போத ரங்கம் அறுபதிற் றடித்தே

செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.

அம்போதரங்க ஒருபோகு அறுபதடி பெருமைக் கெல்லையாம். நடுவாகிய நிலை சிறுமைக்கெல்லையாம் .

செம்பால் வாரம் என்பது செம்பாதி எனவுமாம் . முப்பதடிச் சிறுமை ஆகும்.

எருத்தே கொச்சகம் அராகஞ் சிற்றெண்

அடக்கியல் வாரமொடு அந்நிலைக் குரித்தே.

ஈண்டு எருத்து என்பது தரவு. கொச்சகமும் அராகமும் மேற்சொல்லப்பட்டன. எண்ணினுட் பேரெண்ணிற் சிற்றெண் வரப்பெறுமாயினும் இனிச்சொல்லப்பட்ட உறுப்பு முறையான் வருதலும் மயங்கிவருதலுங் கொள்க.

பரிபாடற்கும் இவைதாமே உறுப்பாயின் அதனோடிதனிடை வேறுபாடு என்னையெனின். அறுபதிற்றடியிற் குறைந்துவரின் முறை பிறழ்ந்து வருமெனவும் ஒத்துவரின் அறுபதின் மிக்கு வருமெனவுங் கொள்ளப்படும்.

“கண்ணகன் இருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற” – எனும் பாடல் சான்றாகும்.

யாப்பினும் பொருளினும் வேறுபட்ட கொச்சகவொருபோகை அதன்பினோதினமையால் இதற்குங் காமப் பொருளே பெறப்பட்டது.

## 12.30 கலிவெண்பாட்டே:

ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்

திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே

ஈற்றடியளவும் ஒருபொருளைக் குறித்து வெள்ளடியியலால் திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டம்.

கலிவெண்பா எனினும் வெண்கலிப்பா எனினும் ஒக்கும், வெள்ளடியியலான் என்றமையான் வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும் பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரான வருவனவுங் கொள்க என்பார் இளம்பூரணர்,.

“மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்

கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்
என்னீர் அறியாதீர் போல இவைகூறின்
நின்னீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின் அதுவல்ல
தின்பமும் உண்டோ எமக்கு” - இது வெண்டளையான் வந்த வெண்கலிப்பா.

அ∴தேல் இது நெடுவெண்பாட்டிற்கு ஓதிய இலக்கணத்தான் வருதலிற்ப∴றொடைவெண்பாவாம். வெண்கலிப்பா என்றதென்னை எனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவுங் கைக்கிளை பெருந்திணை யெனவுஞ் சொல்லப்பட்ட பொருளேழனுள்ளும் யாதானு மொருபொருளைக் குறித்து ஏனைக்கலிப்பாக்கள் போலத் தரவுந் தாழிசையுந் தனித்தனி பொருளாக்கிச் சுரிதகத்தாற் றொகுத்துவருநிலைமைத் தன்றித் திரிபின்றி முடிவதனைக் கலிவெண்பா வெனவும், புறப்பொருட்கண் வரும் வெண்பாக்களைப் ப∴றொடை வெண்பா வெனவும், பரிபாடற்கு உறுப்பாய் வரும்.ப∴றொடை வெண்பாக்களைப் பரிபாடலெனவும், கொச்சகக் கலிப்பாவிற் குறுப்பாய் வரும் ப∴றொடைவெண்பாவைக் கொச்சகக் கலிப்பாவெனவும் கூறுதல் இவ்வாசிரியர் கருத்தென்று கொள்க. அன்னதாதல் நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே (செய்யுளியல் 114) என யாப்பினாலே வேறுபடுத்தாராகிக் “கைக்கிளை பரிபாட்டங்கதச் செய்யுள் எனப் பொருளானும் இனத்தானும் வேறுபடுத்தோதினமையானுங் கொள்க என்பார் இளம்பூரணர்.

‘‘தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாம் -
நோயுங் களைகுவை மன’’ - என்னும் முல்லைக்கலி அயல் தளையால் வந்த கலிவெண்பா.

## 12.31. கொச்சகக் கலிப்பா

தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே.

தரவாகிய உறுப்புஞ் சுரிதகமாகிய உறுப்பு முதலும் முடிவும் வருதலின்றி இடையிடைவந்து தோன்றியும் ஐஞ்சீரடி பலவந்தும் தரவு தாழிசை தனிச்சொல் சரிதகஞ் சொற்சீரடி முடுகியலடியென்னும் ஆறுறுப்பினையும் பெற்றும் மேற்சொல்லப்பட்ட உறுப்புக்களை உடைத்தாகியும் இலதாகியும் வெண்பாவினியல்பினாற் புலப்படத்தோன்றும் பாநிலைவகையும். புலப்படத் தோன்றுதலாவது ஏனையுறுப்புக்களில் வெண்பாமிகுதல் இன்னும் அதனானே பிற பாவடிகளும் வந்து வெண்பாவியலான் முடிதலுங் கொச்சகக் கலிப்பா வென்று இலக்கணமறிந்த புலவர் கூறினர். ஆறுமெய்பெற்றும் என்பதற்கு

அராகமென்னும் உறுப்பைக்கூட்டி முடுகியலென்னும் உறுப்பைக் கழித்து உரைப்பதும் ஒன்று ஆகும்.

## 12.32 அளவியல்

பாக்களின் அடிவரையறை உணர்த்தல் அளவியல் எனப்படும்.

அளவியல் வகையே அனைவகைப் படுமே.

இவ்வதிகாரத்துள் ஈண்டு அதிகரிக்கப்பட்ட அளவியல் ஈண்டுச் சொன்ன வகைபெறும்.

### 12.32.1 ஆசிரியப்பாவின் எல்லை:

ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை

ஆயிர மாகும் இழிபுமூன் றடியே.

ஆசிரியப்பாவின் அளவிற்கு எல்லையாவது; சுருங்கினது மூன்றடி; பெருமை ஆயிரமடியாக இடைப்பட்டன எல்லாவடியானும் வரப்பெறும்.

### 12.32.2 வெண்பாவின் அடிவரையறை

நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே

குறுவெண் பாட்டிற் களவேழ் சீரே.

வெண்பாவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

நெடுவெண்பாட்டிற்கு எல்லை பன்னிரண்டடி. குறுவெண்பாட்டிற்கு அடி அளவடியுஞ் சிந்தடியும் இரண்டடியும ஆகும்.

### 12.32.3 அங்கதப்பாட்டின் அளவு

அங்கதப் பாட்டள வவற்றோ டொக்கும்.

அங்கதப் பாட்டாகிய வெண்பாவிற்கு எல்லை சிறுமை இரண்டடி, பெருமை பன்னிரண்டடி ஆகும்.

### 12.32.4 பரிபாடல் அடிவரையறை

பரிபாடலே

நாலீ ரைம்ப துயர்படி யாக

ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.

பரிபாடற் செய்யுள் நானூறடி உயர்பாக இருபத்தைந்தடி இழிபாக வரும். எனவே,இடையெல்லா அடியானும் வரப்பெறும்.கலிப்பாவிலுள்ஒத்தாழிசைக்கு அளவு மேற்கூறப்பட்டது.கலிவெண்பாட்டுக்கு வரையறை யில்லை யெனப்பட்டது கொச்சகக்கலிக்கு வரையறை கூறாமையாற் பொருண் முடியுங்காறும் வரப்பெறும் என்று கொள்க. அவ்வழிப் பலவுறுப்பாகி வருதலின் அதற்குறுப்பாகிய செய்யுள்விற்றாதல் வேண்டும். உறழ்கலியுங் சொச்சகக் கலிப்பாற்படும்.

## 12.33. அடி வரையறையில்லாத செய்யுள்:

கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்

செவியறி வாயுறை புறநிலை என்றிவை

தொகைநிலை மரபின் அடியில என்ப.

அடியளவு வரையறையில்லாத செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

கலிவெண்பாட்டும். கைக்கிளைப்பொருளைப் பற்றிய பாவும். செவியுறை வாழ்த்து. வாயுறைவாழ்த்து. புறநிலை வாழ்த்து என்றபொருண்மைக்கண் வரும் வெண்பாக்களும் அடியளவு வரையறையில்லாத செய்யுள் ஆகும். பொருள்முடியுங்காறும் வேண்டிய அடிவரப்பெறும்.

புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதில் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப.

புறநிலை வாழ்த்தும் வாயுறைவாழ்த்துஞ் செவியறிவுறூஉவும் மருட்பாவினால் வரப்பெறும். எனவே மருட்பா நான்கு பொருளினல்லது வரப்பெறாது என்பதும் பெறப்படும்.

## 12.34 அடிவரையில்லாதன

எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப.

பாட்டு, உரை, நூல். வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. அவற்றுட் பாட்டு நீங்கலாகிய ஆறும் அடிவரையில. அவைதாம்

நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான.

மேற்சொல்லப்பட்ட அறுவகையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வாய்மொழியெனினும் மந்திரமெனினும் ஒக்கும். அங்கதமாவது செம்பொருள் கரந்ததென விருவகைத்தே " (செய்யுளியல் - 120) என்றதனாற் கரந்த ஆங்கதமெனினும் சொற்குறிப்பெனினும் ஒக்கும்.

### 12.34.1 நூல்:

அவற்றுள்,
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடியும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

நூலென்று சொல்லப்பட்டது எடுத்துக்கொண்ட பொருளொடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமல் கருதிய பொருளைத் தொகையானும் வகையானும் காட்டி அதன் அகத்து நின்றும் விரிந்த உரையோடு பொருத்த உடைத்தாகி நுண்ணியதாகி விளக்குவது நூற்கு இயல்பு.

அதுவே தானும் ஒருநால் வகைத்தே.

மேற்சொல்லப்பட்ட நூல் நான்குவகையையுடைத்து.

ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்

குறிப்பு

இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்என்று
ஆங்கனை மரபின் இயலும் என்ப.

**ஒருபொருள் நுதலிய சூத்திரத்தான்** : - ஆசிரியன் யாதானு மொருபொருளைக் குறித்துக்கூறுஞ் சூத்திரம்.

**இனமொழி கிளந்த ஒத்து:** - இனமாகிய பொருள்கள் சொல்லப்படும் ஓத்து.

**பொதுமொழி கிளந்த படலம்**: -மேற்சொல்லப்பட்ட இனங்கள் பலவற்றையுங் கூறப்படும் படலம்.

**மூன்றுறுப்பு அடக்கிய பிண்டம்:** - இம்மூன்றனையும் உறுப்பாக அடக்கிய பிண்டம்..

ஆங்கனை மரபின் இயலும் - அம்மரபினான் இயலும் நூல்.

**12.34.1.2 சூத்திரம்:**

அவற்றுள்,
சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.

சூத்திரமாவது கண்ணாடியில் நிழற்போல விளங்கத் தோன்றி ஆராயாமற் பொருள் நனி விளங்குமாறு யாப்பின் கண்ணே தோன்றும்.

**ஆடிநிழலின் அறியத் தோன்றுவது**: - சூத்திரம் படித்த வளவிலே அதனாற் சொல்லப்படுகின்ற பொருள் ஒருங்கு தோற்றல்

**நாடுதலின்றிப் பொருணனி விளங்க யாத்தல்**: - அதன் கண் யாக்கப்பட்ட சொற்குப் பொருள் ஆராயாமற் புலப்படத்தோன்றுமாறு யாத்தல்.

" வேற்றுமை தாமே ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே. " (தொல். வேற்றுமையியல்)

**12.34.1.3 ஓத்து**

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.

ஒத்த இனத்ததாகிய மணியை ஒருங்கே கோவைப்பட வைத்தாற்போல ஓரினமாக வரும்பொருளை ஓரிடத்தே சேரவைத்தல் ஓத்தென்று பெயராம்.. எனவே அவ்வினமாகிச் சேர்ந்தநிலைக்கு ஓத்தென்று பெயராயிற்று.

**12.34.1.4 படலம்:**

ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

ஓரினமாகிய நெறியின்றிப் பலநெறியான் வருவன பொருளானே பொதுமொழியால் தொடர்வுபடின் அது படலமெனப் பெயராம்.

அது கிளவியாக்க முதலாக எச்சவியல் ஈறாகக் கிடந்த ஒன்பதோத்தினும் வேறுபாடுடையவாயினும், சொல்லிலக்கணம் உணர்த்தினமையாற்

குறிப்பு

சொல்லதிகாரம் எனப் பெயர் பெறுதல். அதிகாரம் எனினும் படலமெனினும் ஒக்கும்.

**12.34.1.5 பிண்டம்:**

மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவர்அது பிண்டம் என்ப.

மூன்றுறுப்பு அடக்குதலாவது சூத்திரம் பலவுண்டாகி ஓத்தும் படலமும் இன்றாகிவரினும், ஓத்துப்பலவுண்டாகிப் படலம் இன்றிவரினும், படலம் பலவாகிவரினும், அதற்குப் பிண்டமென்று பெயராம். மூன்று உறுப்பினையும் அடக்கின தன்மைத்தாயின் அதனைப் பிண்டமென்று சொல்லுவர்.

**12.34.2 உரைநடை வகை**

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்என்று
உரைவகை நடையே நான்கென மொழிப.

**பாட்டிடைவைத்த குறிப்பு**: - பாட்டினிடை வைக்கப்பட்ட பொருட்குறிப்பினானும் உரை.

பலசொல் தொடர்ந்து பொருள்காட்டுவனவற்றுள் ஓசைதழீ இயவற்றைப் பாட்டென்றார். ஓசையின்றிச் செய்யுட் தன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது.

''ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்'' என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து''(கலித். - என்றது உரைக்குறிப்பு.

**பாவின்றெழுந்த கிளவி:** - பாக்களை ஒழியத் தோற்றிய சொல்வகையானும் உரையாம்.

அ.:.தாவது, வழக்கின்கண் ஒரு பொருளைக் குறித்து வினவுவாருஞ் செப்புவாருங் கூறுங் கூற்று.

அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலானும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப்படுதலானுஞ் செய்யுளாம்.

**பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி**: - பொருளியல்பில்லாப் பொய்மொழியானும் உரைவரும்.

**பொருளொடு புணர்ந்த நகைமொழி**: - பொருளைப் பொருந்திய நகைவழிமொழியாய் வருவது.

நகைமொழியாவது - மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாதென இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருளுணர்த்தும் உரை பிறக்குமாதலின் பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் உரைவருமென்றார். இவ்வாறு உரைவகை நடையே நான்கென மொழிவர்.

அதுவே தானும் இருவகைத் தாகும்.

மேற்சொல்லப்பட்ட உரை இரண்டு வகைப்படும்..

அது மைந்தர்க்கு உரைப்பனவும் மகளிர்க்கு உரைப்பனவுமாம்.

ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

மகளிர்க்கு உரைக்குமுரை செவிலிக்குரித்து. மைந்தர்க்கு உரைக்குமுரை எல்லார்க்கும் உரித்து.

செவிலி இலக்கணத்தின் உரைக்கின்றவுரையும். பாட்டிலுரைக்கின்றவுரையும் கூறுவளோவெனின். அவ்விடங்களில் வரும் உரை பொருள்பற்றி வருதலின் அப்பொருள் கூறுவாள்.

**12.34.3 பிசி:**

ஒப்பொடு புணர்ந்த உவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிநிலை வகையே.

ஒப்போடே புணர்ந்த உவமை நிலையானும் பிசியாம்; தோன்றுவதனைச் சொன்ன துணிவினானும் பிசியாம்.

அச்சுப்போலே பூப்பூக்கும். அமலேயென்னக் காய்காய்க்கும் “ என்பது பிசி. இது உவமைபற்றி வந்தது.

**12.34.4 முதுமொழி**

நுண்மையுஞ் சுருக்கமும் ஒளியு முடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்

நுண்மை விளங்கம் சுருக்கம் விளங்கவும் ஒளியுடைமை விளங்கவும் மென்மை விளங்கவுமென்று இன்னோரன்ன விளங்கவும் தோன்றிக் கருதினபொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன முதுமொழியென்று சொல்லுவர்.

**12.34.5 மந்திரம்**

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப.

நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணையாற் சொல்லப்பட்ட மறைந்தசொல் மந்திரமாகும்..

**12.34.6 குறிப்பு மொழி**

எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே.

எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிச் சொல்லினால் உணரப்படும் பொருளின் புறத்ததுவே குறிப்புமொழி என்பதாம்..

மேல் அங்கதமென்று சொல்லி ஈண்டுக் குறிப்புமொழி யென்றதனான் இச்சொல் வசைகுறித்து வருமென்று அறிக.

புகழ்குறித்து வந்தாற் குற்றமென்னையெனில். அதனை, வெளிப்படக் கூறக் கேட்டார்க்குந் தனக்கும் இன்பம் பயத்தலிற் குறிப்பினாற் கூறல் வேண்டுவது வசையென்று கொள்ளப்படும்.

## 12.35 பண்ணத்தி:

பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே.

மேல் இத்துணையும் பாவும் பாவின்றி வழங்குவனவும் எடுத்தோதினார். இனிப் பிறநூலாசிரியர் விரித்துக் கூறின இசை நூலின் பாவினமாமாறு உணர்த்துதலின் இது.,

**பாட்டிடைக் கலந்த பொருள்**: - பாட்டின்கட் கலந்த பொருளையுடைத்தாகி என்பதாம்..

**பாட்டினியல பண்ணத்தி:** - பாட்டுக்களின் இயல்பையுடையவாம் பண்ணைத் தோற்றுவிக்குஞ் செய்யுட்கள்.

பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தியென்றார்.

அவையாவன சிற்றிசையும் பேரிசையு முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன.

அதுவே தானும் பிசியொடு மானும்.

மேற்சொல்லப்பட்ட பண்ணத்தி பிசியோடு ஒத்த அளவிற்று ஆகும். .

பிசியென்பது இரண்டடி அளவின்கண்ணே வருவதாதலின் இதுவும் இரண்டடியான் வருமென்று கொள்ளப்படும்

"கொன்றை வேய்ந்த செல்வன் அடியை

என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே".

இது பிசியோடு ஒத்தவளவிற்றாகிப் பாலையாழென்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகி வந்தமையிற் பண்ணத்தியாயிற்று.

அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.

பண்ணத்தி பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. பண்ணத்தியெனினும் பாவினமெனினு மொக்கும்.

"நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே" (செய்யுளியல் - 41) யென்றமையான் அடியென்பது நாற்சீரான் வருவதென்று கொள்க.

நாற்சீரடியின் மிக்குவரும் பாட்டுப் பன்னிரண்டும் அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவுங் கொள்ளப்படும்.

இதனாற் சொல்லியது இருசீரடி முதலிய எல்லாவடிகளானும் மூன்றடிச் சிறுமையாக ஏறிவரும் பாவினம் என்பதாம். பன்னிரண்டாவன ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடுந் தாழிசை துறை விருத்தமென்னு மூன்றினத்தையும் உறழப் பன்னிரண்டாம்.

அவற்றுள், தாழிசையாவது: - ஆசிரியத்தாழிசை, வஞ்சித்தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என நான்காம்.

துறையாவது :- ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என நான்காம்.

விருத்தமாவது:- ஆசிரியவிருத்தம், வஞ்சிவிருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என நான்காம்.

அவற்றுள் ஆசிரியத் தாழிசையாவது மூன்றடி ஒத்துவருவது.

நீடற்க வினையென்று நெஞ்சின் உள்ளி – எனும் பாடல்

அவ்வழி ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடைத்தென ஒரு சாரார் காட்டும் பாடல்::-

“கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன் -
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன் ---
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.’’ (சிலப். ஆய்ச்சி) இவை மூன்றடியான் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை.

வஞ்சித்தாழிசையாவது குறளடி நான்கினால் ஒருபொருள் மேன் மூன்றடுக்கி வரும்.

“மடப்பிடியை மதவேழந்
தடக்கையால் வெயில் மறைக்கும் ---
இரும்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயில்மறைக்கும்----
காடகம் இறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்.” (யாப். வி.ப.341 என வரும். -

இனி, வெண்டாழிசையாவது மூன்றடியான் வந்து வெண்பாப்போல இறும். அது

“நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.” (யாப். வி.ப.244 என வரும்.

சிந்தியல் வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவதனை வெள;ளொத் தாழிசை யென்ப அது

“அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
காவான் துறந்து விடல்.” (யாப்.வி.ப.244 என வரும்.

கலித்தாழிசையாவது அடிவரையின்றி ஒத்துவந்து ஈற்றடி சிலசீர்மிக்குங் குறைந்தும் வருவது. அது

“வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தின் எழால்வாழி வெண்திங்காள்
கேள்வரும் போழ்தின் எழாதாய்க் குறா அலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்திங்காள்” (யாப்.வி.ப.330) என வரும்.

இத்தாழிசை ஈற்றடி மிக்கு வருதலான். ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவரினுங் கொச்சக வொருபோ கெனப்படா; கலித்தாழிசை யெனப்படும்; ஈற்றடி மிக்கு வருதலான்.

ஆசிரியத்துறையாவது நான்கடியாய் இடையிடை சீர் குறைந்து வரும். அது

“கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்உள்ளி வருதிராயின் - எனும் பாடல்

வஞ்சித்துறையாவது குறளடி நான்கினால் தனித்துவரும் அது

"முல்லைவாய் முறுவலித்தன - எனும் பாடல்

இனி வெண்டுறையாவது மூன்றடிச் சிறுமையாக ஏழடிப் பெருமையாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்துவரும்.

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய - எனும் பாடல்

கலித்துறையாவது நெடிலடி நான்கினான் வருவது.

அ.்.தாவது, ஐஞ்சீரான் வருவதும், பதினாறும் பதினேழும் எழுத்துப்பெற்று நான்கடியான் வருவனவுமாம்.

"யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்" - எனும் பாடல்

இனி, ஆசிரிய விருத்தமாவது அறுசீரடி முதலாகிய மிக்க அடியினான் நான்கடியு மொத்துவரும். அது

"இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள் எனப்பெயர் இனவண்டு புடைசூழ - எனும் பாடல்

இனி வஞ்சிவிருத்தமாவது முச்சீரடி நான்காகிவரும். அது

"இருது வேற்றுமை இன்மையால் - என்பதாம்

வெளிவிருத்தமாவது நான்கடியானாயினும் மூன்றடியானாயினும் அடிதொறுந் தனிச் சொற் பெற்றுவரும்.

"ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார் – ஒருசாரார் - எனும் பாடல்

கலிவிருத்தமாவது நாற்சீரடி நான்கினால் வரும்.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா" - எனும் பாடல்.

கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே.

இதனாற் சொல்லியது செய்யுளாவது அடிவரையுள்ளனவும் அடி வரையில்லனவுமென இருவகைப்படுமென்பதூஉம் அடிவரையுள்ளன ஆசிரியம். வஞ்சி. வெண்பா, கலி எனவும்; தாழிசை, துறை, விருத்தமெனவும்; அடிவரையில்லன, நூல், உரை, பிசி, முதுமொழி; மந்திரம், குறிப்புமொழி என அறுவகைப் படுமென்பதூஉம் உணர்த்தியவாறு.

## 12.36 திணை

கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும்
முற்கிளந் தனவே முறையி னான.

திணையாவது கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை என்பன ஆகும்

முறைமையினாற் சொல்லுதலாவது. பாடாண்பாட்டினைக் கைக் கிளைப்புறமெனவும். வஞ்சியை முல்லைப்புறமெனவும், வெட்சியைக் குறிஞ்சிப்புறமெனவும், வாகையைப் பாலைப்புற மெனவும். உழிஞையை மருதப்புறமெனவும், தும்பையை நெய்தற்புறமெனவும், காஞ்சியைப் பெருந்திணைப்புறமெனவும், ஓதிய நெறிகொள்ளப்படும். இவ்வாறு கொள்ளவே பதினான்கு திணையும் ஏழாகியடங்கும்.

## 12.37 கைகோள்

காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழா அலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே.

இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்படலும் பாங்கற்கூட்டமும் தோழியிற் கூட்டமுமென்று சொல்லப்பட்ட நான்குவகையானும் அவற்றைச் சார்ந்துவருகின்ற கிளவியானும் வருவன களவென்று கூறுதல் வேதமறிவோர் நெறி.

### 12.37.1 கற்பாகிய கைகோள்:

மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயனெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே

களவொழுக்கம் வெளிப்படுதலுங் களவொழுக்கமின்றித் தமரானே பெறுதலுமென்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியில் தப்பாது மகிழ்தலும் புலத்தலும் ஊடலும் ஊடல் தீர்தலும் பிரிதலுமென்று சொல்லப்பட்ட இவற்றொடு கூடிவருவது கற்பென்று சொல்லப்படுவது.

மெய்பெறும் அவையே கைகோள் வகையே.

பொருள்பெற வந்த மேற்சொல்லப்பட்ட களவு கற்பென்னும் இருவகையே கைகோள் வகையாகும்.

## 12.38 களவில் கூற்றுக்குரியோர்

பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு
அளவியல் மரபின் அறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரியர் என்ப.

பார்ப்பார் முதலாகச் சொல்லப்பட்ட கலந்தொழுகு மரபினையுடைய அறுவகையோரும் களவொழுக்கக் கிளவி கூறுதற்குரியவர் ஆவர்.

## 12.39 கற்பில் கூற்றுக்குரியோர்

பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

பாணன் முதலாகச் சொல்லப்பட்ட அறுவரும் மேற்சொல்லப்பட்ட பார்ப்பார் முதலிய அறுவருங்கூடப் பன்னிருவருங் கற்பின்கட் கூறுதற்குரியர். தொன்னெறி மரபிற் கற்பு என்றதனான் அவர் குலந்தோறும் தொன்றுபட்டு வருகின்ற நெறியையுடைத்தாம்.

## 12.40 இருவகைக் கைகோளிற்கும் உரிய மரபு

ஊரும் அயலுஞ் சேரி யோரும்

நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்ஐயும்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்..

ஊரிலுள்ளாருஞ் சேரியிலுள்ளாரும்.அயன் மனையுள்ளாரும் நோய்ப்பக்கங் குறிப்பினால் அறிவாருந் தந்தையும் தமையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனை உட்கொண்டு பிறிதொன்றை எடுத்துமொழியின் அல்லது பட்டாங்குக் கூறுதலின்மை வலியுறுத்தத் தோன்றும்.

“எந்தையும்,
நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்.” (அகம்.12) - இது தந்தை உட்கொண்டு கூறியது.

## 12.41 நற்றாய்க்குரிய மரபு

கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது.

தலைவனொடுந் தலைவியொடும் நற்றாய்கூற்று நிரம்பத் தோன்றாது.

ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப. - கண்டோர்க்குரியதோர் மரபு உணர்த்திற்று.

ஒண்டொடி மாதராவார் நற்றாயுந் தோழியுஞ் செவிலியும். இவரொடுந் தலைவனொடுந் தலைவியொடுங் கண்டோர் கூறுதல் காணப்பட்டது

## 12.42 தலைவற் குரியதோர் மரபு.

இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கியல் ஆணையிற் கிளத்தற்கும் உரியன்.

தலைவியை உடன்கொண்டுபோம் இடைச்சுரத்தின்கண் தலைவியைத் தலைவன் வழக்குநெறியாணையானே கூறுதற்குரியன்.

## 12.43 தலைவனும் தலைவியும் அல்லாதார்க்கு உரியதோர் மரபு

ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே.

தலைவனையுந் தலைவியையும் ஒழிந்த பதின்மரும் அத்தலைவனொடுந் தலைவியொடுஞ் சொல்லிப்போந்த மரபினாற் சொல்லப்பெறுவர்; இடமுங் காலமுங் குறித்தது.

மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியும்
நினையுங் காலைக் கேட்குநர் அவரே.

தலைவியுந் தலைவனுங் கூறக் கேட்போர் மேற்சொல்லப்பட்ட பதின்மரும் ஆவர்.

## 12.44 கேட்போர்

பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

பார்ப்பார் அறிவரென்று சொல்லப்பட்ட இருவர் கூற்றும் எல்லாருங்கேட்கப்பெறுவர்..

அறிவர் எனப்படுவார் மூன்றுகாலமும் தோன்ற நன்குணர்ந்தோரும், புலன்நன்குணர்ந்த புலமையோரும் ஆதலானும் இனி பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும் அவர்வழி நிற்றல் அவர்க்குக் கடனாதலானும் என்பது பேராசிரியர் உரையாகும்.

பரத்தை வாயில் எனவிரு வீற்றுங்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.

பரத்தையென்று சொல்லப்படும் வேறுபாட்டினும் வாயிலென்று சொல்லப்படும் வேறுபாட்டினுந் தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை.

## 12.45 வாயில்கட்குரியதோர் மரபு

வாயில் உசாவே தம்மு ளுரிய

வாயில்கள் உசாவுமிடத்துக் கிழத்தியைச் சுட்டாது தம்முள் உசாவுதலுரித்து

## 12.46 கேட்டல் பொருளின் மரபு:

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவு நுதலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சோல்லியாங் கமையும் என்மனார் புலவர்.

ஞாயிறு முதலாக நெஞ்ச ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் அத்தன்மைய பிறவுமாகிய மக்களல்லாத பொருள்கள் தாங்கருதிய நெறியினானே சொல்லுவனபோலவுங் கேட்குநபோலவுஞ் சொல்லியமையப்பெறும்.

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி" (குறள்.1118)

"நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகா தென்னீரே."

(சிலப்.காணல்) - இதனுட் கடலுங் கானலும் புள்ளு மரனுங் கூறப்பட்டது.

## 12.47 இடம்

ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியுங்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப.

ஒருவழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினை நிகழ்ச்சி இடமென்று சொல்லுவர். நிகழ்ச்சி , நிகழ்ந்தவிடம்.

**ஒருநெறிப் படுதல்** - அகமாயினும் புறமாயினும் ஒரு பொருண்மேல் வருதல். **ஓரியல் முடிதல்** - அகத்தின்கட் களவென்றானும் கற்பென்றானும் அவற்றின் விரிவகையில் ஒன்றானும்பற்றி வருதல். புறத்தின்கண் நிரைகோடலானு

மீட்டலானு மேற் செலவானும் எயில்வளைத்தலானும் யாதானு மோரியல்புபற்றி வருதல்.

**கருமநிகழ்தல்**-அப்பொருளைப்பற்றி யாதானு மொரு வினை நிகழுமிடம். இன்னுங் கருமநிகழ்ச்சி என்றதனால் தன்மை முன்னிலை படர்க்கையென்பனவுங் கொள்ளப்படும்.

"செல்லாமை உண்டேல் எணக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." (குறள்.1151) என்றவழிப் பிரிவுப் பொருண்மை நிகழும் இடமாயிற்று .

**பயிற்சி வினாக்கள்:**

1.சீர்களின் வகைகளை விரித்து எழுதுக.

பாடப்பகுதி 12.5.1 முதல் 12.5.8 வரையிலான பகுதிகளைத் தொகுத்து எழுதுக.

2.பாவிற்குரிய அடிகள் குறித்து விளக்குக.

பாடப்பகுதி 12.6.4 முதல் 12.6.8 வரையிலான பகுதிகளைத் தொகுத்து எழுதுக.

3.பாக்களின் ஓசை குறித்து தொகுத்துரை.

பாடப்பகுதி 12.12.1 முதல் 12.12.5 வரையிலான பகுதிகளைத் தொகுத்து எழுதுக.

4.ஆசிரியப்பாவின் வகைகளை விவரி

பாடப்பகுதி 12.21 முதல் 12.21.4 வரையிலான பகுதிகளைத் தொகுத்து எழுதுக.

5.அடிவரையறை இல்லாதன குறித்து விவரி.

பாடப்பகுதி 12.34 முதல் 12.34.6 வரையிலான பகுதிகளைத் தொகுத்து எழுதுக

குறிப்பு

# கூறு 13 – செய்யுளியல் - காலம் முதல் இழைபு வரை

**நோக்கம்: காலம் முதல் இழைபு வரையிலான தமிழ் இலக்கண மரபுகளை அறிந்து கொள்ளல்.**

## 13.1 காலம்:

இறப்பே நிகழ்வே எதிர தென்னுந்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்
பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்.

.இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமெனக் கூறப்பட்டியலும் பக்கத்தின் ஆராய்ந்து நோக்குமாறு பொருணிகழ்ச்சியைக் கூறுமது காலமாகும்.

## 13.2 பயன்

இதுநனி பயக்கும் இதன்மா றென்னுந்
தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே.

யாதானும் ஒரு பொருளைக் கூறியவழி இதன் பின்பு இதனைப்பயக்குமென விரித்துக்கூறாது முற்கூறிய சொல்லினானே தொகுத்துக்கூறுதல் பயனெனப்படும்..

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் வரினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே."

இதனாற் பயன் வரைந்து கோடல் வேண்டும்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று." (குறள்.323) -0 இதனாற் பயன் நன்மை வேண்டுவார் இவ்வாறு செய்தல் வேண்டுமெனல்.

## 13.3 மெய்ப்பாடு

உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடித்து மெய்ப்பா டாகும்.

யாதானும் ஒன்றைக் கூறியவழி இதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்.

"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே இதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்தது.கண்டுகொள்க.

செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டுமென்பது கருத்து.

எண்வகை இயனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின ததுவே

அது நகை முதலாகிய எட்டுமெய்ப்பாட்டு நெறியையும் பிழையாதாகி மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தையுடைத்து

## 13.4 எச்சம்

சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை

புல்லிய கிளவி எச்சம் ஆகும்.

பிறிதோர் சொல்லொடும் பிறிதோர் குறிப்பொடும் முடிவுகொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சமாகும்.

எனவே சொல்லெச்சம் குறிப்பெச்சமென இருவகையாயின. அது எச்சவியலுட் பிரிநிலை வினை யென்னுஞ் சூத்திரத்துள் (தொல், சொல். எச்ச .34) பிரிநிலை யென்பது முதலாகச் சொல்லப்பட்ட எண்வகையானும் வருவன சொல்லெச்சமாம் குறிப்பென்றோதப்பட்டது

## 13.5 முன்னம்

இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவனென்று
அவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.

இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத்தகுமெனக் குறித்து அவ்விடத்து அவர்க்கு அம்மொழியையுரைப்பது முன்னமாம்.. இடமுங் காலமுமுணர்ந்து கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலுஞ் செய்யுளுறுப்பாம்..

## 13.6 பொருள்வகை

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
இதுவா கித்திணைக் குரிப்பொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.

இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமும் என்று சொல்லப்பட்டவை வழுவுநெறியின்றி இத்திணைக்குரிய பொருள் இப்பொருள் என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகையாம்..

## 13.7 துறை:

அவ்வவ் மாக்களும் விலங்கும் அன்றிப்
பிறவவண் வரினுந் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே.

அகப்பொருளாகிய ஏழு பெருந்திணைக்கும் புறப்பொருளாகிய ஏழுபெருந்திணைக்கும் உரிய மாந்தரும் பரந்து பட்ட மாவும் புள்ளும் மரமுதலாயினவும், நிலம் நீர் தீ வளி முதலாயினவும் செய்யுட்கண் வருமிடத்துத் திறப்பாடுடைத்தாக ஆராய்ந்து தத்தமக்கேற்ற பண்போடும் பொருந்திய மரபோடும் முடியின், அவ்வாறு திறப்பாடுடைத்தாய் வருவது துறையென்று கூறப்படும்.

## 13.8 மாட்டேறு

மாட்டு என்பது தனித்து நிற்பதனைக் கொணர்ந்து சேர்த்து முடித்தல் என்று பொருள் படும்.செய்யுளிடத்துக் கூறப்படுகின்ற பொருள் சேய்மைக்கண் கிடப்பினும் அண்மைக்கண் கிடப்பினும் ஒரு தொடர்பு பட அமைத்து பொருள் முடியும் படிக் கொண்டு வந்து கிடைப்பதுணர்த்தல் மாட்டுஎன்று அழைக்கப்படும்.

அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்

இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.
மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினுந் தொடைநிலை பெறுமே.

## 13.9 வண்ணம்

பாவின்கண் நிகழும் ஓசை வேறுபாடு வண்ணம் எனப்படும். இது பாவண்ணம் முதல் முடுகு வண்ணம் முடிய இருபது வகைப்படும் என்பார் தொல்காப்பியர்.

வண்ணந் தாமே நாலைந் தென்ப.

இருபது வண்ணமாவன:

அவைதாம்
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று
ஆங்கென மொழிப அறிந்திசி னோரே.

### 13.9.1 பாஅ வண்ணம்

அவற்றுட்
பாஅ வண்ணம்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.

பாஅ வண்ணமாவது சொற்சீரடியாகி நூலின்கட் பயின்றுவரும்.

கொல்லே ஐயம் எல்லே இயக்கம்." (தொல்,சொல்,இடை.20)

### 13.9.2 தாஅ வண்ணம்

தாஅ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.

தாஅ வண்ணமாவது இடையிட்டெதுகையான் வரும்..

"தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உன்கண் பைதல் கலுழ"

### 13.9.3 வல்லிசை வண்ணம்

வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.

வல்லெழுத்து மிக்குவருவது வல்லிசை வண்ணமாம்.

"வட்டொட்டி யன்ன வனமுடப் புன்னைக்கீழ்க்
கட்டிட்டுக் கண்ணி தொடுப்பவர் தாழைப்பூத்"

தொல்காப்பியம் :பொருளதிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

**13.9.4 மெல்லிசை வண்ணம்**

மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.

.மெல்லெழுத்து மிக்கது மெல்லிசை வண்ணமாம்.

“பொன்னின் அன்ன புன்னை நுண்தாது

மணியின் அன்ன நெய்தலங் கழனி”

**13.9.5 இயைபு வண்ணம்**

இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

இடையெழுத்துமிக்கு வருவது இயைபுவண்ணமாம் எனப்படும்.

“வால்வெள் ளருவி வரைமிசை இழியவும்

கோள்வல் உழுவை விடரிடை இயம்பவும்”

**13.9.6 அளபெடை வண்ணம்**

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

அளபெடைபயின்று வருவது அளபெடை வண்ணமாம் எனப்படும்.

“தாஅட் டாஅ மரைமலர் உழக்கி

பூஉக் குவளைப் போஒ தருந்திக்”

**13.9.7 நெடுஞ்சீர் வண்ணம்**

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.

நெட்டெழுத்துப் பயின்றுவருவது நெடுஞ்சீர் வண்ணம் எனப்படும்

“நீரூர் பானா யாறே காடே”

**13.9.8 குறுஞ்சீர் வண்ணம்:**

குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்.

குற்றெழுத்துப் பயின்றுவருவது குறுஞ்சீர் வண்ணம் என்று அழைக்கப்படும்.

உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்

**13.9.9 சித்திர வண்ணம்**

சித்திர வண்ணம்

நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே.

சித்திரவண்ணமாவது நெட்டெழுத்துங் குற்றெழுத்தும் சார்ந்துவரும்.

“ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்

சேரி வரினும் ஆர முயங்கார்.” (குறுந். 231)

**13.9.10 நலிபு வண்ணம்**

நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்.

ஆய்தம் பயின்றுவருவது நலிபுவண்ணமாம் என்றாகும்.

“அ.ஃ.காமை செல்வத்துக் கியாதெனின் வெ.ஃ.காமை

வேண்டும் பிறன்கைப் பொருள்.” (குறள். 178)

**13.9.11 அகப்பாட்டு வண்ணம்**

அகப்பாட்டு வண்ணம்

முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.

அகப்பாட்டு வண்ணமாவது முடியாத்தன்மையான் முடிந்ததன் மேலதாய் வரும்.

“பன்மீன் உணங்கற் படுபுள் ளோப்பியும் --

ஓடுகலம் எண்ணும் துறைவன் தோழி.” (யாப். வி. ப. 385)

**13.9.12 புறப்பாட்டு வண்ணம்**

புறப்பாட்டு வண்ணம்

முடிந்தது போன்று முடியா தாகும்.

புறப்பாட்டு வண்ணமாவது முடிந்தது போன்று முடியாதாகிவரும்.

“நிலவுமண லகன்துறை வலவ னேவலின் ---

சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே.” (யா.வி.ப. 385)

**13.9.13 ஒழுகு வண்ணம்**

ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்.

ஓசையான் ஒழுகிக்கிடப்பது ஒழுகுவண்ணமாம்.

“அம்ம வாழி தோழி காதலர் –

பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே.” (யா.வி.ப. 386)

**13.9.14 ஒரூஉ வண்ணம்**

ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும்.

ஒரூஉ வண்ணமாவது நீங்கின தொடையாகித் தொடுப்பது ஆகும். அது செந்தொடையாம்.

“தொடி நெகிழ்ந் தனவே கண்பசந் தனவே -

மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே.” (யாப்.வி.ப.389)

**13.9.15 எண்ணு வண்ணம்**

எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.

-எண்ணுப் பயின்றுவருவது எண்ணுவண்ணமாம் எனப்படும்.

“நிலம் நீர் வளிவிசும் பென்ற நான்கின்

அளப்பரியையே

நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்

ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை.” (பதிற்றுப். 14)

**13.9.16 அகைப்பு வண்ணம்**

அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.

அறுத்தறுத்தியலுவது அகைப்பு வண்ணம் ஆகும்.

“தொடுத்த வேம்பின்மிசைத் துதைந்த போந்தையிடை- எனும் பாடல்

**13.9.17 தூங்கல் வண்ணம்**

தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

தூங்கல் வண்ணமாவது வஞ்சியுரிச்சீர் பயின்று வரும்.

“வசையில்புகழ் வயங்குவெண்மீன்

திசைதிரிந்து தெற்கேகினும்.” (பட்டினப்.1)

**13.9.18 ஏந்தல் வண்ணம்**

ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்கவரும் என்றவாறு.

“கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா
கூடலுட் கூடலே கூடலுங் கூடல்

**13.9.19 உருட்டு வண்ணம்**

உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்.

உருட்டு வண்ணமாவது அராகந் தொடுக்கும் என்பதாம்.

“தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்.” (யாப்.வி.ப.299)

**13.9.20 முடுகு வண்ணம்**

முடுகு வண்ண முடிவறி யாமல்
அடியிறந் தொழுகி அதனோர் அற்றே.

முடுகு வண்ணமாவது நாற்சீரடியின் மிக்கோடி அராகத்தோடு ஒக்கும்.

“நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ”

வண்ணந் தாமே அவையென மொழிப.

## 13.10 அடிநிமிர்வில்லாச் செய்யுள்:

**13.10.1 அம்மை:**

சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே.

சிலவாய் மெல்லியவாகிய மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் அம்மையாம்.

“அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை.” (குறள். 315)

**13.10.2 அழகு**

செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே.

செய்யுட்குரிய சொல்லினாற் சீரைப்புணர்த்துத் தொடுப்பின் அவ்வகைப்பட்ட செய்யுள் அழகு எனப்படும்.

“துணியிரும் பரப்பகங் குறைய வாங்கி -
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே.” (யாப்.வி.ப.377)

**13.10.3 தொன்மை**

தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.

தொன்மையாவது உரையொடு பொருந்திப் வந்த பழமைத்தாகிய பொருண்மேல் வருவன. அவை இராமசரிதமும். பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின்மேல் வருஞ் செய்யுள்

### 13.10.4 தோல்.

இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.

இழுமென் மொழியால் விழுமிய பொருளைக் கூறினும் பரந்த மொழியினால் அடி நிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னுஞ் செய்யுளாம்.

“பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
அறிவோர் யார∴திறுவழி இறுகென” - இழுமென் மொழியால் விழுமியது நுவல வந்தது.

“திருமழை தலைஇய இருள்நிற விசும்பு.” (மலைபடுகடாம்-1)
பரந்தமொழியான் அடிநிமிர்ந்து வந்தது.

### 13.10.5 விருந்து

விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.

விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்னயாப்பின் மேலது ஆகும்.

புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல். இது
பெரும்பான்மையும் ஆசிரியப்பாவைக் குறித்தது.

### 13.10.6 இயைபு

ஞகார முதலா னகார ஈற்றுப்
புள்ளி இறுதி இயை பெனப் படுமே.

ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாகவருஞ் செய்யுள் இயைபென்னுஞ் செய்யுளாம்.

### 13.10.7 புலன்

தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.

வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலனென்னுஞ் செய்யுளாம்.

பாற்கடல் முகந்த பருவக் கொண்மூ -
பெருங்காடு மடுத்த காமர் களிறே. (யாப்.வி.ப.379)

### 13.10.8 இழைபு

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கவண்3 மொழியின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடங்காது ஆசிரியப்பாவிற் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் செய்யுளாம்.

“பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து -

தொருநீ மறைப்ப ஒழிகுவ தன்றே”

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவனஉளவெனும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.

இது சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

**பயிற்சி வினாக்கள்:**

1.பயன் என்றால் என்ன?
பாடப்பகுதி 13.2 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
2.முன்னம் என்பதனை விளக்குக.
பாடப்பகுதி 13.5 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
3.மாட்டேறு என்பதனைச் சுட்டியுரைக்க.
பாடப்பகுதி 13.8 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
4.வண்ணம் குறித்து விவரி.
பாடப்பகுதி 13.9 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
5.அடிநிமிர்வில்லாச் செய்யுள் வகை குறித்து கட்டுரைக்க.
பாடப்பகுதி 13.10 இன் பகுதியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

# கூறு: 14 - மரபியல்

**நோக்கம்: இளமைப்பெயர்கள்,ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், உயிர்களின்பகுப்பு போன்றவற்றை அறிதல்.**

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதி இயல் மரபியல் என்பதாகும். தமிழில் இந்தச் சொற்கள் இந்தப் பொருளைத்தரும் என்று முன்னோர்கள் வகுத்துக் கூறினர். இவ்வாறு முன்னைக் காலம் தொட்டு வழங்கி வரும் முறைமையே மரபு எனப்படும். இவ்வியலில் பெயர்ச்சொற்களை இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் எனப் பிரித்துரைப்பார் தொல்காப்பியர். மேலும் உலகத்து உயிர்களை அவற்றின் அறிவின் அடிப்படையிலும் பிரித்துரைப்பார். இயலின் இறுதிப்பகுதி நூலின் இலக்கணம், நூலின் வகைகள், உத்திகள் போன்றவற்றையும் விரித்துரைப்பதாய் அமையும்.

## 14.1 இளமைப் பெயர்கள்:

மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்
றொன்பதும் குழவியொ டிளமைப் பெயரே .

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவியொடு இவ்வொன்பதும் இளமைப் பெயராகும்.

## 14.2 ஆண்பாற்பெயர்கள்:

எருதும் ஏற்றையும் ஒருத்தலுங் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப.

ஆண்பாற்பெயர் உணர்த்திற்று. ஆண்பாற் பெயர் இவ்வெண்ணப்பட்ட பதினைந்தும் பிறவுமாகும்.

பிறவும் என்றதனான் ஆண் என்றும் விடை என்றும் வருவனபோல்வனவும் அமையும்.

## 14.3 பெண்பாற் பெயர்கள்:

பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகுங் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.

பெண்பாற்பெயர் உணர்த்திற்று.

இக்கூறப்பட்ட பதின்மூன்றும் பெண்பாற் பெயராம்.

## 14.4 இளமைப் பெயர்கள்:,

அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை

மேற் சொல்லப்பட்டவற்றுட் பார்ப்பு, பிள்ளை என்னும் இரண்டும் பறவையின் இளமைப் பெயர்கள் ஆகும்.

தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன.

ஊர்வனவற்றிற்கு மேற் சொல்லப்பட்ட இருவகை இளமைப் பெயரும் ஆகும்

**14.4.1 குட்டி:**

மூங்கா வெருகெலி மூவரி அணிலொடு
ஆங்கவை நான்குங் குட்டிக் குரிய.

இவை நான்குங் குட்டி என்று சொல்லப்படும். மூங்கா என்பது கீரி.

**14.4.2 பறழ்:**

பறழெனப் படினும் உறழாண் டில்லை.

மேற்சொல்லப்பட்ட நால்வகை உயிர்க்கும் இளமைப்பெயர் பறழ் எனினும் உறழ்ச்சியில்லை.

**14.4.3 குருளை:**

நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை என்ப.

நாய், பன்றி,புலி, முயல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கின் இளமைப்பெயர் குருளை என்று வழங்கப்பெறும்.

நரியும் அற்றே நாடினர் கொளினே.

நரியின் இளமைப் பெயரும் ஆராயுங் காலத்துக் குருளை எனப்படும்.

குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்

மேற் சொல்லப்பட்ட ஐவகையுயிர்க்குங் குட்டி பறழ் என்பனவும் ஆகும்.

**14.4.4 பிள்ளை:**

பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.

மேற்கூறியவற்றுள் நாயன்றி ஒழிந்தவை பிள்ளை என்னும் இளமைப்பெயர்க்கு உரியன ஆகுமபன்றிக்குருளை பன்றிக்குட்டி பன்றிப்பறழ் பன்றிப்பிள்ளை எனவுமாம்.

**14.4.5 மறி:**

யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்
ஓடும் புல்வாய் உளப்பட மறியே.

ஆடு, குதிரை, நவ்வி,உழை, புல்வாய் முதலாகச் சொல்லப்பட்ட ஐந்துயிரும் மறி என்னும் இளமைப்பெயர் பெறும்.

**14.4.6 குட்டி:**

கோடுவாழ் குரங்கு குட்டியுங் கூறுப.

கோடுவாழ் குரங்கென்பது ஊகவும் முசுவுங் கொள்ளப்படும்.

மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான.

இதுவுங் குரங்குக் குரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

மகவு முதலாகிய நான்குங் குரங்குச்சாதி இளமைப் பெயராம். குரங்குக்குட்டி, குரங்குமகவு, குரங்குப்பிள்ளை, குரங்குப்பறழ், குரிங்குப்பார்ப்பு.

**14.4.7 கன்று:**

யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும்
மானோ டைந்துங் கன்றெனற் குரிய.

யானை, குதிரை, கழுதை, கடமை, மான் என்னும் ஐந்தினது இளமைப் பெயர் கன்று என்றுவரும்.

எருமையும் மரையும் வரையார் ஆண்டே.

கன்றெனக் கூறும் இளமைப்பெயர் எருமைக்கும் மரைக்கும் உரித்து.

கவரியும் கராகமும் நிகரவற் றுள்ளே.

கவரி என்று சொல்லப்படுவதும் கராகமென்று சொல்லப்படுவதும் கன்றென்னும் பெயர் பெறும்

கராகமென்பது கரடி ஆகும்.

ஒட்டகம் அவற்றோ டொருவழி நிலையும்

ஒட்டகமென்று சொல்லப்படுவதுங் கன்றென்னும் பெயர் பெறும்.

குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.

**14.4.8 குழவி:**

குழவியென்னும் இளமைப் பெயர் யானை பெறும்..

ஆவும் எருமையும் அதுசொலப் படுமே.

ஆவும் எருமையும் குழவிப்பெயர் பெறும்.

கடமையும் மரையு முதனிலை ஒன்றும்.

கடமாவும் மரையுங் குழவி எனப் பொருந்தும்

குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின், அப்பெயர்க் குரிய.

குரங்கு முதலிய மூன்றும் ஆராயுங் காலத்துக் குழவிப்பெயர்க்குரியதாகும்.

குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே.

குழவி மகவென்று சொல்லப்பட்ட இரண்டு இளமைப்பெயரும் அல்லாத ஏனையவை மக்கட்குரியனவல்ல.

பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே

ஓரறிவுயிராகிய புல்லும் மரனும் இளமைப்பெயர் பிள்ளை முதலாகச் சொல்லப்பட்ட நான்குங் கொள்ளவும் அமையும்.

நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே

மேற்கூறப்பட்ட நான்கின் இளமைப் பெயரும் நெல்லும் புல்லும் என வரும் ஓரறிவுயிர்க்கு கொள்ளார்.

உம்மை எதிர்மறையாதலின் மேற்சொல்லப்பட்ட இளமைப்பெயர் கூறப்பெறார் என்பதாம்.

சொல்லிய மரபின் இளமை தானே

சொல்லுங் காலை அவையல திலவே.

இளமைப்பெயரை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று. சொல்லிப்போந்த மரபுடையனவன்றிச் சொல்ல வேண்டுமரபுடையனவற்றிற்கும் சொல்லுமிடத்து இவை தாமே இளமைப்பெயர் என்வாறாம்.

பார்ப்பு, பிள்ளை பிறவும் பறப்பன ஊர்வனவெல்லாம் இவ்வகையினாற் கூறுப. நடப்பனவற்றுள், மூங்காக்குட்டி, மூங்காப்பறழ், வெருகுக்குட்டி, வெருகுப்பறழ், எலிக்குட்டி, எலிப்பறழ்; அணிற்குட்டி, அணிற்பறழ், நாய்க்குட்டி, நாய்க்குருளை; நரிக்குட்டி, நரிக்குருளை; நரிப்பறழ், நரிப்பிள்ளை, பன்றிக்குட்டி, பன்றிக்குருளை; பன்றிப்பறழ், பன்றிப்பிள்ளை; புலிக்குட்டி, புலிக்குருளை; புலிப்பறழ், புலிப்பிள்ளை; குரங்குக்குட்டி, குரக்குமக; குரக்குப்பிள்ளை, குரக்குப் பார்ப்பு; குரக்குப்பறழ்; குதிரைமறி, குதிரைக்கன்று; நவ்விமறி; உழைமறி; புல்வாய்மறி, யானைக்கன்று; குரக்குக் குழவி, ஊக முசுவென்பனவும் இவ்வாறே கொள்க. யாட்டுமறி, யானைக்குழவி, கழுதைக்கன்று; கடமைக்கன்று, கடமைக்குழவி; ஆன்கன்று, ஆன்குழவி; எருமைக்கன்று; எருமைக்குழவி, மரைக்கன்று, மரைக்குழவி, கவரிக்கன்று, கராகக்கன்று: ஒட்டகக்கன்று; மக்கட்குழவி, மக்கண்மக; தெங்கம்பிள்ளை; கமுகங்கன்று; கருப்பபோத்து, ஓரறிவுயிர்க்கட் குழவியென்பது வந்தவழிக் கண்டுகொள்க.

## 14.5 உயிர்களின் பகுப்பு:

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

உலகத்துப் பல்லுயிரையும் அறியும் வகையாற் கூறப்படுதலை உணர்த்துதல் நுதலிற்று.

ஓரறிவுயிராவது உடம்பினானறிவது. அதாவது உடம்பினால் வெப்பம் தட்பம் வன்மை மென்மை அறிவது.ஈரறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் அறிவது அதாவது நாவினாற் கைப்பு, காழ்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் என்பன அறியும் மூவறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் அறிவது மூக்கினால் நன்னாற்றம் தீயநாற்றம் அறியும். நாலறிவுயிராவது உடம்பினானும், வாயினாலும், மூக்கினானும், கண்ணினானும் அறிவது, அதாவது கண்ணினால் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம் என்பன அறியும் ஐயறிவாவது உடம்பினானும், வாயினானும், மூக்கினானும், கண்ணினானும், செவியினானும் அறிவது அதாவது; செவியினால் ஓசை வேறுபாடும், சொற்படும் பொருளும் அறியும். ஆறறிவுயிராவது உடம்பினானும், வாயினானும், மூக்கினானும்,

கண்ணினானும், செவியினானும், மனத்தினானும் அறிவது அதாவது இது செயல் வேண்டுமெனவும், இஃது எத்தன்மையெனவும் அனுமானித்தல். அனுமானமாவது புகை கண்டவழி நெருப்புண்மை கட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்பு உண்டென்று அனுமானித்தல் இவ்வகையினான் உயிர் ஆறுவகையினான் ஆயின.

இவ்வகையினான் உலகிலுள்ளவெல்லாம் மக்கட்கு அறிதலாயின.இனி அவற்றை அறியும் உயிர்களை வருகின்ற சூத்திரங்களாற் கூறுதும்.

**14.5.1 ஓரறி உயிர்கள்:**

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

ஓரறிவுயிராமாறு புல்லும் மரனும் என்று சொல்லப்பட்ட இருவகை உடம்பினாலறியும்; அக்கிளைப்பிறப்பு பிறவும் உள என்றவாறு. பிறஆவன கொட்டியுந் தாமரையுங் கழுநீரும் என்பன.

புல்லென்பது புறவயிர்ப்பு உடையன; மரமென்பது அகவயிர்ப்புடையன, அவையாமாறு முன்னர்க் கூறப்படும்

**14.5.2 ஈரறிவு பெயர்கள்:**

நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

ஈரறிவுயிர் உணர்த்துதல் நுதலிற்று. ஈரறிவுயிராவன நந்தும், முரளுமென்று சொல்லுவர். பிறவுமுள ஈரறிவுயிராம்.

நந்து என்றதனால் சங்கு, நத்தை, அலகு, நொள்ளை என்பன கொள்க. முரள் என்றதனால் இப்பி, கிளஞ்சில், எரல் என்பனவும் கொள்க.

**14.5.3 மூவறிவு உயிர்கள்:**

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

,மூவறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று. சிதலும், எறும்பும், மூவறிவின; அக்கிளைப் பிறப்பு பிறவும் உள என்பதாம். பிற ஆவன அட்டை முதலாயின.

**14.5.4 நாலறிவு உயிர்கள்**:

நண்டுந் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

நாலறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.நண்டும், தும்பியுமென நாலறிவையுடைய; அக்கிளைப் பிறப்பு பிறவும் உள.

பிறவு மென்றதனான் ஞிமிறு, சுரும்பென்பன கொள்க.

**14.5.5 ஐந்தறிவு உயிர்கள்**:

மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

ஐயறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நாற்கால் விலங்கும் புள்ளும் ஐயறிவுடைய ;அக்கிளைப் பிறப்பு பிறவும் உள.

பிற ஆவன தவழ்வனவற்றுள் பாம்பு முதலாயினவும் நீருள் வாழ்வனவற்றுள் மீனும் முதலையும் ஆமையும் முதலாயினவுங் கொள்ளப்படும்.

**14.5.6 ஆறறிவு உயிர்கள்:**

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

ஆறறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று. மக்கள் ஆறறிவுயிரெனப்படுவர்;அக்கிளைப் பிறப்பு பிறவுமுள.

பிறவாவது தேவர்,அசுரர், இயக்கர் முதலாயினோர்.

ஒருசார் விலங்கும் உளவென மொழிப.

.விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுயிராம். அவையாவன கிளியுங் குரங்கும் யானையும் முதலாயின.

மேல் ஓரறிவுயிரெனத் தோற்றுவித்தார் அதனானே இச்சூத்திரங்கள் ஈண்டுக் கூறப்பட்டன.

## 14.6 ஆண்பாற்பெயர்:

**14.6.1 களிறு:**

வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்.

களிறென்று விதந்துகூறுதல் யானைக்குரித்து.

கேழற் கண்ணுங் கடிவரை இன்றே.

பன்றியின் கண்ணும் ஆண்பாலைக் களிறென்றல் கடியப்படாது.

**14.6.2 ஒருத்தல்:**

புல்வாய் புலிஉழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்.

புலி,உழை,மரை,கவரி என்ற அறுவகை உயிரும் ஒருத்தல் என்னும் ஆண்பெயரோடு ஒன்றும்.

வார்கோட் டியானையும் பன்றியும் அன்ன.

யானையும் பன்றியும் ஒருத்தல் எனப்படும்..

ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்.

எருமையினும் ஆணினை ஒருத்தல் என்று கூறப்படும்.

**14.6.3 ஏறு:**

பன்றி புல்வாய் உழையே கவரி
என்றிவை நான்கும் ஏறெனற்குரிய.

பன்றி முதலாகிய நான்கும் ஆணினை ஏறென்று கூறலாம்.

கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே.

கடல்வாழ் சுறாவின் ஆணினையும் ஏறெனப்படும்

ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப.

ஆற்றலுடைத்தாகிய ஆண்பாற் கெல்லாம் ஏற்றையென்னும் பெயர் உரித்தாகும்.

**14.6.4 பெற்றம்:**

எருமையும் மரையும் பெற்றமும் அன்ன.

எருமையும் மரையும் பெற்றம் எனப்படும்.

**14.6.5 போத்து:**

பெற்றம் எருமை புலிமரை புல்வாய்

மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே.

பெற்றம்,எருமை,புலி, மரை, புல்வாய் முதலாகிய ஐந்துள் ஆணினையும் போத்தெனலாகும்.

நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய

நீருள் வாழும் முதலை முதலாயினவற்றுள் ஆண்பால் போத்தெனக் கூறுதற்குரியதாம்.

மயிலும் எழாஅலும் பயிலத் தோன்றும்.

மயிலுள்ளும் எழாலுள்ளும் ஆணினைப் போத்தென்றல் பெரும்பான்மையாகும்.

இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய

இரலை என்னும் பெயரும் கலை என்னும் பெயரும் புல்வாயில் ஆண்பாற்குரியது.

**14.6.6 கலை:**

கலையென் காட்சி உழைக்கும் உரித்தே

நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.

கலை என்னும் பெயர் உழைக்கும் முசுவிற்கும் உரித்தாம்.

மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்

யாத்த என்ப யாட்டின் கண்ணே.

மோத்தை, தகர்,உதள்,அப்பர் முதலாகின ஆட்டில் ஆணிற்குரியவாம்.

**14.6.7 சேவல்:**

சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்

மாயிருந் தூவி மயிலலங் கடையே.

மயிலல்லாத பறவைகளின் ஆண்பாற்பெயர் சேவலென்று கூறப்படும். சிறகு என்றது ஆகுபெயர்.

ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய

பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய

காண்பவை அவையவை அப்பா லான.

ஆண்பால் உயிரெல்லாம் ஆண் என்னும் பெயர் பெறும். பெண்பால் உயிரெல்லாம் பெண் என்னும் பெயர் பெறும்.

வேழக்குரித்து என்னும் சூத்திர முதலாக இத்துணையும் ஆண் பெயர் கூறினார். இனிப் பெண் பெயர் கூறுகின்றரார்.

## 14.7 பெண்பாற்பெயர்:

**14.7.1 பிடி:**

பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

இனிப் பெண் பெயர் உணர்த்துகின்றார். பிடி என்னும் பெண்பெயர் ஆனையின் மேலதாகும்.

**14.7.2 பெட்டை:**

ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை

பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய.

பெட்டை என்னும் பெயர் ஒட்டக முதலாகச் சொல்லப்பட்ட நான்குக்கும் பெண்பாற்குப் பெயராம்..

புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.

பெட்டை என்னும் பெயருக்குப் புள்ளிற் பெண்பாலும் உரியதாகும்.

பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்.

பேடை என்னும் சொல்லும் பெடை என்னும் சொல்லும் ஆராயுமிடத்துப் பெட்டை என்பதனோடு ஒன்றும்.

**14.7.3 அளகு:**

கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழுங் காலை அளகெனல் அமையா.

கோழியுங் கூகையும் அளகெனப்படும்.

பெண்பா லான
அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே.

அளகென்னும் பெண்பாற் பெயர் மயிலுக்கும் பெண்பாற்கும் உரித்து.

**14.7.4 பிணை:**

புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.

புல்வாய,நவ்வி,உழை,கவரி முதலாகிய நான்கிற்கும் பிணை என்னும் பெண்மைப்பெயர் வழங்குதற்குரித்தாகும்.

இது புள்ளின் வைத்தமையாற் புள்ளின்பின் வருதல் பெரும்பான்மை.

**14.7.5 பிணவு:**

பன்றி புல்வாய் நாயென மூன்றும்
ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை.

பன்றி முதலாகிய மூன்றிற்கும் பெண்பாற்குப் பிணவு என்னும் பெயர் பொருந்திற்று

பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.

பிணவல் என்று சொல்லினும் மேற் சொல்லப்பட்டவற்றின் மேல என்றவாறு.

**14.7.6 ஆ:**

பெற்றமும் எருமையும் மரையும் ஆவே.

ஆ என்னும் பெண்பெயர் பெற்றம் முதலாகிய மூன்றிற்கு முரித்து.

**14.7.7 பெண் - பிணவு:**

பெண்ணும் பிணவு மக்கட் குரிய.

பெண்ணென்னும் பெயரும் பிணவு என்னும் பெயரும் மக்களிற் பெண்பாற் குரித்து.

**14.7.8 நாகு:**

எருமையும் மரையும் பெற்றமும் நாகே.

எருமை முதலாகச் சொல்லப்பட்ட மூன்றற்கும் நாகு என்னும் பெண்பெயர் உரித்து.

நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே.

நீர்வாழ்வனவற்றுள் நந்தென்பதூஉம் நாகு என்னும் பெண்பெயர் பெறும்

**14.7.9 மூடு – கடமை:**

மூடுங் கடமையும் யாடல பெறாஅ.

மூடும் கடமையும் ஆட்டின் பெண்பாலதாகும்.

**14.7.10 பாட்டி:**

பாட்டி என்ப பன்றியும் நாயும்.

பாட்டி என்னும் பெயர் பன்றியினதும் நாயினதும் பெண்பெயர்க்குரிய..

நரியும் அற்றே நாடினர் கொளினே.

நரியும் பெண்பாற்குப் பாட்டி என்னும் பெயர் பெறும்.

**14.7.11 முசு - மந்தி:**

குரங்கு முசுவும் ஊகமும் மந்தி.

குரங்கு,முசு, ஊகம் முதலாயின மூன்றும் பெண்பால் மந்தி என்னும் பெயர்பெறும்.

பெண்பாற் பெயர்கள்: யானையுள் பெண் பிடி; ஒட்டகம் - பெட்டை; குதிரை - பெட்டை; கழுதை - பெட்டை; மரை - பெட்டை, நாகு. ஆ: புள்ளு - பெட்டை, பேடை, பெடை; கோழி - அளகு; கூகை; மயில் - அளகு; புல்வாய் - பிணை, பிணா, பிணவு, பிணவல், நவ்வி - பிணை: உழை; கவரி - பிணை; பன்றி - பிணவு, பிணவல், பாட்டி; நாய் - பிணவு, பிணவல், பாட்டி ; பெற்றம் - ஆ; நாகு; எருமை - ஆ, நாகு; மக்கள் - பெண்; பிணவு; நந்து - நாகு; ஆடு - மூடு, கடமை; நரி - பாட்டி; குரங்கு - முசு; ஊகம், மந்தி எனவரும்.

## 14.8 மேலும் ஒரு சிறப்பு விதி:

குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்
மரம்பியல் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த வழக்கின் உண்மையிற்
கடிய லாகா கடன்றிந் தோர்க்கே.

குரங்கு முதலாகச் சொல்லப்பட்டவற்றை இப்பெயரான் உலகத்தார் வழங்குதலின் ஈண்டோதிய இலக்கணத்தின் மாறுபட்டு வருவன வழக்கினுஞ் செய்யுளினும் அடிப்பட்டுவரின் வழுவென்று கடியப்படாது.

பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.

பெண்ணும். ஆணும், பிள்ளையும் பற்றவருஞ் சொல் மேலெடுத்தோதினவை என்றவாறு.

இனிச் சிறப்புவிதியுடைய அந்தணர்க் குரியன கூறப்படுகின்றது.

## 14.9 அந்தணர்க்குரிய மரபு:

நூலே கரகம் முக்கோல் மணையே

ஆயுங் காலை அந்தணர்க் குரிய.

நூலும் கரகமும் முக்கோலும் மணையும் ஆராயுங் காலத்து அந்தணர்க்கு உரியதாகும்.

அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.

குறிப்பு

அமாத்திய நிலையும் சேனாபதி நிலையும் பெற்ற அந்தணாளர்க்கு அரசர் தன்மையும் வரைவில ஆகும்..

அ∴தாவது மந்திரி புரோகிதனாகியவழிக் கொடியும் குடையும் கவரியும் தாரு முதலாயின அரசராற்பெற்று அவரோடு ஒருதன்மையராகியிருத்தல்.

## 14.10 அரசர்க்குரிய மரபு:

படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.

படை - கருவி, படை முதலான ஒன்பதும் செங்கோலும் பிறவுமென்றதனான் ஆரமுங் கழலு மெல்லாம் அரசர்க்குரியதாம்.

## 14.11 அரசர்க்கும் அந்தணர்க்கும் பொதுவாகிய மரபு:

அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.

அவை நாலுதொழில்; ஈதல் வேட்டல் வேட்பித்தல் ஓதலும்.

பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழப்பெயர்
நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்
பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித் தன்றே.

இப்பொருண்மையும் அரசர்க்கு உரித்து அந்தணர்க்கு உரித்தாம்.

ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி அவையவை பெறுமே.

ஊரும் இயற்பெயரும் சிறப்புப்பெயரும் தத்தந் தொழிற்கேற்ற கருவியும் எல்லாரையும் சார்த்தி அவையவை வருதல் பெறும்.

தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரியதோர்
நிலைமைக் கேற்ப நிகழ்த்துப என்ப.

தலைமைக் குணமுடையராகக் கூறுதலும் தத்தமக்கேற்ற நிலைமைக்குப் பொருந்துமாறு நிகழ்த்துப என்பதாம்.

எனவே இறப்பவுயர்தல் இறப்பவிழிதல் ஆகாதென்றவாறாம்.

## 14.12 அரசர், வணிகர் அல்லாதோர் மரபு:

இடையிரு வகையோர் அல்லது நாடிற்
படைவகை பெறாஅர் என்மனார் புலவர்.

அரசரும் வணிகரும் அல்லாதோர்க்குப் படைக் கலவகை கூறப்பெறார்.

## 14.13 வைசிகர் மரபு:

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

வைசிகன் வாணிகத்தான் வாழும் வாழ்க்கையைப் பெறும்.

மெய்தெரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பா லான.

எண்வகை உணவாவன, நெல்லு, காணம்; வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதும்பை.

இவையிற்றை உண்டாக்குகின்ற உழவு தொழிலும் வாணிகர்க்கு வரையாது.

கண்ணியுந் தாரும் எண்ணினர் ஆண்டே.

வைசிகருக்கும் கண்ணியுந் தாரும் சொல்லப் பெறும்

## 14.14 வேளாண்மாந்தர் மரபு:

வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

வேளாண் மாந்தர்க்குத் தொழில் உழவே என்பதாம்.

வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.

எய்தியதன்மேற் சிறப்பு விதி. வேந்தரால் ஏவப்பட்ட தொழிலினானே படையுங் கண்ணியும் வேளாண்மாந்தர்க்கும் உளதாகும்.

## 14.15 வைசிகருக்கும் வேளாண்மந்தருக்குமான பொது மரபு:

வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்
தாரும் ஆரமுந் தேரு மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய.

வில்லு முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் மன்னனாற்பெற்ற மரபினால் வைசிகர்க்கும் வேளாளர்க்குமுரியதாம்.

அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை.

அன்னர்தாம் இழிந்தோராயினும் மேற்சொல்லப்பட்ட மன்னனால் வில்லு முதலாயின பெற்ற மரபினராயினும் நான்கு குலத்திலும் இழிந்த மாந்தர்க்கு அவை உளவாகக் கூறப்படாது. எனவே அவரவர்க்குரியவாற்றாற் கூறப்பெறும்.

## 14.16 புறக்காழ்:

புறக்கா ழனவே புல்லெனப்படுமே.

ஓரறிவுடையன. புறவயிர்ப் புடையனவற்றைப் புல் என்று சொல்லுவர். அவையாவன; தெங்கு, பனை, கமுகு, மூங்கில் முதலாயின.

## 14.17 அகக்காழ்:

அகக்கா ழனவே மரமெனப் படுமே.

உள்வயிர்ப் புடையனவற்றை மரமெனப்படும்.

## 14.18 புல்லாகிய உறுப்பின்கண் வருவன:

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.

தோடு முதலாகச் சொல்லப்பட்ட உறுப்பின் பெயரெல்லாம் புல்லாகிய உறுப்பின் கண்ணே வரும்.

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்புமில்லாதனவற்றுள் ஒருசாரன இவ்வகைப்பட்ட உறுப்புப்பெயருடையனவாகி இவையும் புல்லெனப்படும். அவையாவன; வாழை ஈந்து தாமரை கழுநீர் என்றித் தொடக்கத்தன.

## 14.19 மரத்தின் உறுப்புகள்:

இலையே முறியே தளிரே தோடே

சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வரூஉங் கிளவி என்ப.

இலை முதலாகச் சொல்லப்பட்ட உறுப்புப்பெயர் மரத்துக்கு அங்கமாம் இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்பும் இல்லாதனவற்றுள் ஒரு சாரன இவ்வுறுப்புப்பெயர் உடையன மரமெனப்படுமென்று கொள்க.

அவையாவன; முருக்கு தணக்கு முதலாயின.

காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன.

இச்சூத்திரம் அவ்விருவகைக்கும் பிற்கூறலிற் காய் முதலாகச் சொல்லப்பட்ட அவ்வுறுப்புப்பெயர் அவ்விரு வகைக்கும் பொதுவெனப்படும்.

தாழை பூவுடைத் தாகலானும் கோடுடைத் தாகலானும் புறவயர்ப்பின்மை யானும் மரமெனப்படுமாயினும் புல் என்றல் பெரும்பான்மை.

## 14.20 ஐம்பூத மயக்கம் உலகம்:

நிலம்தீ நீர்வளி விசும்பொ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழா அல் வேண்டும்.

இதுவுமோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

உலகு நிலமுதலாகிய ஐம்பெரும்பூதங் கலந்த மயக்கமாதலான் மேற்சொல்லப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழாமல் திரிபுபடாத சொல்லோடே தழுவுதல்வேண்டும்.

கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல். மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றாதல் போறல்.

உலகமென்றது உலகினையும் உலகினுட் பொருளையும், உலகமாவது முத்தும் மணியுங் கலந்தாற்போல நிலம் நீர் தீ வளி ஆகாயம் என விரவிநிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி யொன்றானாற்போல வேற்றுமைப்படாது நிற்கும். அவ்விரண்டினையும் உலகம் உடைத்தாகலிற் கலந்த மயக்கமென்றார்.

இப்பொருள் எல்லா வுலகத்தையும் விட்டுநீங்காமையின் இவற்றை ஒருமுகத்தான் நோக்க வேறுபாடில்லா மாதலான் மேற்கூறிப்போந்த முறையினான் வேறுபடுத்து இருதிணையாகவும் ஐம்பாலாகவும் இயன்ற நெறி வழுவாமைத் திரிபுபடாத சொல்லோடே புணர்க்க என்றவாறாம்.

சாத்தன் சோற்றை உண்டான் என்பது. இது உண்டற் குரியானெனக் கூறுதலின் மரபாயிற்று. அஃதேல் வழாமை தழால்வேண்டுமெனக் கருதியபொருள் முடியும்; திரிவில்சொல் என்றது மிகையெனின். ஒக்கும் குழவி என்பது உயர்திணைக்கண்வரின் அதற்குரிய பாலாற் கூறாது அஃறிணைக்குரிய பாலாற் கூறப்படுதலின் அவ்வகை யான் வருவன வழுவாயினும் திரிவில்சொல் என்றதனால் இதுவும் அடக்கிக்கூறினார்.

## 14.21 செய்யுள் மரபு:

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னான.

செய்யுட் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

ஈண்டுச் சொல்லப்பட்ட மரபுநிலையிற் றிரிதல் செய்யுட்கில்லை; மரபு வழிப்பட்ட சொல்லினாற் செய்யவேண்டுதலின் என்றவாறு. எனவே யாதானும் ஒரு செய்யுளும் ஈண்டோதிய மரபினாற் செய்ய வேண்டும். செய்யுட்கில்லை எனவே வழக்கினுட் சில திரியவும் பெறும். அவை சூதுரையுள் ஆணினைப் போத்தென்றல் போல்வன.

மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்.

மரபுநிலை திரிந்துவரிற் பொருள் வேறுவேறாகும். எனவே வழுவென்றவாறாம்.

## 14.22 வழக்கு:

வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான.

ஐயமறுத்தலை நுதலிற்று. வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் மேலது; நூலின் நிகழ்ச்சி அவர்மாட்டாதலான் என்றவாறு.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லையெனவும் அதனானே வழக்கிற் சிறுபான்மை வருமெனவும் செய்யுள்மரபு ஒழியவரின் அது வழுவாமெனவும் கூறினாராயிற் பாயிரத்துள் ஹவழக்குஞ் செய்யுளு மாயிரு முதலினெழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி" என்றதனோடு மாறுகொள்ளுமோவென ஐயுற்றார்க்கு ஆண்டு வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் வழக்கினை எனவும் இழிந்தோர் வழக்கு வழக்கெனப்படா தெனவும் கூறியவாறு.

## 14.23 நூல் மரபு:

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை நிலைய
முதலும் வழியுமென நுதலிய நெறியின.

மேற் செய்யுளியலுள் தோற்றுவாய் செய்தநூலை இலக்கணவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

மரபாவது நூற்கு இன்றியமையாத இயல்பு. அவ்வியல்பு திரியாத மரபுடைத்தாகி உரைக்கப்படும் நூல்தாம் இருவகைய; முதனூல் எனவும் வழிநூல் எனவும் என்றவாறு. உரைக்கவென்பது விகாரத்தால் தொக்கது. அது வருகின்ற சூத்திரத்தாற் கூறுப.

சார்புநூல் என்பதும் ஒன்றுண்டாலெனின் , அ.்.து இருவர் ஆசிரியர் கூறியவதற்கு உடம்பட்டு வருதலின் அதுவும் வழிநூலென அடங்கும் எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அதுவும் ஒரு முனைவனாற் செய்யப்படின் முதனூலாம்; பிறர் செய்யின் வழங்காது.

### 14.23.1 முதல் நூல்:

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதனூ லாகும்.

நிறுத்த முறையானே முதனூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வினையின் நீங்கி விளங்கிய அறிவை உடைய தன்மையோரால் செய்யப்படுது முதல் நூல் ஆகும்.

**14.23.2 வழிநூல்:**

வழியெனப் படுவ ததன்வழித் தாகும்.

வழிநூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வழிநூல் எனப்படுவது முதல்வன் கண்ட நூல்வழியே செய்வதாகும்..

அஃதேல், இதனாற் பயன் என்னையெனின், அது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும்.

**14.23.3 வழிநூலின் வகை:**

வழியின் நெறியே நால்வகைத் தாகும்.

வழிநூல் எனப்படுவது நான்கு வகைப்படும்.

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனைமர பினவே.

வழிநூல் வகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

முதனூலாசிரியன் விரித்துச் செய்ததனைத் தொகுத்துச் செய்தலும், தொகுத்துச் செய்ததனை விரித்துச் செய்தலும், அவ்விருவகையினையும் தொகைவிரியாகச் சொல்லுதலும், வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியாற் செய்தலும் என்பனவாகும். இது வழிநூலா னாயபயன்.

## 14.24 நூலின் இலக்கண மரபு:

ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.

நூற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இனி, ஒத்த சூத்திரத்தானும் காண்டிகையானும் பொருண்மேற் கூறிய வகையுடைத்தாகிப் பத்துக்குற்றமும் இன்றி நுண்ணிதாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தந்திரவுத்தியோடு புணருமாயின் நூலெனச் சொல்லுவர் புலவர். உரைப்பின் என்பதனை முன்னே கூட்டி நூலுரைப்பின் எனப் பொருளுரைக்க, அவையாமாறு முன்னர்க் காட்டுதும்.

**14.24.1 மேலும் ஒரு முடிபு:**

உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்
புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்
விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு
புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே.

இதுவுமது.

சூத்திரத்தின் முன்னர் உரையை விரித்துரைக்கும் இடத்தும் சூத்திரப்பொருள் விளங்கக் காண்டிகை புணர்க்கும் இடத்தும் ஆசிரியன்

இப்பொருள் இவ்வாறு கூறல்வேண்டுமென விதித்தலும் இப்பொருள் இவ்வாறு கூறப்பெறாதென விலக்கலுமாகிய இருவகையோடே கூடப் பொருந்தினவவை ஆராய்ந்து புணர்க்கவும் பெறும்.



குறிப்பு

**14.24.2 சூத்திரத்தின் இலக்கணம்:**

மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை யெய்தி
அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.

நூற்கு அங்கமாகிய சூத்திரத்திலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

மேல் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் என நால்வகையினும் சொல்லப்பட்ட பொருளோடு, சில எழுத்தினால் இயன்ற செய்யுட்டாகி, உரைக்குங்காலத்து அவ் உரையிற் பொருளெல்லாம் தன்னகத்தடக்கி, நுண்ணிய பொருண்மையொடு பொருந்திய விளக்கமுடைத்தாகி,கெடுக்கலாகாத துணைச் சூத்திரங்களையுடைத்தாகி யுடைத்தாகி வரையறுக்கப்படாத அரிய பொருளையுடைத்தாகிப் பலவாற்றானும் பயனையாராய்தல் உடையது சூத்திரம் எனக் கூறினார் புலவர் என்றவாறு. அளக்கலாகா அரும்பொருளாவது பலமுகத்தானும் பொருள் கொள்ளக்கிடத்தல்.

**14.24.3 காண்டிகை:**

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும் .

காண்டிகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று குற்றமில்லாத சூத்திரஞ்சொன்ன இயல்பினான் மறைவின்றி விளக்குவது காண்டிகையாம்.

**14.24.4 காண்டிகை - சிறப்பு விதி:**

விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

சூத்திரத்திற்படுஞ் சொற்பொருளை விட்டுநீங்குதலின்றி விரிவோடே பொருந்திக் குறித்த சூத்திர முடித்தற்காக ஏது நெறியானும் எடுத்துக் காட்டினானும் பொருந்தியாங்கமையும் பொருணெறியை யுடைத்துக் காண்டிகை யென்றவாறு.

விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தலாவது மிக அகலாமை. இம்மனை நெருப்புடைத் தென்றது சூத்திரப்பொருள்; புகையுடைத்தாதலானென்பது ஏது; அடுக்களைபோலவென்பது எடுத்துக்காட்டு, இவ்வகையினாற் சூத்திரப் பொருளுரைக்க வென்றவாறு.

## 14.25 உரை:

சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே.

உரையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. சூத்திரத்துட் பொருளொழியவும் அந்நூலகத்தில் யாப்பிற்கும் பொருந்த இன்றியமையாதனவெல்லாங் கொணர்ந்து பொருந்த உரைப்பது உரையாகும்.

### 14.25.1 உரையின் இயல்பு:

மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமு மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்.

உரையாவது, மறுதலைக்கடாஅ மாற்றமுமுடைத்தாக, ஐயப்பட்டு நிற்றலு மருண்டு நிற்றலு நீக்கி, தன்னூலானாதல் அப்பொருண்முடிவுறக் கூறின நூலானாதல் தெளியவொரு பொருளை யொற்றுமைபடுத்து. இதுவே பொருளெனத் துணிதல் உரையிற் கியல்பென்பதாம்.

## 14.26 முதல்நூல் - சிறப்பு விதி:

சொல்லப் பட்டன எல்லா மாண்பும்
மறுதலை யாயின் மற்றது சிதைவே.

மேலவற்றிற் கோதலான நூற்குரியதோர்மரபு முதனூலாயிற் சிதைவில்லை யென்பதாம்..

என்னை ஆவன கூறியது? விரியகலாதன சிதைவது வழிநூ லென்றவாறாம்.

## 14.27 வழிநூற்கு உரியதோர் மரபு:

சிதைவில என்ப முதல்வன் கண்ணே.
முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புனையா வாரம் போன்றே.

வழிநூற் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

முதனூலின் வழிச்செய்யினும் அந்நூல் யாப்பினுட் சிதையும். வல்லவன் புனையாத வாரம்போல வென்றவாறு.

## 14.28 நூலில் அமையலாக ஈரைங்குற்றம்:

சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனங்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்.

மேலதிகாரப்பட்ட ஈரைங் குற்றமும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**கூறியது கூறல்**: ஒருகாற் கூறியதனைப் பின்னுங்கூறல்.

**கொள மாறுபடக் கூறல்**: ஒருகாற் கூறியபொருளோடு மாறுகொள்ளுமாறு பின்கூறல். அ∴தாவது தவம்நன்று என்றவன்றான் தவந் தீதென்று கூறல்.

**குன்றக் கூறல்**:தானதிகரித்த பொருள்களுட் சிலவற்றைக் கூறாதொழிதல்.

**மிகைபடக் கூறல்**: அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளுங் கூறுதல். அ∴தாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக்கொண்டான் வடமொழியிலக்கணமும் கூறல்.

**பொருளில கூறல்**: முன்னும் பின்னும் வருகின்ற பொருண்மைக் கொப்பின்றிப் பயனில்லாதன கூறல்.

**மயங்கக் கூறல்:**கேட்டார்க்குப் பொருள் விளங்குமாறின்றிக் கூறல்.

கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதலென்பது பொருள் யாக்கப்பட்ட சூத்திரஞ் சந்தவின்பமின்றி யிருத்தல்.

**பழித்தமொழியான் இழுக்கக் கூறல்**: தானொரு பொருளை யொருவாய்பாட்டாற்குறித்துப் பிறிதொரு வாய்பாட்டாற் கூறுதல்; அக்குறிப்பு உலகவழக்கின்மையாற் பிறர்க்குப் புலப்படாதாம்; அதனால் அதுவுங் குற்றமாயிற்று.

**என்ன வகையினும் மனங்கோள் இன்மை**: எழுத்தினாலுஞ் சொல்லினானும் பொருளினானு மனங்கொள்ளுமாறு கூறாமை.

எதிர்மறுத் துணரினத் திறத்தவும் அவையே.

இதுவுமது. நூற்குற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

எதிர்மறுத்து உணர்வராயின், அத்திறத்தவும் குற்றமாகும். பாவஞ் செய்தான் நிரையம்புகு மெனக் கருதிக் கூறுவான் தவஞ்செய்வான் சுவர்க்கம் புகுமென்றல். இவ்வாறு கூறிச் சுவர்க்கம் பெறுமென்னும் பொருள்.நிரையம்புகுமென்ற பொருள் தோன்றாமையிற் குற்றமாயிற்று.

## 14.29 உத்தி வகை:

ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே
ஒப்பக் கூறல் ஒருதலை மொழியே3
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்
பிறனுடம் பட்டது தானுடம் படுதல்
இறந்தது காத்தல் எதிரது போற்றல்
மொழிவாம் என்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை

குறிப்பு

முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்
பிறன்கோட் கூறல் அறியா துடம்படல்
பொருளிடை யிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகம் கூறல்
உய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூரிய நூலே.
தந்திரவுத்தி யாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு: நுதலிய தறிதல் முதலாகச் சொல்லப்பட்டனவும் அத்தன்மையபிறவுந் தந்திர உத்தியாம் என்றவாறு.

தந்திரமெனினும் நூலெனினும் ஒக்கும். உத்தியென்பது வடமொழிச் சிதைவு. அது சூத்திரத்தின்பாற் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது.

**ஒத்தகாட்சி உத்திவகை விரிப்பு:** நூற்குப் பொருந்திய காட்சியினானுரைக்கும் உத்திவகையை விரிக்குங்காலத் தென்றவாறு.

**நுதலியதறிதல்:** - சூத்திரத்திற் சொற்பொருளுணர்த்தலன்றி.இதன் கருத்திதுவென உணர்த்தல்.

அஃதாவது எழுத்தெனப்படும் (நூன்மரபு;1) என்னுஞ் சூத்திரத்துள் எழுத்து இனைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று என்றல்.

**அதிகார முறை**-முன்னம் பலபொருளை அதிகரித்த வழிப் பின்னும் அம்முறையினானே விரித்துணர்த்துதல்.

**தொகுத்துக் கூறல்**: - வகைபெறக் கூறல் வேண்டுமாயினும் அதனைத் தொகுத்துக் கூறல்.

எழுத்தெனப் படுப அகரமுத னகர விறுவாய் முப்பஃதென்ப“(நூன்மரபு.1) என்றாற் போல்வன.

**வகுத்து மெய்ந் நிறுத்தல்**: - தொகைபடக் கூறிய பொருளை வகைபடக் கூறல்.

அது அ, இ, உ, எ, ஒ“ (நூன்மரபு-3) என்னுஞ் சூத்திரத்தம் போன்று அமையும். இன்னுமதனானே தொகைபடச் சூத்திரஞ்செய்தவழி அவற்றுள் ஒரோவொன்று பொதுவிலக்கணத்தான் முடியாதவழிப் பெரும்பான்மை சிறுபான்மைக் கொண்டு வகுத்துப் பொருளுரைத்தலுமாம். இன்னுமதனானே தொகைபடக் கூறியவதனை வகுத்துப் பொருளுரைத்தலுமாம்.

**மொழிந்த பொருளோடொன்ற வைத்தல்** - சூத்திரத்துட்பொருள் பலபடத்தோன்றுமாயின் முற்பட்ட சூத்திரத்திற் கொக்கும பொருளுரைத்தல்.

குறிப்பு

அன்றியும் முற்பட்ட சூத்திரத்தினான் ஒருபொருளோதியவழிப் பிற்பட்ட சூத்திரமும் பொருளோடொன்ற வைத்தலுமாம்.

**மொழியாததனை முட்டின்றி முடித்தல்**: - எடுத்தோதாத பொருளை முட்டுப்படாமல் உரையினான் முடித்தல்.

**வாராததனான் வந்தது முடித்தல்:** ஒருங்கு எண்ணப்பட்ட பொருள் ஒன்றனைப் பகுத்துக்கூறியவழி ஆங்கு வாராததற்கு சொல்லப்பட்ட இலக்கணத்தை இதன்கண்ணும் வருவித்து உணர்த்துதல்.

**வந்ததுகொண்டு வாராதது முடித்தல்:** ஒருங்கு எண்ணப்பட்டவற்றுள் ஒன்றைப் பகுத்து இலக்கணங் கூறியவழி வாராதன மேலும் இவ்விலக்கணத்தைக்கூட்டி முடித்தல்.

**முந்துமொழிந்ததன் தலைதடுமாற்றம்**: முற்பட அதிகரித்தபொருளை அவ்வகையினால் கூறாது முறைபிறழக்கூறுதல். இவ்வாறு கூறுங்கால் ஒருபயனோக்கிக் கூறல்வேண்டும்.

**ஒப்பக்கூறல்:**ஒரு பொருளெடுத்து இலக்கணங் கூறியவழி அதுபோல்வனவற்றையு மிலக்கணத்தான் முடித்தல்.

**ஒருதலைமொழி:** ஏகாக்கரமென்னும் வடமொழிப் பொருண்மை. அஃதாவது, சூத்திரத்திற்குப் பொருள் கவர்த்துத் தோன்றின் அதனு ளொன்றனைத் துணிந்து கூறல்.

**தன்கோட் கூறல்**:-பிறநூலாசிரியர் கூறியவாறு கூறாது தன் கோட்பாட்டால் கூறுதல். அது வேற்றுமை எட்டென்றல்.

**உடம்பொடு புணர்த்தல்:** - இலக்கணவகையான் ஓதுதலன்றி யாசிரியனுக்கின்றிச் சூத்திரத்தின் கண்ணே யொரு சொல்லை வைப்பனாயின் அவ்வைப்பினை இலக்கணமாகக் கோடல்.

**பிறன் உடம்பட்டது தான் உடன்படுதல்:** பிறநூலாசிரியன் உடம்பட்ட பொருட்குத் தானுடம்படுதல்.

அஃதாவது இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருட்கண் வருமெனப் பாணினியார் ஓதினார்; அது இவர்க்கும் உடம்பாடு.

**இறந்தது காத்தல் ;** மேற்கூறப்பட்ட சூத்திரத்தாற் கூறப்படாத பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தானமைத்தல்.

**எதிரது போற்றல்**: முன் கூறப்பட்ட சூத்திரத்தானே வருகின்ற சூத்திரத்திற் பொருளினையும் பாதுகாக்குமாறு வைத்தல்.

**மொழிவாமென்றல்**: சில பொருளைக் கூறி அவற்றுளொன்றனை யின்னவிடத்துக் கூறுவாமென வுரைத்தல்.

புணரிய நிலையிடைக் குறுகலும் என்பது.

**கூறிற்றென்றல்:** பலபொருளா யதிகரித்தவற்றுட் சில பொருளை மேற்சொல்லபட்டனவென்றல்.

மாத்திரை வகையும் எழுத்தியல்வகையு மேற்கிளந்தன்ன"(செய்யுளியல்.2) என்றதனாற் கொள்க.

**தான் குறியிடுதல்**: உலகின்கண் வழக்கின்றி ஒரு பொருட்கு ஆசிரியன் தான் குறியிடல்.

அ.்.து உயர்திணை ய.்.றிணையென்பன.

**ஒருதலையன்மை முடிந்தது காட்டல்**: ஒரு பொருளை யோதியவழிச் சொல்லுதற்கே யுரித்தன்றிப் பிறபொருட்கும். பொதுவாக முடித்தமை காட்டல்.

**ஆணை கூறல்:** ஒருபொருளைக் கூறும்வழி ஏதுவினாற் கூறலன்றித் தன்னாணையாற் கூறல்.

**பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்**: ஒருசூத்திரம் பலபொருட் கேற்குமாயின் அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் கோடல்.

**தொகுத்தமொழியான் வகுத்தனர் கோடல்:** தொகுத்துக் கூறியசொல் தன்னானே பிறிதுமொருபொருள் வகுத்துக்காட்டல்.

சொல்லின் முடிபின அப்பொருண்முடித்த லென்பதும் அதுவாகும்.

**மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்**: பிற நூலாசிரியன் கூறின் பொருண்மையைக் கெடுத்துத் தன்றுணிவு கூறுதல்.

அ.்.தாவது நெட்டெழுத்தேழ் அளபெடை யென்பன குற்றெழுத்தின் விகாரமென்பாரை மறுத்து வேறோரெழுத்தாக வோதுதல்.

**பிறன்கோட் கூறல்**: பிறநூலாசிரியன் கொண்ட கோட்பாட்டைக் கூறுதல்.

**அறியாதுடம் படல்**: தானறியாத பொருளைப் பிறர் கூறியவாற்றான் உடம்படுதல்.

அது ஏழாநரகம் இத்தன்மைத் தென வொருவன் கூறியவழி அது புலனாகாதாதலின் அவன் சொன்னதற் குடம்படுதல். இது வழிநூலாசிரியர்க் குரித்து.

**பொருளிடை இடுதல்** - ஒருபொருளை ஓதியவழியதற்கினமாகிய பொருளைச் சேரக்கூறாது இடையீடுபடக் கூறுதல்.

**எதிர்பொருள் உணர்த்தல்** - இனிக் கூறவேண்டுவதிதுவென வுணர்த்தல்.

**சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்:** பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட எச்சங்களைக்கொண்டு ஆங்குச் சொல்லியவாற்றால் பொருள் கோடல்.

**தந்துபுணர்ந்துரைத்தல்**: முன்னாயினும் பின்னாயினும் நின்ற சூத்திரத்திற் சொல்லை இடைநின்ற சூத்திரத்தினுங் கொணர்ந்து புணர்த்துரைத்தல்.

**ஞாபகங்கூறல்**: இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள்கோடல்.

**உய்த்துக் கொண்டுணர்தல்**: ஒரு சூத்திரத்தான் ஓரிலக்கணம் ஓதிய வழி அதற்குப் பொருந்தாமை உளதாகத் தோன்றின் அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல் என்பன போன்றன ஆகும்.

குறிப்பு

**பயிற்சி வினாக்கள்:**

1.இளமைப் பெயர்கள் குறித்து எழுதுக.

பாடப்பகுதியில் 14.1 இன் பகுதியை தேர்ந்தெடுத்து எழுதுக.

2.பெண்பாற் பெயர்களை விளக்கி வரைக.

பாடப்பகுதியில் 14.3 இன் பகுதியை தேர்ந்தெடுத்து எழுதுக.

3.உயிர்களின் பகுப்பு முறையை விவரி

பாடப்பகுதியில் 14.5 முதல் 14.5.6 வரையிலான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

4.நால்வகை வருணத்தார்க்கான மரபுகளை விளக்குக.

பாடப்பகுதியில் 14.13 முதல் 14.19 வரையிலான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

5.நூலின் இலக்கண மரபு குறித்து எழுதுக.

பாடப்பகுதியில் 14.28 முதல் 14.28.4 வரையிலான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

## மாதிரி வினாத்தாள் - 1

**அழகப்பா பல்கலைக்கழகம் - தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**எம்.ஏ - தமிழ் இலக்கியம் - மூன்றாம் பருவம்**

**இலக்கணம் - 3 - தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம்**

**காலம் : 3 மணி** **மதிப்பெண்: 75**

**பகுதி – அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக: ( 10 X2= 20)**

1.முல்லைக்குரிய பெரும்பொழுது சிறுபொழுதைக் குறிப்பிடுக.

2.உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே – சுட்டியுரை

3.முந்நீர் ஒழுக்கம் மகடூவோடு இல்லை – குறித்துரைக்க

4.பாதீடு என்றால் என்ன?

5.செவிலி என்பவள் யாவள்?

6.இறைச்சி எவ்வாறு வரும் என்பதனைச் சுட்டுக.

7.அசை என்றால் என்ன?

8.வெண்பாவின் ஓசை யாது?

9.சிந்தடி என்பது யாது?

10.ஓரறி உயிர்கள் யாவை?

**பகுதி – ஆ**

**II.அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக. (5 X5= 25)**

11 (அ ) ஐந்நிலப் பாகுபாடு குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ ) உள்ளுறை உவமத்தினை விளக்குக.

12 (அ ) கைக்கிளை – விளக்கியுரை

( அல்லது )

( ஆ ) அறுவகைப்பட்ட பார்ப்பனப்பாக்கம் என்பதனை எடுத்துரைக்க

13 ( அ ) இயற்கைப்புணர்ச்சி – விளக்கம் தருக.

( அல்லது )

(ஆ ) செலவழுங்கல் - துறையினை சான்றுடன் நிறுவுக.

14 (அ ) மூவசைச் சீர்களை எடுத்து எழுதுக

( அல்லது )

(ஆ ) நகை தோன்றும் நிலைக்களன்கள் யாவை?

15 (அ ) அம்போதரங்கம் - இலக்கண மரபு தருக

( அல்லது )

(ஆ ) மருட்பா குறித்து எழுதுக

**பகுதி - இ**

**III. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக. (3 X 10 = 30 )**

16.குறிஞ்சித்திணையின் முப்பொருள் பாகுபாட்டினைக் கட்டுரைக்க

17.வாகைத்திணையின் துறைகளை விவரி

18.தோழி அறத்தொடுநிற்றல் குறித்து விளக்கி வரைக.

19.வெண்பாவின் வகைகளைத் தொகுத்துரைக்க

20.அகத்திற்குரிய மெய்ப்பாடுகளை விளக்கி வரைக.

**மாதிரி வினாத்தாள் - II**

**அழகப்பா பல்கலைக்கழகம் - தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**எம்.ஏ - தமிழ் இலக்கியம் - மூன்றாம் பருவம்**

**இலக்கணம் - 3 - தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம்**

**காலம் : 3 மணி** **மதிப்பெண்: 75**

**பகுதி – அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக: ( 10 X 2= 20)**

1.அன்பின் ஐந்திணைகளைக் குறிப்பிடுக.

2.மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே – சுட்டியுரை

3.விரிச்சி – குறித்துரைக்க

4.பெருஞ்சோற்றுநிலை என்றால் என்ன?

5.அல்லகுறி என்பது யாது?

6.உயர்மொழிக் கிளவி யாருக்கு உரியது?

7.சுரிதகம் என்றால் என்ன?

8. வஞ்சிப்பாவின் ஓசை யாது?

9.அளவடி என்பது யாது?

10.ஆறறி உயிர்கள் யாவை?

**பகுதி – ஆ**

**II.அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக. (5 X5= 25)**

11 (அ ) உரிப்பொருள் குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ ) வஞ்சினக்காஞ்சி - விளக்குக.

12 (அ ) வெட்சித்திணையின் துறைகளைச்சுட்டுக.

( அல்லது )

( ஆ ) ஆற்றுப்படை என்பதனை எடுத்துரைக்க

13 ( அ ) மறையோர் தேயத்து மன்றல் எட்டு – விளக்கம் தருக.

( அல்லது )

(ஆ ) சிறப்புடை மரபின் களவினை சான்றுகளுடன் நிறுவுக.

14 (அ ) பாக்களின் அடிவரையறையை எடுத்து எழுதுக

( அல்லது )

(ஆ ) உவகை தோன்றும் நிலைக்களன்கள் யாவை?

15 (அ ) தாழிசை - இலக்கணம் தருக.

( அல்லது )

(ஆ ) வாயுறை வாழ்த்து குறித்து எழுதுக

**பகுதி - இ**

**III. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக.(3 X 10=30)**

16.அகத்திணையியல் உணர்த்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

17.தும்பைத் திணையின் துறைகளை விவரி

18. களவில் தோழிகூற்று நிகழும் இடங்கள் குறித்து விளக்கி வரைக.

19.ஆரியப்பாவின் வகைகளைத் தொகுத்துரைக்க

20.மரபியல் செய்திகளை விவரி.